சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணாசலக்கவிராயரருளிய

# சீகாழித்தலபுராணம்.

---

திருக்கைலாச பரம்பரை

நிகமாகம சித்தாந்த

சைவ சமயாசாரியபீடமாய் விளங்காநின்ற

திருவாவடுதுறை ஆதீனத்து

ஸ்ரீ ல ஸ்ரீ

சுப்பிரமணியதேசிகசுவாமிகள்

கட்டளையிட்டருளியபடிக்கும்,

ம-ள-ள-ஸ்ரீ,

சீகாழி சபாநாயகமுதலியாரவர்கள்

விருப்பத்தின்படிக்கும்,

ஷெயூர்நேடிவ்ஐஸ்கூல்தமிழ்ப்பண்டிதர்

சீகாழி சிதம்பரபிள்ளையாலும்,

சிதம்பரம் சபாபதிதேசிகர்குமாரர்

சோமசுந்தரதேசிகராலும்,

சென்னை:

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

விய௵ மாசி௴

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சீகாழி

# அருணாசலக்கவிராயர் சரித்திரம்.

சோழமண்டலத்திலே தில்லையாடியிலே, கார்காத்தவேளாண்மை மரபிலே, நல்லதம்பிபிள்ளையும், கற்பிலேசிறந்த அவரது மனைவிவள்ளியம்மாளும், புரிந்த அரியதவப்பேற்றினாலே, அருணாசலக்கவிராயரென்பவர், அவதரித்து, உரியபருவத்தே கல்வி பயின்றுவருங்காலத்தில் இவரது ௧௨-வது வயதில், தாய்தந்தையர்கள்தேக வியோகமடைந்தமையால் கல்விப்பயிற்சிக்கு இடையூறாயினும் ஊழ்வலி துணைக்காரணமாய்சமீபமாயுள்ள, திருக்கைலாயபரம்பரை நிகமாகமசித்தாந்தசைவாசாரியபீடமாய்விளங்காநின்ற தருமபுரவாதீனத்தைச் சார்ந்து அப்போதைய பண்டாரச்சந்நிதிகளால், அபிமானிக்கப்பெற்று அவ்வாதீனத்துப் பிரபலவித்துவானாகிய அம்பலவாணக்கவிராயரிடத்தே ௨௫-வது வயதுவரையில்உபயபாஷாப்பிரவீணர்தங்களாகிய, பொதுநூல்களையும், சைவசமய நூல்களையும் ஐயந் திரிபறக் கற்றுணர்ந்து வருங்காலத்து அவ் வாதீனத்துப் பண்டாரச்சந்நிதிகள் இவரதுபுத்திநுட்பத்தையும், கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து விளங்கும் பரிபக்குவத்தையும் உணர்ந்து, நிருவாணதீக்ஷைசெய்து, திருவுந்தியார்முதல் சங்கற்பநிராகரணமீறாக சித்தாந்தநூல்கள்பதினான்கையும் உரையுடனே விதிப்படிஉபதேசிக்க உணர்ந்து அவற்றின்மெய்ப்பொருளாவார்; சிவபெருமானேஎன்றும் தெள்ளிதிற்றுணிந்துகொண்டார். பின்பு திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த திருக்குறளில், அறத்துப்பாலில் முதற்கண் இல்லறமும், பின்னர்த்துறவறமும் கூறியிருத்தலால், தாமுமவ்வாறே இல்லறத்தை அடையவேண்டுமென்னும் விருப்பை பண்டாரச்சந்நிதிகளுக்கு விண்ணப்பஞ்செய்து அநுமதிபெற்றுத் தமது ஜனனபூமியாகிய தில்லையாடியை அடைந்து ௩௦-வது வயதில், அபிஷேகக்கட்டளைக்கருப்பூரில்குலமுறைக்கேற்ற ஒருகன்னிகையை விதிப்படிவிவாகஞ்செய்தபுண்ணியவதியோடு தில்லையாடியிலிருந்தில்லறத்தை நடத்துதற்குத் துணைக்காரணமாகிய பொருளை பிறவுயிர்களுக்குக் கேடுபயவாத நன்னெறியி லீட்டவும், நித்திய கருமத்துக்கும், பொருளீட்டுதலுக்கும், உரிய காலமல்லாக்காலமெல்லாம் அவமாகாதுபுண்ணியநூலாராய்ச்சிசெய்யவுங்கருதி, காசுக்கடைத்தொழிலைக் கைக்கொண்டு இல்வாழ்வாராயினார்.

வாழுநாளில தமது வியாபாரநிமித்தம் புதுவைக்கேகுழி சீகாழிக்கோயில் கட்டளைவிசாரணைக்கர்த்தரும் முன்னர்த்தம்மோடு பயின்றவருமாகியசிதம்பரநாதமுனிவரை ஷை யூர் தெற்குவீதிக் கட்டளைமடத்திற்கண்டிருவரு மெடுநாட் பிரிந்த பிரிவுநீங்கப்பரஸ்பரம்தழுவியத்தியந்த விநயத்தோடுசம்பாஷிக்குங்கால் முனிவர் சீகாழிக்குட்பள்ளுப்பாடுவதற்குப்பீடிகையி[illegible]டிக்கப்

பிரமேசர் கைங்கரியத்தால் தனக்கவகாசம் இன்மையையுங் கூறி இவர்கையிற் கொடுக்க அன்று இரவிலேயே, சொற்சுவை பொருட்சுவை யமையப் பள்ளு முடித்து, அவசியம்தாம் புதுவைக்கேகும்பயணச்செய்தியைமுனிவரிடங்கூறு து அவரது அணுக்கத்தொண்டினர்பாற் கூறிக் காழிப்பள்ளைக் கொடுத்துவிட்டுப் புதுவைக்கேகிச் சிலகாலம் அங்கு வசித்தார்.

சிதம்பரநாதமுனிவர் வைகறையிற் றமது தொண்டரால் காழிப்பள்ளின் முடிவையும் கவிராயர் பயணச்செய்தியையும், கண்டும், கேட்டும், களித்தும், சலித்தும், இவரை எவ்வாற்ரு னுமிங்ஙனம்இருத்தவேண்டுமென்னுங் கருத்தால் இவருக்கென்றே ஒருகிருகம் வடக்குவீதியிற்கட்டுவித்து அவரதுகுடும்பத்தைக் கவிராயர்தருவிக்கிறதுபோற்சீகாழிக்குத்தான் வருவித்து, புதுவைக்குச்சென்ற கவிராயர் இங்ஙனம் விரைவில் வருவாரென அவர்களுக்குத் திடவாக்களித்துத் தம்மாற்கட்டுவித்த புதுக்கிருகத்திற் சுபதினத்திற் பிரவேசம்பண்ணுவித்தார்.

கவிராயர் புதுவை நீங்கி சீகாழிக்கு சிதம்பரநாதமுனிவரிடம் வந்தபோது அவர் சற்று சலித்துப் பின்னர் கவிராயரும் முனிவரும் உலாப்போவதுபோற் சென்று இவர் குடும்பத்தார் வசிக்கின்ற புதுக்கிருகத்திற் புகுந்தார்கள்.

கவிராயர் தமது மனைவி முதலாயினோர் அங்கு இருக்கக்கண்டு வியப்புற்று அவர்களால் நடந்த எல்லா வரலாற்றையும், குருலிங்கசங்கம க்ஷேத்திரமாயும், திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவவதாரத் தலமாயும், விளங்கும் சீகாழித் தலத்தில்வசிக்க ஆகூழிருந்தமையையு முணர்ந் தம்முனிவர்வேண்டுகோளுக்கு இசைந்து அவ்விடத்திலேயே வசித்திருந்தார் ஆதலால், இவர் அன்றுதொட்டு சீகாழி அருணாசலக்கவிராயரெனப் பேர்பெற்றனர்.

இவரிடத்தே ஸ்ரீமத்கம்பராமாயணங்கற்று வல்லவராகிய சட்டநாதபுரம் கோதண்டராமையர் வேங்கிடராமையர், என்னும் சங்கீதவித்வான்கள் வேண்டுகோளின்படி கீர்த்தனரூபமாக ஷெ இராமாயணத்தையும், அசோமுகிநாடகம், அநுமார்பிள்ளைத்தமிழ், காழியந்தாதி, காழிக்கலம்பகம், காழிக்கோவை, தியாகேசர்வண்ணம், சம்பந்தசுவாமிகள்பிள்ளைத்தமிழ், முதலிய பிரபந்தங்களையும் இயற்றினார்; பின்னர் சிதம்பரநாதமுனிவர் வேண்டுகோளின்படி வடமொழியினின்றுதென்மொழியில் சீகாழித்தலபுராணத்தை ௬௧, அத்தியாயமாக இயற்றி குருலிங்கசங்கம சந்நிதியில் எழுந்தருளப்பண்ணி விதிப்படி யருச்சித்து நமஸ்கரித்து இருந்துகொண்டு அங்குவந்திருக்கும் உபயபாஷாப் புரோக்தசைவசித்தாந்த சாஸ்திரிகள் முதலாயினோரும் சிதம்பரநாதமுனிவரும் கேட்டு மகிழவாசித்துப் பொருள்கூறி அரங்கேற்றினார்.

இவர் சாலிவாகனசகாப்தம் ௲௫௱௫௰௬, (1634) லில் அவதரித்து ௲௬௱௨௰௩, (1701)ல் சீகாழியில், சிவபெருமானுடைய திருவடியை யடைந்தார்.

சம்பந்தகீர்த்தசரணாயநம:

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்தகுரவேநமஃ

# சீகாழித்தலபுராணம்.

## விநாயகர்காப்பு.

பொன்னாரிதழிமதுமாலைப்புனிதன்மருமமிசைமேவி
மின்னாருமையாளுதற்பிறையின்வேணிப்பிறையைச்சேர்த்திலகும்
பன்னாணிறைந்தமதியமெனப்பார்த்துமகிழ்ந்துமுகமலரும்
தென்னார்காழியாண்டபிள்ளைசெந்தாமரைத்தாளிணைபணிவாம்.

### வேறு.

நீண்டவடவரைமீதுநிறைகுணத்தோன்சொல்பனுவல்
பூண்டதனிமருப்பாரப்புனைந்தெழுதிநினைந்தவெலாம்
ஈண்டவரும்பழவடியார்க்கின்பமுடனருள்காழி
ஆண்டகணபதிதுணைத்தாளம்புயங்கள்வணங்குவாம்.

## கடவுள்வாழ்த்து.

### பிரமேசர்.

பூத்தபேரொளியாயுயிர்க்குயிராயகண்டிதமாய்நிறைவாய்நீங்காப்
பேர்பூத்தகுணங்குறிகளிகந்தபழமறைக்கொழுந்தாய்ப்பெருமைசான்ற
பார்பூத்தபரையினொடுகலந்துகுருவாதிமும்மைப்படிவமாகிச்
சீர்பூத்தகாழிநகரமர்ந்தபிரமேசனையாஞ்சிந்தைசெய்வாம். (௧)

### திருநிலைநாயகி.

ஒருநிலையேயுலகனைத்தும்பொருணிலைசேர்வெண்டிருநீறுயுர்ந்துவேதம்
தருநிலையால்வளர்ந்தோங்கவிரங்குமருமறைக்குழவிதன்பாலன்பால்
பெருநிலைசேர்முலைக்கண்ணுஞ்சிலைக்கண்ணுமிரங்கியவெம்பிராட்டியன்பர்
கருநிலைதீர்த்தருள்காழித்திருநிலைநாயகிதுணைத்தாள்கருத்துள்வைப்பாம். (௨)

### பெரியநாயகர்.

அரியநாயகனுரணுயகனணங்கராமுடிவாய்ந்த
கரியநாயகன்காணருநாயகன்கவுணியமுனிகாட்டத்
தெரியுநாய்கன்றோணிமேலோங்குயர்தெய்வநாயகன்காழிப்
பெரியநாயகனைகமணிநூபுரம்பிறங்குசேவடிபோற்றி. (௩)

### பெரியநாயகி.

அகலிறையகிமணியெனச்சுடரையுய்த்ததற்கருமறைக்காட்டின்
இகலிறையகிலாண்டமல்கியமுதலடத்திருந்தொருகோடி
பகலிறையகியாதியைப்படைத்துநீள்பழமறைக்கொழுந்தாய
புகலிறையகிபெரியநாயகிமலர்ப்பொன்னடித்துணைபோற்றி. (௪)

### சட்டைநாதர்.

துங்கமாமணித்தூணில்வந்திரணியன்றோள்வலிதனைவாங்கும்
சிங்கவேற்றுரியனைக்கசைத்துலகெலாந்தேர்ந்தளந்தவன்மேனி
அங்கம்யாவுமோர்கதையதாய்க்கொண்டதளங்கியாப்புனைகாழிச்
சங்கவார்குழைச்சட்டைநாயகன்றுணைத்தாமரைச்சரண்போற்றி. (௫)

### ஆபத்துக்காத்தபிள்ளையார்.

பூத்தபிள்ளையனந்தன்புகழ்நிலாக்
கோத்தபிள்ளைமதியணிகோமகன்
மூத்தபிள்ளையைமுன்னினராபத்துக்
காத்தபிள்ளையைக்கைதொழுதேத்துவாம். (௬)

### குமாரக்கடவுள்.

அலமடையுங்கொடுஞ்சூரன்குலமடியப்புள்ளினங்களமரவேட்ட
பலமடையப்பெரும்பூமிபலமடையக்கரும்பகட்டிற்படருங்கூற்றன்
வலமடையுங்கரம்வருந்தாநலமடையப்பிரமாதிவானோர்தங்கள்
தலமடையத்தனதுகரதலமடையும்வேலெறிந்தோன்சரணம்போற்றி. (௭)

### திருநந்திதேவர்.

ஆதியிடையீறில்லானருளேகண்ணாகநின்றோனமலன்பாத
மீதிலிறைஞ்சிடநணுகும்வாசவனுன்முகனெடியோன்மிடைந்தபோது
போதிர்விலகுதிரெனலாற்றருமலரம்புயந்துளபம்பொதிந்ததெய்வத்
தீதின்மணம்படைத்தமணிப்பிரம்புடையதிருநந்திதிருத்தாள்போற்றி. (௮)

### கலைமகள்.

கருமழைத்தண்டுளிபொழியுங்காலமதியொளியுமொளிகாலுமூத்தின்
பருமணிமாலையுமபயவரதமும்புத்தகமும்வடப்பளிங்குந்தாங்கி
முருகுயிர்க்குநறுந்தவளமுளரியாலயத்திருந்தமுதுபிராட்டி
இருபதமுங்கடைப்பிடித்தேனெப்பதம்வாராதபதமெனக்குமன்றே. (௯)

### திருஞானசம்பந்தசுவாமிகள்.

குழுவேறச்சமண்மூகரழலேறவிடுத்ததனைக்கூடற்கோமான்
வழுவேறுமுடலேறவுடன்முரணுமனமுரணுமாற்றியன்னோர்
கழுவேறவெண்ணீறுமைந்தெழுத்தும்விரித்துலகைக்கதியிலேற்றி
மழுவேறுங்கரத்தான்றனருளேறுங்கவுணியர்கோன்மலர்த்தாள்போற்றி. (௧௦)

### திருநாவுக்கரசுசுவாமிகள்.

விடற்கரியகொடும்பாசத்தொடரறுத்தைம்புலனுயவேழஞ்சீறி
அடற்கரியன்றும்மதமுமமணருடைத்துன்மதமுமழியநூறித்
தடக்கடலைக்கன்மிதவையாலுழக்கிச்சிவஞானதானம்வீசும்
கடக்களிறென்றுலகேத்தவருநாவுக்கரசர்பதங்கருதிவாழ்வாம். (௧௧)

### சுந்தரமூர்த்திசுவாமிகள்.

இருக்காதிமறைகாணுவிணைத்தாளைமறலிமுடியிடறுந்தாளைத்
திருக்கேள்வன்விழிபுனைந்தசெழுந்தாளையரக்கன்முடிதிரித்ததாளை
ஒருக்காலுக்கிருக்காலாய்ப்பரவைமனையகந்தேடியுறுமாசெய்தோன்
மருத்தாழாதலர்ந்ததுணைமலர்த்தாளையகத்தாழவணக்கஞ்செய்வாம். (௧௨)

### மாணிக்கவாசகசுவாமிகள்.

விலங்குமனத்தினர்கடுக்கையுடுக்கையர்கார்மயிற்பீலிவிளங்குகையர்
புலம்புமொழிக்கட்டறுத்துநிறைதிருவாசகவமுதப்புணரிதேக்கி
இலங்குமதித்திருக்குலத்தான்பிறப்பறுத்துமணிமன்றத்திறைதாள்சேர்ந்தோர்
அலங்குசினைப்பொழில்புடைசூழ்வாதவூரடிகளடியகத்துள்வைப்பாம். (௧௩)

### சண்டேசுரநாயனார்.

எந்தைதாள்காமுறுவாரிருவினைத்தாளறுக்கவெனு
முந்தையாரணம்புகன்றமுதுக்குறைவானதுபொதிந்த
சிந்தைதானரனடிக்கேசெறிவித்துச்சினந்துவரும்
தந்தைதாளோரிரண்டுந்தடிந்தவன்றுடலைக்கொள்வாம். (௧௪)

### அறுபத்துமூவர்.

அத்திமான்கலைமானைந்தருநிழன்மானயில்விழிக்கஞ்சனமமைத்த
புத்திமானென்றேகடுவுடையாளம்பொறித்தகந்தரமுளபெம்மான்
சத்திமான்காழித்தடவரையெம்மான்றன்னடிநீழலிற்சேரும்
மூத்திமான்றனைச்சேரோரறுபத்துமூவர்தாண்முடிமிசைவைப்பாம். (௧௫)

பட்டினத்துப்பிள்ளை.

துறவாதமும்மைவினைத்தொடர்பரிந்துமையல்விழிக்
குறவாயபொருணீக்கியுழுவலன்பிற்கழுமலர்த்தார்க்
கிறவாமும்மணிமாலையியற்றியருள்வழிநின்று
பிறழாதபட்டினத்துப்பிள்ளையிணையடிபோற்றி. (௧௬)

அட்டவைரவர்.

துண்டமதிபுனைந்தகல்விண்டோய்சிகரத்தினிதமர்ந்த
அண்டர்பிரான்கணத்தலைமையசிதரங்கன்காபாலி
சண்டனுருருக்குரோதன்சங்காரன்பீடணன்சீர்
கண்டருளுன்மத்தனிவர்கழற்கமலம்பரவுதுமே. (௧௭)

காலவித்தரசர்.

சுருதிவழியுலகனைத்துந்தனிக்கவிகைநிழற்றிமுதுதோணியார்க்கு
மிருதிபுகழ்கயிலைவளைச்சிகரமுங்கோபுரமுமெயில்விதமுமன்பால்
கருதியெனைப்பலபணியும்புரிந்துபிறவாநெறியைக்காணிகொண்ட
பருதிகுலத்தவதரித்தகாலவித்துமகிபதிதாள்பணிந்துவாழ்வாம். (௧௮)

குணதலைப்பாடியுடையார்.

கலைப்பாடியூர்ந்தாற்போற்கண்டுணர்ந்துகாழிநகர்
மலைப்பாடிவளவென்னுமாணிதியாலமைத்துவினை
அலைப்பாடியுழலாமேயமலனடியடைந்தகுண
தலைப்பாடியுடையாரென்றனையாளவுடையாரே. (௧௯)

பரிசாரத்தொண்டர்கள்.

தாயினுமன்னுயிர்க்கினியசண்பைநகர்க்காவலன்வாழ்
கோயின்மணிமுன்றிற்குறுங்குயின்றதுராலகற்றுமுது
வாயினவாயீருகவழுவில்பரிசாரகணம்
ஆயினசீர்த்தொண்டர்துணையடியெமதுமுடிவைப்பாம். (௨௰)

வாழ்த்து.

தெண்ணீர்குதட்டும்புயறிங்களின்மூன்றுபெய்க
எண்ணீரரசன்றிருக்கோன்முறையேந்தியாள்க
பண்ணீரறநீடுகநன்னெறிபல்கவெங்கோன்
வெண்ணீறொடொரைந்தெழுத்தோங்குகமேதினிக்கே. (௨௧)

நூல்செய்ததற்குக்காரணம்.

பண்டேபழிச்சாமையினாற்பவம்பற்றினேமி
னுண்டேயெனவாழ்த்தினுமேற்பவமுற்றிடேமால்
வண்டேய்பொழில்வேணுபுரத்தானையிம்மாண்பில்யாக்கை
கொண்டேதுதிப்பாமிஃதெம்முடைக்கோளதன்றே. (௨௨)

## வேறு

நாதனுலூருணர்ந்திபாற்றெளிசனற்குமரன்
வாதராயணற்குரைப்பமற்றவன்புகல்வழியே
சூதனோர்ந்ததைநைமிசாரணியம்வாழ்தகடீர்
மாதவர்க்கெலாம்வழங்கியபுராணமூவாறில். (உ௩)

முறைதரும்பவுடிகத்துமுன்கேத்திரகாண்டத்
தறைதருந்தனியாதிபாகத்தினுங்காந்தத்
திறைதரும்பரிச்சேதமூன்றுவதனிடத்தும்
பொறைதருந்திருப்புகலிமான்மியமிதுபுகலின். (உ௪)

இனையகாதையீண்டியம்பவும்வல்லனோதருமை
முனைவனன்புசால்சிதம்பரநாதமாமுனிவன்
வனையுமாரியமொழிவழியருந்தமிழ்வகையால்
எனைவிளம்புகென்றோதலுமிது துணிந்தனென்யான். (உ௫)

## அவையடக்கம்.

விண்ணலங்கொள்காரெழிலிநீர்விரிதிரையுடுத்த
மண்ணலங்கொளமஞ்சனமாயினவல்லோர்
எண்ணலங்கொள்பேரவைபுகுந்தினியவாய்க்காழி
அண்ணலஞ்செவிக்காவனவளியனேன்புன்சொல். (உ௬)

## வேறு.

பொருமாலேற்றுக்கொடியுயர்த்தபுகலிப்பெருமான்புகழையளந்
தொருநான்மறையும்வரம்பறியாதுழலவேயுமுளைப்பெனெனத்
தருமாதரவால்வினையேனுஞ்சமைத்தவாறுவான்கிளைத்து
வருநாண்மதியைவருகென்றுமகவொன்றழைத்தவாறேயால். (உ௭)

குறுமையிலையேனெடுமையதன்குணமாரறிவாரெனதுமொழிச்
சிறுமையிலையேன்முதுமைமொழித்திறமெவ்வாறுபுலப்படுங்கார்
உறுமையிழைத்தவிருட்பிழம்பாருறையிங்கிலையேலுரகன்முடிப்
பொறுமைநிலத்துக்கதிர்த்திங்கட்புத்தேட்பொலிவும்பொலிவின்றே. (உ௮)

பொற்காலகத்தைம்பேரமளிப்பொறிவாய்விளக்கிட்டாயிழையார்
நற்கால்வருடமகிழ்வார்முனடுநாளிருளின்மின்மினியிட்
டொற்காவரிபுற்குடம்பையுட்பேட்டேனுமகிழுங்குரீஇக்கணம்போல்
சொற்காவலர்செந்தமிழியன்முன்சிறியேன்புகலத்துணிந்தேனே. (உ௯)

## சிறப்புப்பாயிரம்.

### சிதம்பரநாதமுனிவரியற்றியது.

மாத்தவருஞ்சிலையாகமணிநாணும்பணியாகவான்காத்தின்பம்
பூத்தவருந்தகைவாழுஞ்சீகாழிமான்மியத்தைப்புலமைசான்ற
நாத்தவரும்வியந்ததமிழ்புனைந்தருணாசலக்கவிஞனுமன்பர்
ஏத்தவருங்குருலிங்கசங்கமசந்நிதியிலரங்கேற்றினனே. (௩0)

செவியுணருந்தமிழ்க்கடலுள்வாயநாமணிமந்தரநிறுவித்தெளிசாலன்பின்
னவிரொளியமணிவடந்தொட்டான்றமைந்ததொல்கேள்வியறிவாளீர்த்துப்
புவிபுகழுமாலருஞ்சலமதித்துச்சீகாழிப்புராணமென்னும்
கவியமுதந்தனையளித்தான்புலவரெலாமுண்டுமனங்களிக்கமாதோ. (நக)

(கடவுள்வாழ்த்துமுற்றிற்று. ஆ திருவிருத்தம் கக.)

## திருநாட்டுச்சிறப்பு.

பொன்னிசிமையப்பொலன்குவட்டிற்புலியையிழைத்துக்கலியிருடீர்த்
தின்னீர்முகாரிப்பண்ணவனின்றிருள்வாய்ப்பாந்தண்முடிவளர்த்தி
முன்னீருடுத்தநிலமகளைமுறையான்மணந்தசெம்பியர்வாழ்
சொன்னீர்வளமைபழுத்ததமிழ்ச்சோணாட்டணியீண்டுரைசெய்வாம். (க)

வேறு.

முடங்கல்வாயலமேந்திறனுருவெனமுதுவான்
இடங்கலந்துசென்றிமிழ்திரைமுகட்டுநீராழி
அடங்கமேய்ந்துபாட்டளிமுரலல்லியங்கமலத்
தடங்கணானுருக்கொண்டுமீண்டனசலதரங்கள். (உ)

விழையுமார்கலியிறைமகனீண்டுமெய்யன்பு
தழையுமீயுயர்சையமால்வரைத்தடங்குவட்டில்
குழையினீண்டகட்குலமனைக்கிழத்தியைக்கூவும்
உழையர்போன்மெனவுற்றனமழைக்குலமொருங்கே. (ங)

வகுத்தகார்மகண்மறிதிரையாடினண்மலர்த்தா
துகுத்தவார்குழல்விதிர்த்தெனவுதறிவள்ளுகிரான்
மிகுத்துலாமயிர்க்காறுமுளர்ந்தெனவிரிந்து
பகுத்தவால்வகிர்காட்டினமின்னலின்பரப்பே. (ச)

அண்ணன்மால்வரையலர்முலைக்கட்டிரையாடை
வண்ணமாதவெள்ளருவிவேய்ந்துளநிலமகளைக்
கண்ணழன்றிருட்களிறுகைத்தைங்கணைக்காளை
தண்ணலங்கணைபெய்வதொத்தனமழைத்தாரை. (ரு)

மண்டிலம்படுமணிதழீஇதித்திலம்வரன்றித்
திண்டிறற்கரிமருப்பெறிந்தகிற்றுணிசிதறிக்
கண்டிரண்டவேயடர்வரைவளனெலாங்கவர்ந்து
கொண்டிழிந்தனகறங்குநீர்க்கோதைவெள்ளருவி. (சு)

அறனெலாமிழைத்துலகருளன்னையையடல்சேர்
விறல்கொழுங்குவட்டிமயவேந்தளித்தெனவிண்ணீண்
டுறநிவந்தமால்வரைதருசெவிலிபோன்றொழுகிப்
புறவமேயதுநளிர்புனற்புண்ணியப்பொன்னி. (எ)

குயின்றழூஉரலுண்டகட்டிருபுடைபுறங்கோப்பு
அயின்றமாக்களிற்காந்தள்கைம்மறிப்பவாண்டொருவி
எயின்குழாங்களாறலைத்ததாறலைத்ததென்றிணையப்
பயின்றபல்பொருண்மடுத்தகன்பாலைவிட்டதுவே. (அ)

அள்ளற்பூம்புனல்வெளியபாலொளியினாலரனாய்
உள்ளத்தாழியுள்வெண்ணெய்வாய்மடுத்துமாலுருவாய்
வள்ளத்தாமரையொடுவிராய்மலரயனுருவாய்
வெள்ளத்தாழ்புனல்வியன்பணைமருதமேவியதே. (௯)

பாட்டகன்றிரைத்தலைமகன்குலமனைப்பன்னி
யேட்டகம்பெறமருதமான்விரியிதழ்க்கமல
வீட்டமெல்லிலைத்துளியினீராஞ்சனமேந்திக்
காட்டவெண்மணற்புன்னையங்கானலெய்தியதே. (௧௦)

முரண்டடஞ்சினைப்புன்னைமுத்திறைத்துமொய்த்தலர்ந்த
திரண்டகாலெனநெய்தலின்விழிகளாற்றெரித்துப்
புரண்டவெண்டிரைக்கைகொடுபுல்லியப்புணரி
அரண்டனிற்புகுந்தகலிடம்பொலிந்ததையன்றே. (௧௧)

வேறு.

அள்ளற்றண்புனல்பாய்மதகாத்தொலி
கொள்ளப்பண்முழவொத்திரைகொள்கைதான்
மள்ளமாக்களிரட்டுமருதநீள்
வெள்ளநீர்ப்பறைவீங்கொலிமாய்க்குமே. (௧௨)

நானமும்புழுகுந்நறுஞ்சந்தமும்
தானவாரணக்கோடுந்தலைசிறந்
தூனமின்மணியும்பொனுமுய்த்தலால்
மானவாணிகமாக்களுமானுமே. (௧௩)

அணையுலாந்திரையாற்றிலெலாமடுத்
துணையெலாமலர்ச்சோலையெலாமகன்
றிணையெலாநறுஞ்சேயிதழ்க்காவியம்
பணையெலாஞ்சென்றுபாய்ந்ததுவெள்ளமே. (௧௪)

ஏறுபைம்புயலேழுங்கலங்கிய
ஆறுதானுங்கலங்கியருட்புனல்
ஊறுகங்கையுறுங்குடிமன்னர்சொல்
தேறுநீரிற்றெளிந்ததுதண்புனல். (௧௫)

அயர்விலாவொலியொன்றெழுத்தாயஃ
துயிருறுப்புயிர்மெய்யெனவோதல்போல்
இயல்குளங்கிடங்கேரிதண்காலெனப்
பயிலுநாமம்படைத்தனவாரியே. (௧௬)

உழுநரோதையுமொள்விசிவார்கிணை
தெழிநரோதையுமிந்திரதெய்வதம்
தொழுநரோதையுந்தூநறைவாய்மடுத்
தெழுநரோதையுமேழ்கடலோதையே. (கஎ)

கயத்துவாய்ப்பகடோச்சியகாளையர்
நயத்தவேர்செலநல்குமிசைத்தமிழ்
பயக்குமேகக்குழாத்திடைப்பண்ணமைத்
தியக்கர்பாடுமிசையமுதொக்குமே. (கஅ)

இலங்குமள்ளர்பிறைபிரும்பின்னிழல்
மலங்குகொல்லெனமாதரலமரக்
கலங்கிநோக்கினர்கண்ணிழல்சேலென
விலங்குகாளையர்வீழ்ந்துநகுபவே. (க௯)

எய்க்கும்பன்மொழியீட்டத்தைப்பேர்முத
லாய்ப்பகுத்தவையாக்குநர்போல்வயல்
வாய்க்குழீஇயபன்னாறுகள்வாங்கினர்
போய்க்கரும்புலத்தூன்றுவர்பொற்பவே. (உ0)

பெருமனைக்கண்வளர்ந்தோர்பெருந்தகை
உறுமனைக்கணின்றோங்கியமாதரின்
மறுபுலத்திடைமன்னியநாறெலாம்
சிறுபசுங்கிளிபோனிறஞ்செய்தவே. (உக)

கோலநாட்டமுங்கொம்மைவதனமும்
ஏலுமாதரையிண்டையுநீலமும்
போலிகாட்டினவென்னப்புலம்புநீர்
வேலிவாய்க்களைவீசியெறிபவே. (உஉ)

உள்ளுகாமமெனக்கருவுற்றுலா
நள்ளுமூடலெனநெறித்தன்னலார்
கள்ளநீத்தகலவியிற்பைங்கதிர்
கொள்ளமல்கியநாணிற்குனிந்தவே. (உ௩)

பொருமழுப்படைப்பிஞ்ஞகன்பூங்கழற்
குருகுசிந்தையினோங்கிவளைந்தவை
பெருகுதொண்டர்திறத்தவன்பேரருட்
டிருவிளைந்தெனச்செந்நெல்விளைந்தவே. (உ௪)

எழினல்லாரியலாய்ந்தினகல்வியின்
ஒழுகுமின்சுவையிற்பயனோங்குபு
கெழுதடம்பணைவாய்க்கிளர்செந்நெலின்
குழுவனைத்துங்குயங்கொடுகொய்வரால். (உ௫)

அரியுநெல்லரிசும்மையிட்டாரழல
எரிவிழிப்பகட்டேற்றின்மிதித்துவை
பரியநீத்தநெற்பற்பலகுன்றென
உரியபூமியுவப்பக்குவிப்பரால். (உசு)

வழுவகன்றுமதுரித்துமென்பொருள்
தழுவிநின்றசொற்சால்கவியீட்டம்போல்
அழிவிலாநெற்குவையையலங்கொளி
பொழியுமாடத்திற்போக்குதொகுப்பரால். (உள)

தவர்க்கும்வானப்பிரத்தர்க்குந்தன்னிலை
யவர்க்கும்வன்னியர்க்கும்மழுதூட்டலால்
எவர்க்குமின்பந்தனிந்தனியேதரும்
சுவர்க்கமென்பதுதொன்மனையாலயே. (உஅ)

வேறு.

தளர்வருமன்னஞ்செந்நீர்தனைத்தரத்தந்தனுன்கொண்
டிளகியபொறியாலாவியிசையவெவ்வுலகுமுண்டாய்
அளவறுமின்பநதுய்க்குமளப்பருங்கடவுளாட்சி
வளவநாடிதற்குநேராய்வந்தநாடெந்தநாடே. (உகூ)

முட்டுவவறுமைநோயேமுருக்குவகழையேயாண்டும்
தட்டுவவயலோர்நூலேதாழ்வனநறையைம்பாலே
வெட்டுவவினைக்கண்வாளேமெலிவசிற்றிடையேமாதர்
கட்டுவகணவர்திண்டோள்கடியனநெடியபைங்கா. (கூ0)

வேர்த்தவெங்களிறுமாயவேலிசெய்சாலியெல்லாம்
வார்த்தகாரொழிலிபெய்துவளர்ப்பதென்வெறுக்கையோடும்
ஆர்த்தநான்மறைவல்லாளரங்கையில்வீழ்ந்துதுன்பம்
தீர்த்தநீரோடும்பொன்னித்தீர்த்தநீர்வளர்க்குமாதோ. (கூக)

மடையெலாமுத்தஞ்செம்பொன்வரம்பெலாமுத்தம்பூகத்
திடையெலாமுத்தஞ்செந்நெலிடமெலாமுத்தம்வில்வேள்
படையெலாமுத்தஞ்சூல்வெண்பணிலங்களுயிர்த்தகால்வாய்
அடையெலாமுத்தமோடையகமெலாம்வனசமுத்தம். (கூஉ)

பரம்பெலாநாறுசேறுபாலெலாநாளந்தேனை
கரம்பெலாமோங்குகோங்குகயமெலாங்கஞ்சமஞ்சம்
வரம்பெலாம்வாழைதாழைவயலெலாங்கன்னல்செந்நெல்
குரம்பெலாநாகம்பூகங்குறையெலாஞ்சாலைசோலை. (கூங)

உள்ளவாங்குழக்கன்றுன்னியொழுகுபாலுவட்டவாயால்
புள்ளவான்செந்நென்மேய்ந்துபசுங்கதிர்ப்பாலும்பில்க
வெள்ளநீர்திரிந்துதீம்பால்வெள்ளலையாழியென்னப்
புள்ளவாங்கவைக்கான்மேதிபுயலெனத்திரியும்பண்ணை. (கூச)

பாசிலைக்கமலைப்பள்ளிபண்ணளிகுமுறச்செந்நெல்
வீசிளங்கவரிதூங்கமென்பசுந்தவளைபாணி
பேசிடவெடிகொள்வாளைபெருநடங்கவினக்கண்டு
காசினிவேந்தரொன்னக்களியனங்களிக்குமோடை. (௩௫)

நிரையிதழ்க்கதவஞ்சாயநிறைமதுப்பிலிற்றும்வெண்டா
மரைமலர்மலர்ந்துவாவிவயின்வயினிருந்ததோற்றம்
குரைபுனற்பொன்னிவைப்பிற்குளிர்புனலாடிக்கொண்ட
புரைமறுக்கழுவுந்திங்கட்பூரணக்கடவுள்போலும். (௩௬)

பிரிவுநோயகலக்கேள்வர்பெருமணித்தடந்தேர்மீட்சி
உரியநங்கற்பினல்லார்க்குணர்த்துறுபாணரேபோல்
விரிகதிர்மணித்தேர்தோன்றமெல்லிதழ்பொதுளுஞ்செய்ய
வரிமலர்க்கமலந்தோறும்வண்டுபாண்மிழற்றும்பொய்கை. (௩௭)

தோடலர்சினைமுட்டாழைத்துறுமலர்த்துறைவாய்நீர்க்கண்
ஆடல்செய்நிழலையாவிப்பெடையெனவயிர்ந்துநோக்க
நீடல்செய்கயல்களோடிநிழலிலங்காமையுன்னி
ஊடலின்ஞெளித்ததென்னவுருகுமால்கருங்கால்வெண்புள். (௩௮)

வரியிலைப்பலவின்வீழ்ந்தமாண்சுளைவவ்விக்காலால்
அரிமலர்ப்புனங்கொய்தாறிட்டளைபுகுமலவன்காட்டும்
பெருவலித்தெவ்வராண்டபேரொலியுடுத்தகொற்றத்
திருவினைத்தடிந்துசெல்லுமிறைமகன்படைஞர்செய்கை. (௩௯)

நெடியதன்னிலையினல்குநெறிபிறழ்ந்திடினும்வான்செய்
குடிமையார்தமதுசெய்கைகுறைபவோகுடக்காய்த்தெங்கின்
ஒடிகனிமுட்பலாவைக்கதலையையுலையமோதித்
தடிதொறுமெருக்கள்செய்யுந்தன்னிலைதிரிந்தபோதும். (௪௦)

வெள்ளெயிற்றுழாவேமேதியொருத்தலைவிலக்குமாலை
உள்ளுருகதிர்கான்முத்தங்கருவெனக்கொடுபோயுற்ற
தெள்ளொளிப்பசியசூட்டுத்தோலடிச்சிறகரன்னம்
முள்ளரைக்கமலச்சேக்கைமுகட்டடைகிடக்குமன்றே. (௪௧)

உடைதிரைக்குடிஞைதோறுமுறுசிறைவிரித்துமீக்கண்
அடைகயல்வேட்டுப்பல்காலாழ்ந்தெழுசிரல்கள்காட்டும்
இடையிடைதருவவேண்டியிழிந்தெழுந்தும்பரேறிக்
கொடைகுறித்துழலும்வேழக்கூத்தியராடற்றன்மை. (௪௨)

குருச்சுடரிதழ்வண்டாடக்கொல்லழனிகர்த்தவிண்டை
நெருக்கிடைமுகிழத்துநீலநிற்பனபருவக்கொல்லன்
இருப்பெனவங்நகனுளுமெய்கரவாளிபண்டை
உருத்துருசகற்றிநீட்டியொண்கணையமைத்தல்போலும். (௪௩)

மொய்ம்மலர்குடிஞைதோறுமுளரியங்கொடியையன்னார்
கொம்மைவெம்முலையிற்றேய்ந்தகுங்குமநறுநீர்பாய்ந்து
வெம்மைசால்சுறவுபண்டைவிரிபுலான்மாறலாலே
தம்மின்வேறென்னைவையுற்றிரிவனசலதிப்பன்மீன். (சச)

தழைதருநெல்லின்சும்மைசாரலென்றெண்ணியாண்டே
பிழைவழியிழியவேர்க்கட்பெருவிறன்மள்ளர்பூட்டி
உழைதொறுமுழுங்காலஞ்சியொல்கிமீண்டொருசார்தூங்கும்
மழையெனமருதநீழல்வைகுவமேதியேறு. (சரு)

கரப்பதுசெய்யார்நல்குங்கடமையார்கரத்தக்காலும்
இரப்பதுபூண்டோர்யாண்டுமெய்துபவன்றேமோட்டுப்
பரப்பணையன்றிவேரிற்பழுபழம்வெடித்தவாய்புக்
கரற்றுவஞ்ஞிமிறுந்தேனுமள்ளிலைப்பலவுதோறும். (சசு)

பைந்துழாய்மௌலிமள்ளன்சுராசுரப்பகடுபூட்டி
மந்தரவலத்துப்பாந்தள்வடங்கொளியாழிப்பண்ணை
முந்துறமுயன்றுதாவாமொய்யுயிரெவையுமுண்ணச்
சந்ததமமுதுநல்லூண்டருவனமருதவைப்பு. (சஎ)

காசறநிவந்ததெங்கின்காவெலாங்ககனந்தோயப்
பாசொளிப்பசுங்காயெண்ணில்பரித்தனகண்ணனீந்த
தேசமுதொருநாளென்றுதினந்தொறும்பருண்ண
வாசநீரமுதம்பெய்துவைத்ததண்குடங்கள்போலும். (சஅ)

அள்ளிலைப்பலவும்யாத்தபுதுக்கலமனையசெங்காய்
வெள்ளகன்சினைசெய்யாலுமாவொடுமிடைந்துநீழல்
கொள்ளவாறியங்குஞ்சோலைகுறைவிலாநிறைமைத்தேனும்
ஒள்ளொளிப்பரிதிப்புத்தேளூறுசுடர்க்குறையொன்றுண்டே. (சகூ)

புனிதனும்புனிதநல்கும்பொன்னியுமன்னும்வீட்டை
நனிதருபதியுமுள்ளநாடரோவிதனைநண்ணார்
கனிதரப்பெற்றுந்தீயகாய்க்கவாவுறுதல்போலாம்
மனிதரோரறத்தைவேண்டிமற்றொருநாட்டைச்சேறல். (ருo)

கிணறெலாம்புனிதமந்தாகினிமலர்த்தடங்களெல்லாம்
துணர்செய்மானதப்பேரோடைதுருமமைந்தருவானெல்லாம்
குணமலிசுரபிவைத்தகுரமெலாந்தீர்த்தந்தூய
மணலெலாமிலிங்கமென்றால்வழுத்தலாந்தகைமைத்தன்றால். (ருக)

ஆன்றநீர்ஞாலமீன்றதகன்புனற்பொன்னிபொன்னி
ஈன்றதுதிருவையன்னதியலிசைநாடகங்கள்
மூன்றையுமீன்றதன்னமுதுக்குறைவீன்றவாய
தீன்றதுவீட்டையெல்லாமீன்றதுவளவன்செங்கோல். (ருஉ)

ஆயிரங்கலையிலொன்றேயகலிடத்தளிகடோறும்
மேயினபூசைவேட்டுமீண்டுயர்கனகமன்றக்
கோயிலாளுடையான்மேனிகுலவலாலுலகில்யாண்டும்
போயினுமுத்திநல்கும்புண்ணியநாடிந்நாடே. (௫௩)

மாவலானுதிவிண்ணோர்வந்தடிபரவிவாயிற்
காவலான்கடைக்கணோக்கங்கண்ணியகயிலையெம்மான்
பாவலான்விடுப்பக்கங்குல்பழுத்தபானுளிலந்தோ
ஏவலாளுகப்பெற்றதெத்திருநாடுமென்னே. (௫௪)

ஒருமறைக்கிழவன்றன்னையுலகுண்டானிலகுநாபித்
திருமலரீன்றதன்றேதெய்வநூறிவளுமார்பின்
அருமறைக்கிழவரெண்ணிலவரையிப்பொன்னிநாடாம்
ஒருமலரீன்றதென்றுலொக்குமோவனையானுந்தி. (௫௫)

பையழற்பகுவாய்ப்பாந்தட்படலையானுலகமென்கோ
செய்யொளிர்பவளக்கொண்டணிடுலகென்கோவோரெண்
கய்யரசுலகமென்கோகாவிரிநாட்டையீதென்
றையமற்றுரைத்தறேற்றேனறிஞர்தமதியின்மேற்றே. (௫௬)

கூற்றவளோடுமிந்நாட்டணிவளங்குறித்தோபொன்னி
ஆற்றுநீர்விருப்போவேனையடியர்பத்திமையினுலோ
நாற்றியலென்னநாதன்றளிதொறுநண்ணலாலே
சேற்றியல்கம்பமானதென்னுளஞ்சென்னிநாட்டில். (௫௭)

தமிழ்முனிதென்னுட்டென்னத்தக்கதென்னவனையீன்ற
கமழ்மலர்முனிவன்பூசைக்கடவுண்மாமுனிவன்காதில்
அமிழ்துறுகுடிலையோதியருண்முனிமகவாய்த்தோன்றித்
தமிழ்வளம்படைத்தாலீதேதண்டமிழ்நாடுமாதோ. (௫௮)

தீர்த்தகோடிகள்போயாடுஞ்செழுந்திரைக்கங்கைதன்மேல்
கூர்த்தவல்வினைகடரக்குரைதிரைப்பொன்னிவைப்பில்
வேர்த்தவெள்ளரிமேல்வேந்தன்மேவியவாண்டிற்கும்பம்
பார்த்துவந்தாடுநாட்டைப்பகர்வதென்பார்க்கப்பல்கால். (௫௯)

ஏமமாதவத்தோர்முத்திக்கேணியாய்வேணிவேய்ந்த
சேமனுர்க்கிருக்கையாகுஞ்சோழநாடெனுமாண்பூண்ட
வாமநல்லாரமாகிவயங்கிசைதருமீராறு
நாமநீர்வளஞ்சூழ்காழிநகர்வளம்பகரலுற்றும். (௬௦)

, (திருநாட்டுச்சிறப்பு முற்றிற்று. ஆ திருவிருத்தம் - ௧௧)

## திருநகரச்சிறப்பு.

அகலிடக்கொடியணிகெழுமேனியம்புவியே
புகரில்பல்வளமல்கியபொன்னிநடனையாள்
முகமலர்ச்செழுங்கமலமேயம்மலர்முகத்தின்
நகையுலாமணித்திலகமேகாழிமாநகரம். (௧)

தானமெண்ணிலவுழன்றருட்குரவனைச்சாரின்
ஆனமுத்திவீடெய்துமீதருமறைவழக்கே
மோனவீடுமவ்வீடெளிதேயுறமொழியும்
ஞானதேசிகனிருக்கையுங்காழிமாநகரம். (௨)

சுற்றுமோரிருகோளும்வந்தனைசெயத்தொலையா
முற்றும்வல்வினையிருள்கெடமுதுக்குறையடியார்
பெற்றநீற்றொளிவெண்ணிலாவயங்கிடப்பிறந்த
நற்றமிழ்க்கதிரிமைப்பதுகாழிமாநகரம். (௩)

தளைப்புறத்தினைமறைப்பனகொழுநிளாத்தண்ணீர்
கிளைப்புறத்தினைமறைப்பவெள்வளைக்குலஞ்செந்நெல்
நிளைப்புறத்தினிற்கடுங்களைகட்டலானீண்ட
களைப்புறத்தினைமறைப்பனவள்ளிதழ்க்கமலம். (௪)

காயும்வெங்கதக்களிறுகால்யாத்திடக்கரத்தால்
மாயிருந்தொடர்கொடுத்தெனமள்ளர்கையெறிந்த
சேயிருங்குவளையுங்கமலமுங்கொடுசிலைவேள்
பாயநொந்தனருழத்தியர்விழிவலைப்படுவார். (௫)

மடையுஞ்செம்புனல்வளாகமுமண்முதுகுடைக்கும்
படையுமென்கிளிநிறத்துநெட்டிலைவளைபசுநெற்
கிடையுமுட்டுநீர்வாலரிக்கற்றைகள்கிளைத்த
தொடையுமன்றிவெள்ளிடைபெறுவகல்வயற்சூழல். (௬)

உள்ளடங்கிநல்லுருக்கொளீஇயுரத்திறுமாந்தாங்
கள்ளிடங்குழைந்தவாப்பெருந்தன்னிலைபிறழ்ந்து
கள்ளநோக்கியரெழுபருவந்தொறுங்காட்டும்
எள்ளநீர்முலைநிகர்த்தனகதிர்த்தநெல்லீட்டம். (௭)

கருவிபோழ்தருஞ்சூழைபோங்கள்வனைக்காளை
ஒருவனீர்த்திடவொலித்தலின்மகளிரார்த்தென்னத்
திருகளைப்புகுந்தேரையைநீரராப்பற்ற
வெருவியார்த்தலினார்த்தனவிரிசிறையன்னம். (௮)

MAHAMAHOPADHYAYI
DR. U.V. SWAMINATHA IYER
LIBRARY :: MA

வாவிதாமரையொருபுறமயலார்செறுவொருசார்
பாலிநெல்லொருசாரொருசாரரிப்பறம்பு
சாலிவேலையோர்சாரிவைதலைமயக்குறலால்
வேலையாயிரம்விளையுளென்பதுமிதன்மேற்றே. (கூ)

குண்டலாதிபணிபெணிதலைக்கொடுகுமுறி
மண்டலத்துநீருமிழ்கரும்புயலெனவயவர்
திண்டடக்கையாலிடுகழையுண்டுவாய்சிலைப்ப
எண்டருஞ்சுவைமழைபெய்வதாலையெந்திரங்கள். (க0)

குறுத்ததாழ்சினைவருக்கையுங்கோழரையரம்பை
பொறுத்தபைங்கனியீட்டமும்பொரியரைத்தேமா
இறுத்தமென்கனிப்பெருக்குநல்லெருக்களாயீண்டிக்
கறுத்தசேதகத்தெழுவனநாற்றிளங்கானம். (கா)

எழுந்துலாங்கதிர்ப்புரவிபுக்கயர்வுயிர்த்தேகச்
செழுந்தணீழலைச்செய்வதோவியப்பமஞ்சிறைத்தேன்
விழுந்தநாண்மலர்ப்பொதும்பரின்கோடுகள்விசைத்துக்
கொழுந்துதேய்த்தலிற்களங்கமுற்றிடுமுயற்கூடு. (கஉ)

வளர்ந்தநாண்மலர்ப்பொதும்பரிற்சேயொளிவாய்ந்த
இளந்தளிர்க்குழாமெரிக்குழாங்கொல்லெனவிரங்கிக்
கிளர்ந்துகூவியயாழிசைமிடற்றகோகிலத்தைத்
தளர்ந்தநோய்கெடத்தைவருந்தவழ்நடைத்தென்றல். (கங)

வீங்குதெண்டிரைமுகடுகீண்டெழுகதிர்வேந்தை
ஈங்கிருட்பகைதுடைத்தனைவருதியென்றெதிரே
பூங்குடத்தினீரேந்தினபோன்றுமுப்புடைக்காய்
தாங்கிநிற்பனநெட்டிலைவிரிதலைத்தாழை. (கச)

கூடல்வைகையோர்கவுணியமுனிவரன்குணத்தைப்
பாடல்கொண்டறிவுறுத்தியதென்றுதண்பனிநீர்
ஆடல்செய்துளோர்க்கவனருட்குணத்தையக்கணத்தே
கூடல்செய்நதிக்கழுமலமந்நகர்க்குடிஞை. (கரு)

கல்லெனார்ப்பினாற்கலினமான்றிரையினாற்கனகச்
சில்லியந்தடந்தேர்ப்பெருங்கலத்தினாற்சிறுகண்
வல்விலங்கெனுஞ்சுறவினான்மணியினாற்பசித்தோர்
செல்லறீர்த்தலாலமுதவாரிதியனதெருக்கள். (கசு)

பாழிசாலிருங்கொடிநிரைபரிதிவானவன்பொன்
ஆழிதட்பனமேலிடத்தன்னலார்புலப்பால்
வீழிருங்கலன்மிடைந்துதேர்வேத்திளங்குமரர்
ஆழிதட்பனகீழிடத்தகன்மணிவீதி. (கஎ)

அடையாறு. சென்னை. 20.

வேனில்வேளனார்முடிமணியுறைத்தயன்மிதித்த
கானிலாமொழியாரடியலத்தகங்கனையப்
பானிலாமதிக்கெதிருமிழ்நறும்புனல்பரப்பும்
வானிலாவுமிழ்சந்திரகாந்தநீண்மாடம். (௧௮)

செறித்தமாமணியிழைத்ததெற்றிகடொறுஞ்செங்கேழ்
ஏறித்தமென்சுடர்க்கற்றையந்தளிர்களையெட்டிக்
கறித்தபைங்குளககறறிவன்றொடரறக்கழுத்தால்
நெறித்துநாமிமிர்த்தயில்வனநெட்டையொட்டகங்கள். (௧௯)

நேர்ச்சிறுண்மருங்கலம்வரநிரைவளைகறங்கக்
கார்ச்சிகண்டிபோன்மார்தராடரங்கமுங்கலைநூல்
தேர்ச்சிவல்லவரறிஞாற்செம்பொருடுணிந்த
சேர்ச்சிவல்லவர்கழகமும்பதமலிதொடைகள். (௨௦)

நலத்தமேலவர்நன்னரன்பொடுதமைநட்டார்
கலக்கமில்குணமாவரென்பதுமிவண்கண்டேம்
இலக்குவெண்பளிக்குபரிகையயனின்றவெவையும்
புலப்படுத்திநின்றோங்கினபுயவுரம்பொறுத்தே. (௨௧)

நீட்டுகையொடுமெடுபுகர்முகத்தொடுநெறிவெண்
கோட்டுவாரணப்போர்புரியமலையிற்குனைத்தே
திட்டுகொலவாய்நிணம்பொதியலகவாய்ச்சிலைக்கும்
சூட்டுவாரணப்போர்புரியிளையவர்துழனி. (௨௨)

கற்றைவெண்டிரைகலந்திடத்தோணியிற்கலந்த
வெற்றிவானவன்பொற்றொடிக்கின்னருள்விளக்கும்
கொற்றவன்றனைதிருக்கையைப்பொன்னெடுங்குன்றம
முற்றல்போன்றனமுழுமணிக்கொடிநுடங்கெயில்கள். (௨௩)

ஈறிலாமையால்விதிமுகங்காட்டலாலெவர்க்கும்
கூறொணாமையாற்பலவணங்குலவலாற்புலவோர்
ஆறுமஞ்சுநன்மதியொடுமுடித்தலாலளவால்
தேறுநான்மறைநிகர்த்தனசெயிரில்பொன்னெயில்கள். (௨௪)

கலவியாலுகுத்தமுத்தமுங்கணவர்பாலடுத்த
புலவியாலெறியிழைகளும்பொன்னணிமறுகில்
குலவுவேற்கணார்வண்டலில்விண்டிடக்குயின்ற
கலனுமல்லதுகுப்பையென்றுறுபொருள்காணா. (௨௫)

ஆளியன்னவரகலமேலாலைவில்லநங்கன்
வாளிபாய்ந்தபுண்ணழல்கெடமணிவடம்புனைந்த
கேளியாலுறவழுத்தியுங்கிஞ்சுகச்செவ்வாய்க்
கோடிலாமருந்தூட்டியுந்தணிப்பர்கொம்பனையார். (௨௬)

வசனமென்கிளிவாயிதழ்கொவ்வைவெண்மடங்கல்
அசைமருங்குல்கண்ணனைவைமான்முகமதியம்
இசையுமெல்லடிநளினமாய்ப்பகைத்தமெல்லியலார்
பசையுமன்பர்தாரளியொடும்பகைப்பர்தம்பதத்தால். (உஎ)

வேறு.

நெட்டிலையயிற்கணல்லார்நிலாமணிமுன்றிலேறி
மட்டின்மேனிலைக்கண்ணுடவாங்கியபொன்னம்பந்து
முட்டியைந்தருவிஞெண்கேழ்மொய்ம்மலருகுப்பமாரன்
புட்டில்வாய்மலர்களோடும்பூமழைபொழியும்வீதி. (உஅ)

சேலெவென்றடர்த்துநீண்டசில்லரித்தடங்கண்மாதர்
வேலைவெள்ளாரம்வேய்ந்தவெம்முலைமதுகைமாந்தர்
ஆலைவில்லநங்கன்வாளியஞ்சினரணைந்துநிற்ப
மாலைவெள்ளருவிதூங்குமலையரண்கடுக்குமன்றே. (உகூ)

அன்னமென்னடையார்செம்மாந்தணிந்தவெம்முலையிற்சாந்தம்
பொன்னிலத்திறைத்துமைந்தர்புரவிமான்குரத்தாலெற்றுண்
டெந்நிலவனைப்புஞ்சூழ்போயெண்டிசைபரிக்கும்யானை
மன்னெடுங்கரடத்தாழ்ந்தவண்டினமுயிர்க்குமாதோ. (௩0)

அதிரொலிகலினமான்றேரார்ப்பொலியுங்கையானை
முதிரொலிகறங்குவள்வார்முரசொலியரசர்கோயிற்
சதிரொலியனைத்துமீண்டித்தனைசெவிடெறிவதொன்றே
பொதிரெறிந்திடுமாலந்தண்புயல்படுகெகனகூடம். (௩க)

நடையறிகின்றதேர்ச்சித்துணைவனாநயவாதுள்ளக்
கடையனாரயந்தவேந்தைக்கடுத்தனகாகப்பந்தர்
அடைவுறக்கவிப்பப்பாகனங்குசநிமிரவம்பொற்
புடைமணிக்கவ்வைபோர்ப்பப்புனைமறுகியங்கும்யானை. (௩உ)

நாகிளஞ்சுரும்பர்பாடக்குவளையுங்குமிழுநான்ற
பாகவள்ளையுஞ்சேதாம்பலலரியும்பனிவெண்முல்லைச்
சேகருமுகையுங்காட்டிச்சிறைப்புனற்பழனத்தன்றிப்
பூகமென்முளரிவைகும்புயறுநெடுமிமாடம். (௩௩)

மறங்கிளர்வேற்கணுருமைந்தருமாடத்தும்பர்
உறங்குழியுறங்காவிற்கையுருவிலியானைமீக்கொண்
டிறங்கிவெண்கோல்கொண்டெற்றியின்பறுக்காமப்பைங்கூழ்
திறம்பெறவளர்ப்பிப்பான்போற்றிங்களங்கதிர்பாய்ந்தன்றே. (௩௪)

தண்ணளிநூல்களாகத்தாழ்மொழியலர்கள்சேர்த்திக்
கண்ணளியாசைமாலைகைபுனைந்திளைஞர்சூட்டப்
பெண்ணலங்கனியநின்றார்பெருவளைக்கையாற்கட்டி
விண்ணமுதுவர்ப்பச்செவ்வாய்விருந்தமுதூட்டுவார்கள். (௩௫)

கன்னலின்புகையுமட்டிற்காரகிற்புகையுநல்லார்
பின்னலின்புகையுமல்கிப்பகலிருள்பிறக்கவில்வேள்
அன்னிலைவாளியெய்தலருமையேயவிவேட்டன்றோ
இன்னவென்றுணரார்விண்ணோர்நோக்கின்றாரிமைப்பிலாராய். (௧௬)

பருதிவாய்பற்றலாணிபண்வழிதிருத்திச்செவ்வாய்ச்
சுருதியாழ்நரம்போடொன்றத்தூக்கிமெல்விரனடாத்திக்
குருதிவேலனையகண்ணார்பாடலற்குமரரன்னோர்
கருதியுள்ளுடைவதன்றோகவின்றதூண்டளிர்க்குமென்றால். (௧௭)

குணங்கிளர்சுவையின்மாணக்கோட்டியகிளியுமாதர்
மணங்கிளர்கரத்துத்தீஞ்சொன்மழலைவாய்க்கிளியுஞ்சோதிக்
கணங்கிளர்பளிக்குத்தூணிற்காண்பனகல்விசான்ற
நுணங்கியகேள்வியார்முன்னுண்ணறிவில்லார்போலும். (௧௮)

புட்பிணியளகக்காட்டிற்புணர்முலைக்களிற்றின்மென்சொல்
பட்பிணிவலையினம்பொற்பகட்டெழிலல்குற்றேரின்
நட்பினிற்படுத்திப்போர்செய்தாடவர்தானைப்போழ்ந்த
கட்படைக்கணிகைமாதர்கற்பகப்பொலன்கொம்பன்னார். (௧௯)

வான்படுமயிலஞ்சாயன்மணிநகைமுறுவல்கோட்டித்
தேன்படுகிளவிதன்னாற்சிலைத்துமீதலத்துநின்று
கூன்படுபுருவத்தூண்டிற்கூர்விழிமுள்ளிலாசை
யூன்படுத்திளைஞருள்ளமீன்படுத்தூற்றங்கொள்வார். (௨௰)

பொன்னலர்காமவல்லிபுறந்தரப்பாணியொற்றிக்
கன்னன்மென்றனையசொல்லார்காமகீதங்கள்பாடித்
தென்னிளங்காளையன்னார்சிந்தையைப்பரிசில்வாங்கிப்
பன்னிலவரைப்புப்பெட்டப்பட்டிமைவிளைப்பர்மாதோ. (௨௧)

எழுந்தளந்தெடுத்தபாடலெழுவகைநரம்பினல்யாழ்
ஒழுங்குறமாதர்பாடவுணர்ந்ததோவியமொன்றேயோ
அழுங்கவர்வரிந்தவுள்ளத்தரவர்வெட்டிரங்கப்பைம்புற்
கொழுந்தையுந்தின்றதன்றேகோவிளம்பசலைக்கன்று. (௨௨)

தருமமுந்தருமந்தாங்குந்தானமுந்தானமோங்கும்
கருமமுங்கருமங்காக்குங்கருணையுங்கருணைநீரா
வருமமும்பலன்களாகவைகலும்பழுத்ததெய்வத்
தருமமேயனையாரின்னதொன்னகர்மேழிச்செல்வர். (௨௩)

ஆடியற்பாவைபோலவகன்றுழியகலாதென்று
நீடியசீர்த்திப்பாவைநிலவியசெஞ்சொன்மாலை
பாடியபனுவன்மாக்கள்பருவரலுழந்துபன்னாள்
வாடியவறுமைநோயைவறுமையாய்ச்செய்யவல்லார். (௨௪)

பிச்சிநாண்மலர்செய்வேணிப்பிஞ்ஞகனடியார்க்காணின்
உச்சிநீரவலிற்பாய்ந்தாங்குழுவலன்போடுந்தாழா
எச்சமிலமுதந்தெண்ணீர்க்கிணற்றிடையெழப்பெற்றூர்போல்
இச்சையோர்ந்தளிமிக்கூறிக்குறித்தவாறிழைத்தல்செய்வார். (௪௫)

முழுமதிசிதறியன்னமுளிதயிர்வெருகின்கண்போல்
எழுதருங்குய்யமுதவின்புறுகருணைவாசம்
ஒழுகுமுக்கனிநெய்வாரியூட்டியாளுடையானன்பர்
கெழுமனமகிழ்ச்சிதூங்கக்கிழமைபூண்டேவல்செய்வார். (௪௬)

மலைதருவனவுநீண்டமலையெனச்சுலவுமாழி
அலைதருவனவுந்தூவெள்ளலைபுரள்கலுழிக்கானத்
தலைதருவனவுஞ்சூழ்தண்டலைபலகிளைத்தவேலி
நிலைதருவனவுமுண்டுநிவந்தபீடிகைமாடங்கள். (௪எ)

பதித்தவெண்பளிக்குவேதிப்பவளக்காணிறுவிப்பைங்கேழ்
கதிர்த்தகல்விடங்கமூட்டிக்கண்ணகல்விண்ணோடேய்ப்ப
மதித்துணியனையவொள்வாள்வயிரமுந்துகிரும்பொன்னும்
கொதித்தெரிகலனுமுத்துங்குவிந்தனபயின்றகூடம். (௪அ)

நனந்தலையுலகத்துள்ளார்நல்குரவிரவுமோவாத்
தினந்தருமிரவுஞ்சீய்க்குஞ்செம்பொருவணத்துச்செல்வர்
கனந்தருங்கண்டன்காழிக்கடவுண்மூவுருவானொன்
றினந்தருந்தோழன்வெவ்வேறியைந்தனவியந்தார்மாதோ. (௪௯)

உரைசெயாரியமேமுன்றுமொன்பதிற்றிரண்டுகூற்று
வரைபடாவொலியாலார்க்கும்புட்பொழின்மானுங்கூலம்
புரைபடாதுறுபல்வேறுபொருள்களாலுலகமுண்ட
விரைசெயுந்துளபப்பைந்தார்மேலவனுதரம்போன்ற. (௫0)

வண்டலமருமென்கூந்தன்மாணிழைமகளிர்செம்பொற்
குண்டலந்திருவில்வீசக்கோழிமேல்வீழ்ந்தமுன்றிற்
கண்டலக்கவைக்கான்மேதிகாலுறைத்தமுங்குமென்றூல்
மண்டலத்திவர்தஞ்செல்வவளனெடுத்துரைக்கற்பாற்றே. (௫க)

உறைகழித்தொளிறுவாளாலொன்னலார்மடவார்மைக்கண்
கறைகழித்துயர்திண்டோளிற்களிறுவீழ்ஞாட்பிற்பட்ட
நிறைபடச்சுவட்டின்மாதர்முகிழ்விரலுகிரினேர்ந்த
பிறைகழிப்பில்லாவேந்தர்பெருவிறலாளியன்னோர். (௫௨)

வானிறப்படைகள்போழுமணிநிறத்தணங்கனூர்கண்
வேணிறத்தாழத்தொங்கல்விளரியஞ்சுரும்பர்பாடக்
கோனிறக்கணையிற்றூண்டிக்கோவிளங்குமரர்வாய்ந்த
தூணிறக்கவரிநெற்றித்துரகத்தேருர்தல்செய்வார். (௫௩)

இருணக்கபவளக்காலின்முழுமதியிருத்துயன்ன
வருணத்தண்குடைக்கீழ்மன்னர்மல்லடுபோருங்கூன்கோட்
டருணத்தின்போருங்காண்பாரமலையான்மலிந்ததம்மா
கருணைக்குன்றனையான்காழிக்கடிமணிமாடவீதி. (௫௪)

சூலம்வாள்கதைகணிச்சிசுரிகைசக்கரங்கள்பிண்டி
பாலநீள்குலிசமேறுபலகைகப்பணமுலக்கை
கோலெழுஞாங்கர்வன்றோல்கொடுமரமலிந்தகூடம்
சேலுலாந்தடங்கட்கன்னித்திருமகள்கூடம்போலும். (௫௫)

புனன்மடுத்தெழுகொண்மூவைப்பொங்குளையரிமானேறு
சினமடுத்துரத்தாலென்னத்திவிழிகாலச்சீறிக்
கனன்மடுத்துழலும்வைவேற்காளையர்கைவாளோச்ச
இனமடுத்தூறச்சோனையெனமதம்பொழிவயானை. (௫௬)

பொன்பொலிவடிவுகாணப்பொலிதலான்மதனின்மிக்கார்
இப்பொருளறிந்துநாவொன்றியைந்தனந்தனிலுமிக்கார்
ஒன்பதுநிதிக்குமேலாயுயர்ந்துபிங்கலனின்மிக்கார்
அன்பினிற்கவடிலாமையளித்தலாற்றருவின்மிக்கார். (௫௭)

இலையயிற்குமரனன்னாரியங்குதண்டலைகளெங்கும்
தலைவிரிகுழையத்தேமாத்தண்மலருகுப்பமாரன்
கொலைமுகப்பகழிக்காற்றூர்குளிர்நிழல்புகல்புக்காங்கும்
தொலைவறுகாமத்தீக்குத்துப்புறைபொழிதல்போலும். (௫௮)

இருமணித்தடக்கைநல்லாரிழைத்திடுவண்டல்வீட்டில்
உருமணிமுத்தம்வெண்சோறேனமார்செங்கைதீண்டக்
குருமணியாதல்கண்டுகுறுநகைவிளைத்துப்பண்டைப்
பருமணிமுத்தமாகவிளநிலாவிரிக்கும்பாங்கர். (௫௯)

பெறலருங்கொடிமென்முல்லையில்கரும்பீன்றதென்று
நறைவிரியலங்கலோதிநங்கையர்வதுவையாற்றும்
சிறுகணூர்முழுவமார்த்தவின்னொலிசெவியின்மாந்தி
அறிமுகிலென்னமஞ்ஞையாலுவசோலைதோறும். (௬௰)

அறுசுவைகனிந்துவிண்ணாட்டமிழ்தினுமியன்றுமுல்லைக்
குறுமுகைகவற்றுமூரற்குழைவுறுமுகமன்கூறி
மறுவறுமனுக்களார்ந்தவாயினின்மறைதேர்வாழ்க்கை
உறுவனையருத்திவெவ்வேறொக்கலோடுண்பரன்றே. (௬௧)

மந்திரத்திறலார்காலமும்மையும்வரம்புகண்டார்
எந்திரப்பவத்தைவேர்கீண்டெறிபடையனையநாவார்
சுந்தரமுளரிமாலைத்தொழுதகுதெய்வமன்னார்
அந்தரத்தயனையொப்பாரணிநகரந்தணாளர். (௬௨)

மறைகளுமங்கமாறுமறுவின்மூவாறுபுராணத்
துறைகளுமிருதிநூலுந்துளக்கறவிளக்கிச்சூழ்ந்த
இறைகொடுத்தெதிர்விளுக்கொண்டெவற்றினுந்தோய்ந்துந்தோயா
நிறைபரம்பொருண்மேலுள்ளநிறுவியவறிவின்மிக்கார். (௬௩)

கிளந்தறியாதவேதக்கிடையிடைப்பதங்கள்கோவை
அளந்தபேரோதைப்பொம்மலண்டகோளகையுமுட்ட
வளந்துநான்முகத்துத்தங்கள்பெருந்தகைமகிழவோதும்
இளந்துணைமறைச்சிறார்களீட்டமெண்ணிலவுமீண்டே. (௬௪)

அருள்விளைபுலத்திற்காமமாதியபூடுபூத்த
இருவினைக்களைகட்டார்வத்தெயிலுடுத்துயிர்க்கூறஞ்சும்
திருமணிமிழைத்தஞானச்சேயிழையொடுகுலாய
கருணையங்கோயில்வைகுங்கடவுளர்மடங்களெங்கும். (௬௫)

வடநிழல்விரித்தநாலேழ்மருத்துநூலுரைத்தவாறே
கடவுள்கண்மணியாலந்தக்கரத்துமந்திரத்தால்வெண்ணீற்
றடல்கெழுமருந்தால்யார்க்கும்பிறவிநோயறுக்குஞ்சைவத்
தொடர்கொள்வேதியர்தாமாயுள்வேதியராயதொல்லோர். (௬௬)

இருவிரல்கூட்டிநால்வர்க்கிசைத்தமெய்ப்பொருளையீதென்
றொருவிரல்காட்டிப்பாடுமொருவனைப்பயந்தோன்சுற்றத்
தருமறைபயின்றசெந்நாமுனிவரராற்றல்சான்ற
தருமநூன்மருமச்செல்வர்தனிமடமாலையெங்கும். (௬௭)

பைந்தமிழ்ப்பாவையாடும்பன்மணியரங்குநீலக்
கந்தரனடியார்காணிகாசினித்திலகம்யோக
மந்திரர்முத்திவைப்புமறைவிளைதெய்வப்பூமி
அந்தணர்க்குறையுள்சீர்ந்தியணங்கினுக்கிணங்குபீடம். (௬௮)

உறக்கமென்பனநல்யோகமுணர்வுசால்புருவான்கண்கள்
திறப்பனநிறைமெய்ஞ்ஞானஞ்செப்புவமனுக்களிவ்வூர்ப்
புறத்துளார்செயலுமெம்மான்பூசனையெனவீதேபோல்
துறக்கநாட்டகத்துமோரூர்தொல்லைவையகத்துமின்றே. (௬௯)

வேறு.

விண்கொண்டகாவலவன்வேணுவுருவெய்திப்
பண்கொண்டடித்துணைபழிச்சவருள்வீசும்
வண்கொண்டலன்னவன்மணிச்சினகரத்தான்
தண்கொண்டபேரொளிதருங்கயிலைபோலும். (௭0)

நாதித்தவெள்ளருவிநன்மலைமுகட்டில்
ஆதித்தமண்டிலமமைந்தொளிர்வதென்ன
மீதிற்கிளர்ந்திருள்விழுங்கியொளிகாலும்
சோதித்தகம்பொடுதுளங்குறுவிமானம். (௭௧)

நீரேறுமன்பர்பிழைநேரினுமவர்க்கே
சீரேறுநன்றிபலசெய்கடனெனக்கென்
றோரேறுவேணியனசைத்தகொடிபோலும்
போரேறிலங்குகொடிபொங்குமணிமுன்றில். (௭௨)

சேல்பாய்வயற்கழுமலச்சிவனைவேதன்
சால்பாயருச்சனைசெய்தன்மையதுணர்ந்து
மால்வாய்நெடுந்திசைவழாதுகடைநின்ற
நால்வேதமேயனையநற்கோபுரங்கள். (௭௩)

மின்றோய்நெடுஞ்சிகரிவிண்ணகடுதோயத்
தன்றேசுலாவுமதிசாளரவழிக்கண்
சென்றேகுறைந்தமைதெரிந்துபுடைசெல்வேன்
என்றேவிரண்டயனமெய்தினனவ்வெய்யோன். (௭௪)

நன்றாயகோளுமுதுநாளுமணிமாலை
என்றாய்விளங்கவதினேறுகொடியின்கால்
கன்றாமலர்த்தருவனக்காமவல்லி
குன்றாதணைத்தகொழுகொம்பரெனநின்ற. (௭௫)

மைந்நாடுகொண்டல்கள்வளைந்துருவமூடிப்
பொன்னாடுகெஞ்சுகபுராணனைநிகர்ப்பத்
தன்னாதனைத்தகையனத்தகையதானை
என்னாவிரும்புவியிசைப்பதையிசைக்கும். (௭௬)

மய்யார்வினைப்பவம்வராதகலுகைக்கோ
பொய்தீருஞானவொளிபொங்கியெழுகைக்கோ
மெய்யானதொண்டர்கள்விரும்பிவருகைக்கோ
வெய்யாதலங்குவவிலங்குதுவசங்கள். (௭௭)

வேறு.

ஐம்பொறிமிசையலூட்டுமமுதுவாலறிவன்சொன்ன
செம்பொருளாகமங்கடெளித்ததெள்ளமுதமூவர்
தம்புலத்தமைத்தஞானத்தண்டமிழமுதுமிக்கார்
இம்பரிற்புணர்த்தசெஞ்சொலமுதமேயெவ்விடத்தும். (௭௮)

விடுபொருள்விடுத்துமேற்கொள்விஞெவெதிமறுத்துஞ்செவ்வே
தொடுபொருளிலக்கியங்கடொகைவகைவிரித்துந்தொன்னூற்
படுபொருள்வரம்புகண்டார்பனுவலந்தமிழைக்காழி
வடுகனேமகிழ்ந்தாலேனைவானுளோரென்படாரே. (௭௯)

வேதநாவலர்கள்வாயும்வீதியுந்தழைவவாசி
போதருநிதியுமன்னர்புயங்களுந்தருமறங்கள்
கோதையர்விழியும்வீடுங்குவவுறுமயில்கண்ஞானப்
போதகர்கையுஞ்செய்யும்பொலிவனபலவண்டானம். (௮௦)

தன்மைசேர்க்கிடங்குமன்னசாலையும்பாலனங்கள்
புன்மைதீரியலும்பைம்பூம்பொங்கருமறுபதங்கள்
நன்மறுகிடமும்யாருநவின்மதவாரணங்கள்
பன்மையோர்தொழிலுங்காவும்பலவிரதங்கனமாதோ. (அக)

மாதர்தமருங்குமம்பொன்மாடமும்விலக்குமின்னல்
கோதையர்கையுமன்னர்கோன்மையுமளிக்குமையம்
சீதமென்பொழிலுமுத்தீச்செயல்களுஞ்சிறப்பவாவி
வீதியினயலுஞ்செந்நெல்வேலியும்பொலிவவேழம். (அ௨)

விளரிவண்டொலியுஞ்சூழும்வேலியுஞ்சந்தக்கானம்
வளைகரும்பிடத்துமேலோர்மனத்தினுங்கொழிப்பவாரம்
நளிபொழிலிடத்துமந்தணதிதொறும்வாசவண்டல்
இளநலார்குழலுமில்லுமிலங்குகாசறையுமாதோ. (அ௩)

காசிற்றபுலமைசான்றகாப்பியக்கலைகளெல்லாம்
வாசித்துமிழுக்கொன்றில்லாமாசறுகாட்சியாளை
நேசித்துங்காழிமேயநிருமலக்கொழுந்தின்றாளைப்
பூசித்தும்பொழுதுபோமாற்பொன்னகர்மாக்கட்கெல்லாம். (அ௪)

எண்ணருங்காதையெல்லாமிலக்கணநெறியாற்பாடல்
பண்ணவுந்தருமமாதிப்பயக்குநூலியற்கையாய்ந்து
நண்ணவுஞ்சுவையாறெள்ளிநவச்சுவைபிறந்தகேள்வி
உண்ணவும்போவதல்லாலொல்லையும்போகாவீணில். (அ௫)

சசிமுளைகிடந்தவேணிச்சண்பைநாயகற்குவேண்டிக்
கசிவுடைத்தொண்டராற்றும்விழவையார்கணிக்கற்பாலார்
பசியகட்பேழ்வாய்மோட்டுப்பறந்தலைக்கருந்தாட்பேய்கள்
நிசியிடைத்துயில்யாமத்துநிரைமுழவுறங்காமூதூர். (அ௬)

பாடுவார்பல்லோரென்னிற்பழிபடாநிதியாலின்பம்
கூடுவாரவரிற்பல்லோர்குழகனதடிக்கீழன்பு
சூடுவார்பல்லோரென்றுற்றுவருறத்துறந்துமுத்தி
வீடுகொண்குறுவாரின்னவியனகர்வளமைகாண்பார். (அ௭)

பொறிவழிப்புலன்கள்செல்லும்புரையொடுபசுபோதங்கள்
அறவெறிந்தடுமுப்பாழையகன்றருள்வழியேயுள்ளம்
பிறிவறக்கலந்தார்க்கன்றிப்பெருநகரிதன்மாண்பெல்லாம்
சிறிதுணரறிஞர்வாயாற்செப்பவும்பெறுமோதேர்ந்து. (அ௮)

பழிப்பிலோரெழுத்தான்மெய்ந்நூற்பரப்பெலாம்பரமன்காதில்
ஒழுக்கியவொருவன்றேன்றியுவமைதீர்கவிகளாக்கி
வழுக்கில்பல்லெழுத்தாற்கூறும்வளநகரியல்பையின்றே
ரெழுத்தையுமுணரமாட்டேனென்னெடுத்தியம்புமாறே. (அ௯)

காமரஞ்சுரும்பூர்பாடக்கடிமுகையவிழ்ந்ததண்ணந்
தாமரைக்கிழத்திவாழுந்தனிநகர்வளனீதாகப்
பூமகட்கணியாமிவ்வூர்ப்புண்ணியக்காதைவெவ்வே
றுமவைபலவென்றாலுமறைகுவாமறிந்தவாறே. (௯0)

(திருநகரச்சிறப்பு முற்றிற்று. ஆகத் திருவிருத்தம் - ௧௭௧.)

## புராணவரலாறு.

மழைவாய்ந்தன்னகருமிடற்றுவரதன்காழிமான்மியத்தைக்
குழைவாயன்பர்தமக்குரைப்பான்குறுகுஞ்சூதமுனியென்பான்
கழைவாய்வழிதீஞ்சுவைமொழியாற்கரையமுனிவர்கணங்கொண்ட
தழைவாய்குரம்பைத்தவப்பள்ளிதன்னையறிந்தவாறுரைப்பாம். (௧)

வேறு.

தெய்வவெண்டிரைக்கங்கையங்கரையதுசிறந்தோர்
மெய்வளந்தரப்பொலிவதுவேதநூலாதி
சய்வநூல்களாணிகழ்வதுமாயையின்றனையர்
அய்வருஞ்செருக்கொழிவதுநைமிசாரணியம். (௨)

என்றவல்வினையிருளொழிந்தெமக்குளத்தூய்மை
தோன்றவோருழைதருகெனமுனிவரர்தொழலும்
ஈன்றநான்முகனுருட்டுபுவிடுத்தவீன்றருப்பை
ஆன்றவாழிசென்றிறுத்ததுநைமிசாரணியம். (௩)

மெய்யராரணக்கிழவர்வெண்ணீற்றொளிமேனி
அய்யர்தன்னளியுளத்தராணவத்தைவேரரிந்த
செய்யமாதவத்திறலர்முக்குற்றமுந்தீர்ந்த
துய்யரெண்ணிலார்பிறங்குவதவ்வனச்சூழல். (௪)

குணத்தின்மிக்கவரோம்புமுத்தீவளர்குண்டத்
துணக்குவாய்ந்தபல்சமித்துகண்மனுமுறையூட்டி
அணக்கும்வெஞ்சுடர்க்கின்றுணையாய்வளியாட்ட
மணப்பொதும்பரிற்சிறைவிரித்தாடுவமஞ்ஞை (௫)

புதையவிண்கவித்தோங்குயர்பொழிலிருள்போக்கித்
ததையுமெல்லிணர்த்தீபகத்தருச்சுடர்தாங்க
இதையநல்லவர்க்கேந்தியசிரகமென்றிலையால்
துதையுமென்சினைநீட்டுவபுதுக்கனிச்சும்மை. (௬)

மலக்குறும்பறவெறிந்தநான்மறைபயில்வாழ்க்கை
அலக்கணில்லவரிமிழ்திரைக்கங்கைநீராடி
நலத்ததொல்கடனிரப்புபஞாங்கரினின்று
புலர்த்தும்வேணியைக்காட்டுவபூங்கனிக்கொன்றை. (௭)

எல்லொளித்தழலிறையவனெழுவகைநாவால்
அல்லறீர்மகப்பொருணுகர்ந்தரும்புகையீட்டப்
எல்லைநீத்தநாக்கொடுபுகையீட்டுதலேய்க்கும
செல்லினங்கிடந்துறங்குதண்குழைநறுந்தேமா. (அ)

போதுகொள்பவர்சமித்தொடுசெல்பவர்புனைதீர்
வாதுகொள்பவர்நல்லருட்குரவர்தாள்வனசத்
தாதுகொள்பவர்மனோலயவின்பசாகரமேல்
காதுகொள்பவர்கணிப்பிலர்தாபதகணங்கள். (கூ)

நாமநூன்முதுவோர்தவப்பள்ளியின்ஞாங்கர்
காமநூறெரிவிடரெனக்கடுவெனின்றிரங்க
ஏமவைம்பொறியவித்துளவிரதரினீண்டைக்
காமதன்றெனவகலுவகருவிரன்மந்தி. (க0)

புந்திவல்லவர்மகவினைப்பொடிகளைக்கரத்தால்
சிந்திமெய்வெளிறடைந்தவெஞ்சினக்கடகளிற்றை
இந்திரன்றனதுயரியமருப்புடையிமையாத்
தந்தியாங்கொலென்றயிர்ப்பனதளர்நடைப்பிடிகள். (கக)

முன்னமெம்முருவடைந்துளோன்காணருமுளரி
அன்னசேவடியிவையெனப்புல்லுறைத்தழுங்கா
தின்னமாதவர்மெல்லடியயங்கலாறெல்லாம்
கொன்னவின்றவெங்கோட்டினுலகழ்வனகோலம். (கஉ)

கொம்மைச்சுதத்திற்கதலியிற்பலவினிற்குழைந்த
அம்மைத்தீங்கனிச்சாற்றினுலாணவமாதி
மும்மைப்பங்கமுமகன்றுளாரேனுமிம்மூன்று
செம்மைப்பங்கமீண்டகலுமாறறிந்திலர்திரிவார். (கங)

ஏகமாமுனிசுகமுகமெண்ணிலாமறையும்
யோகநூல்களும்விரிந்ததுகடுப்பநல்லுரவோர்
யாகசாலையின்மருங்கெலாமெழுதொணாக்கிளவி
மோகநீத்தநூல்விரிப்பனபலசுகமுகங்கள். (கச)

நன்றுசெய்ததோருயிரெனினக்குலநன்மை
என்றுமேசெயுமென்பதீண்டறிந்தனமெரிகட்
கன்றுவெஞ்சினவுழுவையும்புயங்கமுங்கனக
மன்றுண்முன்னுளோர்பணிதலைக்கொள்ளுமவ்வனத்துள். (கரு)

புரங்கடந்தவற்கடிமைசால்கற்றுகில்புனைவார்
தரங்கநீர்படிந்தெழுந்துழித்தாங்கும்வற்கலையை
மரந்தெரிந்துகூர்நகம்பொதுத்துரித்துவல்லியங்கள்
இரங்கிநல்கநின்றீர்ங்கலையேந்துவகவிகள். (கசு)

ஆசிலிவ்வனத்தருந்தவர்பெருமையையளந்து
பேசில்வாளராவிறைவனுமிற்றெனப்பெறுமே
பாசிலைத்துழாய்முகிலுநேடரியபொற்பதத்தை
ஏசிலன்புநூல்பிணித்துளத்திருத்தினரென்றால். (கஎ)

புலனடக்குநர்புவிக்கெலாந்தண்ணளிபூப்பார்
நலன்விளைந்தநன்னெறியொழுக்கத்தினர்நாதத்
தலனகன்றசின்மயப்பெருவெளியினிற்சலியா
துலவுநோக்கினருறங்கலாவுறக்கமிக்குடையார். (கஅ)

கூறிவித்தனையத்திரிகோதமன்குமுதன்
மாறில்கண்ணுவன்வாமதேவன்சுகன்வசிட்டன்
வேறில்காசிபன்சவுனகனாதியர்மேனாள்
ஈறில்சத்திரவேள்வியொன்றிழைக்குமவ்வெல்லை. (ககூ)

இயலிலங்குபன்மறைகளுங்கலைமுதலெவையும்
மயலகன்றுளவாதராயணமகோததியில்
பயனுகர்ந்துயிர்ப்பயிர்க்கெலாமின்னருள்பணிக்கும்
புயலையேநிகர்சூதமாமுனிவரன்போந்தான். (உ0)

அடைந்தவண்ணலையாயிடையந்தணரடியேம்
மிடைந்தவெவ்விடாய்க்காய்ந்துநூற்கடலெலாமீண்டே
கடைந்துதெள்ளமுதளிக்குமெங்கருணையம்பொருப்பே
மிடைந்தசெல்வமேயென்றனரெதிர்கொடுவிருப்பால். (உக)

அருக்கியாதிதந்தாய்மணிப்பீடமிட்டதன்மீ
திருத்தியெம்பிரானீண்டெழுந்தருளினையென்று
விருத்தவேனில்வாய்க்கருவிமாமழைத்துளிவீசக்
குருத்தசெந்நெலிற்களித்தனரோருரைகொடுத்தார். (உஉ)

மறுவின்மூவறுபுராணமும்வளரிதிகாசத்
திறனுமோதினைபலதருமாதியுந்தெரித்தாய்
உறுதிவாய்ந்திலாவெமக்கடிகேண்மனத்துண்மை
பெறவழங்கியபற்பலதலங்களும்பேசின். (உங)

வேறு.

உடனுறைமடவார்யாருமோம்புநரின்றிவாடும்
மடவரன்மகப்பேறெய்தவல்விழிமூடிமற்றை
இடவிழிநோக்கிப்போற்றியெந்தையாயானதேனை
அடல்வினையறுப்பதாங்கொல்லதுசிராப்பள்ளிக்குன்றம். (உச)

நொய்யகாற்சிலம்பிமாட்டுநூலிழைப்படலஞ்சாய்க்கும்
வெய்யகால்யானைமாட்டுமொருநிலைவெளிப்பட்டோங்கும்
அய்யநீர்த்திரளாயென்றுமமர்ந்தவானைக்காவென்று
பொய்யிலாத்திருநீறிட்டபுரிசைசூழ்கிடந்ததொன்றே. (உரு)

மெய்யாறுமுகத்தோன்றந்தைமேதகுவடிவும்வாழ்வும்
கய்யாறுபிரம்புங்கோயில்காவலுஞ்சுடிகைப்பேறும்
உய்யாறுபெறுவானந்தியொருவன்முன்பணிந்ததுண்டால்
அய்யாறுமாறுநீங்குமருளாறுந்தருமையாறு. (௨௬)

காரகன்மிடற்றுமுக்கட்கனிசெவிகொடுத்துத்தாழத்
தாரகப்பொருண்மையோதுஞ்சண்முகத்தொருவன்கோட்டம்
பாரகப்பரிக்குஞானப்பண்ணவர்துதைந்துபோற்றும்
ஏரகமென்னுந்தெய்வவின்பவீடளிப்பதொன்றே. (௨௭)

நுடம்பொலிமுனிக்குமன்றற்கோலமுங்காட்டியெம்மான்
இடம்படுகோவணங்கொண்டியலமர்நீதியுய்ய
மடந்தையைமணியைப்பொன்னைமகவைமற்றுளவையெல்லாம்
அடங்கலுஞ்சூறைகொண்டாங்களித்ததொன்றுளதுநல்லூர். (௨௮)

பன்னருவினைகளெல்லாம்பலதலஞ்சாரப்பாறும்
என்னநீள்சுருதியாவுமிசைத்திடுந்தன்பாற்செய்த
துன்னருவினையும்யாண்டுந்தொலைவுறுவினையுமெல்லாம்
தன்னகத்தெளிதுதீர்க்குந்தலங்குடமூக்கொன்றுண்டே. (௨௯)

பத்தியங்கிலரேனுங்கண்படைகொள்ளினன்றேயோரென்
சித்தியும்பெறுவர்மேலுஞ்சிவனருள்பெறுவரென்னு
முத்தியங்கனியைவேட்டுமுழுமணிச்சுடிகைச்சேடன்
துத்தியஞ்செய்யுநாகீச்சுரமொன்றுதுலங்கிற்றம்மா. (௩௦)

பூசநீர்ப்படிந்ததொண்டர்பூங்கழற்றோய்ந்தசின்னீர்
பாசநீருடலிற்றோயப்பரித்தநீர்வேணியான்றன்
வாசநீரிருக்கவென்னுவரன்றருமறலஞ்சாயற்
கேசநீர்ப்பொன்னிசூழக்கிளரிடைமருதொன்றுண்டால் (௩௧)

கோவொடுபுலவரீண்டிக்கூன்பிறைக்கோட்டுநல்லான்
மாவடிவெய்திப்போற்றமதிநுதலதிதியீன்ற
தேவடுசெறுநர்ச்செற்றதிரிபிலைம்படையான்வைகும்
ஆவடுதுறையென்றுண்டாலரும்பதியொன்றுமாதோ. (௩௨)

மற்றாலம்புனைந்தோன்வேப்பங்கண்ணியான்வயங்குசோதி
பற்றாலம்புயத்தைவென்றுபன்னிரந்தருதாட்சென்னி
பொற்றாலம்போற்றுமந்தண்பொன்னிசூழ்துருத்தியாய
குற்றாலமென்னமன்னுங்கோநகரொன்றுண்டால். (௩௩)

முதுசெல்வச்செழியனேவமுதல்வன்மண்பரித்தவாற்றால்
அதுவையைக்கரைக்குவார்த்தையாயதென்றமலனேற்ற
புதுவெள்ளப்பொறைதான்கொண்டுபூந்திரைசிவிறிப்போற்றும்
மதிபுனற்பொன்னிசூழுமணியெயின்மயிலையொன்றே. (௩௪)

உடம்படுமாயைபுக்கவுயிரெலாந்தமிழான்முத்தித்
தடங்கரையேற்றுஞானசம்பந்தர்துறைகாண்மூதூர்
முடங்குளைமடங்கலானேன்முதுபுவந்தேறுமுச்சீர்க்
கடந்திருமறையோர்போற்றுங்கடவுண்மாநகரமொன்றே. (௩௫)

கள்ளியல்பொழில்சூழிஞ்சிக்கார்சிராமணியேகாட்டிப்
பள்ளிநான்கினுமிக்காயபள்ளிபூம்பள்ளியானும்
வெள்ளியந்திரைபுரட்டும்வெண்கடற்பள்ளியானும்
தெள்ளியராதப்போற்றுந்திருச்செம்பொன்பள்ளிமாதோ. (௩௬)

தென்னவன்கூனுங்காமன்சிலையுடைக்கூனுமாற்றும்
மன்னவனடியார்க்கன்பனுணவரக்கியாய
கன்னிமாதிரங்கக்கூனிக்கலையற்குநிமிர்ந்துகாட்டும்
மன்னவன்கருணைகூர்ந்தவளாநகரதுபனைந்தாள். (௩௭)

கருக்கொடியொழிக்கும்பொன்னிக்கரைக்கொடியடைந்துகும்பன்
மருக்கொடிமலர்யடுவிமனமிறுமாப்பனின்போல்
உருக்கொடிமும்மையன்பருளரெனவுருவிற்காட்டிச்
செருக்கொடியகலக்காத்தான்றிருக்கோடிகாவொன்றுண்டே. (௩௮)

விருப்பங்கூர்ந்துமையாளேந்தவெள்ளியங்கிரியிலென்றும்
இருப்பங்கேயென்னமேவுமிறையவன்வினைவெங்கோடை
உருப்பந்தீர்த்தருளுஞானவொண்முகிலானேன்வாழும்
திருப்பங்கூராயதொன்மைச்சிவலோகநகரொன்றுண்டால். (௩௯)

கானமர்கடுக்கைவேணிக்கடவுளேயடல்குன்றாத
மானமந்திரத்தாலேனைமருந்தினுலகில்யார்க்கும்
ஊனவல்வினையுமோவாவுற்பவவினையுந்தீர்க்கும்
மானபுள்மறைபூசித்தவகன்பதிவேளூருண்டால். (௪௦)

போதியன்முலைதொட்டுண்ணுமகவைத்தம்பொழிபாலூட்டும்
நீதியனையர்போன்முக்கணருளைநீடியிருண்டுய்ய
மாதியல்பாகனன்பால்வகுத்தமுக்குளத்தினோங்கும்
ஆதிவெண்காடாமாதியம்பலமென்பதொன்றே. (௪௧)

பண்ணலந்தகக்கூவேனற்குயின்மொழிப்பேதைபாகத்
தண்ணல்கண்ணனல்சான்றாகவாழிநீர்க்கிழவன்பொன்னித்
தண்ணலங்கொடியைவேட்டசங்கமத்துறைநீராடி
விண்ணலங்கனிந்தோன்போற்றும்வியன்சாயாவனமொன்றுண்டால். (௪௨)

ஏனவருஞ்சையவோங்கலிடைநிகழ்பிரமகுண்டம்
முனமதாய்க்கன்னிப்பொன்னிமுயங்குசங்கமநீறாக
மனவுடைப்பணியாளூர்மாண்மியமெலாம்வகுத்தாயெந்தாய்
உனதுழையடியேங்கேட்பவுரைத்ததொன்றுண்டுமேனாள். (௪௩)

மற்றதன்முன்னும்பின்னும்வரம்பறுகாதையெல்லாம்
சொற்றனையெம்மனோர்க்குத்துளக்கறமுன்வினைய
பெற்றியையளித்தாயல்லைபெரிதுறவிழைந்தவெம்பால்
முற்றுறவருளல்வேண்டுமுழுதொருங்குணர்ந்ததொல்லோய். (சச)

வேறு.

திருத்த லத்தினுந் தமமுமெய்த் தீர்த்தத்துந் தமமும்
கருத்தர் தம்மினுந் தமனையுந் தனித்தனி கரைந்தாய்
நிருத்த னேகுரு லிங்கசங் கமமென நிலைபெற்
றருத்தி வீடருள் பதியுமொன் றுண்டென வறைந்தாய். (சரு)

மூல வல்வினை யிருள்கெட வருணிலா முகிழ்க்கும்
சீல வெண்கதிர்த் திங்களே யந்நகர்ச் சிறப்பை
ஏல வெங்களுக் குணருமா றருளுதி யென்னுக்
கால மும்மையு மொருங்குணர் சவுனகன் கரைந்தான். (சசு)

(புராணவரலாறு முற்றிற்று ஆ திருவிருத்தம் - உஉஎ.)

## முதலாவது தலவிசிட்டவத்தியாயம்.

மறுவின்மாதவனுவற்சியைச்செவித்தொளைமடுத்துத்
தெறுசினத்தழலவித்தமாமுனிவரன்செவ்வே
உறுமுளத்தில்வைத்தோதியினுணர்ந்தனனறனக்கோ
ரிறுதியில்லவனெழிலுலாங்காழிமான்மியமே. (க)

வேறு.

குரவுவார்சோலைக்கழுமலவாணன்குரைகழல்வியப்பமுமாங்கண்
உரவுநீர்ப்பொன்னிவியப்பமுநினைந்துள்ளுருகிமெய்சிலிர்ப்பவாய்மலரக்
கரமலர்குவியவறிவறியாமைகடந்தபூரணப்பெருங்கடலில்
பரவசமடைந்தமுனிவர்தம்பெருமான்பகருவானிகரிலாதனவே. (உ)

முன்னுமேறகதியைத்தருபலதலனுமொழிந்தனமுதல்வனேமூன்று
வன்னமாய்க்கதியைத்தருதலமொழிந்தாமறுநீர்விழைதலாலதன்சீர்
உன்னுமாறரிதாமேனுமெம்மறிவாலுணர்ந்தவாறுரைத்துமென்றுரைத்தான்
மன்னுநான்மறையாலெண்ணிலாரணங்கள்வடித்தவனடித்துணைமனத்தான்.

உருண்டபொறபழுத்தபொரியரைக்கருங்கோட்டுயரியவெதிரிகாச்சிரமத்
திருண்டபொறகளத்தான்கழுமலதியலையெம்முகத்தளித்தநாளவையும்
தெருண்டநங்குரவனெவர்க்குமிவ்வியலைச்செப்பலையென்றனன்பவத்தால்
வெருண்டபக்குவத்தீர்க்குறைத்தலுமெமக்காம்வேட்டலுநுமக்கறனுமால். (ச)

புரையறுதவத்துமுனிவிர்காளந்தண்பொன்னிசூழ்வரக்கிடந்தமையால்
விரைமலரலங்கன்மிலைந்ததுபோன்றும்வினைக்குறும்பேறெறுவியப்பால்
கரைபொருதலைக்குநீரரண்போனறுங்கடவுளப்புலன்கெழுகோட்டு
வரையகத்துறலாற்கயிலையேபோன்றும்வயங்குமான்மணிமதிட்காழி. (ரு)

வண்டுழத்திறந்தகமலமண்டபத்துவானவன்மலர்தலையுலகம்
பண்டுகைம்மலர்தூய்ப்பழிச்சியவாற்றாற்படைத்திடற்களித்ததும்பன்னீர்
மொண்டுகொண்டணைந்துகொண்டலாட்டயருமுரிதிணைக்கடலெழூஉங்கடை
நாள், மண்டுபொற்றோணியுருக்கொடுகுடிலைவலியடைந்ததுவுமிந்நகரே. (௬)

நீடுநல்லறங்களிழைத்துளோர்கயிலைநேர்வர்தருமறைநெறித்தே
தேடுமவ்வறத்துக்குறுபதமளிப்பான்சிவனலாற்றேவரில்யாரே
நாடுமச்சிவனேமூவுருவாகிநற்றலம்பற்றினனென்றால்
கூடுமோவிதற்குவேறொருதலத்தைக்குவலயத்திணையெனக்குறித்தல். (௭)

உறுவரிலுயர்ந்தபராசரன்மேனாளொண்மலர்க்கிழவனைமறைநூல்
நெறிபிறழ்கலியின்வலிதவவலிக்குநெடுந்தலநிகழ்த்துகென்றிரப்ப
அறிவகேளெம்மான்கயிலையிலுமைக்கிறைவுழியறிந்தயான்றெளியப்
பெறுதலமதையுங்காழியுமிருபாற்பிறங்கிருதட்டினும்வைத்தே. (௮)

துலையிடைநிறுப்பவிந்நகர்க்கவைதாந்தொகுபதினாறிலோர்கூறு
நிலைபெறூஉதொழியவெவற்றினுமோங்கிநிலவியதடியுகநெறித்தாய்த்
தலைமையெய்தியதுசந்ததமென்போற்சதுமுகரளவிலார்பணிந்த
துலைவறுதவத்தோய்நீயவணேகினுன்னியவெய்துமாலொருங்கே. (௯)

எனவருட்பனுவலாட்டிதன்கேள்வனியம்பலுமனையவன்விடையால்
மனவலிகடந்தபராசரன்றென்னாள்வந்தரும்பூசனைபுரிந்து
சினவிடைப்பாகன்றிருவருள்பெறலாறநிகழ்ந்தகேத்திரவரமெனும்பேர்
பனவரேத்தெடுப்பக்கொடுங்கலிவலியைப்படுத்திமீதுயர்ந்ததிப்பதியே. (௧௦)

ஆதிதெய்விகமேயாதிமுத்துயரவடவியைவடவைபோற்காய்வ
தீதிடைவதிவோரருந்தவந்தானம்யாகநற்பலன்களெய்துவரால்
ஆதலினதனையணைகலார்மேலாமரும்பதமணைந்திடாரணைந்தார்
போதருமறிவாலழைத்தவல்வினைகள்போகுமாலிரவிமுன்பனிபோல். (௧௧)

விரதமெண்ணிலவுமெண்ணிருதானவிகற்பமும்வேள்விகள்பலவும்
சரதமாமறைநூற்பயிற்சியுநாளுந்தவரின்முந்தழலுஞற்றுதலும்
பரவுமட்டாங்கயோகமுமளிக்கும்பலனெலாமரியுரிபோர்த்த
வரதனென்றொருகாலுன்னினர்பலத்தைமானுமோவணுவளவேனும். (௧௨)

சேயமென்கமலத்தயன்முனங்கொணர்ந்ததெய்வதாருவைமுறைவணங்கித்
தூயமென்றளிரைமுடித்துளோரிடருந்தொடருறுபிணிகளுமுடிப்பார்
ஆயதன்னடிமண்ணுதன்மிசையணிவாரரும்பெறன்முத்திவீடணிவார்
பாயதண்ணிழற்கீழோர்மனுக்கணித்தோர்பலமனுச்சித்திநண்ணுவரால். (௧௩)

வீதியினங்கப்பிரதக்கணம்புரிந்தோர்விமலனோடளவளாயிருப்பார்
நீதியின்வணங்கிவணங்கியோடந்துநிகழ்வலமொன்றொருகோடி
போந்துவலமென்றோரடிநடக்கிற்புகன்மகமாயிரகோடி
மாதியல்பாகற்குவப்புறுபூசைவலஞ்செயலன்றிவேறுளதோ. (௧௪)

கறையகன்றவிக்தருமபூமியினிடைக்காசியேகயையேசீர்
உறைபிரயாகையேதில்லையேகுடந்தையேயோங்குதென்னாரூரே
மறைபழிச்சியகானமேதிருவிடைமருதமேயெனவெட்டா
இறைதருந்தலமிவைகளையதிகமென்றியம்புவபலநூல்கள். (௩௩)

ஈண்டுநாலிருதலத்தினுமுயர்ந்ததாலித்தலமெவற்றென்றால்
சேண்டயங்குநீர்புதைத்தபேரூழியிற்றிரிபிலாததனானும்
பூண்டவைதிகசைவநாட்டியதமிழ்ப்புதல்வனைப்பெறலானும்
ஆண்டநாயகன்குருமுதன்மூப்பொருளாய்வதிதரலானும். (௩௪)

ஐங்குரோசமட்டெல்லையின்வைகியவறிவுள்ளோரறிவில்லோர்
தங்குகிற்பனபறப்பனதிரிவனதவழ்வனகிடந்தூர்வ
மங்குபுற்கொடியாவையுமயற்புலம்வந்திவணிறந்தோரும்
பொங்குகூறறுகுந்திருவடிநிழலிற்புகுதல்சத்தியமாமால். (௩௫)

வருபதங்களைமலைமகன்றந்தையால்வானவர்க்கிறைமாட்சி
ஒருபதம்பெறவுன்பதம்புகலெனுமொலியறுபதம்பாடிப்
பொருபதந்திகழ்கடம்பணிதடம்புயன்புகலிநாயகன்காட்சி
தருபதம்பணிந்தைம்பதம்பெற்றனன்றறபதம்பெறவிண்ணோர். (௩௬)

துகிருலாஞ்சடையலமரப்பணித்தொடைதுயல்வரக்குழையாட
வகிருலாம்பிறைவயஙகவின்னருணகைவதனமண்டலம்பூப்ப
நகிலிளங்கொடிகாண்வரவாரணனைமுதுதலைகொய்த
உகிருலாங்கரத்தொருவனிப்பதியலன்பொடுங்குனித்தனன்மேனாள். (௩௭)

குன்றிருஞ்சிறையொருங்குறவரிந்தவாட்குலிசவேலிறைமுன்னாள்
வென்றியெண்டிசைத்தலைவருமந்நகர்விடைவலானடிபோற்றி
மன்றவோரொருகடவுளுந்தடமுமவ்வயினிறீஇவழிபாட்டால்
என்றுமேதகவிருந்தனர்வரன்முறையெண்ணில்விண்ணவரோடும். (௩௮)

வாணிலாமணியிழைத்தபொற்குவட்டினில்வதிந்தருளியதண்ட
பாணிமுன்னமர்பீடமேன்மலர்கடூஉய்ப்பார்க்கவன்றினத்தேத்தி
ஏணிலாவியபுழுகணிந்தள்ளிருளிடத்தவன்றிருத்தாளைப்
பேணினார்க்கொருவறுமைவல்வினையெழுபிறப்பினுந்தொடராதால். (௩௯)

இயக்கர்கின்னரர்சித்தர்வித்தியாதரரிமையவருரகேசர்
பயக்குமைங்குரோசத்தளவெல்லையும்பலவகையிலிங்கங்கள்
நயக்குமாறிறீஇவழிபடவிருத்தலினகரமிங்கிதைமேலோர்
மயக்கமில்லிலிங்காடவியென்றலான்மணவுமவ்வடிவாமால் (௪௦)

துஞ்சல்போயதெள்ளமுதமுண்டேழிசைத்துழனிசூழ்தருநீழற்
பஞ்சிமெல்லடிச்சசிமுலைமுயங்கலாற்பணைப்புயத்தணைதூளை
நெஞ்சினல்லவராருவருந்துறப்பினுனிகழ்வலம்புரிந்தந்தோ
கஞ்சமாதுறையிந்நகர்வீதியிற்கலந்ததூளணிகிற்பார். (௪௧)

கண்ணகன்றசேட்புலத்தினிற்சிகரிகள்கண்ணுறக்கரங்கூப்பித்
தெண்ணறும்புனல்படிந்துநீறணிந்துருத்திரமணித்தொடைவேய்ந்து
புண்ணியப்பொலஞ்சினகரம்புக்குமுப்பொருளையுந்தொழப்பெற்றார்
அண்ணலஞ்சரணிழலிடையொன்றியொன்றாநிலையடைவாரே. (௪௨)

விழுந்துவிட்டமென்புரிசடையந்தணன்வியன்மணித்தடங்கோயில்
பழுதுபோக்குவோர்புதுக்குவோரிட்டிகைபரப்புவோர்புல்லாதி
உழுதுமாற்றுவோர்மேனிமாசகலுமாறலகுபூத்தருளன்னை
தொழுதகுந்திருவுத்தரீயங்கொடுதுலக்கான்மகவாவார். (௪௩)

அரவவேணியன்றிருமுடித்தலத்திலானைந்தமுதொருங்காட்டிற்
பரனருட்கடல்படிந்தினிதாடுவார்பதியிதிற்சிவநாமத்
திரவில்யாமநான்கெலலையும்வரன்முறையெந்தைதாள்பணிந்தேத்தி
விரவுவார்க்கலாதயலவர்க்கிடங்கொலோமேலரும்பெறல்வீடு. (௪௪)

எண்ணிலாததொல்லிலிங்கமும்பெயருநல்லெழிற்றடங்களும்வாய்ந்து
நண்ணியோங்குவதிந்நகரிவற்றின்முன்னான்குபுண்ணியமூர்த்தி
தண்ணிலாவியதடங்கண்முன்னான்கபிதானமுந்நான்காக
உண்ணிலாவுமாலிவற்றினும்பூதெலாமுளைசெயக்கவாயின்றே. (௪௫)

தோணியம்புரத்தொடுபிரமாபுரந்தொல்லியறசெழுங்காழி
தாணுவெங்குருபுகலிவண்சிரபுரஞ்சண்பைமாநகாகொச்சை
வேணுபுரங்கழுமலமபுறவமேர்மிக்கபூந்தராயென்றே
காணுமிப்பெயராறிரண்டையுமுளங்கருதுவாகதிசேர்வார் (௪௬)

நணியுரைப்பதென்னிழிகுலத்தழிபுலானுறுபென்கொடிமென்றோள்
மூணிமுயக்குறவாங்கவன்சிறுமையைமுழுவதுமகன்றோடத்
துணிவகற்றிமூவாறுபுராணங்களுந்தொகைவகைவிரியாகத்
தணியெனக்கருள்குருவருட்குருவெனத்தந்ததித்தலமென்றால் (௪௭)

இன்னுமான்மியமெண்ணிலகண்ணியதிசைத்தனமிருடீரப்
பொனனெழுக்கியபுரிசடைமாதவப்பொருப்புறழ்முனிவீர்காள்
கன்னிமூதெயிலிந்நகர்ப்பெயரியற்காரணமீராறில்
முன்னதாகியதோணியம்புரிவரன்முறையினையறைகிற்பாம். (௪௮)

(௧-ஆவது தலவிசேட்டவத்தியாயம் முற்றிற்று. ஆ திருவிருத்தம் - ௨௭௫)

## ௨ - ஆவது. தோணிபுரமானவத்தியாயம்.

என்னவேணிமௌலிச்சவுனகாதிமுனிவர்க்
கன்னவூர்திநிகராயமுதருந்தமுனிவன்
கன்னலஞ்சுவையெனக்கடவுளாரமுதெனச்
சொன்னகாதையதனிற்சிறிதுசொல்லுவனரோ. (௧)

வெம்புமாயைதிரிவெவ்வினைமணிக்கயிறுசூழ்
பம்பரம்பொரவுழன்றலைபடாதுபரிவால்
வம்பராமுளைமதிச்சடிலமாமுனிவரே
ரைம்பெருந்தொழிலியற்றுவனுயிர்க்கருளினால். (௨)

மறைவலாளனில்வகுத்துநெடுமாயனிலளித்
திறையுருத்திரனில்லீறுபுரிவித்துவினையின்
பொறைமகேசனின்மறைத்துநிறைபோதமுதல்வன்
சிறையுயிர்க்கருளுமைவகையசெய்கையிவையே. (௩)

மாசிலிவ்விறைவனாணைவழிவைகுவனவாம்
ஆசிலண்டநிரையெண்ணிலவைகட்கிடனதாய்
ஏசிலாவலையிலேழ்கடலையுந்திவலைபோல்
வீசுமூலநெடுவேலையஃதொன்றுளதரோ. (௪)

வேலையன்னதில்விராட்புருடன்மெய்ம்மயிர்தொறும்
பாலெலாமுதுபழம்பொதியுதும்பரமெனச்
சாலவண்டநிரைதங்கநடுநின்றனனிவற்
றேலுமண்டமிதனெல்லையைவிளம்புவனியான். (௫)

தோமிலாவுலகமீரெழுமைதொக்கவிதனுள்
ஏமமால்வரையிலங்குமிதனைத்தழுவுமால்
சேமநாவலுறுதீவுமதுசேருவரியும்
தாமியோசனைதனித்தனியிலக்கவிரிவாய். (௬)

அறையுமவ்வியலிரண்டெனுமிலக்கமகலத்
திறலியென்றமுதுதீவுமயலக்குவடிசா
றுறைதடங்கடலுமோங்குமதனுக்கயலிலே
சிறைகுலாமிலவுசேருமொருதீவுமுளதால். (௭)

நாலெனுந்துணையிலக்கமதைநண்ணுமதுவார்
வேலையும்புகலினத்துணைவிளங்குமயலே
சால்புநீள்குசைதயங்குமொருதீவுமருகே
ஏலுநெய்க்கடலுமெட்டளவிலக்கமுறையே. (௮)

அதனிரட்டிகிரவுஞ்சமடுதீவுமதுசூழ்
ததியுடைக்கடலுமத்துணைதயங்குமதன்மேல்
முதியசாகமுளதீவுமலைமோதுநிறைபால்
உததியுந்துணைதனித்தனியிரட்டியுறுமே. (௯)

மண்டலம்புதையிருட்படலம்வாரிநகரும்
சண்டபானுவுதயந்தருவதுந்தனிவலங்
கொண்டுமேல்கடல்குளிப்பதுமதற்குளனவே
பண்டைநான்மறைபயின்றவர்பகர்ந்தனரரோ. (௧௦)

மற்றதற்கயல்வயங்குவதுபுட்கரமெனச்
சொற்றதீவுமிதுசூழ்வருபுனற்புணரியும்
முற்றும்யோசனைகண்முன்னதினிரட்டியனவாம்,
பெற்றயோசனையிலக்கவகைபேசியிடினே. (௧௧)

வேறு.

அயலிலீரைந்துகோடியகன்றபொற்பூமியப்பால்
உயர்பதினாயிரத்தியோசனையாழிவெற்பாம்
பெயர்வருமயலினீண்டபெரும்புறக்கடலினெல்லை
இயலுமோர்கோடிமேலுமிருபத்தேழிலக்கமப்பால். (௧௨)

மய்யாருமிருளுலோகம்வகுத்தயோசனைகள்கோடி
அய்யேழினொடுபத்தொன்பானிலக்கநான்கயுதமாமால்
எய்யாதவண்டப்பித்திக்கணங்கோடியெல்லையென்ப
மெய்யார்யோசனைகளின்னவிரியினித்தொகையுஞ்சொல்வாம். (௧௩)

வளமலியம்பொன்மேருமத்திதொட்டண்டப்பித்தி
அளவும்யோசனைகடேரினைம்பதுகோடியாக
விளைதருகிழக்கினெல்லைவிரித்தனமேனைமூன்று
தளர்வருதிசையுமிவ்வாறகன்றனசாறறுங்காலே. (௧௪)

தெரிவுறுமகலநூறுகோடியோசனைசெறிந்த
விரிபுவிக்குக்கீழ்த்தொட்டுமேன்மட்டுநூறுகோடி
துரிசறுமுயர்வாமண்டமீங்கிதைத்தொலையாவெள்ளப்
புரிபுறக்கடல்பாய்ந்தெற்றிப்புகுந்தகோரூழிநாளில். (௧௫)

அலையினமலையிற்பொங்கியண்டகோளகையைமுட்டி
நிலைகுலைத்தடுக்கையெல்லாநெரிநெரித்தார்ப்பினோங்கித்
தலைபடுஞ்சுழியாலெட்டுத்தடந்திசையொடுங்கவோரெண்
கொலைமதக்களிறுஞ்சாயக்குமைத்ததுமுதுநீர்க்கொள்ளை. (௧௬)

ஆழிமால்வரையுமோரெட்டாகியவரையுஞ்செம்பொன்
ஊழிமால்வரையுமேல்கீழுயரியவரையுமாநீர்ப்
பாழிவெண்டிரைகள்பாயப்பொடிந்தனபடிந்தபல்வே
றேழிரண்டுலகில்வாழெவ்வரையுமவ்வரையின்மாதோ. (௧௭)

நாளுறுவலிசான்மோட்டுநாலிருதிசையினின்ற
கோளராவினமுநாளுங்கோளும்விண்ணோரும்விண்ணில்
வாளுறுக்குலிசனாதிமாதிரத்தவருஞ்செம்பொற்
றாளுறுத்தருவும்வேறுசுடர்களுமிரிந்தமாதோ. (௧௮)

பேர்வனபறப்பநிற்பபிறங்கிருணிரயந்தம்மில்
ஆர்வனநீரில்வாழ்வதத்துவவரவமாதி
ஊர்வனதவழ்வவெவ்வேறுலவிலாமணிதராகிச்
சார்தருமுயிர்களெல்லாஞ்சாய்ந்தனதேய்ந்தவன்றே. (௧௯)

கமலகாரணனொடுங்குங்கடையினுமுதல்வனாவான்
நிமலனேயன்றிவேறுநிலையுநர்யாரேயார்க்கும்
தமரசாகரநீர்மோதத்தம்முயிர்தேம்பினாரை
அமரரென்றுரைப்பாரன்னோர்பெற்றியையறியாரன்றே. (௨௦)

சொல்விரிபொருள்கடாமெத்துணையவத்துணையவெல்லாம்
வல்விரைந்தழியவாங்கண்மன்னுயிரீட்டம்யாவும்
மெல்லியமானமாயையிடத்தவாயொடுங்கலோடும்
அல்விரவியதாலெங்குமாழ்நீர்பரக்கமாதோ. (௨௧)

மின்கிளர்ந்ததனையாங்கேவிழுங்குறுமேகமென்ன
முன்குறித்தண்டந்தொக்கபொருளெலாமுரிந்துமாயை
தன்கணேயொடுங்கிப்பன்னாட்டகைந்தனதகைதலோடும்
வன்கறைமிடற்றுத்திங்கள்வகிரணிவரதனன்பால். (௨௨)

நூக்கியவொருவனாட்டநுடங்குபாவையினைச்சின்னாட்
போக்கிமற்றெடுப்பான்போன்றுபுவனகோடிகளைமுற்றும்
தாக்கியதலைவன்றானேதன்னருள்வலியான்முன்போல்
ஆக்கியதுணிந்தானெல்லாமளித்தழித்தாக்கவல்லான். (௨௩)

நஞ்சுமிழுரகப்பூணுநகைநிலாக்கொழுந்தும்வாசப்
பைஞ்சுடரிதழித்தாரும்பாய்புலியதளுமின்றி
மஞ்சுறழ்கருமென்கூந்தன்மாதொடுமுருவியெண்ணெண்
துஞ்சருங்கலைகளென்னுந்துலங்குபொற்கலைகடாங்கி. (௨௪)

பருமையாய்ச்சிறுமையாகிப்பதங்களாய்வண்ணமைந்தாய்
நிருமலமாய்முத்தேவாய்நிகிலமாய்க்குணமோர்மூன்றாய்
இருமையாயெழுத்தாய்நாதவெல்லையாய்வேதமாதி
பெருமைசாலொலியாய்நின்றபிரவணந்தோணியாக்கி. (௨௫)

கரியநாரணனலந்தண்கமலவாகனனாலேனை
உரியநான்மறையான்மிக்காருளத்தினாலளவையாலும்
தெரிவிலாவொளியாய்நின்றசின்மயன்றானேதெய்வப்
பெரியநாயகனென்றோதும்பேர்புனைந்துருவமெய்த. (௨௬)

ஏறினனென்பவெம்மானெழில்கனிந்தொழுகுமேனி
தேறினவிமலமாயதிவ்வொளிக்கற்றைசுற்ற
மாறினவிருள்கண்மேனாண்மலைமகளமுதமாந்தி
ஊறியஞானச்சேயாலொதுங்கமணிருட்டுப்போன்றே. (௨௭)

பெய்யுநீர்த்திரைசுருட்டும்பிரளயவத்திநீத்தத்
தையனாண்மலர்த்தா[illegible]யருள்கனிந்தொழுகவூர்ந்தான்
பொய்யிலாமறையினீற்றும்[illegible]றைமடந்தைகண்ணும்
மையிலாவுரிமைத்தொண்ட[illegible]தோணி (௨௮)

தோட்டமுண்டகத்துப்புத்தேடொழில்புரியண்டகூடம்
பாட்டகன்றினைசீப்பவ்வப்பாயலையலைப்பவெற்றுண்
டீட்டமாம்பொருள்கள்யாவுமிறுதிகண்டிரங்குமுந்நீர்
கோட்டமேலூர்ந்தானன்பர்குணத்துமேலூருங்கோமான். (௨௯)

அருமைசாலறத்துக்கென்றுமழிவிலையென்றமேலோர்
பொருண்மைமையவிளக்கியண்டம்புறக்கடன்மடுத்தஞான்றும்
இருமைசாலுயிர்கள்பன்னுளிழைத்திகலெறிந்ததெய்வத்
தருமமேவடிவாய்நின்றதலத்தரசிதனைக்கண்டான். (௩௦)

காண்டலுமுவகைதூங்கிக்கரமலரசைத்துநோக்கா
நீண்டபேரண்டமுட்டிநிமிர்பிரளயத்துஞ்செவ்வே
பூண்டதோரிறும்பூதுன்னிப்புவனகோடிகளின்மீதே
யேண்டகுமூலாதாரகேத்திரமென்றுன்வள்ளல். (௩௧)

காலமீதாகக்கோடிகதிர்புரையுருவத்தாதி
மூலகாரணனேயாமீர்முகட்டிடைக்கண்டான்மேலைக்
கோலமாதிரமுங்கோட்டுக்கோட்சுருவேறுஞ்சோதிப்
பாலதாந்தரளத்தாரும்படைத்துளவருணப்புத்தேள். (௩௨)

பூண்மலரடிச்செஞ்சோதியுண்மலரென்னவாய்ந்த
கண்மலர்பதித்துண்டகரமலர்குவித்துவாயால்
பண்மலர்புகழ்ச்சியோதிப்பனிமலர்த்தாண்முன்வீழ்ந்தான்
விண்மலருடுவினன்னவெண்மணிமுத்தமாரி. (௩௩)

சுருக்கமின்முளரியன்னதுணையடிபணிந்துபோற்றத்
திருக்கிளர்கடைக்கணோக்காற்றெண்டிரைக்கடல்வாழ்வானை
அருட்கடலாழவைத்தானகந்தைவேரரிதுளானாக்
கருக்கடல்வீழாதேற்றுங்கருணையங்கடலான்றனே. (௩௪)

கணத்திடையெயின்மூன்றட்டகண்ணுதற்சாமிபின்னர்க்
குணிப்பிலாவண்டஞ்சிந்துங்கொள்ளைச்சீர்வெள்ளஞ்சூழ
மணத்தபூங்குழலாளோடும்வன்பிறத்தம்பிபூடே
தணிப்பிலாதமர்ந்தானின்னதலத்திடையளப்பில்காலம். (௩௫)

விரிதிசைபுரப்பானெட்டுவியன்கணத்தலைவர்க்கேவிக்
கிரிபுரைதண்டமேந்திக்கேத்திரபாலனுதி
புரிசடைமுதல்வர்சூழ்ந்துபுறந்தருந்தோணிமேற்கொண்
டரில்படாதுலகங்காக்குமன்னையோடிருந்தானெந்தை. (௩௬)

முழுமலர்முளரிப்புத்தேண்முடிவுநாள்காறுமாநீர்
அழுவமுற்றிருந்தானுன்னவாசறவறந்ததன்றன்
விழியனலுண்டதோநாள்வேற்றுமை[illegible]யோ
மழுவலான்விளையாட்டென்னே[illegible] (௩௭)

[illegible] IYER LIBRARY. MADRAS-41

ஏணிலாத்தெய்வதங்களின்னுமோரிறுதியின்றிப்
பேணிவீற்றிருக்குந்தெய்வப்பெரியநாயகனுமெந்தை
தோணிமேல்வைகுமாற்றாற்றோணியம்புரமீதென்றே
காணியவிருந்ததின்னுங்காரணப்பேர்வேறுண்டால். (௩௮)

காமருவருணைநள்ளிகலைதுலையிராவிதோற்றம்
தேமலிசிலையிற்செங்கைசிவநிசிதெறுதேளாரல்
ஆமெழுதினமுமெந்தைக்கணிநறுமபுழுகுமண்ணைக்
கேழுறுசாந்துஞ்சாற்றினவையவர்க்கரியமாதோ. (௩௯)

பதனறுமணிவித்தென்றும்பயன்படுவிளைவுகுன்றா
முதனிலம்புக்காலென்னமுதுக்குறைவறிஞர்பேணும்
விதமலிவிரதந்தானம்வேள்விகண்மனுக்கண்மற்றும்
இதமலிந்தொன்றுகோடியெனத்தருந்தலமீதொன்றே. (௪௦)

மங்கலம்பொலியுமிந்தத்தலத்திலைம்பதத்தைவாழ்த்தும்
அங்கவரன்றேசெந்தோட்டம்புயனிழலுமாழிப்
புங்கவனிழலுமந்தண்பூந்தருநிழலுமேவார்
திங்களங்கண்ணியெம்மான்சேவடிநிழலொன்றல்லால். (௪௧)

(௨-ஆவது. தோணிபுரமானவத்தியாயம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௩௧௯.)

## ௩ - ஆவது. பிரமபுரமானவத்தியாயம்.

பொங்காழிசுற்றவொருதோணிபெற்றபுரமான்மியத்தினியல்போல்
எங்காதன்மிக்கபிரமாபுரத்தினியலுந்தெரிதருளென
அங்காதரத்தினுரவோர்வியப்பவறவோனுரைத்தமுறையே
பங்கேருகத்துமுனிவன்பணிந்துபலனுண்டகாதைபகர்வாம். (௧)

மங்கும்பிறப்பினழியாதணுக்கள்வழிகண்டுழுந்திடுகுவான்
பொங்கும்படைப்புமுதலைந்தொழிற்செய்புரமென்பதொன்றுடைமையால்
எங்கும்புதைத்தபுனல்வற்றவண்டமிசைவிக்கவெண்ணுமிறைவன்
தங்கைநதுசத்திகளினன்புவைத்துநெடுமாயைதந்துதகைவால். (௨)

நாதாதிதந்துமூவாதமந்திரபதம்வன்னநல்கியதனின்
மீதேகலாதிநிலநீரசுத்தவிரிதத்துவங்களுதவிப்
போதாவிரட்டைவினைசேதனங்கள்புகுமாறுசெய்துமுறையே
கோதாடுமும்மைபெறுதேவர்மும்மைவினைசெய்யவென்றுகுறியா. (௩)

குலநான்மறைக்குமுதலோனைமிக்ககுணராசதத்தின்வருவித்
தலமேறுசாத்துவிதமாகுணத்தினடலாழிவெற்பையருளி
வலமேறுகொற்றமருவானைவெற்றிவளர்தாமதத்தினுதவி
உலவாதமைத்திநெறியாலளித்தியொழியாதொழித்தியெனலும். (௪)

அணியம்புயத்துமலரோனவர்க்குளடியேனமைக்கவடிகேள்
துணியென்றதற்கோர்வலியில்லையெந்தைதுணையுண்டெனிற்சிறுமைசால்
அணுவொன்றுவெற்பினுருவாகும்வெற்புமணுவாமதற்கருமையே
பணியென்கணிட்டபடிசெய்வலாதிபகவாவருட்கணுளதேல். (௫)

மற்றின்னகூறுமறையோனையண்ணன்மகிழ்வெய்திமாயைவழியில்
பற்றின்றியெங்குநிறைவாய்நிறைந்தபரமொன்றுநித்தமிடையே
உற்றுள்ளயாவுநிலையாவெனாநல்லுணர்வாலுணர்ந்தவொருநீ
முற்றும்படைக்கலுறுசத்தியின்றிமுடியாதுனக்குமதுவே. (௬)

அச்சத்திதானுமெனதேவலின்றியணையாதியானுமடைவே
இச்சிக்கிலின்றியணையேனுளத்திலெனையெய்துமாறுவினையைக்
குச்சித்துமூலமறையாகமஞ்சொல்குறியேமனுக்கள்வழியால்
நச்சிப்பராவுமவர்பாலிருப்பனுமெனன்பதொன்றுமறினே. (௭)

அம்மந்திரங்களெழுகோடியாகுமவையிற்சிறந்துளனவாம்
மெய்ம்மந்திரங்களொருநூறும்வேதவிதியிற்சிறந்தவவையாம்
செம்மந்திரங்கள்பலவற்றிலாதிதிருவைந்தெழுத்ததிகமால்
இம்மந்திரத்தின்வலிபெற்றிசத்தியெவையும்படைத்தியெளிதே. (௮)

நந்தாமலிந்தமனுவைம்பதத்தினடைபெற்றியங்குமவைதாம்
ஐந்தாவிளங்குபதிசத்தியாவியபிதானமாமலமெனு
ஐந்தாமெழுத்தின்முதலீரெழுத்துமதன்மேலெழுத்துமதன்மேல்
மூந்தாமெழுத்துமதன்மேலெழுத்துமுறையேகுறிக்கொண்மறையோய். (௯)

மூதண்டகோடிவகையிற்பிறத்தன்மூதண்டகோடிவளர்தல்
பேதுண்டுசாய்தல்வழிகண்டணுக்கள்பிணியுண்டழும்மைமலமும்
கோதுண்டுபோகவறியாதறிந்தகுணவாரிமூழ்கன்முதலா
ஓதிங்கனைத்துமாமென்றிருத்தியோரைந்தெழுத்திலெனவே. (௧௦)

அம்போருகத்துமுனிவன்பராவியவைகூறுமண்ணலடியில்
பைம்போதுதூவியடிநீழனின்றுபரநாதபோற்றியடல்சேர்
வெம்போதகத்தினுரிதோலசைத்தவிடையூர்திபோற்றியெனையாள்
செம்போதபோற்றியருளாளபோற்றிசிவபோற்றியென்றுதொழுதே. (௧௧)

அல்லைப்பொறுத்துமயலிற்குளிக்குமளியேன்மனத்தையுருகாக்
கல்லைக்கரைத்தமொழியைப்பணித்தகனிவாயபோற்றியிமையத்
தொல்லைப்பொருப்புவில்விட்டரண்கடுகளாய்விளைத்துமடியான்
வில்லிட்டதற்குவடுவிட்டசென்னிவிறல்வாளிபோற்றியெனவே. (௧௨)

பலகாலெழுந்துபலகால்விழுந்துபதமேலிறைஞ்சியருளால்
உலகாதியுய்யவெனையுய்யஞானவொளியாய்நிறைந்தருளுநின்
மலர்வாய்திறந்தமனுவானதொன்றைவருமாறிரங்கியருளென்
றலரோன்விளம்பவிளமூரல்கொண்டவமுதானனன்கருணையால். (௧௩)

கொய்யாதலர்ந்தவனசங்குவிந்துகுமுதம்புதைத்தவியல்போல்
கய்யான்மணத்தகனிவாய்புதைத்தகமலாலயன்செவியினில்
செய்யாமறைக்குமுதலாகநின்றதிருவைந்தெழுத்துமனுவைப்
பொய்யார்பிறப்பினலையைக்கடத்துபுணையைப்புகன்றருளியே. (கச)

உன்போலநேகர்தலமீதிறைஞ்சியொளிபெற்றமூலவுருவில்
முன்பூசைசெய்துதடமொன்றுகண்டுமுழுமுத்திபெற்றமுறையே
நின்பூசைசெய்துவலியும்படைத்துநிகிலம்படைத்திடுதிநீ
நின்போதமென்றுநினையேன்மறந்துமென்போதமென்றுநினைவாய். (கரு)

குணராசதத்தினிலைநிற்றிவேறுகுணமற்றிருத்தியருளும்
துணையேறுசத்தியிதனூடெழுந்தசுடராலடைந்திடுதிமேல்
மணிநூல்கிடக்குமருமாவுனக்குவகையாயுளுக்குவரைநாள்
அணியேறுகற்பமூறுநாளதற்குமளவானதைத்தெரிதியால். (கசு)

வேறு.

இயற்கைமாந்தர்குறிப்பின்றியிமைக்குமிமையீரொன்பதுறின்
அயிர்ப்பில்காட்டையதுமுப்பானமையிற்கலையாங்கலைமுப்பான்
பெயர்ச்சிகணமூந்நான்குகணம்பேரின்முகூர்த்தமதுமுப்பான்
மயக்கிலொருநாளாம்மூன்றய்வருநாள்பக்கமறைவல்லோய். (கஎ)

பக்கமிரண்டுமொருமதியாம்பகருமிரண்டுமதியிருது
தக்கவிருதுமூன்றயனஞ்சாருந்தெற்குவடக்குமெனப்
புக்கவயனமிரவுபகல்புலவோர்க்கொருநாண்மூந்நூற்றே
டொக்கவறுபதுறினாண்டீதொருநூற்றின்விண்ணவராயுள். (கஅ)

உம்பருகமீதெழுபத்தொன்றுற்றான்மனுவதாமீரேழ்
பம்புமனுநாள்பகலாகப்பகுத்தநாளிலாண்டாக
நம்பும்வருடமொருநூறுநண்ணினுனதுகற்பமெனச்
செம்பொன்முளரித்திருமனையிற்செறிவாயென்றான்பிறைசூடி. (ககூ)

வரிவண்டுழக்கமுகையவிழ்ந்துமதுவூற்றெடுக்குமடற்கமலத்
தெரியன்மார்பனிதழிமலர்ச்செழுந்தார்மார்பன்மொழிந்தனகொண்
டுரியசெவிநாலிரண்டானுமுவட்டாவமுதுண்டுடல்சிலிர்ப்பப்
பரியுமலர்க்கணருவிதரப்பணிந்தான்விடைபெற்றெழுந்தானால். (உ0)

எழுந்தானூர்வத்தொடுமிமையாவெகினவூர்திதிகழ்சோதிக்
கொழுந்தாயொளிருந்திருமூலக்குழிக்கீசானத்திசையூடே
அழுந்தாமணிநீர்த்திரைக்கரத்தாலடலாணவப்பேரிருள்சீக்கச்
செழுந்தாமரைப்பூஞ்சுடரேந்துந்தீர்த்தத்தடத்தைக்கண்ணுற்றான். (உக)

எறிக்கும்படிகத்திரடெளித்தாலெனநின்றிலங்கித்தன்பெயரைக்
குறிக்குந்தடத்தீம்புனலாடிக்கொய்பூங்கலைகண்மெய்தாங்கிப்
பொறிக்கண்டிகையாற்பூதியினாற்பொலிந்துநியதிச்சடங்காற்றி
நெறிக்கொண்டருமாமறைக்கொழுந்தாய்நின்றான்றிருமுன்சென்றானே. (உஉ)

இருளாய்வெளியாய்ப்பரபதமாயேகமாகிப்பலவாகித்
தெருளாயகண்டமுழுமுதலாய்ச்செறியாதெவையுஞ்செறிந்தபரம்
பொருளாய்ப்பசுபோதங்கடந்தபுரையோருள்ளத்தகம்பழுத்த
அருளாய்நின்றபிரமேசனடித்தாமரைகண்டஞ்சலித்தான். (௨௩)

உருகியுருகிநெக்குநெக்குள்ளுடைந்துகுழைந்துமலர்விழிகள்
அருவிகொழிப்பவுறுப்பைந்தாலட்டாங்கத்தால்வீழ்ந்திறைஞ்சிப்
பெருகியொளிகால்சிவலிங்கப்பேரானந்தப்பெருஞ்சுடர்முன்
மருவிநறுமஞ்சனமாட்டிவழிபாடிழைத்துமலர்தூவி. (௨௪)

தென்பால்வடபான்மேல்கீழ்பால்சிகைவெஞ்சுடர்செயருக்கன்மிசை
இன்பால்விழிவைத்தைந்துமவித்திழைத்தாயிடையாண்டாயிரமுழ்
நன்பாலாற்றிவளியுண்டொலஞ்சேரைந்துபதங்கூறி
அன்பானாறுமடக்கியெந்தையாராதனையுங்கடைப்பிடித்து. (௨௫)

கோவேபோற்றியாதிமறைக்கொழுந்தேபோற்றியருள்குழைக்கும்
காவேபோற்றிமெய்ஞ்ஞானக்கண்ணேபோற்றியென்னிடும்பை
மாவேதனைக்கோர்மருந்தாகிமதிமாசகற்றியறித்தாண்ட
தேவேபோற்றிதோணிபுரச்செல்வாபோற்றிசிவபோற்றி. (௨௬)

பின்னன்மவுலிப்பெருமுனிவர்பெட்பமறையின்பொருளனைத்தும்
மன்னுங்குருவாய்வடநிழற்கீழ்வதிந்துபுகன்றவியல்போற்றி
முன்னமறையின்விரிவையெல்லாமுழங்குந்தவளக்கிண்கிணிக்கால்
கன்னன்மழலைமகவுரைப்பக்காதுகொடுத்தநிலைபோற்றி. (௨௭)

வடுவார்தடங்கண்முனிவர்மனைவைகுந்தவத்துப்பன்னியர்கை
இடுமூணயந்தின்னெழில்காட்டியிரங்குங்கருணைமுகம்போற்றி
கடுவார்நோக்கினரமகளிர்கனிவாயமுதுமமுதுமுண்ணப்
படுமால்விடமுண்டும்பர்தமைப்பரிந்துபுரிந்தவருள்போற்றி. (௨௮)

இனையபலவும்வாழ்த்தெடுக்குமீர்ந்தண்கமலத்திறையோன்முன்
முனைவனிமயப்பாவையொடுமுக்கட்பெருமானெதிர்தோன்றி
இனையவுவந்தளித்துமெனவேறார்தோன்றுவன்கழற்காம்
வனையுமலர்த்தாமரையடியேன்மனவாவியினிற்பெறல்வேண்டும். (௨௯)

ஏணியாயவிவ்வண்டமினிதுபடைக்கவுறுசத்தி
பேணியளித்தாட்கொளல்வேண்டும்பெருமானினதுதிருத்தொண்டில்
கோணிலாதகுற்றடிமைக்குழுவோடனையுங்குறிக்கொள்ள
மாணிலெளியேன்பெறல்வேண்டும்வரமீதென்றான்பரமேட்டி. (௩௦)

அள்ளற்கமலத்திறையிவ்வாறறையக்குறையாவரமனைத்தும்
கொள்ளக்கொடுத்துப்பேரருளுங்கொடுத்துக்கணத்திடைமறைந்தான்
தெள்ளித்தெளிந்தவமுதநிலாத்திசைசூழ்வளைப்பச்சுடர்கொழிக்கும்
வெள்ளிப்பொருப்பிலிவர்ந்ததெனவெள்ளேறிவர்ந்தவிரிசடையோன். (௩௧)

கதிர்காலொற்றைக்குழைக்கிழவன்ககனத்திடைபோக்கயர்தலொடும்
கொதிவேலலைத்துக்கயன்மருட்டிக்குழையோடெதிர்பேர்மழைமதர்க்கண்
மதிவாணுதலார்நிலையழகிமலர்த்தாள்பரவியிருவருக்கும்
துதிசால்கனகப்பெருங்குடுமிச்சுடர்ப்பூங்கோயிலினிதமைத்து. (௩௨)

வெண்ணந்துயிர்த்தமணிமுத்தம்வெடிவாயாம்பன்முகையவிழ்க்கும்
தண்ணந்துறைநீர்ப்படித்துறையுந்தடமாமதிலும்புடைதிருத்தி
எண்ணும்பெறுசீர்பிரமதடத்தென்னக்கடவுட்டீர்த்தமெல்லாம்
நண்ணும்படியுய்த்தளிதுளும்பநான்குமருங்குந்தளமமைத்து. (௩௩)

விதிப்பேரண்டப்பரப்பகத்தமேல்கீழுலகுநெடுந்திசையும்
நிதிச்சாகரமுநடப்பனவுநிற்கின்றனவுமோரிரண்டு
கதிர்க்காவலரும்பிறபொருளுங்கண்டான்றண்டாமரைக்கரத்தால்
பதித்தான்கடவுட்கணித்தாகப்பாரிசாதத்தருவொன்றை. (௩௪)

ஆள்வேட்டுழன்றுசெவ்வரிதோய்ந்தயிலைத்துரந்துகயலலைத்து
வேள்வார்கணையைப்புறங்கொண்டுவிழையப்படர்ந்துகுழைகடந்து
வாள்போற்பிறழும்விழிகளுங்கைம்மலரும்பரதவழிச்செல்ல
நாள்வாயெழுந்தமின்போன்றுநம்பன்றிருமுன்னடிப்பாரை. (௩௫)

ஒலிக்குங்கருவியைந்துமிசைத்தொழுகுவாரைச்சிறையறுகால்
கலிக்குமலர்ப்பூந்தெரியல்வினைக்கைவல்லாரைச்சிவகருமம்
பலிக்குங்கிழமைச்சைவதவப்பான்மையோரையிருள்பருகிச்
சொலிக்குஞ்சுடர்ச்செந்தீபநிரைத்துகடீர்செய்கைத்தொழிலோரை. (௩௬)

பாயதிருமஞ்சனமெடுக்கும்பரிசாரகரைத்திருமேனிக்
காயபசும்பொற்கலநிறைத்தவரைக்காவலரைச்சுரபிகளை
ஏயபணியிற்பழுதுதுடைத்திடுகிற்பாரையிறையடிக்கே
தூயகருத்தானகம்படிமைத்தொழிலாலுயர்ந்ததொல்லோரை. (௩௭)

வல்லையியங்குஞ்சாரணரைமடைவல்லோரைமாகதரைக்
கொல்லவினைஞர்மட்பகைஞர்குவளைக்களத்தெந்தோணிபுரிச்
செல்வன்முடிக்காட்டுராதிசெறியுந்துகண்மாற்றுநரை
எல்லையிகந்தபணிவிடையிலிகவாதொழுகுமியல்பினரை. (௩௮)

முள்ளரிமாலைக்கவுணியர்கோதமர்முற்கலர்பாரத்துவசர்
வளராரீதரெனக்கிளந்தமறைக்கோத்திரத்துமுனிவரரைப்
புளகமறையாகமமலர்ந்தபுணரிமடுத்தமுதுகேள்வித்
தளராவாதிசைவகுலத்தகுமைம்பான்மைக்கடவுளரை. (௩௯)

சேராரிணைச்செஞ்செவிபுதைக்குஞ்சீர்த்திபுனைந்தபார்த்திபரைப்
பாராவறுமையிருடுரக்கும்பானுவனையவணிகர்தமைச்
சாராதுலரைக்கடவுளரைத்தமையொக்கலைத்தென்புலத்தாரை
ஏராலுழந்துபுறந்தந்தாங்கிறையேவலின்வாழ்பின்னவரை. (௪௰)

மங்குலுறங்குங்குறுங்கோட்டுவருக்கையழிசாறுவட்டெடுத்துச்
சங்குதவழுமடையுடைக்குந்தடஞ்சூழ்தோணிபுரம்புரக்கும்
செங்கண்விடைப்பாகனுக்குரியசெய்கைக்குடிமைத்திறலிவனை
ஐங்குரோசத்தெல்லையினுமமைத்தாணிழலுஞ்சமைத்தானே. (௪௧)

வைக்கேருறுமைந்துமகமாருக்குடிகள்பற்பலவும்
செய்கலாற்றுவளனோங்கிச்செம்பொனுலகினெழில்காட்டக்
கைகொளுரகக்கங்கணத்தான்கடிவிழாவுமினிதாற்றி
மெய்கொண்மறையோனுயிர்க்குயிராய்விரிந்தான்பூசைபுரிந்தானே. (௪௨)

பலநாளினையபணிபிழைத்துப்பரவுங்கமலமுனிகாணக்
குலமாமறைதேர்சிவலிங்கக்குறியூடெழுந்தின்னருள்பூத்து
நலனுளுனதுபணிமகிழ்ந்தேனாளுமெமதுதிருத்தொண்டிற்
புலனுளூர்ந்தவுனையாரேபொருவாரென்றான்பொருவில்லான். (௪௩)

முன்னாளுன்னோர்மறைமுதல்வர்மூழ்கிக்கண்டதடமிதனிற்
பொன்னாரமுதநிறைமதியம்புணர்சித்திரையிற்சித்திரைசேர்
அந்நாள்படிந்தாரிடும்பைவினையதனிற்படியாரருண்ஞானம்
பன்னாள்படைத்துநின்றாலும்படையாநிலைமைபடைப்பாரே. (௪௪)

கிழமைபூண்டமதியாறிக்கெழுநீராடின்வந்தியரும்
மழலைமிழற்றுமிளந்தளிர்வாய்மகப்பேறடைவார்துறக்கமிசை
முழுமாமதிவாண்முகத்தியர்தோண்முயங்குவாருஞ்சலசரமாய்
ஒழுகவிழைவாரென்னினெடுத்துரைப்பதெவனோபரப்பாக. (௪௫)

உறுதிபயப்பநின்னுழையாமுரைத்தவோரெழுத்தையுளத்
தறனில்லவர்பாலுரையற்கவான்றகற்பமுடிவுழிபோம்
திறனில்வருகவெனமூலக்குறியூடொளித்தான்செருக்ககன்று
மறனில்லவர்க்கோர்களைகணுமாருக்கருணையானவனே. (௪௬)

துன்றும்பழையமுதண்டந்தொலைந்தஞான்றுந்தொலையாமல்
என்றும்பிரமன்றனைத்தந்துமேனைப்பொருளுந்தரலாலீ
தொன்றும்பிரமபுரமிதில்வாழொளியேபிரமலிங்கமிந்நீர்
என்றும்பிரமத்தடமெனவேயெறிநீர்ஞாலத்திலங்கினவே. (௪௭)

கன்னிக்கமுகினெருத்தலைத்தகமஞ்சூற்பாளைமுகங்கிழித்துச்
செந்நெற்படைப்பவிளிம்புடையச்செந்தேனுடிச்சினவாளை
பொன்னித்துறையாட்டயர்தோணிபுரத்தான்றிருமுனிக்காதை
முன்னிப்புகன்றோரெவரேனுமுத்திநிலத்துவித்தாவார். (௪௮)

இன்னகடவுண்மான்மியத்தையினிதுகேட்போரெழிற்புலன்சூட்
டன்னவூர்தியுலகிலவனாயுள்வரையுமாங்கிருந்து
பின்னரிழுக்காவிழுக்குடியிற்பிறந்துஞானப்பெரும்படையால்
முன்னைவினையின்கட்டறுத்துமோனவீடுமெய்துவரால். (௪௯)

கோட்டுமெதியக்தவழ்மாடக்குமெமிதொடுத்தகொடிகிணாகள்
நாட்டுங்ககனத்தலம்புதைப்பாகைவெண்சுதையாலமுதகிலா
வீட்டும்பிரமபுரத்தியலீதென்றூனகக்தையிகலெறிக்து
வாட்டுக்தவத்துச்சவுனகனேமுதலோருவப்பமாமுனிவன். (௫0)

(௩-ஆவது. பிரமபுரமானவத்தியாயம் முற்றிற்று. ஆ திருவிருத்தம் ௩௬௬.)

## ௪ - ஆவது. திருவிழாவத்தியாயம்.

ஏற்றியலுமெங்கைபிரமாபுரியியற்கை
சாற்றியசொல்லாரமுதுதஞ்செவிமடுத்துப்
போற்றியதவர்க்கருள்புராணமுனிவேதன்
ஆற்றியவிழாவணியறிந்ததுணைசெய்வாம். (௧)

மாற்றுமகநின்றகமதத்தின்வழியெய்தித்
தேற்றுமறைவாய்மைகடெளிந்துசிவனன்பர்
காற்றுணேபடிந்துபலகாலும்விரதாதி
நோற்றவர்களேபரமநூலைவிழைகிற்பார். (௨)

ஆதிசிவலிங்கங்களையார்வமொடுபாரித்
தோதினருமன்னதையுகந்தவருமவைத்துப்
போதமொடருச்சணேபுரிந்தவருமன்றே
சீதரன்மலர்க்கணணிசேவடியில்வாழ்வார். (௩)

எய்தரியமானுடமெடுத்துமிறைகாதை
அய்துமுணராதுபுல்லடர்ந்துகிலம்விட்டு
மெய்தளர்பசிக்களரின்மேவியபசுப்போல்
வெய்துறுவர்காலனிடைமேலுறுவதென்றே. (௪)

வாரமுறுமெய்த்தவவரத்துமுனிவீர்காள்
பாரமுதுவானரகுபாரிவியல்பூத
சாரமொடுபூதமதுசார்ந்தபரிணாம
மாருமுடலெய்தலுறுமாருயிரவற்றுள். (௫)

புத்தியொடுநல்விணேபுரிந்தவர்களின்பத்
சுத்தவெளிமேவியதுறக்கமிசையெய்திப்
பத்தியொளிகாலெழில்படைத்தடிநிலத்தே
வைத்திடலொழிந்துபுலராமலர்மலேக்தே. (௬)

ஓர்பொறியறிந்தபுலனோர்பொறியினூடே
சார்தலிலதாமதுதனக்குநிகராக
வேர்படருமின்பநிலேயேயுணர்வதல்லால்
சூர்படுமிடும்பைநிலேசூழ்ந்துமறியாரே. (௭)

மய்ம்மலிநெடுங்கணரமங்கையர்கள்கொங்கைக்
கொம்மையெழிலாடுமிருகோடுகளுழக்கச்
செம்மைமுலைகவிண்டுவிழிதேனொழுகுதண்டார்
மொய்ம்மலிபுயத்தூர்கண்முகிழ்த்தறிகலாதார். (௮)

அம்பவளவாயரணிமூரலரலர்ந்த
செம்பதுமவாண்முகவர்தெள்ளமுதின்வந்த
கொம்பரனையார்கலவிகொள்ளமுதுமேனாள்
உம்பர்கடைவேலையமுதும்பருகலோவார். (௯)

வெம்புதுளிவேர்வையறுமேனியிசைவானா
வம்பவிழுமைந்தருவின்மாநிழல்வதிந்து
பம்புமிசையைங்கருவிபல்குமிசையுண்டும்
தூம்புலஈயப்பொடுதணப்பர்பலகாலம். (௧௦)

நாகமொழிநாள்கள்பதினைந்தெனவிமைப்பார்
சோகமுறுவாருயிர்துறக்கமுமிழப்பார்
மோகமுறுதீவினைமுயன்றுபெறுபூத
தேகருறுமாநிரயமுஞ்சிலதெரிப்பாம். (௧௧)

வாஞ்சையுறுதீவினைஞர்வம்மெனமறித்துப்
பூஞ்சிகையவொள்ளெரிபுதைந்தநிரயத்தே
நாஞ்சிலொடொறுத்துமெரிநாந்தகநிறைத்தும்
தாஞ்சமணடும்படர்சவட்டலொழியாராய். (௧௨)

வறுத்தமணல்கீழுமனன்மாரிதலைமேலும்
பொறுக்கவழியிட்டடியினூசிகள்புதைத்தும்
செறுத்துலருபங்கியொடுதீயெழவிழித்தும்
தறிப்பருடலின்றசைதகர்ந்துதிரவன்றே. (௧௩)

துடிப்பவொளியாடெரிதுளும்புசுடுபாளம்
கொடிற்றிடையிருத்தியெறிகூர்ந்தமிசையுய்ப்பார்
கடிப்புனலிடைத்திரிகயற்குலம்வளைத்துப்
பிடித்துயிரகற்றியபிரட்டர்களையம்மா. (௧௪)

கைப்படுகுடம்பையுறுபுட்கவருவாளைத்
துப்பெரிவிலங்கொடுதுவைப்பரயல்வாழும்
மைப்புருவமங்கையைமணந்தவனைவெந்தீச்
செப்புருவமங்கையொடுசேரவணைவிப்பார். (௧௫)

நோதகவிலங்குகளைநூல்வலையிலார்க்கும்
காதகனைஞாளிகள்கனன்றெயிறுகவ்வப்
பாதமுடியொட்டிநுதிபாயவிழிசெந்நீர்
போதரவுறுத்துவர்பொருப்பனையதோளார். (௧௬)

சார்நிலைபெருந்துயிர்தளர்ந்தழுவிலங்கைக்
கூர்கருவியாலுடல்குறைத்தமடவோரை
வேர்மறலிவீரர்தனமெய்ம்மயிரினொன்றுக்
கோர்தசைபடப்படவுரித்தரிதல்செய்வர் (௧௭)

மின்படுசடைப்புனிதன்மெல்லடியைவிள்ளா
அன்பர்களெதிர்ப்படினடித்துணைதொழாரை
வன்புறுவிழிக்கெரிமணிச்சுரிகையிட்டுத்
துன்புறுதடக்கைகடுணித்திடுவர்வாளால். (௧௮)

நாதன்முதுகாதையைநயப்பொடுவிரும்பாக்
காதகர்மனத்தர்தலைகாதொடுதெறிப்பக்
கோதுறமலைந்துசதகோடியுருமென்னத்
தூதுவர்புடைப்பவரர்சொல்லியலுமற்றே (௧௯)

வள்ளலடியார்தமைவருத்துநரனுக்கத
தெள்ளளவுமேவரிசைவார்மறையிசைக்கும்
பிள்ளைமுனியால்வலிபிழைத்தமைவழுக்கா
துள்ளவனுருப்பதையுரைப்பதெவனோயா. (௨௦)

மழுக்களெறிபட்டுதிரவாரிமிசைபாயப்
புழுக்கள்குடையப்பதைபதைத்துடல்பொருராய்
எழுக்கலடியாலழலெரிச்சிகையினால்வெங்
கழுக்கடையினாலளவில்காலம்வதையுண்டார். (௨௧)

செக்கினுழல்வார்திரிகையிற்சுழலுவார்திப்
புக்கயருவாருறுபுலாலழிகுவாரால்
முக்கணமலன்பழையமூவறுபுராண
மெய்க்கதையினைப்பெறவினாவுமறிவில்லார். (௨௨)

வன்றொடரினிற்கழுவின்மாமுளிலவத்திற்
கொன்றுமெழுவித்துநடுவென்றமர்குமைப்பக்
கன்றியபசுங்கணனல்காறெயிறுகாட்டி
நின்றலறுவார்கொடியநீணிரயவாணர். (௬௩)

நீர்நசைபெருந்தசைநீர்பெருகியங்கட்
சோர்பவருயிர்க்குதவிதூதருழையுண்டோ
காரெலியைவாயொடுகவர்ந்துதறுபூசை
யாரழினுமெள்ளளவதற்குதவியின்றே. (௨௪)

காந்துதுயரன்றியொருக்காலுநலமின்றித்
தேய்ந்துநரகத்துறுநர்செய்தியிவையின்னும்
ஏய்ந்துயிரினோடுறுமிரட்டைவினைதம்மால்
போந்துபயனுண்ணுமுடல்பூதபரிணாமம். (௨௫)

வேறு.

இப்பூதபரிநாமயாக்கையிலேயிருவினையின்
வைப்பூறுகதிவய்த்தால்வரப்பெறினும்பொருப்பகமும்
கைப்பூறுவறுங்கூவற்கீடறுடையநாடுமொரீஇ
அப்பூறவளனூறுமணிகெழுநாட்டுறலரிதே. (உசு)

வெண்ணிணத்தவெயிற்றெயினரிழிகுலமுமீன்படுக்கும்
கண்ணிணைத்தவலைவினைஞர்கழிகுலமுமகன்றொருவிப்
புண்ணியத்தொல்குலத்தினிடைப்புகவரிதாமதிற்புகினும்
பெண்ணொழித்துப்பழுதொழியப்பெறுதலுமிக்கரிதன்றே. (உஎ)

இன்னணமேசெந்நிறத்தவெழிற்பவளத்தடம்புலத்தில்
பொன்னணிமுத்துருக்கனையபொறிபரந்தவமயத்து
மின்னூலுமொக்குளும்போன்றுவீயினும்வீந்திடுமிலையேல்
பின்னரும்வெண்ணெயிற்றிரண்டுபிறந்திடவும்பெறுமதுவே. (உஅ)

கூன்புறத்தயாமையுருக்கொண்டறினுமறுமின்றேல்
ஊன்புறத்திலுறுமயத்தொழியினுமாங்கொடிநாபி
ஈன்புழைக்குளிரதமடுத்தெழினுமெழுமுழுமதிபோல்
தான்புறத்திலுதித்தளவேசாயுமதுதணந்திடினும். (உகூ)

விரிநிதியமிரவலர்பால்வீசிப்பேர்புனையுழியும்
இரியுமகன்குளத்துமலரெனவளர்ந்துமையாடி
முரியவுமாமுருகெறிபூமூதுணர்கேள்விகடுறைபோய்
வரிநெடுங்கண்ணியருருகமாயுமதின்மாயாதேல். (௩௦)

பஞ்சிபுனைசெம்பதுமப்பாட்டிசையக்கிண்கிணிக்கால்
வஞ்சியர்தோணலம்பருகிமல்கியநாட்பலசனமும்
நெஞ்சுருகியழன்றுசெங்கைநெரித்தலறவுருத்தெழுந்த
செஞ்சிகைவெங்கூற்றனுகச்சிதையுமிதுதிறம்பிடினும். (௩க)

மழலைமொழிச்சிறுவரொடுமொழாந்துமூப்பலைப்பக்
கழலுறுப்பிலுழையாடிக்காய்பிணிவெம்புலிபாயக்
கிழவனகன்றொருபிணமாய்க்கிளைக்கவைநாவளைத்தயிலும்
அழல்கதுவும்புறங்காட்டிலணையுமதுவொருதலையே. (௩உ)

வெள்ளிடையின்விளக்கமெனவிளியுமிதுணிலையாமை
உள்ளியுணர்ந்தவர்வாளாவொழிப்பரோவொருகணமும்
கிள்ளைமொழிப்பாகனிசைகிளக்கவுங்கேட்கவுநமர்காள்
உள்ளதவப்பேறிதனினுண்டுகொலோவுயிர்க்குறுதி. (௩௩)

அளக்கரியதவப்பேற்றாலழுக்கறநல்லான்வயிற்றில்
இளக்கரியபலநூறுகிடைக்கின்மறையவனுவான்
இளக்கமுறவதிற்பரமணியல்கேளாரிழுக்குடம்பு
துளக்குமரப்பாவையன்றேதோன்றிடினுந்தொழுகுலத்தே. (௩௪)

தொழுகுலத்தாரேனுமொருதோடுடையான்றிருக்காதை
முழுமதியினெடுங்கேளார்முகனோக்கக்கிடைத்தவினை
எழுகொளிவெம்பரிதியழலுதகமறையவர்பசுக்கள்
மழவிடையாதியகண்டுமொற்றுவரான்மதிவல்லோர். (௩௫)

வாலாமைப்பிறவியதின்மழுவலான்புகழ்கேட்டல்
மேலாராதனையிழைத்தன்மெய்யடியாரடிபோற்றல்
ஏலாதேலென்னுறுதியிதுகேட்கவிரும்புமுமைப்
போலாரேயுளராவார்பூதலத்துமீதலத்தும். (௩௬)

பின்னுமுனிவரர்கேட்பப்பெருந்தவத்துக்கயமுனியால்
துன்னுமறையெழுதுமுனிதுணையடிகடொழுதமுனி
மன்னுமலர்க்கமலமுனிமதிமிலைந்தமுடிமுனிக்குப்
பன்னுபிரமாபுரத்திற்பணித்தவிழாவளனுரைப்பாம். (௩௭)

திரியுமிருட்குறும்புடைத்ததிங்கண்முளைகிடந்திமைக்கும்
முருகலர்வேணியன்மகிழமுதன்மதியின்வளர்மதியின்
விரிநிலமுங்கீழ்மேலாவிரிநிலமுமுணரமதக்
கரிமுதுகினெந்தைவிழாக்கடிமுரசமிரட்டுதலும். (௩௮)

உரைதருவேதியர்முன்னுவுள்ளவர்களெள்ளருஞ்சீர்
வரையறுதொல்லுருத்திரர்வாழுலகமெனமகிழ்துங்கி
விரைமலராளரசிருக்கைவீதியனைமாலைதொறும்
கரையறுபல்வளனூட்டிக்கடிநகரமெழில்புனைவார். (௩௯)

கற்பாருமடந்தையருங்காளையருங்கைதூவார்
பொற்பாருமலர்த்தொடையற்பொலிநறுங்குப்பைகள்களைவார்
எற்பாருமணியலகாலெம்மருங்குந்துகள்விளக்கி
நற்பூழியுள்ளடங்கநறியபனிநீர்தெளிப்பார். (௪௦)

வருங்கொடியேற்றென்றென்பார்மான்றலைநாளெனவுரைப்பார்க்
கொருங்குவகைதலையுய்ப்பாரோர்தினமோருகமென்பார்
அருங்கடிநாணியவென்றேவலர்விழியுமகலமுமே
மருங்குதுடித்தனவென்பார்மனவெழுச்சியொடுநிகழ்வார். (௪௧)

சுதைகொடுபித்திகைபுனைவார்தோரணங்கள்பலநிரைப்பார்
இதமலிகுங்குமமெழுகியெரிமணித்தெற்றிகள்புனைவார்
நிதிமணியோவியம்பொறிப்பார்நிறைகுடமும்பாலிகையும்
விதமலியும்பளிக்குமணிவேதிகைகடொறுமமைப்பார். (௪௨)

பூவணத்தண்புனறெளிப்பார்பொற்றிரள்கால்பத்திபுனை
காவணத்திற்பழக்குலையகதலிகமுகொருங்கமைப்பார்
தூவணத்தசுடர்நிரைபொற்றுளங்கொளியாடிகள்பதிப்பார்
மாவணத்தபாவைபெறுமணிவிளக்கினிரைநிறுப்பார். (௪௩)

நண்ணளிக்கோர்வரம்பாயதலைமைமறைப்பொருள்விரிக்கும்
அண்ணலடியவரிருக்கையவிர்மணிப்பீடிகைசமைப்பார்
சுண்ணமிறைத்தெம்மருங்குந்துயல்வருபூந்தொடையலசைப்பார்
வண்ணமணிநித்திலமுமரகதமாலையுஞ்செறிப்பார். (௬௪)

கோட்டுமதவாரணமுகத்திற்குங்குமமோடைகளணிவார்
ஆட்டுபரியணிகளமைத்தைங்கதியுமியறெறிவார்
பூட்டுமணிதேருதயப்பொருப்புறழத்திருப்புனைவார்
நாட்டுருப்பொற்கலமேந்திரவமணித்தீவகமிடுவார். (௬௫)

காசறையுங்கற்பூரமுங்கமழுமணிக்கலனேந்திக்
கோசிகமென்கொம்பரெனக்குயிலின்மொழிந்தயிலின்விழித்
தேசறுமெவ்வகையுயிருமிரங்கமணியாழ்வருடி
வாசமனைதொறுமடவார்மங்கலங்கள்பலபுகழ்வார் (௬௬)

அருட்கடைமைமறைக்கிழவர்க்கறுசுவைநால்வகையமுதம்
ஒருப்படவங்கினிதளிப்பாரும்பர்பிரான்பழவடியார்
திருக்குறிப்பினெறிநின்றதெள்ளமுதமடுத்திடுவார்
ஒருத்தரின்முன்னொருத்தரினவோலகையினிலமுந்துவரால். (௬௭)

வேறு.

இவ்வாறெங்குங்களிசிறப்பவீர்ந்தண்கமலாசனத்திறைவன்
சைவாகமச்சுப்பிரபேதஞ்சாற்றுமியறேராற்றலினால்
செவ்வாரழற்காசினத்தாலுஞ்செம்பொனாலுந்திசைபொதிந்த
மைவானிருள்சீத்தொளியுமிழுமணிமண்டபமொன்றலங்கரித்தான். (௬௮)

பவளம்பழுத்துமரகதத்தபசும்பாசிலையிட்டொளிமுத்தம்
திவளும்பாளைவெண்பொன்னாற்செழித்தகணைக்காற்கமுகநிரீஇத்
துவளுங்கனகத்தாற்றரம்பைசூழவிருத்திநீடியவிட்
புவனமலர்மீனனையமுத்தின்புல்லார்மாலைப்படங்கசைத்து. (௬௯)

செம்பொற்சினையதருக்குலங்கடிசைதோறூன்றியிருளுடைக்கும்
பைம்பொற்படிமக்கலந்தூக்கிப்பைம்பூந்தென்றல்புறந்தவழும்
அம்பொற்சிறுசாளரந்திருத்தியரிவாய்வயிரச்சுடர்பரப்பி
விம்பப்பொகுட்டுக்குறுத்தமுளைவிரைப்பாலிகைபற்பலநிறைத்து. (௭௦)

வானின்றிழிந்தவிருநிதியுமணியும்பொருத்தியலையுயிர்த்த
தேனின்றிழிபூங்குழன்மடவார்செங்கைக்கோலம்பெறவளைத்துக்
கானின்றொளிர்சாமரைதோட்டிக்கயல்கண்ணடிமென்கொடிமுரசு
தானின்றலர்பூஞ்சுடர்நிறைநீர்த்தசும்போடெண்மங்கலந்துலக்கி. (௭௧)

வெளிறுபனிநீர்குங்குமநீர்விரைமான்மதஞ்சாந்தொருநான்காம்
அளறுமெழுகியகம்புறமென்றறியாப்படிகச்சுவர்தோறும்
களிறும்பிடியுமறிப்பிணவுங்கலையுங்கோட்டிக்கனகநிறத்
தொளிரும்பாவைதுணைக்கரத்திலொளிமாமணிச்செஞ்சுடரேத்தி. (௭௨)

தாமமாலைகற்பகப்பூந்தருவின்மாலைதவராற்றும்
ஓமமாலைமந்திரநூல்யோகமாலைநறியவிளைத்
தூமமாலையேனையவுந்தொடுத்தமாலையயணியற்றும்
ஏமமாலைவிழாவிறைஞ்சவெழுந்தார்மேல்கீழிருந்தார்கள். (ருங)

மென்றுநிணநீர்முடைமாறுவிறலார்கணிச்சிப்பெருந்தடக்கைக்
குன்றுபுரைதோயுருத்திரர்கள்கோடியமைந்தபதினொருவர்
சென்றுதிரைநீரெறிமுகட்டிற்சிலைமத்தெறிந்தமலர்க்கரத்தால்
கன்றுகுணிலாக்கனியுகுத்தகாயாமேனிப்பசுந்துளவோன். (ருச)

ஓராயிரங்கண்மலர்பூத்தவுருவத்தொருவன்முதலெட்டுப்
பேராகியபாதிரத்தலைவர்பெருகத்திறலேழ்மருத்துக்கள்
சூராதபர்தாமாறிருவர்துளிக்குமமுதகலைத்திங்கள்
ஆரார்விழியன்னையரெழுவராயுள்வேதமருத்துவர்கள். (ருரு)

சித்தரியக்கர்வசுக்கண்மணிச்சிரத்துநாகரரமாதர்
நித்தர்வடுகர்வேதாளர்நிருதர்யோகர்கந்திருவர்
வித்தியாதரர்நாரதன்சனகன்வியாதன்புலியன்பதஞ்சலியோன்
வைத்தவசந்தன்குறுமுனிவன்வருடமயனம்பருவங்கள். (ருசு)

மதிசூழ்பக்கம்பகலிரவுவாரிநதிகளருவரைகள்
விதியைம்பூதந்திக்கயங்கள்வேதாகமங்கடிருவாணி
முதிர்மாதவத்துள்ளவர்பிறருமுறையேதத்தமூர்திமிசைக்
கதியாலணைந்தாரயனுற்றுங்கடியார்வீதிமுருகாரூர். (ருஎ)

எழுந்தசீலர்பிரமபுரத்தியன்மேற்கருத்தருருகுபுனல்
பொழிந்தவிழியர்பணிவேட்கும்புலவரொடும்போந்தலர்மேலோன்
பழங்கணீக்குஞ்சிவபெருமான்பாதம்பழிச்சியெம்மடிகேள்
குழந்தைமதியேனிழைக்கும்விழாக்கொள்வாயென்றின்னருள்பூண்டு. (ருஅ)

குவளைக்குறுங்கட்பிறைக்கோட்டுக்கொழிக்குங்கரடத்தழைசெவிய
கவளக்களிற்றைங்கரன்பூசைக்கடன்களாற்றிமறுகுதொறும்
அவிர்தத்தகுசாந்தியுமாற்றியடரங்குரத்துவினைமுடித்துப்
புவனப்பெருமான்றலைசிறப்பப்போற்றும்பெருமான்றலைநாளில். (ருகூ)

எடுக்குஞ்சமயத்துறைதோறுமேற்றம்பாசுபதமென்றும்
அடுக்குந்திருத்தொண்டுடையார்மாட்டடையாதனமும்மலமென்றும்
நடுக்கும்பவத்துக்கொருமருந்துநன்னீறென்றுமோனமுத்தி
கொடுக்கும்பெருமான்பிடித்ததனிக்குணவெள்ளேற்றுக்கொடியேற்றி. (சுo)

இருமங்கலதூரியமியம்பவிசைமங்கலஞ்செய்தனையசிவ
திருமங்கலந்தமறைமுதல்வன்றகைசாலன்பினருள்பூத்த
மருமங்கலந்தவிதழியினன்மனத்தாறறிந்தவளகேசன்
இருமங்கலத்தினெழில்புனையச்செம்பொன்மழைக்கீட்செலவயர்தான். (சுக)

வாதத்துறையும்பரசமயவழக்குத்துறையுநீத்தொருதன்
பாதத்துறையன்பினர்க்கருளப்பாகத்துறையும்பூவையொடு
நாதத்துறையுநாதாந்தநவிற்றுந்துறையுமளப்பரியான்
வேதத்துறையின்முறைபிறழாவேள்வித்துறையின்றலைவந்தான். (௬௨)

வேறு.

சந்தைப்பெருமறைமுந்தைத்திருமொழிதருமுந்நூலவனொருபொன்னூல்
பந்தத்தொழின்முதலாராதனைசிவபாராயணர்செயவருவான்முன்
கந்தப்புரிகுழல்விந்தைக்கிளிபணிகயலார்விழியுமைமயில்காணத்
தந்தித்திருமுகனந்தக்குகனிவர்தகைசெய்யொளியொடுமெழில்செய்ய. (௬௩)

ஓராயிரவனைபேரோதையின்முதிரோதக்கடலெனநாதிப்பச்
சீரார்கரமிசைநேரேநிரைகொடுசென்றேபலகணநின்றூதப்
பேராதயயயல்பூதத்தலைவர்கள்பெருமங்கலவொலியெழுவிக்க
வாராருருமினமொருகோடிகளெனவாணன்குடமுழவொலிபம்ப. (௬௪)

வானத்தவுரிசைபலதுந்துபியொலிமடவார்நடவொலிகடமாவின்
தானப்புனலொலிதாரைத்திரளொலிதாளச்சதியொலிமணிவீணை
கானத்திரளொலிபலபல்லியவொலிகல்லென்றுறுதிசைசெல்லச்சூழ்
ஞானக்கடலொடுசூரற்படைகொடுநந்தித்திருமுனிவந்திக்க. (௬௫)

மகவானுயர்தருமலர்சிந்திடவெதிர்வருணன்பனிமழைநனிபெய்யப்
பகலோன்கலைமதிபளிதச்சுடர்கிளைபணிமாறினரிருபுடைபோதத்
தொகுமாமழலிறைதுபந்தரவொருதோழன்றமனியமலர்தூவ
நகைகாண்வருமுனிவரர்வாழிகள்சொலநதிநாரியர்கவரிகள்வீச. (௬௬)

நீடஞ்சலிபுரிமாரன்பரிவொடுநிறைமாலிகைதரநிறைமன்றின்
ஆடங்கணன்முனமாடக்கணநிரையணிவீசணிகொளவனிலேசன்
சேடன்பணமணியடருஞ்சுடர்கொடுதிசைசாலிலும்வளரொளிசெய்யக்
கோடம்பெறுகடன்மதிபோலலர்குடைகுண்டோதரன்முறைகொண்டேக. ()

ஞானக்கொடிபுணர்நளிஞலயமுனிநலியாதிறையருள்வழிநிற்பச்
சேனக்கொடியடலெகினக்கொடியிடிசெறியுங்கொடியடுசிலைமாரன்
மீனக்கொடிபலசேவித்துடன்வரவிடையின்கொடியவைநடுவாக
வானத்தெழுதரமகதித்திருமுனிமணியாழிசைசெவியமுதூற. (௬௮)

படகஞ்செறிகிணையொளியாகுளிவயிர்பதலைக்குலமடல்கெழுமொந்தை
துடிதுந்துபிமுழவடுசெல்லரியிசைதொகுதண்ணுமைவகைபலபொங்கி
அடருங்கடலெனவெவையுங்குளிறிடவரன்வந்தனனொருகளிறீன்ற
பிடிவந்தனளெனவொலிதந்திசையொடுபீலிக்குலமவையாலிக்க. (௬௯)

கண்ணன்கரமலர்நண்ணும்பொழுதொருகரபங்கேருகமலர்வைத்துத்
தண்ணஞ்சுடர்மணிமானத்தினினுயர்தானத்தவர்தொழவினிதேறிக்
கண்ணம்புயமலர்மலரக்கரமலர்குவியப்பலமுனிவருநாளும்
எண்ணுந்துதிசெயமணிமாநகர்வலம்வந்தானளிமையின்வாராதான். (௭௦)

மாமாரிகளெனவடியாருருகுகண்மணிநீர்பொழிதரவடநூலின்
பாமாரிகள்விரிதிக்கெட்டினுமறைபயின்மாமுனிவரரியலோதத்
தேமாரிகண்முழுமணிமாரிகளெறிதிரையார்கலிதரநிறைவிண்ணோர்
பூமாரிகள்பொழிதருமாலயமதுபுக்கானெவரினுமிக்கானே. (எக)

வடிவம்பொலிவழகொழுகுந்திருமுகவனசம்பலமலர்பலசெம்பொன்
கொடியொண்சுடர்நிரைபணிமாறிடவருள்கூறுந்திருமுனநேர்நின்றோர்
முடிமண்டிலமிசையிருசெங்கரமலர்முகிழும்படியரகரவென்றே
அடிகண்டவரவர்தொழமண்டியவொலியதிருண்டதுமுதுபகிரண்டம். (எஉ)

மாலைப்புரிகுழலுமையோடெழுகொளிவளருஞ்சினகரமதிலெய்திக்
காலைப்பவரியுமனம்வைத்தினையனகணைதீர்வளமலிமறுநாள்வாய்
ஏலக்குழலொடுபூதப்பரிமிசையிலகிப்பவனியுமுலவிச்சீர்
மூலப்பழமறையோலிட்டவனொருமுன்றுளெனவருமந்நாளில். (எங)

கோணைப்பெருவரைதிரியப்பொருதிரைகுமுறக்கடல்வருமொருபுத்தேள்
யாணர்த்திருமலர்பொலிகற்பகமிசையிமையோர்மணிமுடியடிதோயங்
காணப்பவனிசெய்தோணிப்பரனொளிகாலாரழல்கொடுநாலாநாள்
மாணத்திருமணிமானத்தெழில்பெறவந்தானுறுவலிசிந்தாதான். (எச)

இறைவேலனையுகண்மடவார்நடமிடவிகலாரிரவொருபகலாகத்
துறைதோறொளிவிடுமுடிசேரமரர்கடுதிபேரொலிவிரிதிசைமூடப்
பிறைவாணுதறிருநிலைநாயகியருள்பின்றுணுடன்வரவைந்தாநாள்
மறைநாவலர்தொழவலம்வந்தனனொருவடமாலெனுமுயர்விடைமீதில். (எரு)

அரவார்மணிமுடியுரவோனுறுதினமாறிற்பொருதிறல்வேழத்தும்
இரவாதுயரியகரையானதுதருமேழிரபுனைகயிலாயத்தும்
துரகாதிபனிலுமிருநாலெனவருதொகைநாளிடைநகர்வலமாகப்
பிரமாதியர்பணிசெயவந்தனனொருபெண்பாலவளொடுமொன்பானாள். (எசா)

அரவப்பெருமணிசுடரக்கொடிநிரையடர்துந்துபியொலிகடல்பொங்கத்
தரணிக்குலவரைபரவத்திசைதிசைதடவித்தளநிலைபுடையொற்றக்
குருமைக்குடைபல்மிடையத்தலைபுனைகும்பந்தினகரவிம்பம்போல்
உருவத்தரைநெளிநெளியப்படர்வதொரூழிக்கிரிநிகராழித்தேர். (எஎ)

மதியேறியவழியறியார்களையுநல்வழியேறிடநுவன்மறைவாசிக்
கதியேறிடவுமைபதியேறினன்முதுகலைகற்றவர்புகழ்நிலையத்தேர்
பதிநாயகமதில்வலம்வந்துறுநிலைபயிலுற்றுயர்சினகரமுற்றே
விதிபேர்புனைதடநீர்நல்கினன்மறைவித்தானவனொருபத்தாநாள். (எஅ)

ஞானத்தவர்களும்வானத்தவர்களுநளினாலயமுனிதடமாடி
ஏனைப்பகிரதிகுலபாலகர்பணியிசைமண்டபமிசைபதினொன்றும்
மானத்தினமதில்வளாகங்கணனடிமலருந்தொழுதபினொருதோணித்
தானத்தினுமலர்தூவித்தொழுதனர்தண்டாவருளமுதுண்டார்கள். (எகூ)

உரகங்களினியல்கரகங்கணமும்வில்லுமிழுங்குழைகளுமணிநூலும்
கரதண்டமுமழகொழுகும்புழுகணிகனகாசலநிகரியதோளும்
வரகஞ்சுகமொடுவெளரும்பயிரவவடிவம்புனைமலைவடுகேசன்
சரணந்தொழுதனர்விடைகொண்டவரவர்தந்தம்பதியிலணைந்தாரால். (௪௦)

பிறவும்பலபலபணியும்புரிதருபிரமன்றனையருள்பெறவைத்தே
உறுநின்பதமெனவிடைகொண்டகிலமுமுதவுஞ்செயலினின்முயல்கின்றான்
இறையின்றிருமுறுகிதுவென்றனனுயரிசையேபுனைதருவசைதீர்நூல்
முறையின்படிபுகலீரொன்பதினொடுமூன்றாலயமுணர்முனிசூதன். (௪௧)

(௪-ஆவது. திருவிழாவத்தியாயம் முற்றிற்று. ஆக திருவிருத்தம் ; ௪௪௭.)

## ௫ - ஆவது. பூதவிமோசனமானவத்தியாயம்.

கொழுதிவண்டினமலமருஞ்செழுமலர்க்கோயிலாளுடைப்புத்தேள்
முழுதினாற்றியபெருவிழாவொருவழிமொழிந்தனமினியோர்வெங்
குழிவயிற்றழலெரிமயிர்ப்பசியகட்குறியதாட்டெறும்பூதப்
பழிதுடைதொருமன்னவனன்னெறிபடர்ந்ததும்பகர்கின்றாம். (௧)

கடிவருங்கழைத்தலைதொறுங்கவிழ்தலைக்கருவிரற்சூன்மந்தி
படிதமாற்றுநீடருவியந்தடவரைபரந்தமாளுவதேயத்
துடல்சினம்பொருவாளரியன்னவனெண்மதிமரபுக்கோர்
கொடுமறுப்பிறந்ததுவெனப்பிறந்தனன்கொலைவிடூரதனென்பான். (௨)

நிலைவழங்குதன்குலப்பெரும்புகழெலாநீடொளிதருந்திங்கட்
கலைவிழுங்குவாளரவெனவிழுங்கியகருமனத்துறுதீயோன்
பலகைநால்வகைவன்னவல்லாடுவான்பகலிடையிரவெல்லாம்
குலவிநால்வகைவன்னவல்லாடுவான்கோதையரகலத்தே. (௩)

அறங்கடிந்துவெவ்வினைகளைவித்திநல்லார்வமென்களைபோக்கித்
தெறுஞ்சினப்புனலூட்டுபுவேலியாய்ச்சிற்றினம்படக்கோலி
உறும்பவப்பயனடைந்தவனுயிர்க்கெலாமுழிவெங்கூற்றன்னான்
இறங்குபுள்விலங்கிடுபுறங்காடெனவிழுக்குடையுதரத்தான். (௪)

கோலிழுக்குறவைம்பெருந்தீவினைகுயிற்றிவெம்பொருள்யாவும்
வேலிருந்தடறொழித்தவாட்கண்ணியர்விடயமேற்செலவுய்ப்பான்
நூலிழுக்குறார்மகத்தழலவிர்துகளுவலருந்துயர்காட்டி
மேலழற்றுவதிவனடுசினத்தழன்மிக்கவர்வயிற்றெல்லாம். (௫)

வெள்ளிவெண்டிரைமுகட்டெழும்விடமெனவெண்மதிக்குலவேந்த
ருள்ளிவன்பிறந்தரசியலிழுக்கினையொன்னலர்புறங்கூறக்
கள்ளுங்காமமுங்கொலைகளும்புலைகளுங்களிந்தொருதாய்பெற்ற
பிள்ளைபோலிவன்வளர்ப்பதேபெற்றனன்பெற்றிலன்பிறிதொன்றை. (௬)

மாணிரப்புருசிறுபுலப்பயன்களும்வயக்கரிநிலைநாடித்
தானளித்திடிலடுபசிகெடுமெதுசார்ந்துபுக்குணில்வேலி
ஆனதென்னினும்வாலினுங்காலினுமழிந்துவாய்புகலின்றிப்
போனதாமதுபோன்றதவ்விறைமகன்புவியெலாம்பொலிவற்றே. (௭)

வளையுமெல்லணிவாரொடுதுறந்துமேல்வரவரத்தலைசாய்த்த
புனைகலன்கழிமங்கையர்கொங்கையிற்பொலிவுபோய்ப்புல்லென்று
கனைகரும்புயல்வறப்பமாநிலமெலாங்கலிபரந்ததுதேர்ச்சி
வினைஞரின்மையாற்கோடழிகுளமெனவீறழிந்தனன்வேந்தன். (அ)

விடையத்தீப்பிணிவெதுப்புநல்லாருயிர்மெலியவாயுளுங்குன்றி
அடையச்செல்வமுமரும்பெறலரசும்வேற்றரசுகொண்டேமாப்பக்
கடையிற்போந்தெழுகார்புறாபகட்டின்மேற்கனன்றுகட்கடைதோறும்
வடவைத்தீயுகவந்தகூற்றுவன்படர்வலையிடைத்துவக்குண்டான். (௯)

நுதியயிற்குல்மழைபொழியாறுபோய்நுவலருநிரயத்தே
கொதியழற்சுடவெண்ணில்பல்காலம்வெங்கொடுமையாற்கொட்புற்றுப்
பதியதங்ககன்றரின்மிடைவிந்தமென்பருவரைத்தடஞ்சாரல்
கதியடைந்தனனவுணனாய்விடுக்குமோகழிவினைத்தொடரம்மா. (௧௦)

பேதுசெய்துபல்விலங்கெலாமாழியபிலத்துவாய்புகப்பெய்தும்
ஓதுமந்தணராருயிர்வவ்வியுமொண்டொடியார்க்கொன்றும்
தீதுபூத்தலர்நெஞ்சினன்வைகலுஞ்செய்கொலைத்திறத்தாலே
காதுமுத்தலைக்காலனுமுயிர்கொளுங்கைவினைகைதூவான். (௧௧)

வைகலுங்கொலையூயின்றவாயவுணன்முன்வையகக்கொடுங்கோன்மை
செய்கையிற்சிறிதறனிழைத்தனன்கொலோதேமறைப்புள்ளார்க்கும்
பொய்கையானவாங்கீரன்வாழ்பாசிலைப்புனையுள்புக்கறவோனைக்
கைகவர்ந்துவாய்மடுப்பலென்றெளித்தனன்கண்டனன்றவக்கோமான். (௧௨)

கரந்திவண்புகுங்கள்வனீயாரைநின்கயமையாலெமைவாட்டி
அரந்தைவெம்பசிதணிப்பவந்தனைகொலெம்மடிகளார்நும்முன்னோர்
பரந்ததொல்லுயிர்பருகுமாலுதிரநீர்பருகும்வித்தகரன்றே
தரந்தெரிந்திலாயகலுதியென்றனன்சதுமுகன்வழித்தோன்றல். (௧௩)

அகல்வதுன்னுயிருந்துவதெனதுவாயன்றிநீபலவாளா
புகல்வதென்னையென்பொலிவெலாமறையவர்புதுநிணப்பொலிவன்றே
பகரலென்றுகண்பொறியுகச்செறிமயிர்ப்பங்கியங்கியிற்காண
இகனெடுங்கரமெடுத்தொருகூளிபோலெய்தலுமுனிகண்டான். (௧௪)

கண்டுபொள்ளெனக்கால்முன்றையுமுணர்கடவுண்மாமுனிதெய்வக்
குண்டிகைப்புனல்விதிர்த்தவன்றென்மையுங்குடிப்பிறப்பையுங்கூறி
மண்டுமிவ்வுருவேகொடுதிரிகெனமற்றவன்முரட்சாபம்
கொண்டொழிவாயவுணன்வல்லுருவுபோய்க்கூளியாகினனன்றே. (௧௫)

சிரகநீரதுதெறித்தலுஞ்சாபமுந்தெளிவுவந்தனபோலும்
உரவனேயுனைப்பிழைத்தோனிப்பழியொழிப்பதெங்ஙனமென்றாய்
விரவுநீர்க்கடல்வெதுப்புறிலாங்கதைவிளாவுநீர்பிறிதுண்டோ.
குரவனேயிதுபொறுக்கெனிக்கருநெடுங்குன்றின்வீழ்ந்ததுகூளி. (௧௬)

திருகுவெஞ்சினத்தடலயிராவதத்தேவனும்பழிபூண்டான்
கருநிறப்பசுங்கொண்டலும்பவம்பலகண்டனன்றொகைகாணார்
முருகுயிர்த்தபூங்கொன்றையான்றொண்டர்வாய்முனிவுபெற்றனனென்றால்
ஒருவனெய்துதல்வியப்புமன்றெனமுனியுன்னினானஃதுய்ய. (௧௭)

எமதுதாபதப்பள்ளிபுக்கனையுனக்கிப்பெரும்பழிநீத்து
விமலமாகுமாறுணர்த்துவெனகேண்மதிமிக்கதக்கணதேயத்
தமலனாதரம்பெருகியதிருவரீளணிகெழுசோணாட்டில்
இமிழ்தடந்திரைப்பொன்னிநீருண்டதையெய்துதியதன்மாடே. (௧௮)

வடக்கினிற்பெருங்குடக்கனிக்குறும்பலாவழிந்தசாறிழிந்தாறாய்த்
தடக்குரம்பினிற்பரமபினில்வேலியிற்சாலியிற்புறஞ்சூழ்போய்க்
கிடக்கவாடகப்புலத்தினின்மரகதக்கிளரொளிக்கொழுந்தேய்ப்பப்
படப்பைநாறுகள்வீறுசெய்தோணியம்பழம்பதியதுகாண்டி. (௧௯)

அற்புதன்றிருவுளத்ததுமுத்திவீட்டகத்ததுபரஞானச்
சிற்பரப்பொருண்மூன்றதுதோன்றுறுசேகொழிப்பதுமாயை
உற்பவந்தரும்பொருளெலாமயனொடுமொருங்குலப்புறுமூழிக்
கற்பம்வென்றதுகருதியார்கருதுவகாட்டுவதம்மூதூர். (௨௦)

தாளதாமரைத்தாக்கணங்குறையுமத்தனிநகரதுபுக்கால்
தோளருவரியரவணியந்தணன்றுணையடிப்புணைபற்றிக்
கோளருவிழிப்பிறந்தையார்கலிதனைக்குப்புறுங்குணமிக்கான
வாளருமணிவேணியான்காலவமாமுனிதனைக்காண்பாய். (௨௧)

தயங்குமம்முனிமறைநெறிபுரிதருசத்திரபபெருவேள்வி
முயங்குமெல்லையினிரந்தனைநிற்றியேனமுனிவனாகுதியொன்றால்
பயங்கொள்பாரிடப்படிவமும்பழவினைப்பளகுநீக்குவன்றோல்போய்
வயங்கராவெனப்பொலிகுவையென்றனன்மறைமுடிப்பொருள்வல்லான். ()

கோதகன்றவன்றிருமொழிகரிந்தபைங்கூழ்முகத்தினிற்பெய்த
சீதமாமழைகடுத்தலாற்செவியினுஞ்சிந்தையிற்களிகொண்டு
பூதரங்களுங்கடறுடைக்கடங்களும்பொருதலைக்கான்யாறும்
பாதவங்களுங்கடந்தவாசியின்றிசைபடர்ந்ததுகரும்பூதம். (௨௩)

பாரகத்திருமடந்தைமேலணிந்தபொற்பணிபுரைசோணாட்டில்
பேரகன்றிரைப்பொன்னியாற்றடைகரைப்பிறங்குநீசியின்மாடே
காரகிற்கொழும்புகைதவழ்மனைதொறுங்கடிமுரசுறங்காத
சீருலாம்பிரமாபுரஞ்சேர்ந்ததுசிவபதந்தனிற்சேர்வான். (௨௪)

கேழினான்முகன்பிரளயநீத்தமேற்கிளர்ந்ததோணியின்மீதே
கோழிளம்பிறைக்கண்ணியானுறைதிருக்கோயிலின்குடக்காக
வேழ்விவேட்டுயிர்வேதவாணிபர்நடுவிளங்குகாலவனென்னும்
தாழ்விலாமுதுமாதவக்குன்றனான்றனைநோக்கியதாங்கண். (௨௫)

புகரின்மும்மையாயிரத்துநான்மறைமொழிப்புலமையோர்புடைசூழப்
பகருநீணிலப்பதிதொறுநதிதொறும்பணிந்தனன்வலம்போந்து
புகரில்பொன்னிநீராடியெத்தோணிவாழ்புண்ணியனடிபோற்றி
அகனுறும்பொருள்யாவையுஞ்சுரபியாலமைத்தெரிவளர்ப்பானை (௨௬)

இருதுகோசிகனங்கசத்துருவிறல்கெழுஞ்சவுபரிவேதத்
தெரிசியாதிமாமுனிவரோடளவளாய்த்திண்டிறற்றண்டீசன்
வருபதஞ்சலிபுலிமுனிதிருநந்திவானவனருள்பூண்டு
குருமுகத்தழன்முழங்குமுக்குண்டமுங்கோட்டியசெயலானை. (௨௭)

உதிர்ந்தபூவெனப்பலபொரிநெய்விராய்பூபவாயழற்பேணி
அதிர்ந்தமாமணியிரட்டுறமனுவழியாகுதிவகையாற்றி
முதிர்ந்ததெய்வதவெண்ணிரண்டிருத்துவைமுறைமுறைபணிவானை
எதிர்ந்துநின்றதாற்புரையெயிற்றுரகம்வாழிருஞ்செவிப்பெரும்பூதம். (௨௮)

கரிந்தகையெடுத்தலம்வரவுயிர்ப்பினிற்கருவரைக்குலஞ்சாய
எரிந்தகுஞ்சியினழல்விழிசுழற்றியாண்டெதிரியபூதத்தைத்
திருந்துமாறிருதினமுமாகுதிவினைசெய்துபன்மூன்றுநாள்
வரும்பிராசதமனமெனுமாகுதிவழங்குமாமுனிகண்டான். (௨௯)

புடைகலந்ததொல்லுறுவருமெறுழ்வலிப்புணரியினிடைப்பட்ட
உடைகலம்படுமொந்தரினிரியலிட்டோடினரிதுகாணா
விடையம்வென்றவணிங்கொருபாரிடமெய்தியதெனவந்தோ
இடையிலிம்மகம்பிழைக்குமேயெனக்குழைந்தினையலுற்றனன்பல்கால். (௩௦)

இனையுங்காலவன்படரடச்சிறுமுனிக்கேற்றகூற்றுவன்சாய
முனையுங்காலவன்கஞ்சகன்செஞ்சரண்முளரியையுளப்போதில்
புனையுங்காலவனெனக்கிடர்வருவதுபொறுப்பனோவெனப்போற்றி
நினையுங்காலவன்முன்னர்முப்புவனமுநீண்டகாலவன்போற்ற. (௩௧)

வேறு.

ஆடுமணிகுஞ்சியுமகோரமுகமுந்துடியுமங்கையுமுகந்ததடியும்
கோடுமணிகஞ்சுகமுநஞ்சுரகமுங்குழைகுலுங்குமிருகாதுமறைநால்
தோடுபுனைசெங்கரமுமங்கியொளியுந்திரிவிலோசனமுமொண்புழுகுமா
சேடுபடுமோருருவினெய்தினனெடுஞ்சயிலதெய்வவடுகேசனருளால். (௩௨)

ஐந்துபடுதுர்த்துபிகளுங்குணில்பெருந்துழனியண்டமுகடெங்குமதிரக்
கந்தமலர்வந்தமரர்சிந்தவெதிர்முந்தியகணங்கள்புடைகொண்டுமிடைய
நந்துகண்முழங்கவிசைகந்திருவர்பம்பவொலிநண்ணுபலசின்னநிரைகள்
வந்தனனரன்பசியகஞ்சுகதரன்கடவுள்வந்தனனெனுந்துதிசெய. (௩௩)

சூலமுதன்மூவறுபடைக்கலமெமித்துநிறைதுரியமியம்பமறையோர்
நாலுமறையோலமிடநீலிருவர்காரியர்கண்ஞாளிமிசையேறினர்வரப்
பாலமைகோதியினீறுபுனைமேனியர்பணிந்தனரணைந்துபரவக்
காலவனிருந்தமுதுவேள்விமலிசாலையதுகண்டருளவந்தருளினன். (௩௪)

நேசசரணஞ்சரணமுத்தியடியார்க்குதவுநித்தியநிர்வாணசரணம்
வாசசரணஞ்சரணமாதியிடையீறுதவிர்மானசிவஞானசரணம்
தேசசரணஞ்சரணம்யோகசன ாதியர்தெளிந்தகுருநாதசரணம்
ஈசசரணஞ்சரணமென்றுமுனிகாலவனுமேவருமெழுந்துதொழுதார். (௩௫)

செம்மலுமவன்பணியுமம்முனிவருக்கருள்செயுங்கடமையான்முனிவிர்காள்
உம்மகமுடிப்பளவும்யாமிவணிருத்துமெனயோகதலமீதமர்தலும்
எம்மடிகளுக்கரியதென்னையிதுவேள்விபுரியேழையடியேமருளவோர்
பொம்மலுருபூதமிவண்வந்ததெனநின்றதொருபூதமதுமாதவனொடே. (௩௬)

என்னையுயிரஞ்சும்வினைகண்ணியுளபூதமெனவெண்ணலையிரங்கியடிகேள்
முன்னையொருதாண்முளரியந்தணன்மகன்றருமுரட்பழிபடைத்துளனியான்
அன்னவரவென்னையெனின்மாளுவநெடும்புவியிலாய்மதிகுலத்திலொருவென்
உன்னரியதீவினைசெய்மன்னவன்விரேதனென்னூழ்வினையுருப்பவுயிர்போய்.

காலுபடர்கொண்டுநிரயத்தினிலழுத்தினர்கழிப்பவருசேடமதனால்
மாலிருநெடுங்குடுமிவிந்தவரைவாயடர்வனத்தினிலரக்கனுருவாய்க்
கோலுறுமெறும்புகடையானைமுதலானவைகுறைத்துநுகர்நாளிலொருநாள்
ஆலுமனல்பொங்குமெனகட்டினிரைகொள்வலெனவங்குமுனிவன்புரையுளில்

பாரிடவுருக்கொடுபடர்ந்தவனைநுங்கவருபான்மையினையன்னமுனியாம்
கீரனெனையிவ்வுருவொடேதிரிகெனப்பழிகிடைத்தனெனிரங்கியவனே
ஒருகதியுண்டுபிரமாபுரியில்வேள்விகளுஞற்றுமுனிகாலவனுழைச்
சாருதியொராகுதிபலன்றருவனிப்பழிதணந்திடுதியென்றருளினன். (௩௯)

மற்றவன்விடுப்பவிவணுற்றனெனுனைப்பரவவந்தவழியிந்துமௌலிக்
கொற்றவனையும்பரமமுத்தனையுமென்விழிகுளிர்ந்திடவெதிர்ந்தனெனியான்
உற்றபழிவிட்டகலநறகருணைவைத்திடுதிமூனவடிவானசிறியோா
குற்றமவையெத்துணையிழைத்திடினுநற்றவர்குணத்தொடுகுறிக்கொளுவரால்.

முந்தையியலுந்துருவிவந்த்வி●லும்படமொழிந்துபணிகூளிபெறுமா
றந்தமுனிமேதகுபிராதசமன்ங்கனிலொராகுதிபலன்றருதலும்
நிந்தையுறுபூதவுடலந்தொலையவானமிசைநீளொளியின்மாளுவபிரான்
வெந்துறுகளிம்பகலவேறுபடுசெம்பொனெனவீறுபடநின்றனனரோ. (௪௧)

ஆயிடையுதித்தகதிர்ஞாயிறெனவிட்புலவராதரவினுய்த்தவொருதேர்
மேயினன்மூனூத்திகிரிமாயனிசெட்டையணிமேனியனைமூற்பரவியும்
தாயினுமுயிர்க்கினியகாலவனடித்துணைதனக்குமலர்கொண்டுதொழுதும்
தீவினையகற்றியவிரேதன்வழுக்கறுசிவானுபவமுற்றனனரோ. (௪௨)

மாளுவபதிக்கருளுமாமுனியுமத்தகையமாமகமுடித்துவிமலன்
தாளிணைபழிச்சிவழிபாடுபுரியக்கருணைதானுருவமானபரமன்
கோளறவிழைத்தவுனதியாகநிறைவுற்றதுகுறித்தமையுணர்த்தியெனலும்
நாளுமுனடிக்கமலநீழலின்மிகக்குலவிநாணினிதிருக்கவருள்வாய். (சங)

மாதவர்களோதுபிரமாபுரியிதற்கயலில்வாழுநர்தமக்குமடல்சேர்
பூதமிடிநோய்வறுமைகோள்பகைபசாசமிவைபோம்வழிபுணர்த்தருளுவாய்
ஆதிமுதல்வித்தகவெனுமுனியுரைத்துளவனைத்தையுமளித்துமுனிவோர்
ஏதமறுதத்தநிலையேறவருள்செய்திறைவனேறினனிருந்தசிகரம். (சச)

அட்டவடுகத்தலைவரப்பதிபுறந்தரவமைந்தபரிசோமுனிவர்கோன்
முட்டலின்மகத்தொழின்முடித்தபரிசோகுறண்முரட்பழிதொலைந்தபரிசோ
சட்டையணிவித்தகனிருந்தபரிசோவுறுதலத்தியல்விளங்குபரிசோ
சுட்டவளவில்லையெனமாதவகணங்களொடுசூதமுனியோதினனரோ. (சரு)

(ரு-ஆவது பூதவிமோசனமானவத்தியாயம்முற்றிற்று ஆ திருவிருத்தம்.சகஉ.)

## சா-ஆவது. ஸ்ரீகாளிபுரமானவத்தியாயம்.

மைம்மலிபசுங்கட்கூளிவன்பழிதொலைந்துமுத்திச்
செம்மருளடைந்தகாதைதெரித்தவன்றில்லைமோடி
இம்மணிநகர்வாய்நோற்றவியலையுந்தெரித்தவாறே
அம்மவீண்டரியதேனுமறைகுவாமறிந்தவாற்றால். (க)

கொடிமுகிறுழாவுமாடக்கொழுமணிக்குப்பைவீதி
முடிவிலாமுனிவராற்றுமுழுமறைச்சடங்கும்பன்னாள்
ஒடிவில்பேரறமுமோவாவுற்சவப்பொலிவுமுன்னு
அடியர்மாட்டுவகைதோன்றவளவில்பேரருளான்மேனாள். (உ)

அருவமாயுருவமாகியருவுருவந்தானொன்றாய்
நிருமலமாகியெங்குநிறைந்துசொற்பதங்கடந்த
பொருவிலஃவொருவன்பொன்னம்பொதுவினின்முதுவர்போற்றக்
கருணைமாநடனமொன்றுகாட்டுவானாட்டம்வைத்தான். (ங)

வய்த்தலுமிமயச்செல்விவடிவினில்வாய்ஞ்சுநீண்ட
நெய்த்தலைவேற்கண்மோடிநின்மலன்றிருமுனெய்தி
இத்தலைகுனித்தலெந்தைக்கிதுநகைப்பாலதென்னா
அத்தனையிழித்தாள்பேதைக்குறியினையறிவிப்பாள்போல். (ச)

நிணாவளைமடவார்க்கென்றணிலையுமாடவருக்கென்றால்
புணைபடுமென்றேயாடிற்புகலுபசற்சனத்தோ
டிணையங்கம்பிரத்தியங்கமுபாங்கமென்றுணைத்தவாடல்
வணையறுவிகற்பமெல்லாம்வல்லையேல்வருதியென்றாள். (ரு)

என்றலுமியைந்தவாறேயியைந்திருவிழியிலாதான்
றன்றடிபிடித்துளானுந்தளர்நடையியற்றுவான்போல்
அன்றியல்வென்றிதோல்வியவையுளார்தெரிப்பரென்னக்
கன்றியவவையையாடக்கண்ணுதலாடல்செய்தான். (௬)

எழுதொணாக்கிளவித்தொன்னூலேத்தொலிதழங்கவெண்ணீற்
றொழுகொளிவாணன்றெய்வவொண்குடமுழவமார்ப்ப
முழுதுணருரகவேந்துமுனைவரிநகங்கடோறும்
விழிமலர்பூத்தவேங்கைவேந்துநின்றேத்தெடுப்ப. (௭)

ஈரிருகுடுமிப்புத்தேளேந்துபொற்றாளம்பேணக்
கார்புனையுருவத்தண்ணல்கணைதுடியிரட்டஞானப்
பாரதிமகரவீணைபரித்தனளிசைப்பவானத்
தோரிருசுடருமாங்கண்வேய்ங்குழலொலிப்பமாதோ. (௮)

இறைதருநந்திசெங்கையின்ஞெலிமுழவமேங்க
முறைதருஞ்சுருதித்தீந்தேன்முனிவரோரிருவர்பெய்ய
அறைகழலமரர்வெவ்வேறமர்ந்துபல்லியந்துவைப்பப்
பொறைமலியன்பர்செங்கட்புளகநீரருவிகால. (௯)

வேறு.

பிறவருத்தமாவருத்தமசுவபாதம்பிறத்துருதமுபத்துருதம்விளம்பமேரு
விறலுபகாளனம்பிரசாதனமனுதவிப்பிரமம்வலமிடச்சுற்றிலகுதீர்க்கம்
நிறைகவுடம்பின்னபிரபின்னநேமிநிவ்வருத்தமகமேருநேத்திரப்பூ
உறைகுறுக்குப்பார்வையாகாசப்பார்வையுபபின்னம்புட்கலாவருத்தத்தோடும்

குணிப்பரியபலபரதத்துறைகள்யாவுங்குழகனுவந்தாடும்வண்ணங்குன்றா
வென்றித், தணிப்பரியதெறுஞ்சினத்துக்கடலந்தானைத்தாருகனைப்பொருதழி
த்தாடானுமாட, மணிச்சடிலப்பெருமுனிவர்வானோரேனோர்மதிமருளக்கதி
ரொளிகால்வடிவமொன்று, கணிப்பரியகாலமவைசெல்லக்கொண்டகண்ணுத
லோன்றிருவுளத்தோர்நவவுகொண்டான். (௧௧)

வேறு.

சிட்டர்கோடிநின்றிறைஞ்சுசெம்பொன்மன்றநடுவனோர்
நட்டமாடவென்றுகொண்டநம்பனம்பொன்வடிவுதான்
விட்டபேரொளிக்கரங்கள்வீசியூழிமுடிவினில்
பட்டவாழியிற்கிளர்ந்தபானுகோடியொத்ததே. (௧௨)

உச்சியங்கியுராறுபங்கியுடனழன்றமுயலகன்
பச்சைமேனிவெரிநெளிந்துபடியநந்தன்முடியுகப்
பொச்சையங்குலஞ்சுழன்றுபுவிகுலுங்கவவிரொளிக்
கைச்சரோருகங்கள்சென்றுககனகூடமுலவவே. (௧௩)

இட்டமார்பினுத்தரீயமேமவெற்பினருவிபோல்
தொட்டமீதுதுயல்வரச்சுடர்க்குழைக்கண்வெயில்வரப்
பட்டவாளுதற்பகீரதிப்பெணுடல்பயிலுநீள்
வட்டவார்சடைக்குலங்கண்மாதிரம்புதைப்பவே. (கச)

அரவமந்தரம்பிணித்ததாமெனத்திரண்டதோள்
உரகதுங்கவலயமாடவுபயபாதமவையிலோர்
சரணபங்கயந்தராதலம்பொருத்திவலமலர்க்
கிரணபுண்டரீகம்விண்கிழித்துமீதலம்பவே. (கரு)

தொடித்தலங்கடித்தபைந்தொடைக்குலம்புடைக்கவும்
படித்தலந்துடிப்புறும்படிக்கெழுந்துடிக்குலம்
தடித்தியம்படைக்கவுந்தடிப்பருந்திடத்துநின்
றடிச்சிலம்பொலிப்பமன்றிலையனுடல்செய்வனால். (கசா)

உய்யுமாறுசெய்யுமின்னவூர்த்ததாண்டவத்திலேழ
வய்யமாடமேருவாதிவரைகளாடநாடகம்
செய்யலாமெனப்படர்ந்துதீதுலாயவாதுகூ
றய்யைகண்டுநாணமாடவையனுடல்செய்வனால். (கஎ)

மய்யளாயகண்டன்மற்றுமண்ணும்விண்ணுமிணையடித்
துய்யபோதலர்த்திநின்றுதூண்டுமின்னதாண்டவம்
தய்யலாயுன்னுடலோடுசமதைகோடியோவெனப்
பய்யநாணெதிர்ந்தவல்லிபக்கன்மிக்கெழுந்தவே. (கஅ)

நீணிலத்திலன்றிமேனிவந்துதாளெடுக்குமக்
கோணியண்ணலாடுகின்றகொள்கைகண்டுவெள்கியே
நாணியங்கம்வேர்வரும்பிநகையொடுங்கிமுகிழ்விரற்
றாணிலங்கிளைத்துவஞ்சிதலைகவிழ்ப்பவவையுளார். (ககூ)

குழகனுடுபாதமின்றுகூடவாடுகிற்பெனென்
றழலரங்குமீதுவெண்ணெயாயபாவையாடல்போல்
உழலுமாடலாடியின்றுடைந்ததுன்றனடமெனக்
கழகமாமுனிக்கணங்கள்கழறியொன்றுநுவல்வரால். (௨0)

கூனுடைப்பிறைத்துகிர்க்கொடிப்பிரானிடத்துவாழ்
நீனிறக்கொடிக்குள்வந்தநின்னையாதுமுன்னலான்
ஆனவன்றனைப்பிழைத்தியாதலாலழுக்கிலா
மேனியுங்கறுக்கவுன்றன்வென்றியுங்கறுத்ததே. (௨க)

நஞ்சுயிர்க்குமுரகவாய்நடுக்கரங்கொடுப்பதூஉம்
வெஞ்சினந்தணித்தலின்றிமேன்மைஞானம்வருவதூஉம்
துஞ்சுகற்பிணித்திருந்துறைக்கடற்கடப்பதூஉம்
தஞ்சநெஞ்சொருப்படாதுதக்கமுத்தியடைவதூஉம். (௨௨)

அதிதியர்க்கருத்தலானகத்திருந்துவாழ்வதூஉம்
மூதிர்மறைப்பழக்குமின்றிமூடிவினைத்தெரிப்பதூஉம்
மதிமிலைந்தவரதனோடுவெருகவாடவருகவென்
றெதிரினோடணீகுறித்தெழுந்ததூஉமிழுக்கரோ. (உங)

நண்ணியற்கையாயநூல்கணூறுகோடிபழகினும்
பெண்ணியற்கைபோவதன்றுபேதைநீயகந்தையால்
அண்ணலைப்பிழைத்தபாவமகலுமாறுமற்றவன்
கண்ணருள்கிடைக்கினுன்களங்கம்விட்டிகக்குமால் (உச)

நீரகத்தெழுந்தசேறுநீரகத்தொழித்தல்போல்
போரகத்திலாடகப்பொருப்புவிற்குழைத்தவன்
பேரகற்றினின்றிவண்பிழைத்ததீமையவனருட்
காரகம்பிடித்திகேடத்தியென்றுகூறினார். (உரு)

முழுதொருங்குணர்ந்ததில்லைமுதுவர்சொன்னவிதியறிந்
திழுதையேன்செய்வினைவிலங்கவிறைவனன்புபுரியுமோ
ஒழிவதென்றுபெறுவலென்றவுணர்வறிந்ததுணையிலான்
குழைகடந்தவிழியைநெஞ்சுகுழையவென்றுமொழிகுவான். (உசு)

பாவமென்பவற்றின்மிக்கபாவநின்புறத்திலே
மேவநின்றதிதுகடக்கும்வினயமொன்றுநினைதியேல்
பூவளஞ்செய்தோணியம்புரத்திலெம்பதத்திலே
நீவணங்குகென்றளிப்பநின்றமோடிநன்றெனா. (உஎ)

வேறு.

பவளமுருக்கும்புரிசடையான்பணிகொண்டெழுந்துபுனைகலன்கள்
திவளுமலர்ப்பூங்கொம்பரெனத்தென்பாலணைந்துபெண்பாகம்
கவரும்பாகன்பதிதோறுங்கதிர்வால்வளைமுத்தலர்தூவிக்
குவளைவிழிக்கும்புனற்பொன்னிகுடைந்தாள்வடபாலணைந்தாளே. (உஅ)

மாநீர்த்திரையின்வெடிவாளைமடைவாய்க்கருங்காற்குருகிரியத்
தீநீர்க்குரும்பைக்குலைசிதற்றுந்தென்னைவனஞ்சூழ்தோணிபுரித் ,
தூநீர்மணியாடகத்தசும்பிற்சுடரும்திருக்கோபுரநான்கும்
வேநீருங்கண்ணெதிர்காணவிழித்தாளிடரையொழித்தாளே. (உகூ)

மணக்குங்கமலவாவிகளும்வரிவண்டிமிர்தண்டலைபலவும்
இணக்குங்கனகத்தனிமறுகுமெங்கும்வலங்கொண்டிடைகிடையை
அணக்குமிருபொற்குடம்வணக்குமதுபோன்மதிவாணுதலுடலை
வணக்குமொருபொற்குடமிருந்தமானக்கோயிலகம்புக்காள். (௩௰)

கதியாவர்களும்பெறவழங்குங்கடவுட்பிரமத்தடமூழ்கி
விதியானியமச்சடங்காற்றிவெண்ணீறுடிக்கலைமகடன்
பதிநாயகனைபபணிவான்போற்பணிந்துமூலப்பதிபுகுந்தாள்
தொதிவேலனுக்கிக்கயன்மருட்டுங்குடங்கைக்கடங்காத்தடங்கண்ணாள். (௩க)

பண்டாடகப்பேரவையினின்றபரமவெளியாகியகுறியைக்
கண்டாண்மலர்மஞ்சனமாட்டிக்கனிந்துபூசைக்கையாறு
கொண்டாள்பவளக்கொடிபோலக்குழைந்தாள்கருணைக்கொழுந்தேறல்
உண்டாண்மேலைத்தடங்கோயிலுற்றாளெண்டோள்பெற்றாளே. (௩௨)

வேயாலாவின்கணங்குவித்தவிபுதாதியர்மற்றெவரொவர்க்கும்
மாயாமயத்தோணியிலிருந்துமாசையகற்றுந்தேசிகனைப்
போயாயிடைப்புக்கிறைஞ்சியொருபொன்னஞ்சிகரத்தென்னையருள்
தாயாகியகஞ்சுகனடியுந்தலைமேற்கொண்டாடவங்கொண்டாள். (௩௩)

குருக்கும்பிறைவாணுதல்பின்னோர்குளிர்நீர்த்தடம்பொற்றளிமேல்பால்
இருக்கும்படிகண்டதிலாடியிறைகோளிலிங்கமொன்றிருத்தி
உருக்குங்கருத்தானருச்சனைகளோவாதுஞற்றவதனினின்றும்
பெருக்குங்கருணைக்கடலனையபெருமான்வந்தான்பொருமான்மேல். (௩௪)

மாலைக்குழல்சூழ்முகத்தியொடும்வல்லேறூர்ந்தநல்லோனைக்
கோலைப்பழித்தவிழியருவிக்குளிப்பத்தாழ்ந்தகொடியனையாள்
மேலைப்பவத்தின்பொறையிழிந்துவீழ்ந்தாலெனத்தாண்மிசைவீழ்ந்து
சோலைக்கிளிகண்மருளநின்றுதுதித்தாளருளைமதித்தாளே. (௩௫)

மறையோனறியாதருவனாயாய்வானங்கடந்துமேனிவந்து
நிறைவாளரக்கிறைமாலைநீட்டக்குனிந்தவியல்போற்றி
நறைமாமலர்கோலிறைமாரனகையாருருவம்புகையூட்டிக்
கறைதீரிரதிமனங்களிப்பக்காத்தகருணைப்புகழ்போற்றி. (௬௧)

வேணிமுடித்தபெருந்தவத்துமிக்கார்தமக்குமிக்கான
காணிவனத்திலாணுருவங்காட்டிநடந்தகதிபோற்றி
ஆணமலிதாய்வரும்வழிபார்த்தழுதகூலிக்கன்னையெனப்
பேணியெழிலார்பெண்ணுருவம்பெற்றுநடந்தநெறிபோற்றி. (௩௭)

எண்காற்பறவையுருக்கொடுமானுடவாளரியினிகறடிந்து
தண்பூமடந்தைமங்கலநாண்டகையாலளித்ததகைபோற்றி
பண்பாவலர்சூழ்மணிமன்றிற்பரமாவுனதுதிருமுன்னர்ப்
பெண்பேதைமையால்யானிழைத்தபிழையைப்பொறுக்குமருள்போற்றி. ()

பலவுமினையதுதிகூறிப்பணிமாதரசைத்துணிவாய்ந்த
நிலவுபொதிந்தசடைமுனிவனெஞ்சமினையேலுனைத்தொடர்ந்த
பலபாதகத்துந்தலையாயசிவநிந்தையுமாபாதகத்தால்
இலகுங்களங்கவினையுமகன்றிடுதியான்முன்னெழில்பூண்டே. (௩௧)

செம்மாந்தணந்தவனமூலையிற்சேயிழாய்நின்றிருநாமம்
இம்மாநகர்க்குநீவழிபாடியற்றக்குயிற்றுமுருவினுக்கும்
மைம்மாசகன்றதடத்தினுக்குமலிந்தோங்குகவித்தடம்படிந்தோர்
எம்மாநிலத்துமெமைப்பிழைத்தவதிபாதகந்தீர்த்திலங்குகவே. (௪௦)

புடைக்குஞ்சிறைவாரணங்கூயபுலரிக்காலத்துன்பெயரைப்
படைக்கும்பதியீங்கிதைமூக்காற்பகர்ந்தோரகர்தைவினையனைத்தும்
துடைக்குந்தலத்துந்துடைப்பரியதொல்லைச்சிவநிந்தனைமுதலா
அடைக்கும்பவங்களெனைத்துமொரீஇயமலராகவாயிழையே. (௬௧)

தெரிசித்தினத்தித்தடமூழ்கிச்செய்தென்புலவர்கடன்முடித்தோர்
துருசுபொதிந்தவிருவினையின்றொடர்ப்பாடகல்வார்கார்த்திகையாம்
புரியுமதியிற்கதிர்நாளிற்புக்காடுவரேலெவ்வினையும்
பரிசியாமலொழிவரிந்நீர்படிந்தாரடித்தூள்படிந்தாரும். (௬௨)

மண்ணுமணிச்சூட்டரவணிந்தவரதனினையவரங்கொடுத்துப்
பெண்ணாரமுதம்பணிகுறியிற்பெருமான்மறையவிறற்காளி
பண்ணார்பலபல்லியந்துவைப்பப்பனிநீர்மழையின்றளிதமெனக்
கண்ணார்கலவமயிலாடுங்கனகமணிமன்றினிற்புகுந்தாள். (௬௩)

வேறு.

இழைதவழ்கொம்மைவனமுலைக்காளியிறைஞ்சலாற்காளியம்புரியென்
றழகியவொருபேரிந்நகர்க்குற்றதன்றியுங்காளிதனெனுமோர்
புழையெயிற்றுரகவேந்தனாற்காளிபுரமெனும்பேருமன்றுளதென்
றுழையதட்போரவைமுனிவர்கேட்டுவப்பவுறுதவச்சூதனுண்டுரைப்பான். ()

தொழுதகுகற்பிற்காசிபன்மகிழூந்துணிவறுவினதைதன்பாலன்
பழுதருமமரரளித்ததொல்வலியாற்பலவரிக்கொடுஞ்சிறைபுடைத்துக்
குழிவயிற்றழலும்பசிகெடவெறிநீர்க்குரைதிரைவளாகமேலடல்சேர்
முழுமணிச்சுடிகைமோட்டராவினத்தின்மொய்யுயிர்படுத்துணுங்காலை. (௬௫)

மாயிருஞாலத்தரவெலாம்பறவைமன்னவவுருத்தொருபகலே
நீயெடுத்துண்ணவாற்றலமடியேநித்தமோருணவுநீவிரும்பித்
தாயினும்புரததியென்றலுமுறையேதரத்தராநுகர்ந்தனனிருப்ப
ஏயினவாநந்தனுதிவாளரவவிறைவரிற்காளிதனென்பான். (௬௬)

வேந்துபுள்ளினுக்கோவெனக்குமோவுணவைவீசுமாறென்னையென்னூறு
காந்துவாய்படைத்துமெலிவெனோவென்னுக்கணைந்துதன்சுற்றநின்றிரங்கப்
போந்துதெண்டிரைநீரரண்புகுந்துழியும்புவிபலபொதிந்தசேவடியை
ஏந்துபொற்றோளான்முறையினாலடுபோரேற்றனனவனுநின்றேற்றான். (௬௭)

குருமணிச்சுடிகைநாகராவேறுங்கொடுஞ்சிறைக்கலுழனுஞ்சீறிச்
செருவிடையுடன்றுவரையொடுவரைபோர்செய்தெனவையகங்கலங்கக்
கருவரைசுழலவிருசுடர்திரியக்கடுஞ்சமம்புரிந்துழிக்கடுங்காற்
பொருசிறையடிக்கும்வரிநகப்புடைக்கும்போயினனுறுவலிபுயங்கன். (௬௮)

கூட்டியவலிசாய்ந்தகிபதிமேனுளெய்தருஞ்சாயமொன்றடைந்து
தோட்டிவாயுவணத்திறைபுகாயமுனைத்துறையினோர்மடுவினிற்கரந்தான்
கோட்டியமலர்த்தாளண்ணலங்கண்ணன்கொன்றையந்தீங்குழலிசைத்துக்
காட்டியபசும்புற்கறித்தவானிரைகள்கண்டனயமுனையின்மடுநீர். (௬௯)

புனல்விடாய்த்தயராவுகளுமான்கன்றும்புனிற்றினங்கோக்களும்பெருநீர்
மனவிடாய்தணியப்பருகலுமுயிர்போய்மறிந்தனவிலைசரூரிடப்பக்
கனைகடன்முகங்கிழியமத்தெறிந்தகண்ணனுங்காரிநீரென்று
அனையதுதெரிவானிறங்கலுமவனையணங்கராவளைந்ததையன்றே. (௫௦)

அரும்பெறற்சித்தியெட்டினுமகிமாவானதையுன்னினன்பெருகப்
பெரும்பொறியரவந்தளர்ந்ததுபிணிக்கப்பெற்றிலதாங்கவனணிமா
விரும்புகழ்ச்சித்தியெண்ணினன்சுருங்கியெறுழ்வலிவால்பிடித்திவர்ந்தான்
பரும்பொறிபரந்ததொள்ளைவெள்ளெயிற்றுப்பள்ளவாய்ப்பாந்தளின்றலைமேல்.

ஆயிரம்பகுவாயநந்தனிற்ப[illegible]ன்ருகியபடந்தொறுமுகைத்துத்
தாயினன்பவுரிபிடித்தனனடிப்பத்தலைதொறுந்தகர்ந்திழிசெந்நீர்
வாயிழிகளாநீரிரண்டினுமாலைவயங்கலவ்விரணியனுரம்போல்
போயினபடங்களமரர்கோவாகப்போரரியாகினன்புனிதன். (௫௨)

விரிந்தவாயரவத்திறைவனுமெலிந்தவிடுதிநீவிடுதியெய்யாமை
புரிந்தனெனினதுபுண்ணியநாறும்புனைகழல்பொறுத்தலாலுன்னைத்
தெரிந்தனென்மலர்த்தாள்பரித்தவனறையச்சிதைந்தநானின்னடியடிபீண்
டரிந்தமாவாற்றேனென்றலுமிழிந்தவண்ணலுமவனவாவறிந்தான். (௫௩)

கடுவெளிபுடைக்குமடுசிறைக்கலுழன்கதத்திறாற்றிறத்தைநீங்கியதும்
தொடுகடற்றுறந்தீண்டுற்றதுமுணர்ந்தேந்துதித்தநீயலமரேலுனக்குப்
படுவனபகர்தியெனமருதிடந்தபண்ணவனுரைத்தலுமென்பால்
விடுவதுவெகுளிதன்னையீண்டுண்டேல்வேண்டுவவுண்டெனக்களாந்தான். ()

கேழ்கிளர்கமலத்தடங்கணுயளியேன்கிளைஞரைப்பிழைத்தகாதரமும்
ஆழ்கடல்வரைப்பிற்கலுழனுக்குடையாவாற்றலுமெய்துமாறருள்கென்
றூழ்முறைபழிச்சவுலகொருங்கீன்றவுந்தியானுளமகிழ்பூத்துத்
தாழ்தடம்பணைசூழ்தோணியம்புரியிற்சதுமுகனுடியதலத்தில். (௫௫)

வரன்முறையாடிப்பிரமநாயகனைமஞ்சனமாட்டிநன்மலர்தூஉய்ப்
பரவினையெனினீவிழைந்தனவாதிபரம்பரனருளுவனென்று
அரவணைச்செல்வன்விடுப்பமற்றவனுமந்தணீர்ப்பொன்னிபுக்காடிப்
பிரமமாதடத்தின்மூழ்கியாளுடையபிஞ்ஞகன்றிருமுனமிறைஞ்சி. (௫௬)

குழகனைவேதக்கொழுந்தினைஞானக்கோதைநந்திருநிலையழகிக்
கழகனைமலர்மஞ்சனமுதற்பொருளாலருச்சனைவினைமுடித்தாதி
முழுமுதல்போற்றிமுக்கணபோற்றிமூவெயின்முருக்கியநுதற்கண்
மழுவலாபோற்றியிழுதையேனரந்தைமாற்றருள்போற்றியென்றிரந்தான். ()

இரந்துதாமரைத்தாள்வணங்கராவரசையிறைவனுமகிழ்ந்துநின்பூசை
நிரம்பினபெறுகோவரம்பலவென்னநின்மலாவெனமனச்செருக்கின்
அரக்கையுங்கிளையையுமிகழ்ந்தவினையுமஞ்சிறைக்கலுழனுக்குடையா
நிரந்தரவலியுநின்னடிப்புரியாநேயமுந்தருகெனநிமலன். (௫௮)

கூறியபலவுமளித்தனமம்பொற்கொடிமணிவீதியிங்ககர்க்குத்
தேறியநின்பேர்விளங்கவுமளித்தாந்திருமனைக்கிழத்தியரொடுநீ
ஈறளந்தறியாவளனொலாநகர்ந்துன்னிறுதியிலெம்முழைவருகென்
றுறுதாழ்வேணியந்தணனுமையோடாலயக்குறியிடையடைந்தான். (௫௯)

கொடிநிழல்கவித்தநெடுமனைமுகட்டிற்குடுமிமாமயிலணைந்தாடும்
ஒடிவறுவளஞ்சேர்தோணியம்புரியானுடையவன்விடைகொடுதான்வாழ்
கடிநகரெய்திவாளராவெவையுங்களிப்புறக்கலந்தனனிருந்து
பொடியணிபுயத்துப்புண்ணியன்கமலப்பொன்னடிநீழலிற்புகுந்தான். (௬௰)

கறையணற்பகுவாய்க்காளிதனாலுங்காழியம்புரியெனவொருபேர்
இறைகெழுஞாலத்திலங்கியதிதன்சீரேவரேதெரிவுறநோக்கி
அறைகுவரென்னவருட்கடன்பூண்டவறுதொழின்முனிவரருவப்ப
முறைதெரிவேதத்துறையறிசூதமுனிவரன்கனிவுறவுரைத்தான். (௬௧)

(௬-ஆவது ஸ்ரீகாளிபுரமானவத்தியாயம்முற்றிற்று ஆ௲ திருவிருத்தம்-௫௫௩.)

## ௭ - ஆவது. வெங்குருவானவத்தியாயம்.

பொன்றரும்புகழ்க்காழியம்புரியியல்போற்றி
மன்றமாநகர்வெங்குருப்பெயர்புணர்வரலை
வென்றிமாதவன்சவுனகர்க்குரைத்ததொல்விரிவில்
இன்றறிந்தவாறியம்புவாமொருவழியெடுத்தே. (௧)

வெறிமலர்க்கமலாலயன்பதியிடைமேனாள்
தெறுசினத்துவாளவுணர்வந்தடிதொழுஞ்செருக்கால்
உறுமனக்கொடுசென்றநாளயன்வெகுண்டொழிப்ப
மறுகிவீழ்ந்தனன்கிழக்குறப்பிருகுவின்மைந்தன். (௨)

தானவன்புகுந்துற்றதுஞ்சதுமுகன்றருக்கும்
மானவென்றிவேனிருதருக்குரைத்துவானவர்மேல்
தானையோடெழீஇவெஞ்சமந்தொடங்கியசமைந்தான்
ஆனகாலையின்மகதியாழ்முனிவனுண்டணைந்தான். (௩)

முனியையாதனத்திருத்திநல்விழுத்தகுமொழியால்
இனியகூறியகவிமுகநோக்கினனேழாய்
முனிவராட்சியைமுண்டகன்பதவியைநின்போல்
புனிதமில்லவரெய்துமாறெவ்வழிபுகலாய். (௪)

தெரிவைசெய்வினையாடவனெய்துறுந்தேயத்
தரியவல்வினைகாவலனெய்துமாணுக்கன்
புரியும்வல்வினைகுரவனெய்துறுமரோபுகலுன்
பரிவிலார்வினைபற்றினநின்னையும்பளிங்கெ-

கோறல்வல்லவர்கொழுந்தசைபூணினர்வலைவாய்ப்
பாறலம்புவெம்படையினர்தருமநூற்பழக்கம்
மாறன்மிக்கவரின்னவர்புன்மதிவளரத்
தேறல்செய்குருநீயெனினுன்னிலார்தீயார். (௬)

இழுக்கிலோர்பொருள்வெஃகியாறிரட்டியாண்
ஒழுக்கினாசிநூல்கட்கிமையுடற்குயிர்போலப்
பழுத்தபண்பிலாதவனுமப்பதகனுக்கொருசொல்
வழுத்தினானுமேநிரயமேற்பயிரெனவளர்வார். (௭)

குரவன்மேலவனாயினுங்குணமிழிசீத்தை
விரவுசீடனாய்விடினவன்கெடுவதுமெய்யே
உரியதெண்ணிலாவாயிடையும்பர்களுண்ணப்
பரியுமாரமுதங்கணத்துக்கவப்படிபோல் (௮)

ஒட்பமிக்கநீயுன்னுடையிழுக்கினாலோரெண்
கட்பிரானுலக்கன்றுகீழுற்றனைகவ்வேல்
விட்பசும்பிறைமிலைந்தவன்பூசையான்மேலோர்
உட்பதங்களுமுலவதிசீலனோடொத்தே. (௯)

என்றிரங்கியைம்பதத்தையுமருளியிவ்வண்டம்
பொன்றினுங்கெடாவொருபிரமாபுரிப்புனிதன்
றன்றிருப்பதம்பணிதியென்றளித்தனன்றணந்தான்
ஒன்றுமின்னிசைமகதியாழ்முனிவரனொருசார். (௧௦)

மகதிவல்லவனருள்கொடுமாடநீள்கொடிகள்
பகல்செய்வானவன்பரிக்கெதிர்வீசணிபரப்பும்
இகலில்காளியம்புரிபுகுந்திரணியகருப்பன்
புகரறுந்தடத்தீர்ம்புனலாடினன்புகரோன். (௧௧)

விரவுபற்பலகடன்முடித்தணிமணம்விரிக்கும்
வரமலர்ப்பிரானாட்டியதருநிழல்வதிந்த
பிரமநாயகனடிப்பராயருச்சனைபெருக்கி
அரவணிந்தவனயலவாசியினெயிலகத்துள். (௧௨)

தெய்வலிங்கமொன்றிருத்தியாராதனைதிறம்பா
தைவகைப்புலனடக்கியைம்பதத்தினாரமுதைப்
பொய்யிலாவுயிர்த்துணையைநாத்தழும்புறப்போற்றி
எய்யவாங்கணையளவையாமியத்திசையெய்தி. (௧௩)

நந்துலாந்திரைநளிதடமொன்றுதன்னாமத்
தைந்துகோணமிட்டணிகெழுகங்கையாதியநீர்ச்
சிந்துமான்மியமெவையுமுய்த்தாயிடைத்திருத்தி
இந்துசேகரன்றன்னையீரிடத்திலுமிறைஞ்சி. (௧௪)

பொறிபுலாதிகளவித்துமுக்குறும்பையும்புறங்கண்
டறிவிஞலறியீர்தறியறிவன்மாட்டறிவைப்
பிறிவறக்கலந்தூழ்சருகருந்தியும்பெருநாள்
எறியுமேல்வளிபருகியுந்தவம்புரியிவன்முன். (க௫)

பருதியாயிரங்கோடியிற்பாயொளிபரப்பிச்
சுருதிநாயகனுலகெலாந்தொகுத்தசிற்றுதரத்
தருமநாயகியொடுமெழுந்தருளலுந்தாழ்ந்தான்
அருவியென்பதோர்பொருளினையலர்விழிகாட்ட. (க௬)

தருமசுந்தரசச்சிதானந்தபாண்டரங்க
பெருமபிஞ்ஞகபிரளயவிடங்கவென்றேத்தி
இருபதம்பணிந்துருகியபிருகுவையெம்மான
ஒருவராற்றுருவருந்தவமகிழ்ந்தனமொழிவாய். (க௭)

விழைந்தவென்னெனவெண்ணிலாவமுதொளிவிரிக்குங்
குழைந்தவெண்பிறைக்கண்ணியாய்தயித்தியகுருவாம்
பழங்கணீக்குறுபவுத்திரப்படிவமுநின்பால்
அழுங்கல்செய்கலாவார்வமுந்தருகெனவமலன். (க௮)

நம்பியிந்நகர்வியப்பறிந்தெமைப்பணிநலத்தால்
உம்பர்தேசிகன்சமத்துவம்பெறுதியென்றுதவி
வெம்புறுதநன்மிருதசஞ்சீவனவிஞ்ஞை
எம்பிரானவன்பெறும்வகையுதவினனெழுந்தான். (க௯)

தன்னுடைப்பெயரிலிங்கமுடெம்பிரான்சாரப்
பொன்னுடைத்தவமெய்தியகவியும்விண்போனன்
அன்னவன்பெருந்தடத்தினிலன்னவன்றினத்தின்
முன்னியாடுநர்கனவினும்வறுமைநோய்முன்னூர். (௨௦)

தலையிற்கோமயவறுகொடுவெள்ளிநாட்சார்ந்து
துலையிலாடுநர்தொலைவிலாவினையெலாந்தொலைவார்
அலைவளாகமேலிருசுடர்நிலையுநாளளவும்
நிலையுமேதருபுகழொடுநிலவுவர்நெடுநாள். (௨௧)

தலையுவாவிலித்தடம்படிந்தருங்கடன்சமைத்தோர்
அலைவிறென்புலத்தவரொடுங்கயிலைவிட்டகலார்
கொலையும்வாள்விழிப்பிணிகுருப்பிணிமுதற்பிணியால்
மலைவிலாரொருதினமதிற்படியினுமாதோ. (௨௨)

விருப்பினுற்றயித்தியகுருப்பணியவெங்குருவாம்
இருக்குமிந்நகரன்றியுமொருமையேறுகைக்கும்
ஒருத்தனுலும்வெங்குருப்பெயரிப்பதிக்குற்ற
விருத்திதன்னையுங்கேண்மெனமுனிவரன்விரிப்பான். (௨௩)

வேறு.

ஆறுடுஞ்சடைமுதல்வனருளாணைத்திறநாடியறியாறெடடைக்
கூறுடுநிரயமிசைக்குமைந்தாடுநரகரெல்லாங்குழுமிமேனாள்
நீறுடிநெய்மிதந்துமுடைநாறிப்புடைதோறுநிணச்சேறுடிப்
பாறுடுமூவிலைவேல்பரித்தாடுமெறலியடப்பரித்தார்மன்னோ. (௨௪)

அரும்பெறல்யாக்கையைவளைவானயலவன்கைத்தீட்டாணியதனைப்பற்றி
வருந்தியுறவளையாமுனிழந்ததெனவிழுந்துகடுமறலியூர்போய்த்
திருந்துமனையெரிகதுவத்தணிக்குமருங்கூவன்முன்னைசெய்காலாற்று
திருந்தழுவாரெனநிரயத்திருந்தழுவார்மறலிதன்னையினையசொன்னார். (௨௫)

மூவாவின்னமுதருந்தித்துறக்கமிசையரமகளிர்முகிழ்மென்கொங்கை
ஓவாதுபுல்லூருமண்ணகத்திற்பலபோகமுறுகின்றாரும்
தாவாயின்னணமிருப்பவெம்முழையினின்கிளைஞர்தண்டஞ்செய்ய
ஆவாவிங்ஙனமாற்றேந்தறுகண்ணாவென்செய்கேமளியேமென்றார். (௨௬)

சமிக்கரியமுள்ளறைந்துமூசிமிசைச்சவட்டியுஞ்செந்தழல்வாய்ப்பெய்தும்
உமிழ்தழலூட்டியுங்கூடத்தோச்சியும்வாய்ச்சிகளாடியொறுத்தும்வேறாய்த்
துமித்ததுணிகூட்டியும்வெம்புழுக்களொடுகழுக்களிடைசோரச்சோர
அமிழ்த்தியுமிவ்விருத்தியிலேவிளிவற்றாயெவரிடத்துமளியற்றாயால். (௨௭)

ஒருத்தரின்முன்றொருத்தரிவ்வாறரற்றியபேரோதைவளியுயிர்க்கநூறு
துருத்தியழல்பொருத்தியசெஞ்சுடர்ப்படையாற்செவித்தொளையைத்தொளைத்
தாற்போன்று,கருத்திளகிக்கண்பனிப்பக்கையறவுமீதூரக்கவன்றகூற்றன்[றே.
பெருத்தவினைத்தொடரறியாதுளைக்கினுமிவ்வுளையெனக்கோர்பிழையாமன்

நல்வினையின்பயனுகரந்நாளிலெலனையுன்னினரோநன்மைநீங்கி
அல்வினையின்பயனுகரச்சுளித்தனராலவரவரவறிவைநீக்கித்
தொல்வினையின்றொடரறியுமறிவையறிவுறுத்தும்வழிதொடுப்பலென்று
வெல்வினையின்முடைத்தருமனடநபிரமாபுரம்பணியமேவினானால். (௨௮)

கண்ணடருங்கழைக்கரும்புதுவைத்திழிசாறெரித்தபுகைக்கருங்காரென்று
அண்ணலங்கட்சிறைமயில்களாலுமலர்ச்சோலைகளுமகன்றுவேதப்
பண்ணலங்கொள்பழம்பாடன்முனிவர்பணிசினகரத்திற்பதுமத்தண்ணல்
எண்ணலஞ்சேர்தடமூழ்கிப்பிரமேசன்றிருமுனம்வீழ்ந்திறைஞ்சியேத்தி. ()

கருநீர்மையறவெறியுந்திருமூலப்பரஞ்சுடரிற்கனிவாலந்தண்
பெருநீர்மஞ்சனமாட்டியருச்சனையின்றுறைமுடித்துப்பிறழுந்தீபத்
திருவாராதனையாற்றியாணர்முகைவிரிந்ததடஞ்சினையதெய்வத்
தருவாருநாண்மலர்தூஉய்த்தடக்கைமுகிழ்த்தேத்திசைத்தான்றருமமூர்த்தி.

வேறு.

அந்தமறைகாணாதாதியிடையீறிகந்த
சுந்தரமாய்நின்றிலங்குதோணிநிலைபோற்றி
தோணிநிலையூர்ந்துசலவுங்கடல்புதைத்த
பாணிநிலைகண்டபகவாநின்றாள்போற்றி. (௧௨

சாயைமறைகாணாத்தாவாவிழுப்பொருளாய்
மாயமயத்தேர்ணியின்மேல்வந்தநிலைபோற்றி
வந்தநிலையான்மலரோன்முதலெவர்க்கும்
பந்தமறுத்தாளும்பகவாநின்றாள்போற்றி. (௧௩)

கவ்வைமறைகாணாதகாரணாதீதமுமாய்த்
தெய்வமலிதோணிவருந்தேவாநின்றாள்போற்றி
தேவாதிதேவாய்ச்சிவகுருவாயெவ்வுயிர்க்கும்
பாவாதிமாற்றும்பகவாநின்றாள்போற்றி. (௧௪)

வேறு.

படரகலவுருகியின்னபலதுதிகளெடுத்தேத்திப்பணிந்தசெங்கோற்
கடவுண்முனமடலேற்றிற்கயிலைமிசையிவர்ந்ததெனக்கதிர்வேலுண்ணின்
மடவரலோடெழுந்தருளிமறலியுளமகிழ்பூப்பமைந்தாவின்றுன்
இடரகலவிழைந்தபணிமகிழ்ந்தனநீவிழைந்தனகேளெனவெங்கூற்றன். (௧௫)

புண்ணியநின்னடிக்கமலப்போதினிலென்னுளக்கமலம்புனைதல்வேண்டும்
கண்ணிநிரயத்துயிர்களைநோக்கியினையாமற்காத்தல்வேண்டும்
அண்ணுமிருவினைத்தொடரினிருபயனுமவ்வவுயிரறிதல்வேண்டும்
நண்ணியமாநகரிதற்குநின்னடியேன்பேரேறநல்கவேண்டும். (௧௬)

நடுவணிவையிசைத்திரப்பவடுவெகிரினெடியவிழிநாரிபாகன்
கடுவினையின்பயனுயிர்களறியுமறிவளித்தனநீகவலேல்கண்ணில்
படுவனகண்ணினையறியாதாடியெதிர்விழித்தறியும்படிபோலுன்றன்
நெடுமுகநோக்கியவளவேயவரவர்தந்தீவினையைநினைந்துநொந்தே. (௧௭)

இருவினையுமுத்திபுகற்கிடர்வினையாமுயிர்களிவையிகப்பவேண்டி
ஒருவினையைத்துறக்கமிசையுய்த்தகல்வித்திடினுமரோவொன்றையுன்கை
தருவினையானிரயமிசைசவட்டியொழித்திடுமாமித்தகைமைத்தால்வெங்
குருவெனப்பேர்புணர்ந்தனைநீபணிந்தமையாலிந்நகர்வெங்குருவாமன்றே.

பொன்பழுத்தமணித்திதலைப்பொறிபழுத்தபுளகமுலைப்பூவைபாகன்
அன்பழுத்துமறமகற்கிவ்வருள்பழுத்துவிழுந்துளியினகத்துப்புக்கான்
பின்பழிச்சியொருதருமன்றன்பதத்தினினிதிருக்கப்பெற்றானென்றும்
முன்பழிச்சுமுனிவரர்க்குமுறைபழிச்சினன்கலைகண்முழுதும்வல்லான். (௧௯)

(எ-ஆவது வெங்குருவானவத்தியாயம் முற்றிற்று ஆ திருவிருத்தம் ௫௧௨.)

## அ - ஆவது. | காகவிமோசனமானவத்தியாயம்.

மங்கலம்பொலியுமிந்நகர்க்குமாண்டகு
வெங்குருப்பெயரியல்விரித்துவெங்கொடி
இங்கிதிலுயர்ந்ததுமிசைப்பலென்றருட்
புங்கவன்புகன்றதுபுகலுவாமரோ. (௧)

முச்சகமிசைநிலாமுயங்கமுன்னைநாள்
எச்சமிலிந்திரதிருவுமெய்தினான்
அச்சமிலடல்விகடாங்கன்கன்னியர்
குச்சமென்புவிப்பொறைகொண்டதோளினான். (௨)

தெறுகலியிருள்கெடத்தெண்ணிலாவுமிழ்
நெறிமதிக்கவிகையினிவந்தகாட்சியான்
துறுவலியொன்னலர்துதைந்தசேகரப்
பொறிமுடியுழுதெழும்பொன்னந்தோளினான். (௩)

சுகமழையுய்த்தவானவர்க்குத்தூமமென்
மகமழையுய்ப்பவன்வாரிநீத்தநீர்
அகனுறுகயலெனவவனித்தொல்லுயிர்
சுகனுறமனுநெறிதுலங்குங்கோலினான் (௪)

பொறையினிலிரும்புவிபொற்பின்வேனில்வேள்
கறையறுநயனுடைக்கல்விக்கெல்லைநூல்
முறையினிலறமகன்முரணுந்தெவ்வர்கைத்
தெறைவணாமீதுலாஞ்சினவெள்ளேறனான். (௫)

பொன்னடிமருவலர்புகழ்ச்சிபாவலர்
அன்னசீர்மறையவராணைநீணிலந்
தன்னருளாதுலாசாற்றுமுப்பொறி
முன்னவன்றமர்கொளமுறைமைசெய்யுநாள். (௬)

ஆழியொன்றுருட்டிநீடவனிமங்கையை
வாழிரும்புகழ்ப்படாம்வளைந்தகோமகன்
ஊழொளிமாப்படுத்துலவுவேட்டமேல்
ஏழுயர்களிற்றினனெழுந்துசென்றனன். (௭)

வலைஞருமண்டமர்கடந்தமள்ளரும்
கொலைஞருமறவருங்கூர்ம்பன்ஞாளியும்
மலைமுரிகடலெனவாரத்தானையும்
இலையயின்மன்னருமியைந்துசூழ்வர. (௮)

மொய்யுறுவெரிநிடைமுகந்தகூன்சிலை
எய்யுறுகணைக்குமுன்னெய்துகூர்ந்தலம்
கொய்யுளைப்பரியிவர்குமரன்சேனையால்
மய்யன்மாவுழிதருவனத்தைமுற்றினான். (௯)

தலைத்தலையெறிவலைவிசிறித்தானையை
நிலைத்தலைநிறுவிவேலெறிந்துநீனெயி
றுலைத்தலைஞாளியினுரப்பிப்பல்லியம்
சிலைத்தலும்விலங்குகடிரண்மொண்டவே. (௰)

கார்க்கடமுதுகடல்கறைகள்வைகறை
வார்ப்படைகில்லியர்மாமந்தேகர்வெம்
போர்க்கணைகதிர்களாப்புரவியொன்றுவா
பார்க்கிறையிருளடுபதங்கன்போலுமால். (௧௧)

அவையிலோர்கேழல்கையகலமன்னவன்
கவையறுகவிழ்குரக்கலினமாணிழிந்
தெவருநின்றலமரவெண்ணில்காவதம்
நவையறுகருங்கழனுலவோடினான். (௧௨)

பெருந்தகைமற்றதைப்பிழைப்பில்வேல்கொடு
தெரிந்துயிர்கொண்டனன்சேனைவேறுவே
றிரிந்தனவுச்சிவாயிறையென்றாழ்படக்
கிரிந்தனனடுபசிகனற்றவெம்பினான். (௧௩)

பொருபசியகஞ்சுடப்புறத்தென்றாழ்சுடக்
கருதியதனிமகன்கண்ணுற்றானுயிர்
வெருவரானடையினன்விமலன்வெள்ளிநூல்
மருமன்மேதாதிதிமடத்தினெண்புகை. (௧௪)

துருவியாண்டேகலுந்தோமின்மாதவன்
திருமுகங்கையினின்மலர்த்திச்செல்வனை
வருதியென்றரும்பெறல்வாழிகூறினான்
குருசிலும்வரன்முறைகூறினனரோ. (௧௫)

செங்களம்புனம்படத்திரிந்துநால்வகை
அங்கமுமென்பெயரடையயானொரு
வெங்கருங்கேழல்பின்மேவிநுன்னுழைத்
தங்கவந்தனன்பசிதணிப்பவெண்ணியே. (௧௬)

அறைழலரசரேறனையகூறநான்
மறைவலானென்றவமாண்டதிவ்வுழி
உறைதியென்னிறந்துளோர்க்கூட்டும்வேள்வியின்
துறைமுடித்துன்பசிதுடைப்பலென்றனன். (௧௭)

துடைப்பதுபசியெனிற்றுண்ணென்றின்னுணாப்
படைத்தருள்பின்னெனல்பரந்தவாரழல்
உடைப்புறுமுறையுளாங்கொருவிவேறொரு
புடைச்சிறுதுச்சிலைப்போற்றல்போன்றதே. (௧௮)

துலைமணிநாவெனத்துலங்குகோன்மையால்
மலர்தலையுலகருண்மதலைகேட்டியால்
புலனுறுமறையவர்ப்போக்கியேனைய
குலனுளுங்கான்மகங்குறையுமுண்மையே. (௧௯)

ஒழுக்கமும்வழக்கமுமோங்குதண்டமும்
வழுக்கறநாடினைவழக்கொழுக்கினால்
இழுக்கினார்தமைத்தெறுமெந்தைக்கிச்செயல்
வழுக்கெனமுனிசொலமன்னன்சீறியே. (௨௦)

புழுங்கியெய்துழையளைப்புகுத்திவெண்பலி
உழந்திடுகருணைநல்லோசைமென்றுவை
அழுங்குறவவ்வியுண்டரசுதேக்கெறிந்
தெழுந்தனன்முனிவெகுண்டினையசொல்லினான். (௨௧)

அருங்கடிமனைபுகுந்தயின்றவேள்வியை
முருங்கினைபலியினமுகர்ந்தகாக்கையின்
இருங்கடிநகர்புகாதெரிவெங்கானிடைக்
கருங்கொடியாகெனக்கழறிநீக்கினான். (௨௨)

முனைவனல்கியமுரட்சாபமூண்டுவெங்
கனையிருட்காரியாய்க்கவிகைக்காவலன்
துனைவினாலுழன்றனனென்னிற்றூயவர்
இனையறுதவவலிக்கேற்றம்யாவதே. (௨௩)

ஆய்பதனுண்டிபோயலறுகாகமாய்ப்
பூபனும்பன்னிருவருடம்போயபின்
மாபதன்கோதமனென்றமாசறு
தாபதனுறைதவச்சாலைநண்ணினான். (௨௪)

நண்ணலுமழல்வினைநடத்திநண்பகல்
பண்ணுறுபலியிடுபகவன்கண்டனன்
விண்ணிமிர்சிறையொடும்வெடித்தவார்ப்பொடும்
கண்ணுழல்காரலகார்வெங்காக்கையை. (௨௫)

மேலதனியற்கையும்வேட்டமேயதும்
சீலமாமுனிவரன்செய்தசாபமும்
சாலையினிடைந்ததுந்தன்னுட்கண்டனன்
காலமூன்றையுமுணர்கடவுண்மாதவன். (௨௬)

முனிவனைக்காண்டலுமுன்னராக்கமும்
துனிபடுமிவ்வுருத்தொடர்ந்தவாற்றையும்
நனியுணர்ந்திறைமகன்ஞானவாரியை
இனியெனக்கருளெனவிரங்கியேத்தினான். (௨௭)

பேமுறுமொருகரும்பிள்ளைவேந்திவை
ஏமுறவுரைத்தலுமிதயத்தெண்ணினான்
நாமுறுமுனிபழிநலியவாழியான்
தோமறுத்துயரியதொல்லைக்காழியை. (௨௮)

வார்ந்தகாவிரிமுதலிறுதிமாதலம்
ஓர்ந்தனமவநீறின்மிக்குபயவாளியிற்
கூர்ந்தநூற்கும்பனுந்தானுங்கோட்டிய
ஈர்ந்தடத்தினிலிரண்டிலிங்கமுள்ளதை. (௨௯)

ஆலுமாமறையவர்ப்பிழைத்தலாதியும்
சாலநூறியவிதிதடங்குலாயதைக்
காலுலாந்திசையின்முக்கணையினெம்பிரான்
வேலினூற்றியதடம்விளங்கநின்றதை. (௩௦)

கருதுபுமன்னவகவலன்மாகநாள்
மருவியதெம்மொடும்வருதிநின்னுடை
ஒருவிழிப்பவமின்னேயொழிப்பமென்றுகொண்
டருண்மலிபொன்னிபுக்காடிமேலவன். (௩௧)

வேறு.

சேட்டிளஞ்செவ்விவாய்ந்ததிண்கழைகுதட்டுமேதி
பாட்டிளந்தும்பிபாடப்பரிசிலர்க்குதவுவாரிற்
காட்டிமாமருதநீழற்கண்முகிழ்த்துறங்குமந்தண்
கோட்டநீள்காழிமூதூர்க்கொடிமதிட்கோயில்புக்கான். (௩௨)

மாகநீர்ப்படிந்தமேனிவனசநீர்த்தடத்திலாட்டி
நாகநீர்வேணியெந்தைநற்பதம்பரவிச்சூலத்
தேகநீர்த்தடத்துமாடியிரும்புனறெளிப்பவெங்கட்
காகநீருருவமாறிக்காவலன்பொலிந்தான்மாதோ. (௩௩)

சிறுவரையடைந்தமாசுதெண்டிரையணையநீர்மை
உறுவரையடைந்தாற்றீர்வதுண்மையேயிவணிந்நீரின்
மருவனாயொருவனுடிவருடமீராறுநீங்காப்
பெருவரையனையமாசைப்பிரிந்தனன்றெறித்தநீரால். (௩௪)

பின்னெடுங்குணக்குன்றன்னபெருமுனியிறும்பூதெய்தி
அந்நெடுந்தகைக்கோரைந்துபதத்தையுமளிப்பவன்றன்
முன்னெடுஞ்சாபமீந்தமுனிவரன்வேள்விமுற்றித்
தன்னெடுந்துயர்விண்டென்னத்தன்றுயர்விண்டான்வேந்தன். (௩௫)

முத்தலைத்தடம்புக்காட்டிமூரட்டடங்கரையினூடே
பைத்தலையரவவேணிப்பரமனைநிறுவிப்போற்றிப்
பித்தலைத்தென்னையாண்டபிரமநாதனையும்வாசத்
தொத்தலைத்தருமென்கூந்தற்சுந்தரிதனையும்போற்றி. (௩௬)

ஆனமுதைந்துஞ்சேதாவளிநறும்பாலுந்தேனும்
ஏனவுமாட்டிப்பன்மாமலர்களேஉயிமயமீன்ற
பானலங்கண்ணியோடுபணிந்துகூக்குமம்பகர்ந்த
மாநலங்கொண்டெம்மாற்குமணமுருகாற்றினானே (௩௭)

சந்ததம்விழவுகாணத்தரும்பொருள்கோடிநல்கி
நந்தியூர்பகவன்கோயினற்பணிபழுதுபோக்கி
மைந்துறவிரித்துதாவாவல்லிருட்பிழம்புசீக்கும்
செந்தழல்விரிக்குஞ்சோதித்தெய்வதமணியொன்றீந்தான். (௩௮)

நிருமலபோற்றிகுன்றாநித்தியபோற்றிஞானக்
குருபரபோற்றியொற்றைக்குழைவலாய்போற்றிமேனாள்
அருமுனையாழியான்மாலலர்விழிகவர்ந்துதெண்ணீர்
இருமணிச்சூலத்தாலென்னிருவிழியளித்தாய்போற்றி. (௩௯)

போற்றியென்றமலன்காழிப்புண்ணியனிச்சைபூண்டு
சீற்றமேவரீந்ததெய்வமுனியையும்பணிந்துசெவ்வே
தூற்றுசீர்முகில்பெறுதசெங்கெலிற்றுவண்டுகெண்கள்
நாற்றிசைபரப்புந்தொல்லைநகர்வயினடைந்தான்மன்னோ. (௪0)

பின்னிருகூர்ந்தனல்லார்பெருங்களியமுதமாந்தித்
தென்னிசைவளர்த்துத்தெவ்வர்சேண்முடிபணித்துநேமி
இந்நிலத்தோச்சிமேலுமிறுதியினிறுதியில்லான்
பொன்னடிநீழல்புக்கான்பொருந்தலர்க்கடந்தவேலான். (௪௧)

காகமோசனமாமின்னகாரியம்புரத்தியாரேனும்
ஏகநாளொருநாள்யாமங்கண்மனைக்கணமிருந்தோர்
நாகமாலிகையான்றொல்லைநல்லுலகடைவதல்லால்
போகபூமியினும்போய்ச்சார்ந்தடைவரோபுகலினம்மா. (௪௨)

மெய்ப்படுமெண்ணெயெள்ளும்வெண்ணெய்தீம்பாலுங்கட்டி
துப்படுசாறுமூரற்றொகுதிநல்லனவுமாகா
அப்பரிசறத்தாற்காளிபுரத்தவதரித்துளாரும்
ஒப்பிலியாவரல்லாலுற்பவத்தினராகாரே. (௪௩)

பன்னியகாகநீங்கிமறுபவம்படைத்தலாலே
பொன்னிசூழந்தண்காழிபுனர்சன்மபுரமென்றோர்பேர்
மன்னியதென்றுனெண்ணின்மறைபலவடித்தகேள்வி
துன்னியமுனிவன்றனைத்தொழுமுடிமுனிவன்றனே. (௪௪)

(அ-ஆவது. காகவிமோசனமானவத்தியாயம் முற்றிற்று.
ஆக திருவிருத்தம் - ௬௩௬.)

## ௯-ஆவது. புகலியானவத்தியாயம்.

விண்ணியலுருவக்காரிவேற்றுருவமைந்துதோணி
நண்ணியவொருவன்றனைநண்ணியதுணைத்தமேலோன்
புண்ணியப்புகலியாயபொருளையுந்தெரித்தவாறே
*கண்ணியவறிவுகொண்டுகெழறுவான்கருதினேனால். (௧)

அறந்தலைபணிப்பநீதியரசுகோல்கோடநீண்ட
மீறந்தலையெடுப்பநான்குவருணமுமருண்டுதத்தம்
திறந்தலைகலங்கமாதர்செயிரறுகற்புநீங்கி
இறந்தலைபடப்பொல்லாதவிருட்கலிபரந்துமேனாள். (உ)

பரந்தவன்கலிப்புத்தேளைப்படிறுடைக்குறளைநூலின்
அரந்தைமந்திரத்தாற்பல்லோரழுகணீராட்டியெள்ளிச்
சுரந்தபொன்மலரிற்பேதைக்கோயிலுட்சூட்டிக்காம
நிரம்பமுதருத்திப்பூசைநீணிலமன்னனாற்ற. (ங)

மானநூன்மறையோர்யோகமகளிராலவிந்தவேறு
தானமெண்ணிலவேட்டங்கைத்தழலும்வீறழிந்தவாக்கில்
ஆனபொய்யுரையால்வாழ்த்துமாசிகளவிந்தபல்லோர்
போனகம்பயில்வால்வேதம்போற்றலுமவிந்தமாதோ. (ச)

தொழுகுலத்தவர்மாழாப்பச்சுருதிநூற்றுறைகள்யாவும்
இழிகுலத்தவன்விரிக்குமிறையில்லைவினைகளில்லை
முழுவதுந்தானேயென்றுமொழிந்துமுற்றுணர்ந்தார்போல
இழுதைகளொடுசெம்மாக்குமிகம்பரமில்லையென்றே. (ரு)

அரிவைதன்கொழுநன்கேட்பவாய்மதியுறுத்துமன்னான்
தெரிவிலவதற்குமைந்தன்றெருட்டுறுந்தெருட்டுங்காலை
உரியதன்றெனமறுத்தாலுணர்விலியஞ்ஞையின்னும்
பிரிவிலன்மருந்திற்றீராப்பித்தனென்றெள்ளுமாங்கே. (சு)

மறப்பதுகுரவன்வாய்மைமடுத்தினிதுண்பவேரி
துறப்பதுபெரியோர்கேண்மைதொடங்குவவிடும்பைசூது
சிறப்பதுகயமைச்சூழ்ச்சிசெய்வதுகாமப்பைங்கூழ்
இறப்பதுகடவுட்பூசையிசைப்பதுபுலனில்கோட்டி. (எ)

வற்புறுமகங்கடேய்ந்துமழைவளஞ்சுருங்கிமாதர்
கற்பிகந்தான்பாலஃகிக்காசினிபொய்த்துத்தேயம்
பொற்பழிந்தொழுக்கமாறிப்பொய்கொலைகளவுகாமம்
பற்பலகளியாட்டாடப்படர்கலியாடுமந்நாள். (அ)

புறக்கொடுங்களைகண்மொய்ப்பபுலம்புறுபைங்கூழ்போன்று
திறப்படுமுலகமெங்குஞ்செறிகலிபுதைப்பநோக்கி
இறப்பருந்துயராலோர்சாரிருந்துதன்னிலம்பாடுன்னி
அறப்பெருங்கடவுளுள்ளத்தாரனாரெய்தினானே. (கூ)

ஆடகக்கொடிமென்சாயலன்னையோடமர்ந்தஞான
நாடகக்கொழுந்தைவெள்ளிநகத்திடைப்பரவிப்போந்த
மாடகப்பருதிபற்றன்மகதியாழ்முனிவனந்த
நீடகங்குழையாநின்றதருமனைநெறியிற்கண்டான். (க0)

என்கொலோதருமப்புத்தேளீண்டிருந்தனைநின்சோதி
மின்குலாமேனிவாடிமெலிந்தனையிளவெண்மூரல்
உன்குலாமுகத்திற்காணேமுற்றதுசொற்றியென்ன
நன்குலாந்தருமச்செல்வனுணியீதுரைக்குமன்றே. (௧௧)

முன்னுகந்தனினான்காய்மொழிந்தபின்னுகத்தின்மூன்றாய்ப்
பின்னுகமதிலிரண்டாய்ப்பிறழுமிக்கலியிலொன்றாய்ப்
பன்னியவறங்களின்னபாங்கிலேதாழத்தாழ்ந்து
மன்னியதாள்கடேய்ந்துவருந்தினேன்வருந்தினேனால். (௧௨)

கலியிடைச்சுருங்கியொற்றைக்கால்கொடுதிரிகலாற்றேன்
வலியுடைத்தாளோர்நான்கும்வரும்வழியருளுகென்ன
மெலிவினையறிந்ததெய்வவீணையங்கிழவனீண்டே
நலியலைதருமவென்றுநகைமுகமலரச்சொன்னான். (௧௩)

களித்தபுள்விலங்குதம்மிற்கனிவுகூர்ந்தின்றதாய்தம்
அளித்தலைப்பிரிந்தஞான்றேயயலெனத்திரியுமாபோல்
சுளித்தலையில்லோயுன்னைத்தோய்ந்தநாளுன்னுள்பொச்சாந்
தொளித்தநாள்கலிநாளல்லாலுன்னில்வேறுண்டோகூறாய். (௧௪)

பொன்வலிகாட்டும்வேணிப்புண்ணியனுளத்துவந்தாய்
நின்வலிநீயுங்காணாய்நிகழ்த்துமுன்னுகத்திற்குன்றா
மன்வலித்தவமாசாரம்வளருண்மெய்ம்மைமல்க
உன்னுடைநான்குதாளாயுற்றனநினக்குவேந்தே. (௧௫)

அதுவழியுகத்தாசாரமருண்மெய்ம்மைமூன்றுமோங்கக்
கதுவுபொற்றாளோர்மூன்றிற்கவின்றனைமற்றையூழி
பொதுவுடைக்கருணைமெய்ம்மைபொலிந்திடத்துணைத்தாள்பெற்றாய்
மூதுகலிமடங்கன்மெய்யேமுயங்கவோர்தாள்பெற்றாயால். (௧௬)

மெய்யொன்றேநின்றவாற்றால்விரிசுடரிரண்டுஞ்செல்ல
மய்யொன்றுபுணரிநிற்கமன்பதைமலைந்துதம்முள்
பொய்யொன்றுமுள்ளந்தேறப்புகன்றுசூளறவுகாணக்
கய்யொன்றுமழல்சான்றாகக்கண்ணுவபலவுங்கண்டாய். (௧௭)

ஆதலினொருதாளுற்றாயணுக்கள்செய்வினைக்கீடாக
மாதொருபாகன்றந்தவகுப்பலாற்கலிவேறொன்றோ
நீதுயருறுவாயல்லைநிகழ்ந்துளபரதகண்டத்
தோதுதென்றிசையிற்பொன்னியுத்தரதிசையினூடே. (௧௮)

வாரடமிடைந்தகொங்கைமடநலாரோடும்வைவேல்
சூரடமெலிந்தவிண்ணோர்துதைந்தனர்புகலான்மூதூர்
ஏரடர்புகலியென்றேயிலங்கியதிறுதிவேலை
நீரடவிழியாதொன்றிநின்றதுநீயுங்காண்டி. (௧௯)

அனையதிலெம்மானோர்மூன்றருளுருப்புணர்ந்தான்றன்னை
நினைமலர்கொடுதூஉய்ப்போற்றிநான்குறுதாளும்பெற்று
வினையறவிலங்குகென்றுவிடுத்தலும்வீணைச்செல்வன்
புனைகழலிறைஞ்சிப்போந்தான்புண்ணியவுருவத்தோன்றல். (உ0)

வேறு.

தருமாதிதருந்தருமத்தொருவன்
திருமாதுறைசெம்பியநாடணுகிப்
பெருவால்வளைவீசுபெருந்துறைநீர்
வருகாவிரியாடினன்மாடுறவே.

வடபான்மயில்வால்சிறைவீசியகால்
அடல்வேல்விழியார்மணியூசலசைந்
திடனுடவுலாதருதண்டலைசூழ்
இடனார்பிரமாபுரமெய்தினனால்.

பொன்னாரெயின்மூற்றியபொற்றளிவாழ்
தன்னேரிலிதாடொழுதாய்மறையோன்
முன்னாடுதடத்தினின்மூழ்கியதன்
பின்னாதனருச்சனைபெட்புறவே. (உ௩)

வழிபாடுவழாதுமுடித்தயலே
மொழிதாருவினீழலின்மூக்கணனைப்
பழிபோயதனுமமுறப்பயில்வித்
தொழியாதிருதானமுமுண்மையினால். (உ௪)

வந்தித்துவணங்கினன்மாவருடம்
பந்தித்தொருநூறுளர்கால்பருகிச்
சந்தித்ததவந்தருமன்செயலால்
அந்திப்பிறைவேணியனவ்வழியே. (உ௫)

மூகிலூர்குழன்மின்னொடுமூவிலையார்
இகல்வேலொடுமெய்தலுமீரடிமேல்
அகலாதவருத்திகொடாய்மலர்தூஉய்ப்
புகவீழ்ந்துபுகழ்ந்துபணிந்தனனால். (உ௬)

பணிகின்றவன்மேனிகளைப்பணிதோய்
அணிசெங்கையினீவியருந்தவநீ
தணியெவ்வரமுந்தருதுந்தருமா
பணியென்றபணித்தொடையானெதிரே. (உ௭)

உன்மாணடியுள்ளமிருந்ததெனா
என்மாமுதுகெய்தவுமீரிருதாட்
சொன்மாவலிகொண்டுசுமக்கவுமுன்
பொன்மால்விடைபோல்வலியுந்தருவாய். (உ௮)

அடையாறு சென்னை-20.

என்றின்னவிரந்தவரம்பலவும்
பொன்றுன்னுபொலன்சடையானுதவி
என்றுந்தனியேயுருவாயுறைகென்
றென்றுங்கரமுச்சியில்வைத்தறைவான். (௨௯)

செம்மாமறையுஞ்சிவகண்டிகையும்
மெய்ம்மானவெண்ணீறுமொராம்பதமும்
இம்மானுடைநின்றொடுமைந்திவையே
எம்மோடொருதன்மையவென்றறிநீ. (௩0)

வேறொன்றும்விளம்பலமெய்விரதன்
நீறும்பதமைந்துநிறைத்துளவன்
ஏறுமபொறையன்பிறனிற்கவரான்
வீறுஞ்சிவபூசைகள்மேவுழியும். (௩௧)

அரசோடுதுழாயணிகூவிளமா
னிரைவேதநெடுந்தளிசந்தமடம்
முறைநூல்விரிவேள்வியுளூற்றுழியும்
வரையாதுவதிந்துவிளங்குகநீ. (௩௨)

நீயேவநெடுந்தவமாமவையே
நாமேவுவநம்மருள்கொண்டுலகம்
தாமேவவிளங்குமரோதகையால்
யாமேவுலகெங்குநிறைந்தமையால். (௩௩)

இவணீசெயுமிலிங்கமிதைப்பணிவார்
பவமாறுகபாய்பரிமேதபலன்
துவமோடினிதெய்துகதூயொளிவிட்
டவராளுகநங்கயிலாயமதே. (௩௪)

பொருமாடைபுனைந்தவர்யாவருணன்
திருமேவுகசெய்வழிபாடுடையார்
ஒருகோடிமகப்பலனுற்றுமணந்
தருமாதியினெய்துகசந்ததமே. (௩௫)

வெடிசந்தமிழைப்பவர்மிக்கமகம்
படியொன்றுபவுண்டரிகம்பெறுக
நொடியிங்ஙனிருப்பினுநோதகவற்
றடியந்தமிலாவுலகாளுகவே. (௩௬)

நடநாதனிவ்வாறருணல்கியுகந்
தடலேறுருவானவன்மாமுதுகில்
படநாகணையான்விழிபற்றியநீள்
மடலார்வனசங்களைவைத்தனனால். (௩௭)

இடையிற்கொடியோடிணிதேறியபொற்
சடைமுத்தன்ருட்கொடுதன்னுருவோர்
விடைபெற்றவன்மேலும்விடாவிடையேற்
றடையத்தனரும்பதமுற்றனனால். (௩அ)

பரிவார்தருமன்பணிபண்ணவனும்
தெரியாநிலைசென்றனனென்றுலவா
விரிவார்முதுவேதவியாதனருட்
பிரியாமுனிபேசினன்மாசறவே. (௩௯)

(௯-ஆவது. புகலியானவத்தியாயம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௬௭௫.)

## ௧௦ - ஆவது. சிரபுரமானவத்தியாயம்.

பரவுகொடுங்கலிநலியமெலிந்துயிர்பதறிகெடுந்தருமன்
சரணமடைந்துளநெறியிவையிங்கிதுதனிலொருவன்பணியச்
சிரபுரமென்றொருபெயரின்விளங்கியதிறனும்விளம்புவெனென்
றுரவன்விளம்பியகதையையுணர்ந்ததிலொருவழியிங்கறைவாம். (௧)

அமரரும்வெம்பியவசுரருமந்தரவருவரைகொண்டெறிபால்
இமிழ்திரையுந்தியினடுதெறிசந்திரனிடுமுரகங்கயிறாய்த்
தமரநெடுங்கடல்குமுறவிரும்புவிதகர்படவெண்டிசையும்
திமிதமிறைந்திடவமுதம்விழைந்துறுதிறலினருங்கடைநாள். (௨)

சுலவுதடங்கடலலமரமண்டியசுடுகெடுவெங்கறைநீர்
அலர்மகளுந்தருமுழுமணிவெம்பரியடுகரியும்புவிசூழ்
நலனுறுமங்கையர்சுரபிகள்வந்தபினைதிரைதுஞ்சலிலா
திலகுமருந்தெனுமமுதமெழுந்ததிலெவருமகிழ்ந்தனரால். (௩)

எழுமமுதந்தனையிருமுதுபந்தியினினிதுபகுந்திடுமா
றெழுகியவன்பினின்மழையுறழுந்திருவுருவனெழுந்துணர்வால்
முழுவலிதுன்றியநிருதருமுண்டெழிமுரணிமுடிந்திலராய்
அழிவறுவெஞ்சமம்விளையுமிவஞ்சனையடுதிறமெங்கணனே. (௪)

மதிவதனம்புனைதிலதமும்வெண்பிறைவரிநுதலுங்குழையோ
டெதிர்பொருதுந்துணைவிழியுமருங்கொடியிடையுநறுங்குழலுந்
திதலையரும்பியவிளமுலையுங்கொடுதிருவளர்பெண்கொடியாய்
அதிர்செய்சிலம்பொலிகுமுறநடந்தனனசுரர்மயங்கிடவே. (௫)

குறுநகைவெங்கயலெறிவிழிபொன்புனைகுவிமுலைகண்டிவளே
உறுகதியென்றுகணினைபறியுண்டவருணர்வுமழுங்கியிடத்
தெறுவியொர்செங்கையிலமுதொருசெங்கையில்வரும்வ
முறையினிருந்தகைநிறையநறுஞ்சுதைமுதல்வ...

### வேறு.

அங்கிலையேமயங்குநரிலடற்சயிங்கிகேயனென்பானமரர்பந்தி
தன்னிலிருசுடர்க்கிடைவேற்றுருக்கொடுபோயிருந்தமுதர்தனைக்கொள்காலை
மின்னுறுமாழியன்கதிர்வானவர்குறிப்பாற்றெறுவிகொடுவிசைத்துவீசப்
பின்னரவன்றலைதுணிந்துவிசையினில்வீழ்ந்ததுகாழிப்பெருவீதிக்கண். (௭)

அவ்வெழில்வீதியின்கீழ்பாலொருகுரோசத்தளவிலனையவெய்யோன்
வெவ்வெழில்யாக்கையும்வீழ்ந்ததிருகூறுமமுதமுண்டவியப்பினாலும்
இவ்வெழிற்காழியையடைந்தநலத்தாலுமிருபாந்தளிறைவராகிச்
செவ்வியொடுபணிகுவராலன்னவரின்முடிக்கூற்றுத்திறலோனிப்பால். (௮)

### வேறு.

நோதகவித்துணைநானடையத்தனிநோனலரிற்பிழைகூ
றுதவமிக்கதிவாகரனைத்தெறுமாறுநினைத்திமையோர்
நாதனையிப்பிரமாபுரிமுத்தனைநாலுமறைச்சிகைவாழ்
பாதனையர்ச்சனைபேணிவலித்தெதிர்பற்றியபூற்றறிவால். (௯)

நீடலைகைக்குழுவார்கண்முகிழ்க்கினுநீள்கண்மூகிழ்த்தறியா
ஆடலிசைப்பலதூரியமிக்கொலியாலயமுற்றலரோன்
ஏடடர்பொற்றடமூழ்கியருட்பிரமேசனடித்துணைமேல்
ஊடுருகிப்பலபூசைமுடித்தயனூதநிலைத்திசைவாய். (௧௰)

மாணுறுமோரிருகோலளவாயொருவாவிசெய்தாயிடையோர்
தாணுவையாலயமீதுசெய்தோரிருதானமுமேன்மையினால்
ஆணமருவழிபாடுடையானசையாமலைவாயழல்வாய்
ஊணிலியாய்வளிபூணுகர்மாதவமோவறவாடினனால். (௧௧)

கார்படுநாளையிலேவெளிமேலொருகாலினிலேநிலையா
ஓர்பனிநாளையினீரிடைமூழ்கிநல்யோகினிலேயுணர்வாய்ச்
சூர்படுமோனவவேரறவீசுசுகோதயவாரியிலே
ஆர்படுநேயமருதருளேபொருளாயுறைவானெதிரே. (௧௨)

பரையொருபக்கலிலகமலைக்கிணைபகர்விடையிற்கரமேல்
வரதமழுப்புடைபொலிதரமுக்கணும்வலியவரைப்புயமா
உரகமணித்தொடையசையமுகத்தருளொழுகவரிச்சிலைவேள்
முரணையகற்றியபிரமபுரிக்கிறைமுதல்வனுதித்தனனே. (௧௩)

எந்தையெழுந்தமைகண்டிருகண்களினும்புளகந்தருநீர்
முந்தவுடம்புகுளிர்ந்திருசெங்கைமுகிழ்த்துமுகுந்தன்முனோர்
சிந்தையுகந்துகுழைந்துபொதிந்தசெழுஞ்சரணங்களின்மேல்
வந்தனையுந்துதியும்பலதந்துவருந்தியிரந்தனனால் (௧௪)

எஞ்சலிலண்டரினஞ்செறிபங்கியினின்பமருந்துணநான்
செஞ்சுடர்வெண்சுடரின்குறிகண்டுதெரிந்துநறுந்துளவோன்
வெஞ்சினமண்டியரிந்திடவிங்குவிழுந்தனனின்பணியால்
உஞ்சனனென்கண்விரும்பியிரங்குவதொன்றுளதெம்பெருமான். (௧௫)

புரைபடுமுற்பழிவரினவரைப்பழிபுரிவதெமக்கியல்பால்
நிரைதிரையற்றதெள்ளமுதமெடுப்புழிநவிவுசெயுஞ்சுடராம்
அரையரவர்க்குளவ்விரவிதனைத்தெறுமடலைபணித்தியெனு
வரைபொருவப்பொருகரியுரியுத்தமன்மனமலரப்புகல்வான். (கக)

வேறு

பொறிபுலாதிகள்புறக்கடைகண்டொருபுனைதாள்
நிறுவிமாதவமிழைத்துளாரானினனிகர்யாரோ
உறுதியின்னதேலளித்தனமுனனுடலாய
வெறுள்செய்வாளராவேந்தனுந்துணைபடைத்திகலால். (கஎ)

இயலுநள்ளியோடாளரிபிருசுடரமைய
முயலுமால்புகாசேய்மறையோன்சனிமுறையே
அயலயற்களையிரண்டினுமமைவருமமைந்த
வியனுலாவியசோதிசக்கரத்திருவீரும். (கஅ)

வருடையாதிபன்னிரண்டினுயவரன்முறைபெதிரே
பொருதிராகுகேதுக்களாயேழினேழ்பொருந்தத
திரிதிரீருவாவொழிந்தநாட்சுடர்களைத்தீண்டீர்
ஒருபதத்தினோர்மீனிலோர்வீட்டுறிலிருப்பீர் (கக)

துத்தியம்புரிந்தருஞ்சிரந்தவம்புரிதொடர்பால்
இத்திருப்பதிசிரபுரமாகவிவ்விலிங்கம்
பத்தியாற்பணிந்திததடம்படிந்துளாரோரெண்
சித்தியெய்துகவுளத்தழுக்காறுகடிந்தே. (உ0)

என்றுநல்வரமளிததுமையவளொடுமேற்றுக்
குன்றிவார்ந்தவன்மறைதலுங்குழகனதருளால்
அன்றனுக்கைபெற்றரும்பதம்புக்கிருசுடர்மேல்
என்றுமின்னணம்படங்கொடுமறைததனரிருந்தார். (உக)

முறுக்குகோட்டுமொனிரலைகண்டுதியான்முடிமேல்
செறித்ததாண்மடக்குண்டெனச்செழுஞ்சுடரிரண்டும்
குறித்ததம்முடைமொழியினுற்சுடுவிடங்கொழித்துப்
பொறித்தமாசுணம்படக்கதிர்மழுங்கினர்போவார். (உஉ)

கொள்ளைவெள்ளெயிற்றரவசிரண்டொடுங்குழுமா
எள்ளல்போயகோளொன்பதாகெனவிவண்வதிந்த
வள்ளறன்செயலுரைப்பரிதென்றனன்மறைநூல்
தெள்ளுமாமுனியிணையடிதொழுமுனிச்செம்மல். (உ௩)

மன்னிரும்பியறவழ்கொடிமாகமூடறுக்கும்
கன்னியாரெயிலுடுத்தபொற்காழிநகரத்
தென்னையாளுடையான்முனமிக்கதைபடித்தார்
பன்னிவேட்டுளாரிருவருமேபவம்படியார். (உச)

(கo-ஆவது-சிரபுரமானவத்தியாயம் முற்றிற்று ஆ. திருவிருத்தம்-சுகக.)

# கக-ஆவது. குருத்துரோகவிமோசனமானவத்தியாயம்.

பிறைவாளெயிற்றோரரவண்ணல்பெருஞ்சிறப்பே
யிறைமாநகர்க்குற்றதுகூறியிதற்குளாசான்
குறையால்வருதீவினைபோயதுகூறுகின்ற
நிறைமாதவன்சொல்வழியானுநிகழ்த்துவேனால். (க)

பூவாரிதாழப்பொறியட்டவர்நேமிவாய்ந்த
தேவார்வனம்வாழ்திருமாமுனிச்செல்வர்மேனாள்
மூவாயிரருஞ்சிவகாதையின்முன்னமிக்கார்
தாவாவருட்சூதனையொன்றுவினாதல்செயவார். (உ)

மஞ்சூருமைம்பால்வனவல்லிமணந்தகோவும்
நஞ்சூர்களத்தானடியேவல்செய்நந்திதானும்
நெஞ்சூரருட்டேசிகனின்னொடுமூவரன்றே
தஞ்சூருலகுக்குருவென்பதலத்தின்மிக்கார். (௩)

கவனம்படுபல்லுயிருங்கதிகாட்டியுய்ப்பான்
சிவகண்டிகையுந்திருநீறுமெழுத்தொரைந்தும்
புவனந்தொறுமாரழலாடிபுணர்த்ததேபோல்
தவனம்படுமெம்முழைநின்னையுந்தந்தவாற்றால் (௪)

ஆசானியல்பும்பிழையாதடியான்செய்மாண்பும்
கூசாதவனைப்பிழைத்தான்படுகோளுமெல்லாம்
மாசானதுபாறிடநின்றிருவாக்கினின்று
பேசாவிடினெவ்வழியுய்வதுபேதையேங்கள். (௫)

எனவாதரத்தோடிவைகூறியசவுனகாதி
முனிவோருவப்பமுகிழ்வாணகைபூத்தசோதிக்
கனிவாய்மலர்ந்துகருணைக்கண்மலர்ந்ததொன்னூல்
தனிவார்கலியன்னவனின்னனசாற்றலுற்றான். (௬)

நன்றேயிவணீர்வினவுற்றதுஞானவாசான்
என்றேபிரமீசனையெய்திலியம்பலொல்லா
ஒன்றேயெனினுமுணர்ந்தாங்குறைசெய்வெனென்னாக்
குன்றேய்குணத்தான்குரவோனியல்கூறுகின்றான். (௭)

தோளாமணிபோற்றொழுதொல்குலமேவியீன்ற
கேளாரிருதெய்வதபூசையிடைத்துவேதத்
தாளாலுயர்வைதிகசைவமுந்தாங்கியெம்மாற்
காளாகினின்றானவனென்பவறிந்தவாசான். (அ)

காரன்னவீகைக்கதிரன்னநுவற்சிவான்றோய்
கீரன்னதூய்மைநிறைகோன்முறையன்னநீதி
பாரன்னவாற்றலீபனிமால்வரையன்னதோற்றம்
சீரன்னநோன்புதிரையின்னதொல்கேள்வியாய்ந்தே (௯)

நடையேபலவங்கமுநலகாவிற்றுமன்னான்
இடையேபலதெய்வமுமெய்தவியம்புமாதிக்
கிடையேயிருமைப்பயனுந்தரக்கோதிலான்கண்
கடையேவினைப்பாடறுத்துக்கதிகாட்டுமேலோன். (௧௦)

நன்மார்க்கனோம்பதத்தோடறுநான்கும்வல்ல
சன்மார்க்கனுற்றுந்தழலன்றருமாதியோதும்
சொன்மார்க்கன்வெண்ணீறுருகண்டிகைதோய்ந்தவுண்மைப்
பன்மார்க்கன்முக்குற்றமுநீத்தபழிப்பின்மேலோன். (௧௧)

இவனேகுரவோனிவனன்றியுமானமுன்னோன்
நவைதீர்விரதனசிவவாச்சியநன்குணர்ந்தோன்
சுவைநீரமுதிபவனச்சமகற்றுந்தொல்லோன்
புவிமேலிவருங்குருவென்பபொருட்டுணிந்தார். (௧௨)

அய்யந்திரிபொன்றிலாதாயறத்தாறுகூறி
மெய்யென்றுயிர்போற்பலமன்னுயிர்மேலுமன்பு
செய்யுந்தகையால்வழிபாடுடைச்சீடனுக்கே
கய்யொன்றுநெல்லிக்கனிபோற்பொருள்காட்டல்வேண்டும். (௧௩)

காலம்புனைகற்பனையில்லகனிந்துயிர்க்கா
ஆலம்புனைநீண்முடியைந்துமுகத்தினின்று
நாலைந்துமெட்டுநயந்தோதியஞானநூல்கள்
ஓலம்புரிகிற்பனமுப்பொருளுண்டுமோதோ (௧௪)

பதியென்றுதொல்லைப்பசுவென்றடர்பாசமென்று
துதிநின்றமூன்றிலுயிரோடுறத்தோய்ந்துதோயா
அதிபன்பதியாமவனாருளொன்றையென்றும்
பதியும்பொருளேபசுவாமிவைபன்னின்மன்னோ (௧௫)

மாமாயைமாயைவினையாணவமேமறைப்பே
ஆமாமிவைபாசமநாதியருட்பெறுங்கால்
போமாலருளும்புணரப்புணர்கின்றவின்பத்
தேமானொளியேபொருளென்றனர்தேர்ச்சிவல்லார். (௧௬)

விளியாவிருட்டைவிழுங்கிச்சுருங்காததீப
வொளியாதவனோடொருவாதுறவுண்டதேபோல்
தெளியாமலப்பாழிருள்சீக்குமோர்தெய்வஞான
ஒளிகாரணத்தேவனொளியோடுறவுண்டதுண்மை. (௧௭)

இவ்வாருயிர்கட்குயிராம்நெறியெங்குமொன்ருய்ச்
செவ்வாய்த்தெளிந்தோரறியாதறிசித்ததாகி
ஒவ்வாவொருபேரொளியென்பவுயர்ந்தகாழி
மொய்வாய்வரைமேலமருங்குருமூர்த்திதானே. (க௮)

அல்லார்மிடற்ருணணியால்னிழற்கீழன்று
சொல்லாதசொன்னபொருட்பாடுதொகுத்துரைக்க
வல்லானருட்டேசிகனன்றியுமற்ருேர்தெய்வம்
எல்லாரையும்வீடெளிதுய்க்குமதியாதுகண்டீர் (க௯)

மண்ணுங்கறிசோறமைத்துண்டமகாரின்யாமே
எண்ணும்பிரமமெனக்கூறியவீணராதி
கண்ணுங்கயமைத்துறைஞர்க்கிதுகாட்டலாகா
நண்ணும்பருவத்தவர்க்கீதுநவிற்றலாமால். (௨0)

அருகித்தருபஞ்சடர்குண்டிகைப்பெறலாகா
பெருகிப்பயில்வார்க்குதவாமடற்பெண்ணைபோன்று
தருநர்க்கிலைகாயுதவாமுடத்தாழைபோன்றும்
உருகிப்பணிவாரொழித்தல்லவர்க்கோதலாகா. (௨க)

இருளொன்றுதன்னைதெரிக்குந்தெரியாவிருட்டாய்
மருளும்மலவல்லிருட்சத்திருகாரமாக
ஒருவுஞ்செயலாகுவதோதுறுகாரமாகக்
குருவென்றசொற்குப்பொருளீதுகுறிக்கொள்வீரால். (௨௨)

வேறு.

ஏதமிலனையகுரவனையடுத்தாங்கிரவினும்பகலினும்விள்ளாக்
காதன்மீக்கூரமுன்ஞெடும்பின்போய்க்கைவிடாதுடலிடைநிழல்போல்
கோதகன்மனத்தாற்குணத்தொடுபழகிக்குறிப்பறிந்தொழுகியுள்ளவர்மாட்
டாதுலர்போன்றுமரசிளஞ்செல்வரடுத்துழியிழிந்தவர்போன்றும். (௨௩)

வெருவருமுளத்தன்பொறிவழிபுலன்கள்விடுக்கிலாவிரதன்வெந்தழலன்
தருமநூலறிஞனிருமுதுகுரவர்தம்மடித்தொழும்பினன்யாண்டும் [ன்
பொருவருங்குரவன்மக்களிலொருவன்போலுமென்றெண்ணலான்பொறைய
பருவமோர்நாலையியற்றுறும்பருவம்பயின்றவன்படிறுதீர்மொழியான். (௨௪)

பாசிலையரம்பையீர்ந்துணிதழல்வாய்ப்படிந்தனபருவமுங்கவைநா
வீசியதழல்வாயிந்தனத்திரளைவீழ்ந்தனபருவமுங்கரிகள்
மூசியதழல்பெய்தனபருவமுமிம்மூன்றுமற்ருரழன்முகத்தில்
ஆசியல்பஞ்சிபோன்மெனும்பருவமடுத்தவனெடுத்தமாணுக்கன். (௨௫)

துலைநிலைதன்னிலிருவினையொத்துத்தொடக்குறுமிப்பருவத்துக்
கலைபலதேர்ந்துகுரவனீரடியைக்கைகொடுவினைக்கடல்கடப்பான்
மலைவில்கண்டிகையுநீறுமைந்தெழுத்தும்வனைந்தமாணவன்றிறத்தொருசொல்
உலைவறவளித்தகுரவனுமவனுமுறுவரால்வீடுபேறொருங்கே. (௨௬)

மூலெயில்படுத்தானடியனைப்பணிதன்முதல்வனுராதனைவிரும்பல்
ஆவலிற்புரிதலிறையடிபணிதலான்றவொப்பிலிபுகழ்கேட்டல்
பூவலர்கண்ணீரரும்பமெய்சிலிர்த்தல்புண்ணியன்பணிகொண்டாதல்
ஓவறுபணியோடெண்வகைப்பத்தியொழுக்கிலார்க்கோதுதலிழுக்கே. (உஎ)
பூதகாரியத்தினெழுவெயிலொளியைப்பொருண்மிசையுற்றலாற்கண்ணுல்
பேதறக்காண்டலரிதிலரிதாய்ப்பிரிவிலாதுயிர்க்குயிர்தானாய்
வாதமுங்கடந்துகுணங்குறியகன்றுவரவுபோக்கிறந்தபேரொளியைப்
போதமேற்காட்டுங்குரவனதடியேபொருளெனுர்க்குணர்த்தலும்புரையே. ()
உதகநீத்தமுதுண்ணோதிமம்போலவுறுதியையுணர்த்துமென்கிளிபோல் [ன்
றுதலியபொருண்மைக்கடைப்பிடித்தாங்கேநுவன்றமொல்லொளியுணரேற்றி
இதனுவல்போற்றியுணர்ந்துமேற்கோளிலேக்கறவெய்தியுங்குரவன்
பதமலாநீழற்கீழின்னணம்பயிலாப்பதகருக்குரைப்பதுபழுதே. (உகூ)
அடுத்தவாணகையன்குரவனினிருப்போனனுச்சையிலவனவன்பொருளை
எடுத்தவனவன்சொன்மறுத்தவனெதிர்போயிருக்கையீந்திறைஞ்சலான்வன்
சொல், வடுத்தவன்றுயில்வோன்பேதைபோச்சாப்பன்வெகுளியன்விரகிய
னென்சொற், படுத்தவர்திறதொன்றளிப்பதுகளர்வாய்ப்பட்டவால்வித்தினு
ம்பழுதே. (௩௦)
கூன்குரங்கெறியும்விளங்கனிகல்லாற்கொள்பவர்போற்குரையாது
தான்குளகருந்துமாட்டின்வெவ்வேறுதலையுழலாதொருநிலைக்கண்
மான்கொளுமான்போல்மானுடம்வாய்ந்துவள்ளலேதனதுகுற்றேவல்
நான்கொளவந்தானென்றெருங்கெண்ணுநலமிலிக்குரைப்பபுரைவையே. (௩௧)
மானமாதவத்துமுனிவிர்காளாசான்மலரடிபிழைத்தமாணக்கன்
ஈனமாநிரயத்தெய்துவன்பரமற்கிழைத்தவல்வினைபெரிதேனும்
ஆனவன்றலைப்பானவனருள்பிழைத்தவருவினையமலனுமகற்றான்
தானதுதெரியக்கேண்மினோமேனாட்டன்னருட்குரவனைப்பிழைத்தோன். ()
கழை முகந்தொடுத்ததேனிருலிழியக்கனைமிசைவைத்ததாளலவன்
நுழைவளைப்பெருகாதளிக்கருஞ்சேற்றினுண்கதவடைக்குநீர்வேலிக்
குழைமுகம்பொதிந்தமழைமலர்ப்பொங்கர்குலுங்கியகலிங்கநாடளிப்போன்
முழைபகவிடிக்குஞ்சிங்ககேதனத்தான்மூரிவேன்மன்னவர்மன்னன். (௩௩)
அன்னவனொருநாட்பரிமகமியற்றுமாதரத்தினில்வெகுசுருதன்
என்னுநீள்குலத்துக்குரவனைத்தொழுதுமெழின்மகவென்றியிவ்வேள்வி
உன்னரிதனைலாண்டினின்மகப்பேறுறுகுவைபரிமகம்யானே
நின்னகமகிழமுடிப்பெனென்றுரைப்பநிருபனும்பழவினைச்செருக்கால். (௩௪)
அயனுடையிரதிதரமுனிமுதலவந்தணர்பலரோடுங்குழுமி
முயலரும்வேள்விதொடங்கினனிழைப்பமுனிவனுமுனிவுறுதெறிநீர்க்
கயமலர்ப்பொதுளுங்கமழலந்துறைசேர்கனைதிரைதுங்கபத்திரையிற்
றியனுடைவசிட்டன்பாசிலைப்புரையுளெய்தினனள்வனாயிருந்தான். (௩௫)

தேசிகன்றருசொன்மறுத்தலின்வேள்விசிதைந்துவானவரவிதேய்ந்து
காசினியதிபனாயுளும்வாளாகனைந்துவெங்கதழ்சினப்பிருவாய்
மூசியதழற்கண்மறலிவெந்தூதர்முரண்வலையீர்த்தனர்தூர்ப்பக்
கூசிருள்புதைந்தநிரையவாயெல்லாங்குளித்தனனயுதமாண்டெல்லை. (௩௬)

நிரையவெந்துயரிற்குளித்தவன்பின்னர்நீள்பனிமுயங்குகோட்டிமய
வரையகந்தனில்வேதியப்பெரும்பேயாய்மண்டியபசியடச்சுழன்றான்
உரைபடுந்தீயோரிடத்திலோருறுப்பிலுறுமலர்க்குரவனைப்பிழைத்துப்
புரைபடுந்தீபோல்யாண்டுமெப்போதும்புக்குழிப்புக்குயிர்சுடுமே. (௩௭)

வய்கலும்பசியாலூனுறக்கின்றிவானுயரரசிலைநதிநீர்க்
கய்கலனாகவெடுத்துவாய்மடுத்துங்கனன்றுவெவ்வழல்சுடக்கரிந்தும்
உய்கலனாகிமுன்னைநாளறியாதுஞற்றியவினைப்பயனோர்ந்து
செய்குறைநினையாக்குரவனைநினைந்துதேம்புவானினையனதெரிவான். (௩௮)

மெய்யெழுத்தியக்குமுயிரெழுத்தேபோன்மெய்புகுந்தெனையசைத்தாண்ட
வய்யவென்னுயிரேயிழுதையேன்றனைநீத்தனைந்தெவ்வுழியறிந்திலென்யான்
கய்யர்நோதகவுற்றிழைப்பினும்பெரியோர்காப்பதுசரதமின்றெளியேன்
உய்யுமாறெதிரேபோதராயென்னினொழிவருந்துயரமென்றொழிவேன். (௩௯)

பெருகுகண்ணிரயத்தயுதமாண்டாகப்பேதுறுதுயரெலாமனையான்
உருகணத்துறுநோய்க்கிணைபெறாதாவியுருகியுநெட்டுயிர்ப்பெறிந்தும்
அருவினைத்தொடராலுலகலமருவானரற்றியவோசைபுக்கதுவால்
ஒருதனிமுளரிவானவன்சிறுவனுறையுள்புக்கிருந்தவன்செவியுள். (௪0)

செவித்துணைபுகலுமெழுந்தமாமுனிவன்செயிரறுமேனிதோயிளங்கால்
குவித்தகையலகைத்தலைவன்மேலுறலுங்கூறுணர்வெயதியைம்பொறியும்
அவித்துளார்முடிதோயந்தளிரடிமேலடுத்தடுதிறைஞ்சிவல்வினையால்
கவித்தவென்னுருவைத்துடைத்தியானுய்யுங்கதிதனைத்தருகெனக்கரைந்தான்.

மாசறுதவத்துக்குருமுனியவன்கொண்மம்மர்நோயகலுமாமதித்தான்
ஆசறுபரதகண்டமேற்பொன்னியகல்வயற்புகலியம்பதிவாழ்
ஏசறுவடமேற்றிசையினிலிருகோலெல்லையிலிராகுமுன்னமைத்த
வாசநீர்த்தடத்தையதிபவமாதிமாபவந்தொலைக்குமாமருந்தை. (௪௨)

பின்னெடுந்தகையைமருளலையென்னாப்பெருகுவாய்பருகுநீரளித்து
நன்னெடுந்திவசமொருபதினைந்தின்னளிபுனற்பொன்னிநாடணுகி
அந்தியாடிச்சிறுபசுங்குழவியடுபிணிக்கருமருந்தயிலும்
தன்னிருதாய்போலதன்வடக்காகச்சார்ந்தனனிருவினைசாரான். (௪௩)

தெளிநிலாவிரியமுகிழ்த்தவாய்முளரிச்சிறைப்படுநாகிளஞ்சுரும்பர்
வளரொளிப்பரப்பிவைகறைவிளக்குமானவனரசியல்புரிநாள்
எளிவரமருவார்சிறைவிடுத்தெனநின்றிரங்குநீர்வேலிகள்சூழ்ந்த
ஒளியெயிலுடுத்தகாழியாளுடையவொருத்தன்வாழ்திருத்தளிபுகுந்தான். (௪௪)

மணாமலர்க்கிழவனுடியபிரமமலர்த்தடங்குடைந்துபூங்கொன்றை
விணாமலர்வேணிப்பிரமநாயகனைவிதிமுறைபூசனையாற்றிக்
கணாபொருதலைக்குமிராகுமுன்கண்டகடிமலர்த்தடம்படிந்தநீர் [ன்.
உணாமனுவழியாற்றெளிப்பமுன்னுருவோடோங்கினன்மடங்கலேறுயர்த்தோ
பொங்கழலகட்டுமுறையுறழ்படிவாய்ப்பொரியணாக்கருநெடும்பனைத்தாள்
அங்கவல்லலகைமுரணிரும்பாகவறவனோர்சித்தர்கோவாகத்
துங்கவல்வினையின்காளிமம்படுநீர்த்துவலையாங்குளிகையிதொருவச்
சிங்ககேதனத்தோன்செம்பொனிற்பொலியச்சித்தநீராயதத்தெளிநீர். (௬௬)

முழுமதிமுகமுமொழுகொளிநகையுமொய்ம்மணிச்சுடிகையுமுரணூர்
கொழுமணிமார்புமெழுவுறழ்தோளுங்குடைக்கடனிறுக்குநீள்கரமும்
செழுமலர்விழியும்வேனில்வேளனையசெவ்வியும்வாய்ந்துமுன்றேய்ந்த
கழுதுருவகன்றுகலிங்கர்கோன்பொலிந்தகாட்சியையாவரோநுவல்வார். (௬௭)

நன்னகர்முழுதுநலனெடுத்தேத்தநளிதடம்படிந்துமேற்கரையில்
பொன்னவிரகடுக்கைப்புரிசடைமுதல்வன்பூசனைவரன்முறையாற்றித்
தன்னருட்குரவன்முடிப்பமுன்பரிமான்றருமகப்பலனுமாங்கெய்தி
ஒன்னலர்க்கடந்தமுழவுறழ்தடநதோளொளிறுவேன்மன்னவன்பொலிந்தான்.

சூட்டழன்முகத்துப்பாட்டுருமுருக்குந்துளங்கொளிக்குலிசவேலென்ன
நாட்டுறுகுரவர்ப்பிழைத்தவெவ்வினையைநகர்வயினிழந்தவனிரட்டைக்
கோட்டுவெண்பிறைதாழவேணியற்களவில்கோடிபொன்னடியுறைகொடுத்துச்
சேட்டிளம்பரிதித்தெரியல்சூழ்மார்பன்றிருமுனமிறைஞ்சினன்சென்றான். ()

கன்னியந்திங்கட்டெரிசநாளந்நீர்க்காவலன்படிந்துபார்முழுதும்
தன்னியலாழியொருதனியுருட்டித்தவலரும்வீடுபுக்குறலால்
இந்நிலத்தன்னுளத்தடம்படிவாரிடரறுத்திகலறநூறி
உன்னியபொருண்மையாவையுமெளிதேயுறுவர்வீடுறுகுவருண்மை. (௭௦)

(கக-ஆவது. குருத்துரோகவிமோசனமானவத்தியாயம் முற்றிற்று)

ஆ திருவிருத்தம் - எ௬௧.

## கஉ - ஆவது. சண்பையானவத்தியாயம்.

தென்னிகரிலொருமுனிவன்முடங்குளையாளரிக்கொடியான்றணப்பில்வெந்நோ
இந்நகரிலகற்றியவாறியம்பியொருகடவுண்மணியிமைக்குமார்பில் [ய்
பொன்னியலுந்திகிரியினுன்பழிகழுவிச்சண்பையெனப்புனைபேர்வாய்ந்த
இன்னியலைமுனிவன்விரித்திசைத்தவழியளியேனுமியம்பலுற்றேன். (க)

மெய்ம்மலியுமறம்பலவுந்தலைநிறுவிக்கறங்குதிணாவிரிநீராடை
மொய்ம்மலிமாநிலமுழுதும்பொதுநீக்கியவணாயுமுறையினாட்டி
மைம்மலியுநறுங்கூந்தற்பொதுவியர்தோண்மணந்துவடமதுணாயாளும்
பொம்மலணிவண்டிமிருந்தண்டுளபப்பசும்படலைப்புனிதன்மேனாள். (உ)

வீங்குமொலிமுரசுயுர்த்தார்க்கரும்பெறல்வேள்விகள்பலவும்விருப்பினூற்றித்
தாங்குநிலப்பொறையனைத்துந்துடைத்தொருதன்பெரும்பதத்திற்சார்வானெ
ண்ணி, ஈங்கெமதுகிளையுரிமையாதவரெண்ணிலரிவரீண்டிருப்பின்மேலைத்
தீங்குபயக்குறுமிவரைத்தெறினுலகம்பழிக்குமெவன்செய்துமென்பான். (௩)

உனமணியும்புயத்தாடனமணியுமழுந்துமணிமார்பனிவ்வா
றினமணியும்பருவனையோவொட்டையும்வட்டுருட்டுமுரத்திளைஞர்தம்மை
முனமணியப்பதத்திலுய்ப்பான்மனமணியுமயத்துமூரிமோட்டுக்
கனமணிவெந்தலைநாகத்தினமணியைவிழுங்குறுநாள்கண்டதன்றே. (௪)

காண்டலும்விண்டொடுபுரிசைவடமதுரைமாசனங்கள்கனைநீராழி
மூண்டதெனவயக்களிறுமயக்குழுவும்வியக்குமணிமுடித்திண்டேரும்
தூண்டியருட்கடலனையசாரணர்கோசலனுதிதுறவோர்சூழ
வண்டருபூந்திளைசுருட்டும்பிரபாதனிக்கரைவந்திறுத்தவன்றே. (௫)

பழமைமறைப்பொருடுணிந்தபண்ணவரோடுபராகப்பணிநீராடும்
கிழமைகொடுபோதவரில்வல்லுவணப்புள்ளூர்திசேண்மைமாக்கள்
குழைபுலநான்மறைக்கிழவர்தொழுகுலவாய்மையும்பிறவுநோக்கிரோனூர்
குழுவுமியவருக்கநிலையறிதுமெனமனத்துறுகோள்கொண்டுசூழ்வார். (௬)

தம்மிலெழிற்சாம்பனுக்குமணிவளையுமணிகலையுந்தரித்துவாசக்
கொம்மைமுலைபொருத்தியடிவயிற்றின்மடக்கசைத்துநறுங்கூந்தல்வாரி
அம்மலர்மெல்லடிபெயர்ப்பவந்தணர்பேரவையினிலுய்த்தாரேபெண்ணே
இம்மகடன்கருநிலையோர்ந்துரைத்திரெனவடிநிழற்கீழிறைஞ்சுமேல்லை. (௭)

அனலூட்டிப்பின்னுகருங்கபிலமுனிவரனெறிபாலலையுட்டோன்றி
மனவேட்கையழுக்கின்மிசைவைத்துளமீனெனநெடியோன்வழியின்மாக்கள்
கனலூட்டுங்கயமையராய்த்திரிந்தனரென்றறிந்திவள்பாற்கரும்பொன்வாய்ந்த
தனியேற்றபெருமுசலமதனில்வருமுமக்குலகிற்சரியவாழ்க்கை. (௮)

முதுமுனியிவ்வணமளித்தமுரட்சாபவலியினிலோர்முசலமாங்கே
கதுமெனவந்தடிநிலத்திலிடிபொருவவீழ்ந்ததரோகதிருஞ்சோதி
மதியுமெனுமிருகுலமுமற்றையுவாவினில்விழுங்கிமதுகைப்பாந்தள்
எதுகுலமும்விழுங்கமணிப்படமொடுக்கிப்பெருந்தளாயிலிழிந்தாலென்ன.

கூருலக்கைவிழவெருவித்துகள்படுத்திநீரில்யிடத்துகட்கொவ்வொன்றாய்க்
கோரையயில்வாளுருவிற்கிளைப்பமடம்படுமெவலக்குணத்தாலெவ்வொன்
றேரொருவர்க்கோரொருவர்பற்றினரேறினருயிர்போயுலந்தார்மண்மேல்
ஆரொருத்தன்வல்லவன்கைப்புல்லுமாயுதமென்பதறிவிப்பார்போல். (௧௦)

வெறிக்களிவண்டிசைமுரலும்புண்டரிகப்பெருந்தடங்கண்விமலன்கேளாக்
குறித்தமுறைமுடித்தெனவரக்கடவுள்வலிபாடிக்கொடியசாபம்
மறித்தெனையுந்தொடருமிதுதுடைப்பினுமாறுதினியான்வளைவாய்க்கோட்டுப்
பிறைச்சடிலத்திறைமலர்த்தாளருச்சனையாற்றுடைப்பலெனப்பெரிதுமோர்ந்தே

சகரர்குலந்துகள்படுத்ததழல்விழியந்தணன்முனிவாற்சாம்பனுதி
நிகரில்வலிதரும்புதல்வனுலந்தவினைதொலைந்தகலநிறைநீர்ப்பொன்னி
அகல்வயல்சூழ்பிரமபுரத்தடிகளடிக்கருச்சனைசெய்தருளாலன்னான்
புகரின்முனித்துவமடைந்தான்யானுமதுபணிவெனெனப்போந்தான்மன்னோ.

இடிமுரசக்கொடித்தானைப்புடைநிறுவிப்பூடவாரிருவர்சூழக்
கொடிமுகிறோய்மணிமாடக்காழிபுரத்தாளுடையான்கோயில்புக்குக்
கடிமலர்வானவன்றடந்தோய்ந்தருநியமச்சடங்காற்றிக்கடவுட்கங்கைப்
பிடிபயிலுநெடுவேணிப்பிரமேசன்றனையொருபாற்பேதையோடும். (கங)

பனிமலருங்கற்பகப்பூந்தனிமலருங்கொடுந்திரைவெண்பசும்பாலாழித்
தனியமுதுங்கனியமுதுமானைந்துந்தேனுறுஞ்சாந்தச்சேறும்
பனுவன்மரபுளியாட்டிநனிவழிபாடாற்றியருட்பகவன்கோயில்
அனிலதிசையினின்முக்கோலளவையினிற்கிளரொளிகாலாழிதன்னால். (கச)

ஒல்லொலிநீர்த்தடங்கண்டுசில்லரிக்கட்டிருமனையாரொடுபுக்காடி
அல்லலறுத்தமலவுருவடைந்தனனேபுயனுருவத்தருட்கண்ணீர்சாய்த் [மூழ்கி
தொல்லையில்வெண் புயனுருவிற்பொலிந்தனனே வெனவெண்ணீற்றொளியின்
மல்லல்வளர்கண்டிகையுமைம்பதமுமுவந்திறைதாண்மனத்திலூன்றி. (கரு)

பற்பலவாமுதுகடவுட்டீர்த்தமமைத்தாழியின்போர்பகர்ந்துஞானத்
தற்புதநீடொளியிலுளமிருத்தியாறிருபருவமருநோன்பாற்றிச்
சொற்பதந்தீரருளுருவப்பரஞ்சுடரைமுப்போதுந்தொழுவான்முன்னர்ப்
பொற்பமருநறுங்கடுக்கைச்சிகழிகையானகமகிழப்போந்தானன்றே. (கசு)

ஆரணமாய்மறைமுடிவாயளப்பரியபேரொளியாயளவைகாணாப்
பூரணமாய்வரவுபோக்கிறந்தபெருங்குணக்கடலாய்ப்பொருமாலேற்றின்
வாரணந்தபுளகமுலைக்கொடிபுணரப்புணர்ந்தெதிரேவயங்காநின்ற
காரணகாரியங்கடந்தவொருபொருளையிருவிழியுங்களிப்பக்கண்டான். (கஎ)

பணிந்துமிசையெழுந்துப்பாடியுமாடியவிருளைப்பறித்ததாளை
அணிந்துமலர்விழியருவியாடியுமுன்பரவுமடலாழிவேந்தைத்
துணிந்ததவமகிழ்ந்தனநீவிழைந்தனகேளெனவமலன்சுடர்வாய்பூப்பத்
தணிந்தமனத்தளிதூங்கத்துவளாநகர்க்கிறைவணிதுசாற்றுகின்றான். (கஅ)

அலகிலுயிர்க்குயிராயதனிமுதல்வாநின்னடிக்கீழடியேன்மைந்தர்
பலருமுலப்புறக்கபிலமுனிமொழியால்வருமுசலபழிவாட்கோளை
உலகிலெனைநலியாதுமுசலசேடத்தாலென்னுலகடைய்தி
மலர்பொருமுன்றாண்மறவாநிலைதருதியெனவிரப்பமழுவாளண்ணல். (ககூ)

ஆயிரவாயரவணையிலறிதுயில்வோயஃதளித்தேமகலாதென்று
நீயிவணோர்கலையுருவினிலைபெறுகவாட்சண்பைநினைத்தொடாது
தூயவலிபெறுமிவ்வூர்சண்பையெனவிளங்குகவென்றருளித்தொல்லை
ஞாயில்படுந்தடம்புரிசைநகுமணியாலயம்புகுந்தானங்கைபாகன். (உ௦)

போரவுணக்கடல்கடந்தவொருதிகிரிமலர்க்கரத்துப்புனிதன்பின்னர்
ஏரகலாமணிவீதிக்காளிபுரிக்குத்தரத்திலிருகுரோசத்
தோரகத்திலொருகடவுட்டடமதுகண்டயலிருகோட்டொருவெண்டிங்கட்
டாரணியுமறைக்கொழுந்தையிருத்தியருச்சனைபுரிந்தான்றவத்தின்மிக்கான். ()

அங்கதிலெண்ணருங்கோடியருந்தானம்வீசியிறையடிமைமாறாப்
புங்கவர்தம்முளமகிழநிகழ்வித்தவொருபறவாப்பூவைவண்ணன்
பங்கமில்சீருணர்வறிந்துபேருவகைமீதாடப்பரிவுள்ளாட
அங்கணாயிரம்பருவமாடினானவன்பணிகொண்டாடினானே. (௨௨)

ஒற்றைநெடுங்குழைக்கிழவனுவந்துவரந்தரலானுமொருகோட்டங்கைக்
கொற்றவன்மெய்த்திருநாமம்பெறலானுமாய்பசும்பொன்கொழித்துவாய்ந்த
கற்றைநெடுந்திரைத்தடமிக்காசினியிற்சிறந்ததனாற்கலசத்திங்கள்
முற்றிலுமந்நீர்படிந்தார்முற்றிலும்வல்வினையகன்றுமுத்திசேர்வார். (௨௩)

முப்பகலந்நீர்ப்படிந்துமுத்துறழ்வாலரிசிபெய்துமுக்கண்வேணி
அப்பனடியார்க்களிப்பினோரரிசிக்கோர்பருவமருவித்தண்கோ
டொப்பருதென்கயிலையில்வீற்றிருப்பரெழுத்தோரைந்துமொருக்காலோதில்
எப்பெரியதலங்கடொறுமொருகோடிகணித்தபலனெய்துவாரே. (௨௪)

ஒருமாசித்திங்கள்வருமுழுத்திங்கடனிலாடிலுரவோர்சாபம்
அருமாசுவினைபலவுமரன்பாதமறியவிரிந்தகலுமேனாள்
பெருமான்மின்னொடுமிருந்துகயிலையிற்கற்பகத்தருக்கட்பேசமுன்னம்
திருமால்கொள்ளும்பதத்தையித்தடத்தில்விரிப்பவரேசீவன்முத்தர். (௨௫)

தவலருந்தேசிகனருளாற்பிரணவத்தோடாறெழுத்துஞ்சாரவெட்டுப்
பவவிருளைத்துடைப்பவர்க்கும்வேண்டுமிடம்வினவுதிரேற்பகருங்காலை
நுவலரியவருட்குரவனெதிர்ந்துழியேசாலுமெனநுவல்வாரன்றிச்
சிவபெருமான்முளைத்துழியுமுனிவர்முதலமைத்தபிரதிட்டைக்கண்ணும். (௨௬)

காசிபிரயாகைகயைதிருச்சயிலங்காளத்திகாஞ்சிதில்லை
ஆசின்மயூரங்கழுக்குன்றருணையிடைமருதுகுடமூக்கையாறு
வாசமலிபழமலைவெண்காடுகடவூர்வேதவனங்கோடிக்கா
ஓசைபெறுகோகரணமிவற்றினுமைந்தெழுத்தையினிதுணைக்கற்பாற்றே. (௨௭)

விரித்தபலதலந்தோறுங்குருகுபெயர்க்குன்றெறிந்தோன்வேழக்குன்றை
உரித்தபிரானேவல்புரிதிருநந்திசீட்டரிவருபதேசிக்கின்
பரித்திடலாம்பிரமபுரத்தொருமுதல்வன்குருவடிவம்படைத்துவாய்மை
தெரித்தசிவாசாரியமர்புரமெனலாலீண்டுணைசெய்திறத்தைக்கேண்மின். (௨௮)

சிவகுலவேதியர்முதலீரிருவருணத்தவருமுபதேசஞ்செய்யத்
தவறிலருட்டேசிகராய்வயங்குவர்மற்றவரடிக்கீழ்த்தாழ்ந்துளோரும்
நவமணிதோயிருஞ்சுடிகைநாகராப்பசுங்குருளைநகுமதாணிப்
புவனுலகந்தனிலெய்திப்பழிப்பரும்வீட்டின்பநலம்பருகுவாரே. (௨௯)

மெய்ப்போதமிலரோனுங்காளிபுரத்தாளுடையான்விமலன்வேடம்
தப்பாதுவனைந்தனரோன்ஞாளிதனக்கூணிழைக்குந்தகையரேனும்
அப்போதவருட்குரவராங்கவரேயீங்குனக்கோரையமுண்டேல்
இப்போதேசென்னிதெறித்திப்பாரின்வீழ்ந்துபுரண்டிடுகமாதோ. (ரு0)

துளக்கிருஞ்சூள்புகன்றதெனதுளச்செருக்காலன்றடிநாட்டொடுநீர்வேலி
வளப்பெரும்பாரணிபுயத்துக்கவுடபதிக்கித்தலத்தோர்மனைக்கட்டீஞ்சொற்
கிளக்குறுமாமடக்கிளியொன்றைந்தெழுத்தாலிருட்படலங்கிழியவோதி
விளக்கருந்தீவினையகற்றிவிடுத்தலினன்மக்கள்வலிவியப்பாமன்றே. (ருக)

குருவுருவாயிருந்துவிதிகொடுப்பவனுங்கொடுத்தவிதிகொண்டுபோற்றத்
தருவுருவாயெழுந்தசிவலிங்கபரம்பரனுமுளந்தடுத்தாட்கொள்ள
அருவுருவாயமைந்ததொருசங்கமனுமோரிடத்தில்வைகக்கண்டும்
பெருநிலமேலிதையறியார்விளக்கிருந்துந்தீக்குழலும்பித்தராமால் (ருஉ)

பூதானமிவணளித்தார்புண்டரிகன்றனமுமென்புவைவல்லார்
மாதானமிவணளித்தார்வனமாலிதானமும்பொன்மறைவல்லார்மாட்
டியாதானுமிவணளித்தாருருத்திரதானமும்பெறலாலியல்வழாமல்
ஆதானமிவணளித்தாராதியிடையீறிலிதாளடைவரன்றே. (ருந)

குலைத்தலைநெட்டிலைத்தாழைக்குமரியிளங்குடப்பசுங்காய்குலையமாநீர்
துலைத்தலைவாளைகள்வெடிபோர்திருப்புகலிவியப்பனைத்துஞ்சொல்வான்புக்கால்
சிலைத்தலைவாணுதற்பணைசேர்திருத்தன்விரித்திசைப்பதல்லாற்சிறியேனென்
னில், மலைத்தலையுமறிவென்றன்வாதராயணனிருதாண்மறவாமேலோன்.

(கஉ - ஆவது. சண்பையானவத்தியாயம்முற்றிற்று. ஆ திருவிருத்தம் எஅரு.)

## கந - ஆவது. கொச்சையானவத்தியாயம்.

பச்சையந்துளபத்திருமறுமார்பன்பழிவிடச்சண்பையென்றொருபேர்
இச்சையினியன்றவாய்மையீதாகவிதிலொருமுனிவரனிறைஞ்சிக்
கொச்சையென்றுறுபேர்புனைந்ததுஞ்சவுனகாதியர்க்காரருள்கொழிக்கும்
நிச்சயமுனிவன்விரித்தாவாதொகுத்துநிகழ்த்துவாமொருமருங்கெடுத்தே. (க)

தாமரைத்தெரியலான்மறைக்கிழவன்றனைநிகாமுனைவர்தம்பெருமான்
மாமறைப்பொருடேர்வசிட்டன்மாதவம்போல்வருமுனிசத்தியன்பாலன்
ஆமருட்கடன்பூண்டாரழல்வேட்குமாரணத்தறிஞனெவ்வுயிர்க்கும்
ஏமமர்குணத்தானிதியுறழ்தவத்தானியல்பராசரமுனிமேனாள். (உ)

ஆடகக்கடுக்கையலங்கருழ்வேணியந்தணன்பதிகள்பற்பலவும்
நாடருங்கடவுணதிகளும்படிந்துநனந்தலையுலகெலாம்வலங்கொண்
டேடவிழ்கமலத்தண்ணலம்பொலன்குட்டெழினலமிறைகொளநறைவாய்ப்
பூடலீவண்டிமிருங்கவுதமையாறும்படிந்தனனிடும்பைநோய்படியான். (ந)

இமிழ்திரைசுருட்டுங்கவுதமையாடியிரும்புனல்கடக்குமாறெண்ணிக்
கமழலர்துறைக்கணோடமுய்ப்பவரைக்காணலனாயிடைக்கண்டான்
அமிழ்துறுமொழியுந்தமிழிளந்தென்றலசையினுமொசியுமென்மருங்கும்
உமிழ்கதிர்பூணுங்குமிழ்பொருங்கண்ணுமுடையதோர்வலைமடவரலை. (ரு)

மடவரலின்சீரோடமுய்க்குநர்யார்மற்றுநீவல்லையேலின்னே
கடவுதியெனலுமக்களாயிரவர்கலந்துழியன்றியிந்நாவாய்
விடவரிதெனவேற்படைபொருதடங்கண்மெல்லியலுளைப்பவாயிரவர்[வோன்.
உடனுறுபொறையீண் டமைக்குவென்கணத்தேயொண்ணுதல் விடுகெனவுர

கோலொருதலையுங்குடமொருதலையுங்கூன்புறத்திமிலிருதலையும்
மேலவணிருத்திமச்சகந்திப்பேர்மின்னொடுதானும்வீற்றிருந்து
சேலுலாந்திரைநீர்ச்செல்லுழிமுனியைச்சிவனெனநோக்குறுவடிநாள்
பாலலோசனத்தாற்றெறுபழிமீட்பப்பகழிகடுரந்தனன்படைவேள். (சா)

மாரவேள்வாளிக்குரனழிந்தயர்வான்வலைஞர்தந்திருவினைநோக்கிச்
சூரரமகளிரெழினலங்கனிந்தசுடரிழாய்தெய்வநீராற்றுள்
பேரலைகடத்துமோடமீதென்னப்பெருவலியநங்கன்வெஞ்சமத்து
நீரலைகடத்துமோடநீயல்லானேடினுமில்லைநீணிலத்தே. (எ)

குறுநகைநிலவாலிருட்களிறதுபோங்குறுநடையனத்தின்மீன்கொடிபோம்
இறுமிடையரவாற்றென்றலந்தேர்போமிணைமுலைநேமியாற்குடைபோம்
தெறுசிலைப்புருவத்தடுசிறைப்பரிபோந்திவிழியுருத்திரனுதல்போல்
பொறிநுதல்விரித்தசிந்துரத்தெழிலாற்போர்மதனாண்மையும்போமால். (அ)

இடைக்கணேயெழுந்துதலைக்கணார்மருங்குலிளைப்பநின்றெழுமுலையின்னே
உடைக்குநீடிணைநீரோடமூர்ந்துழிமுன்னூற்றமின்றியுந்தனிவாளா
இடைக்கணேயுறுவேற்கிரங்குறாவெனினுமிரங்கிவந்தடைந்துளோர்க்களித்தல்
அடைக்கலநூலினியற்கையேவேலையகத்தினும்பெறலருமமுதே. (கூ)

பழுத்தபண்கொழித்துமழலைவண்டுழலும்பங்கயப்பொகுட்டினிதமர்ந்த
முழுப்பெருங்கிழத்திமுதன்மடவாரைமுறைவகுத்துன்னையும்வகுத்தான்
எழிற்கனிந்தவர்கண்டனையவாவெள்காவெண்ணியோநான்முகனுள்ளத்
தழுக்கறுமையினோநின்னியன்மணத்தையழிபுலாலாக்கினனணங்கே. (க0)

தேம்படுமெறிபான்முதுபயோததியிற்றேவர்தெள்ளாரமிழ்தருந்தித்
தாம்படுமிறப்பொன்றொழிந்தனரல்லாற்சரமதன்போர்தொலைந்திலரால்
காம்படுகழைவார்சிலையலர்பாயவிடையிலேமுரியுமிக்கலகத்
தோம்புநின்கனிவாயமுதுறுதெவ்வாறுய்யுமாறையநுண்ணிடையாய். (கக)

உருவில்வாளியொருங்குறப்பாய்ந்தவுரம்படுபுண்முகங்குளிர
இருமுலைப்புளகவேதுகொண்டொத்தியிலவிதழ்வாய்மருந்தூட்டிக்
குருகணிகரத்தாலிருகுறப்பிணித்துக்குறைவருபுதுமணம்புணர்ப்பின்
பொருவிலிக்கணமேயானுமுன்னுடலைப்புதுமணம்புணர்த்துவென்பொன்னே.

குழைபொருதலைத்தவிழியினுமழலைக்குயில்பொருமொழியினும்பைம்பூண்
இழைத்தவழ்சிகரமுலையினுமதியோடிகலியநுதலினுமதிபோய்
அழல்படுமெழுகும்வான்மணலெக்கரலைத்தலைப்பொருமுதுநீத்தத்
துழைபடுகளையுமெனவுடைந்திவ்வாறுருகியவொருவனோடரிவை. (௧௩)

என்னைமாமுனியீண்டியம்பியதென்னவெழுமடமாதினற்குணமும்
தன்னையேநல்யகைமுகங்கோட்டித்தாழ்குழற்சிறுபுறஞ்சாய்த்து
முன்னையாயிரவர்பெரும்பொறையுய்த்தமொய்ம்மலிமாதவத்தோன்றால்
தன்னையேயுணர்வார்க்கிழிகுலத்தறியாடடமுலைமுயங்கவுந்தருமே. (௧௪)

ஊன்படுவேலைஞர்காவலனெந்தையுணர்ச்சியுமறிந்திலன்பெருநீர்
தான்படுபுலன்கோடிரண்டினுமாக்கடைந்தனர்திருவுளமறியேன்
வான்படர்யாழோர்புணர்ச்சியினின்னைமணக்கவுமியைந்தனென்மாரு
மீன்படுமுடைபோய்நறுமணங்கமழவித்தகாதருகெனப்பணிந்தாள். (௧௫)

அற்றமின்முனிவனதுகணத்தொருதன்னூற்றலாற்பணிகொடுகெவித்துப்
பற்றருந்தெய்வமலர்மணமளிந்துப்பரிமளகந்தியென்றனையாள்
முற்றருங்குரும்பைமுகிண்முலைகுழையமுகமணைதரக்கரமிறுகப்
பொற்றொடிகறங்கநறையிதழுறைப்பப்பூங்குழலலமரப்புணர்ந்தான். (௧௬)

பூங்கலைதிரையாவுரவர்தந்திலகன்புயவரைநாகமாவிழிகள்
வாங்கரும்புளகவனமுலைமலையாமற்றிருவோருளத்தார்வம்
ஆங்கணின்றிர்ப்பப்பெண்ணலங்கனிந்தவரிவையந்தடங்கடலந்நாள்
நீங்கருமின்பக்கலவியாரமுதைநிறைமுனிக்களித்தனதயன்றே. (௧௭)

மெய்யிரண்டுயிரொன்றெனநடுநோவாய்மேலிருவருநலந்திளைப்ப
நெய்யிருங்கூந்தனெருங்குபூண்முலைபானேமியான்கலையெழில்வாய்ந்து
மய்யறுதவமுமனுவும்வேள்வியுநான்மறைகளுமுறைகளுமுயிர்கட்
குய்யவந்துதிப்பநிகரில்பேரெழிலாலுதித்தனனொருபெருந்தனயன். (௧௮)

தனையன்முற்றுணர்ந்தான்மனமலர்களிப்பத்தயங்கலும்வயங்கெழிற்றையல்
முனைவனைவணங்கிமுன்னைமாணெழிலுமுருகுலாமகவையுந்தருகென்
றினையமேலவனவ்வெழிலினையருளியிம்மகவேண்டுமேல்யாண்டும்
நினைவுழிவருவனிவனையீண்டளிப்பினின்னுடைக்கன்னிமைக்கிழுக்கே. (௧௯)

அங்கைநீரிறைப்பமுன்னெழில்வாய்ந்தவரிவைகேளாய்வலைவினைஞர் [மேல்
மங்கையென்றுன்னேல் யாழ்வல்லோர்குலத் தோர்வசுவெனுமிறைமகன்றோர்
அங்கண்வான்வழிக்கொண்டிவ்வுழிமேனாளணைந்தவனருமனைக்கிழத்தி
கொங்கையைநினைப்பவிளகியதாதிக்குடிலையினடுவெண்வீழ்ந்ததுவே. (௨0)

வெடிகொண்மீனொன்றுவீழ்ந்தவீரியத்தைவிழுங்கலுமதன்வயிற்றோன்றிக்
கடிபுலரல்வினைஞர்மனையிடைவளர்ந்தாய்காலமுன்னையுமுணர்திறனால்
அடியியலறிந்துனிளமுலைவேட்டேனுதலினலமரேனின்னில்
புடிப்புகழைவர்முடிபுனைகதையும்பல்குமாலுன்னுழைப்பாவாய். (௨௧)

மோட்டழுமுடிமேற்கிடந்தநீராடைமுழுநிலமொருபுயத்தேந்தும்
ஈட்டுதொல்புகழான்சந்தனுவெனும்பேரிறைபுணர்சத்தியவதியாய்த்
தீட்டுமால்வென்றிச்சித்திராங்கனையும்விசித்திரவீரியன்றனையும்
தோட்டுவார்குழலாய்நீயினிநின்றுதுலங்குவைமற்றவர்வழிநாள். (௨௨)

திருத்தகுகுலத்துமடநலாரிருவர்செங்கைபற்றினருயிருலப்பப்
பெருத்ததொன்மரபுக்குறுமகாரின்றிப்பேதுறுமேல்வையீண்டளித்த
ஒருத்தனுலனையாரிருவரும்பாண்டுவொடுவிழியில்லியைப்பயந்து
விருத்தியால்வழியேபாரதப்பெரும்போர்விளையுமேலுணர்குவைமின்னே. ()

என்னமாமுனிவனன்னவட்கோதியென்னெழிற்குரவனைக்கொடுபோய்
நன்னெடுந்தகைசால்வெதிரிகாச்சிரமநண்ணினன்முளைமதியிமைக்கும்
பொன்னவிர்வேணிப்புனிதனாருளாற்பொறிக்குறும்பெறிந்தமாதவத்திர்
கன்னிகாகாமியெனப்பராசரனைக்கனைந்தனரன்றுதொட்டுலகோர். (௨௪)

ஆன்றமைகேள்விமுனிவனுக்கிழிவென்றறையுநீரலைகடற்பேய்ந்து
தோன்றினுமவருட்டோய்விலாமின்போற்சூந்தரமின்றியெவ்வினர்க்கும்
ஏன்றவனிறைவனொருவனேகெடுப்பானெடுப்பவன்றடுப்பவனெவைக்கும்
சான்றவனெனமெய்ப்போதமுற்றமலன்றளிணைக்காள்வினைப்படலால். ()

அளிவினையுளத்துமுனிவரன்சிறுநாணடைந்தனுரெய்தினனந்தோ
விளிவினைமுனியுமெய்துமோவென்னாவிரட்டுறக்கருதலிர்யாண்டும்
தெளிபொருட்டிறத்தோரையமுந்தெளியாத்திரிபொருட்டிறத்திலோர்துணிபும்
விளிவருநிரயம்பயக்குமாலுலகில்விரகிலரிகழநோனது. (௨௬)

கோதகல்குணக்குன்றனையவனினையகொச்சையையகலுமாறெண்ணிச்
சீதவான்பொன்னித்திருநதியாடித்தேனினமுரன்றுதாதருந்திப்
போதலர்பொதுளிக்கருகிநெய்த்திருண்டபுனைகுழற்றிருநிலையமுகி
மாதுபாலொருவன்மனமகிழ்பூத்தமணிமதிட்காழிவந்தடைந்தான். (௨௭)

கடையளந்தறியாவளமலிமாடக்கடிமணிவீதிகள்வலங்கொண்
டிடைவளர்முருகார்விழுமணித்தளிபுக்கினவளைநித்திலமிறைப்பப்
புடைநிலாவளைக்கும்பிரமமாதடத்துப்புண்ணியப்புனல்படிந்தெனையா
ளுடையகாரணனைவிதிமுறைவழிபாடுழுவலன்பொடுமினிதாற்றி. (௨௮)

அண்ணலங்குடுமியாடகமானத்தணியகோணத்திலேடவிழ்பூங்
கண்ணியங்கொன்றைப்பராசரேசுரனைக்காதலினிருத்தியாயிடையோர்
புண்ணியக்கூவமிருத்திநாத்தழும்பப்புகரிலம்பதமுறைபோற்றி
நண்ணருந்தழல்வாயாறிருபருவநற்றவமுற்றுறவிழைத்தான். (௨௯)

புனிற்றிளந்திங்கட்புரிசடைமுனிவன்புகழ்பராசரமுனிக்கருள்வான்
பனிக்குமென்கமலப்பாடகமுளரிப்பைங்கிளியொடுமடலேற்றின்
முனிக்கணிமிறைஞ்சக்கருணைவார்ந்தொழுகுமுகமலர்முகிழ்நகைபூப்பத்
தனிப்பரஞ்சுடரோன்வருதலும்விழிநீர்ததும்பமெல்லடிமிசைபடிந்தான் (௩௰)

உருகிமெய்யரும்பித்தழுதழுத்தவசமொடுபேராய்மலர்கடுயவனை
முருகியல்வேணிமுதல்வனுமகிழ்ந்துமுன்னியதென்னெனமுதல்வா
பருகியுன்னருளேயொருளெனப்பெறுமென்பாலிடரெய்துமோவெளியேன்
இருநிலத்தொருபேர்கன்னிகாகாமியெனுங்கொடுவாய்தணிக்கெனவே. (௩௧)

குறுநில்லாவிரித்தசிறுபிறையலங்கற்குழகனுங்கொச்சையினகன்று
பெறுவரமளித்தேமுனிவரேத்தெடுக்கும்பெருந்தகையாதியிந்நகர்க்கும்
உறுபெயர்கொச்சையெனவகன்ஞாலத்தோங்குகவெனவொருங்களித்து
மறுவிலானமைத்தகுறியினின்மறைந்தான்மாசறவயங்கினன்முனிவன். (௩௨)

தேண்மதியடுத்தமுழுமதிதினத்துத்தீர்த்தமீதாடியாயிடையில்
கோண்மதிமிலேந்தபராசரேசுரனைக்குளிர்மலர்தூயடிபணிந்து
நீண்மதிவிதைநெல்லளித்துளோரெவ்வோர்மெற்கொருபருவமீமிடாளிகால்
காண்வருவனப்பிற்கயிலைமால்வரையிற்கண்ணுதலுருவுபெற்றிருப்பார். (௩௩)

அயன்மனைவிழைதலூனவூன்மிசைதலருநறைமடுத்தலான்றவளை
நயனிலகூறன்மனையிளங்கொடியைநாளலாநாளிடைப்புணர்தல்
கயமைசூழ்வினைகளெவையும்விண்டாதிகமலனீடுலகினூற்றெட்டுப்
பயனுறுகுலத்தோடுறைவரிக்கூவல்படிந்துாற்றனமொன்றளித்தோர். (௩௪)

[illegible]மதியாதிதகர்மதியாதிசுலவுமீரயனவெம்பாந்தள்
அலர்கதிர்தொடுநாளிவற்றினீராடியரியதென்புலச்சடங்காற்றி
உலைவருமெண்ணீரிறைத்துளோர்மேல்வீட்டுறுகுவருகமொருநான்கின்
மலையுறுகலிக்கட்டானமேயெவைக்கும்வலிதெனமறைவழங்குதலால். (௩௫)

நுவலருங்கடவுண்மான்மியமிதற்கேநோக்குறினளவிலையடிநாட்
பவனிகாமுனிவன்கொச்சைபோயதனுற்பராசரகேத்திரமெனும்பேர்
கவினுமிந்நகரம்புனைதலாற்குலமேகாரணமன்றுசெய்வினையால்
உவமமிலுயர்வுந்தாழ்வும்வந்துறலாலொழுக்கமேவிழுமிதென்றுணர்வீர் (௩௬)

அள்ளிதழ்முளரிவானவன்றனைநேரண்ணலஞ்சுருதியாழ்முனியும்
தெள்ளியநுமக்கீங்கிதுபுகல்யானுஞ்சேயரிபரந்தகட்கணிகை
எள்ளியவயிறுவாய்ந்தனமேனுமிறைவனைவழிபடுந்திறனால்
ஒள்ளியரெனும்பேர்வாய்ந்தனமென்பவுறுவிர்காளெனவவருணைப்பார் (௩௭)

எந்தைநின்வரவொன்றிசைத்ததெஞ்செவியிலேறிலதெவ்வகையுயிர்க்கும்
தந்தைநீயென்றேயெம்முளம்பெறலாற்சாலவுமெம்மனோர்க்குனைப்போல்
சிந்தைமாசகன்றகுரவர்யாரென்னச்சேகறுமுகமனன்குரைத்தார்
முந்தைநூற்குதமுனிவரனவர்பான்முகமலர்ந்தொருகதைமொழிவான். (௩௮)

(கூ-ஆவது. கொச்சையானவத்தியாயம் முற்றிற்று)

ஆ திருவிருத்தம் - அ௨௧.

# கச - ஆவது. கிளியுபதேசித்தவத்தியாயம்.

ஊழிமுதன்மூப்பொடுங்குதவத்துரவோன்பணியக்கொச்சையென்ற
காழிநகர்க்கணொருபான்மைகற்பநாளிற்கவுடேசன்
வாழியொருபைங்கிளிமூலமனுவொன்றளிப்பவினையகன்ற
பாழியனும்பண்ணவர்கோன்பகர்ந்தமுறையிற்பகர்கிற்பாம் (க)

முரசுதுயிலாமணிமுன்றின்முடித்தேர்மிடைந்தகொடித்தானை
அரசுவணங்குங்கடைத்தலையினவனிபொதிந்தகவிகையினான்
பரசுமவரேயன்றியொருபகையொன்றிலதாற்சமர்வேட்டுக்
குரவுமலர்த்தோட்டினவடங்காக்கோவிதாரத்துசனென்பான் (உ)

திரைநீருடுத்தபெருவயலுட்செங்கோலெருவிட்டங்கார்வக்
குளைநீர்ப்பாய்ச்சிவேள்விமுதற்குறையாவேலிபுறங்கோலித்
தளைமேலிடும்பைக்களைகடிந்துதருமப்பைங்கூழ்தலையெடுக்க
கிளையாளரிமன்னுழவனெனநெடுநாள்புறந்தந்திடுநாளில் (ங)

மற்போர்தொடங்கவேழிசைத்தேன்ஊளர்ப்போர்பொழியவாதிகடம்
சொற்போர்தழங்கமுடித்தாமந்துணைத்தாள்சூட்டுமருவலர்பூம்
பொற்போர்குவியநீடுலகம்புரப்போர்பணியத்திணியிருள்சீத்
தெற்பாய்மணிமண்டபத்தொருநாளிருந்தானரசர்பெருந்தகையே (ச)

இருந்தவமயத்தருந்தவநூலியன்றநடையன்றேருனுடையன்
வருந்துபசியனாறைந்துமாறுமொருவனண்பகல்வாய்
விருந்தினெதிர்புக்கோர்கடிகைவேலையிறந்துபணியாமல்
பருந்துசுழல்வேலவனிருப்பப்படர்ந்தமுனிவனடந்தனனால். (ரு)

நெடுந்தாபதனைப்பழித்தவினைநெருப்பாரழலாற்கவுடர்பிரான்
கொடுந்தாண்முதலைக்குண்டகழிக்கோடாரெயிற்சத்தியவதிப்பேர்
தடந்தேரீங்கரத்தரசிருப்புந்தானைத்தலமுநிதித்தலமும்
அடுந்துரியமார்த்தெழுகடையுமடலையணிந்தபிதிர்வனம்போல். (சா)

ஆசொன்றணையாவருந்ததியாமனையாண்மனையானுறையுளன்றி
வாசங்கமழகங்கல்லூரிமாடமரங்குப்டைச்சாலை
கோசமரணம்பலந்தெற்றிகொடுங்கைசுருங்கைபணிச்சாலை
தேசம்பெறுபட்டறைமலர்மென்சேக்கைபலவுஞ்சிதைந்தனவே. (எ)

கவைநாவனைத்தவழற்சிகையாற்கடிமாநகர்போற்புறனுமழிக்
தவையால்வருவாய்பலசுருங்கியருநோயாற்றுமருமருந்தைச்
சுவையாதிலையீத்தின்பமொறீஇத்துய்த்தான்பிடகநெறிபிறழ்ந்த
நவையாலதன்பேறிழந்தான்போனாளுமீட்டும்பொருளிழந்தான். (அ)

ஆனாவறுஞானமவறுத்துழியுமளவில்சிறப்பாமதுமெய்ய
மேனாளடைந்தகடவுண்முனிவினைவெம்பிறப்பொன்றேவறியன்
மானாபரணன்கவுடர்பிரான்மற்றைமுனிவன்மனம்வெறுப்ப
ஏனோர்பலருநகையாடவெல்லாம்வறியனாயினனால். (௯)

அணிவேலுண்கட்டிருவனையாரலமந்துருகவறிவிலியாய்ப்
பணியாவாற்றல்வாரூழவன்பக்கமளவுமறையலகைப்
பிணியாலலமந்துளந்திரிந்துபெரும்பேதுறுவானறனையளிக்க
மணிமாடகத்துப்பிணிகுரலார்மகதிமுனிவனாண்டடைந்தான். (க0)

பணியிற்றிரிந்தபதுமமெனப்பனவப்பேயான்முகந்திரிந்து
குனிவிற்றடக்கைமாறடுதோட்கோவிதாரத்துவசனுற்ற
துனியைத்துடைப்பெனெனப்போந்ததொன்மைமுனியைநன்மையுளம்
கனியப்பதுமமாலினியாங்காவற்கிழத்தியெதிர்கண்டாள். (கக)

கண்டாளிறைஞ்சிமறைமுனிவன்கமலத்தாடோய்நறுந்துளிநீர்
உண்டாள்பசும்பொற்கலந்திருத்தியுவட்டாவமுதப்பதனடிசில்
தண்டாமரைப்பூங்கரத்தூட்டித்தாளம்பொருவப்பெருவிழிநீர்
கொண்டாள்கருணைக்குன்றனையகோதின்முனிவன்வினவுறுங்கால். (கஉ)

புரைதீர்கற்பின்வடபுலத்துப்புத்தேண்மின்னனாண்முனிமாட்
டுரைசான்மூரற்றருபலனாலொட்பமடைந்துவாளுழவன்
விரையார்கமலமுனியனையவீணைமுனியைநனிபேணித்
தரைதோயடிக்கீழ்முடிசூட்டித்தாடோய்தடக்கைமுகிழ்த்தலுமே. (கங)

இன்னநாளிலெமையுணராதிருந்தவாறேயறியா
முன்னைநாளிலொருமுனிபாலுழைத்ததுளதோமுடிவேந்தே
உன்னையறியாமறையலகையுருத்தவாற்றாலெனவுயிர்கட்
கன்னையனையாயிழைத்துளெனென்றரசுகூறவவன்கூறும். (கச)

ஆராவமுதாநிறைபரத்தோடாவியிருத்தியோரெட்டுக்
காரார்கருமச்சித்திகளுங்கணியாதுணர்ந்தசிவயோகம்
பேராவறிஞரருவருத்துப்பெயர்த்தபொருளைநிலையென்றே
தேராவெளிற்றுச்சிற்றறிவிற்செருக்கினாய்நீயென்செய்தாய். (கரு)

வேறற்றெழுந்தபரஞ்சுடரைவெளியில்வெளியையொளிக்கொளியை
தேறத்தெளிந்தசிவயோகிசேர்ந்ததானஞ்சிவதானம்
ஊறற்றெறிநீர்க்கங்கைமுதலொன்பானதியுமாடுகின்ற
பேறுய்ப்பதுதானவரடிக்கீழ்ப்பெய்தபுனலோர்துளியன்றே. (கசு)

விருந்தினெதிர்ந்தயோகிதனைவிரைவிற்போற்றாதில்லறத்தின்
இருந்தவொருவன்செயுமறங்களெல்லாமிழப்பன்மற்றவனைத்
திருந்துபூசைசெயின்முனிவர்தேவர்சனகாதியர்வசுக்கள்
பொருந்துமூவர்முதலியரைப்புனையும்பூசைப்பலனடைவான். (கஎ)

இமைக்குங்காலங்கொன்றையினுமிரட்டிகாலங்கூவிளத்தும்
சமைத்தகடிகையிலிங்கத்துந்தார்வேத்திடத்தோர்மாத்திரையும்
அமைக்குங்காலநின்றவையுமாக்கியளித்துத்துடைத்தருள்கூர்
உமைக்குநாதனெக்காலும்யோகியிடத்தேயுறைதலினால். (௧௮)

மேருவாதிபுல்லீறாய்விரிந்தவுயிர்களுடன்சாரச்
சாருமதிதிக்கிடர்புரியிற்சகலவுயிர்க்கும்புரிந்தவினை
சேருமனையாருளமுவப்பவெவ்வையுமுவக்குமெனத்தெரியா
தோருஞ்செருக்கான்மறையலகையுற்றாயுணர்வுமற்றாயால். (௧௯)

வெள்ளியடுக்கலிறைஞ்சியயாமீண்டுன்மனையிலனமிசையத்
தெள்ளியறியுமுணர்வடைந்தாய்சீறுமலகைபாறும்வண்ணம
புள்ளியலவனூறுசெய்பூம்பொதியம்புயம்வேசியர்கலவை
அள்ளன்முலைநேர்வயற்புகலியடைவாயிடருமுடைவாயே (௨௦)

வழுக்கூனுகர்தலிழிவயிறன்மதுவாய்மடுத்தலயன்மடவார
எழிற்காமுறுதலதிதவறியற்றலாதிவினையும்விண்ணோர்
குழூக்காவலன்முன்னிறைஞ்சியருட்குரவாப்பிழைத்தவினைகெடல்போல்
இழுக்காதொழியுமுனதிடருமிரியல்போகுமொருதலையே. (௨௧)

கோலமலரோன்றடமாடிக்கொச்சையிடையார்திறத்தேனும்
மூலமனுவேட்டாலநிழன்முதல்வன்றிருமுன்கணித்தவர்க்கே
மாலும்பிரமகத்திமுதன்மாற்றல்வகையாலிதற்கிதென
நூலிலறியாவினையனைத்துநூறுமிதுசத்தியமறிநீ. (௨௨)

நன்னர்முனிவனிதுகூறிநடப்பவவன்றொழுதரசன்
கன்னலிழிசாறடும்புகையைக்கமஞ்சூன்மழையென்றிளஞ்சூட்டு
வன்னத்தடங்கணெடுந்தோகைமயில்களாலுமலர்ச்சோலை
அன்னப்பணைசூழ்புகலியின்மாடணைந்தானெல்லைபணிந்தானே. (௨௩)

இடங்கூர்நறுஞ்சேயிதழ்க்கமலத்தெழிலோதிமப்பார்ப்பிறைகொள்ள
நுடங்காரழற்கண்ணுமடந்தைநோற்கின்றதையொத்ததுகண்டான்
அடங்காப்பொறியைந்தடக்கிவெண்ணீறாடியசைவற்றிருப்பார்போல்
நெடுங்காலுறைத்துக்கண்முகிழ்த்துநிற்குங்குருகினிலைகண்டான். (௨௪)

நீறுதாங்குமெய்யன்பர்நேர்ந்தபோதுநெறிக்கெதிரே
சோறுதாங்கிநிற்பவர்போற்சுமந்தமலர்க்கேதகைகண்டான்
நீறுதாங்கிச்சிவசிவவென்றேத்திக்கருவேரரிமினெனக்
கூறியாண்டும்பலரறியக்கோலப்பூவைசொலக்கண்டான். (௨௫)

தண்ணீர்நிலைநின்றொருதாளிற்சதுரானனன்செய்யருந்தவம்போல்
கண்ணீரரும்பியவனுறையுங்கமலந்தானுஞ்செயக்கண்டான்
விண்ணீர்மதிமேலினுங்கழுத்தின்விரியம்புயலுமுறச்சுதைதோய்
தெண்ணீர்மாடங்கறைமிடற்றுச்செம்மலுருவந்தரக்கண்டான். (௨௬)

துயிலாவரமும்பனுவன்மறைசோராவொழுக்கும்பரத்திலன்றிப்
பயிலாவுணர்வுமைம்பதிமும்படர்கண்டிகையுநீறுமின்றி
இயலாவடிவும்பத்திநெறியிகவாநடையுமிழித்தல்புலால்
அயிலாவெருகுமீன்குத்தாவலகார்குருகுமவண்கண்டான். (உஎ)

சொன்னதலத்தைநோக்கிமுடிதுளக்கியவணித்தலங்களிந்த
மன்னுதலத்தோடொக்குமெனல்வழுவாமதிகமீதெனலால்
அன்னதலத்தொவ்வொருவுருவினமைந்தவொருவனனையதனறி
இன்னதலத்தின்மூவுருவத்தியைந்தவாற்றலெனநினைந்தான். (உஅ)

ஆழிசூழித்தவழிதூர்க்குமந்நலார்மெல்லிழைகிளரப்
பாழிமதமால்வயக்களிற்றின்பருத்தாள்கிளைக்கும்வீதிபுக்கு
வாழிவலங்கொண்டிழிகண்ணீர்வாராவருவான்செவிமிசை...
ஊழினியன்றவைம்பதத்தினுரைசாலொலியொன்றுற்றதுவே (உகூ)

உற்றகாலைவாளுழவனேரேருழவன்றூற்றுமுகில்
பெற்றவொலிகொண்டுவந்ததெனப்பெற்றகளியால்வியப்பெய்திப்
பற்றியேகுமந்நெறிக்கட்படருங்காஞ்சிவிலைமடந்தை
முற்றுமனைக்கணன்னவொலிமுழங்கவுணர்ந்துள்ளகம்புகுந்தான். (ஙo)

கருவித்துகிரால்விளைந்தசிறுகால்வாய்க்குடம்பைநடுவணிருந்
துருவச்செந்தார்மடக்கிள்ளையொளிவாயினிலிம்மனுமிழற்றத்
தருமச்சுகதேசிகனடிக்கீழ்த்தாழ்ந்ததணிவேணிருபன்போல்
ஒருமைப்படத்தாழ்ந்துபதேசமுற்றுனுறுதிபெற்றனே. (ஙக)

கூட்டுச்சுகமன்றளித்தமனுக்கொண்டான்வீணைக்குருக்கள்சொன்ன
வீட்டுச்சுகமுமெய்தினன்போல்வியந்தானயந்தாரொடுமுன்னை
நாட்டுற்றுளதன்கோளனைத்துநவின்றனுவந்தாலயம்புக்குத்
தோட்டுக்கமலாலயன்புனலுட்டோய்ந்தானிடைக்காய்ந்தானே. (ஙஉ)

பலகட்டுைப்பதென்னையினிப்பைம்பொன்போன்றுகவுடர்பிரான்
அலகைத்தழல்பாய்ந்துருகுதலுமந்தீஞ்சுருதிமகதிமுனி
இலக்ப்புகன்றவுரைக்குறட்டாலெறிநீர்ப்பிரமதடத்துய்ப்பத்
தலைமைப்பசும்பொனுருவடைந்துதணிந்தானலகைத்தழலென்றால். (ஙங)

அதுபின்னியதிச்சடங்காற்றியணிநீறணிந்தைம்பதமோதி
முதிருங்கடவுண்மணியலங்கன்மொய்ப்பவிளைந்துமுகைதிறந்து
மதுவங்கறங்குமலர்க்கொன்றைவரதன்வழிபாடியற்றியண்டம்
பொதியுமொருசிற்றுதரமலைப்பூவைதனையும்போற்றிசைத்தான். (ஙச)

ஓதப்புணரிபுறங்கோப்பவுலகத்துலையாநிலைநாடி
நாதப்பெருந்தோணியிலிருந்தநம்பன்றிருத் ...மலர்பணிந்து
சீதக்கமலத்தடங்கண்ணன்றிணிதோல்போ..ந்தமுடைமாறப்
போதப்புழுகுபுனைவடுகன்புனைதாள்பணிந்துவினைதீர்ந்தான். (ஙரு)

புரிநூன்மார்பரகமகிழப்பூமிதானங்கோதானம்
வரிவேல்விழிக்கன்னியர்தானமற்றுங்கோடிதானமெனும்
விரிவாலாற்றிநித்தவிழாவியப்பாலாற்றித்தொண்டுபல
பரிவாலாற்றிப்பணியுமிழ்ந்தபரிதிபோன்முன்னுருவடைந்தான். (௩௬)

மன்றல்கமழுமகன்பொதியில்வடித்ததமிழைமுடிக்கொடுபூந்
தென்றலிழிந்துபுறந்தவழுஞ்சிறுசாளரத்துநெறிமாடக்
குன்றுநிரைத்தமனுவீதிக்கொச்சையகன்றூபதிபுக்குத்
துன்றுமரும்பல்வளநுகர்ந்துதுணைவன்மலர்த்தாளிணைசேர்ந்தான். (௩௭)

வள்ளத்தமுதிட்டூட்டியுரைவருத்துங்கிளியேயருட்குருவாய்
உள்ளத்துணர்ந்தவதிதிதவறொழிநதாலதன்சீருரைக்கவற்றோ
கள்ளப்பொறியைந்தவித்துநெடுங்காலந்தழற்கண்ணுற்றுநரும்
வள்ளற்பெருமான்புகலியிலோர்மரத்தோடொவ்வாமதிக்குங்கால். (௩௮)

கன்னிமணிவண்டிசைமுரன்றகார்கொள்வணக்குந்தடஞ்சோலைப்
பொன்னிநதிவானதியாகப்பொலன்கற்பகத்தினலங்காட்டும்
செங்நெல்வயல்சூழகாளிபுரிச்செம்மன்மனுவையம்மவொரு
வன்னியுரைத்ததிதுவென்றான்வன்னிவளாக்குமுனிசூதன. (௩௯)

(௧௪-ஆவது கிளியுபதேசித்தவதத்தியாயமுற்றிற்று. ஆ திருவிருத்தம் ௮௪௦)

## ௧௫-ஆவது. வேணுபுரமானவத்தியாயம்.

அரசுதேக்கெறிவேலினற்கஞ்சுகமிரங்கி
பரசுதொன்மனுவல்கியபுகலியம்பதிக்கே
விரவுவார்சடைமுனிவரனபின்னரும்வேணு
புரமெனும்பெயர்புணர்ந்தவாபுகன்றமைபுகல்வாம். (௧)

பண்டைமன்பிரபாகரன்மக்களினிரட்டை
கொண்டபன்மனுஞ்சூரனுந்துணையொடுகுழுமி
மண்டருந்தவம்புரிந்துபாரிடங்களாய்வருநாள்
அண்டசாரதச்சாபமுண்டசுரராயவர்தாம். (௨)

ஏயபன்மனுஞ்சூரனுமோருருவெய்தி
ஆயகாசிபனிடத்துவந்தாடல்வெவ்வலியால்
பாயவல்லிருள்விழுங்கமராபதிபரிக்கும்
நாயகன்றனைப்பொருதுவானீருருநண்ணி (௩)

மடங்கலேறிநல்லொருபதிறுயிரமதுகை
இடங்கலந்ததோட்பதுமனுஞ்சூரனுமிவரோ
டெங்கியைந்தவெஞ்சேனையுமும்பர்தொல்லுலகம்
அடங்கலுங்கவர்வானமராடினரடிநாள். (௪)

அண்டவாணருந்தானையுமார்த்துடன்போர்ப்பக்
கொண்டலூர்தியாண்டெழுதலுங்கொடியவர்சேனை
மண்டியார்கலியொன்றொடொன்றேற்றனவானம்
விண்டுபோழ்படவிளைந்ததுகொடுஞ்சினவெம்போர். (௫)

தளர்ந்தமாதிரக்களிற்றினந்தாளடித்தூள்போய்
அளந்ததாரணனவனியையடல்வருதினிகள்
இளந்துபூசலிட்டிரப்பியபேரொலிகெழுமிப்
பிளந்ததண்டமுங்கலந்ததுகிளப்பரும்பெரும்போர். (௬)

படவமாகுளிவெள்வளைசல்லரிபணவம்
குடமுழாத்துடியணைவயிர்காகளங்குளிறித்
தடவுமொல்லொலித்துழனியால்வீடணர்தவத்துக்
கடவுளோருமென்செவித்துணைபுதைத்தனர்கரத்தால். (௭)

குழையின்காறுமுள்வாங்கியகடுஞ்சிலைக்கொடுங்கோல்
மழையின்வீசினர்வானவர்வடவையிற்பொங்கித்
தழையநோன்சிலைகுழைத்துநாண்டெறித்துவெஞ்சரங்கள்
முழைகொள்வாயருமழையெனப்பெய்தனர்முறையே. (௮)

தலையைச்சிந்துவபுரவியைமுருக்குவதடக்கை
மலையையக்கீறுவமன்னாயரக்குவவரிக்கைச்
சிலையைநூறுவதேர்க்குலஞ்சிதைப்பனதெவ்வர்
சிலையைமாற்றுவபுலவர்வெஞ்சிலைபொழிநெடுங்கோல். (௯)

முடிபிளப்பவுமுரசினைப்பிளப்பவுமுனைந்தோர்
கொடிபிளப்பவுமந்தரகணநிலைகுலுங்கும்
படிபிளப்பவுமூர்திபிலுருத்தெழும்பலகார்
இடிபிளப்பவுமிர்ப்பவுநிருதர்கையிருங்கோல். (௧௦)

வில்லிஞெலிகளிற்றினம்பிளிறொலிவியன்றேர்ச்
சில்லிவாயொலிதழங்கியவாயொலிசெருவில்
வல்லியம்பெருங்குழுவிடைமறிக்குழாமென்னப்
புல்லிஞரகணிலத்திடைத்தயித்தியர்பொடியாய். (௧௧)

காலமின்னதுசெல்லுழித்தானையங்கடலைக்
கூலமாற்றுகச்செம்புலமடுத்ததைக்குறியா
ஆலமென்னநின்றழன்றுதன்றானையோடடர்ந்தான்
நீலமால்வரைநிகரியநிறத்துவெஞ்சூரன். (௧௨)

அடன்முழங்குசெந்தழல்பொறியிழியிஞணலைநீர்க்
கடல்கிடந்தனதானையன்காசினிவயிற்றுக்
குடல்கிழித்தெழுகுன்றுறழ்தோற்றத்தன்குதித்தான்
தடவுவெஞ்சினத்தமரர்வாரிதியின்மந்தரம்போல். (௧௩)

கரங்களென்றும்வெங்கரியென்றும்பரியென்றுங்கருதார்
சிரங்களென்றும்வெங்கோலென்றும்வேலென்றுந்திணிதோள்
உரங்களென்றும்வேறறிவுறாதொருதனித்தேர்மேல்
சரங்கள்கொண்டெழுமுகிலெனப்பெய்தனன்றருக்கால். (௧௪)

ஊறுபட்டபுண்ணீர்படவும்பனையொறுத்து
வீறுபட்டவெஞ்சூரன்மேலுருமெனவெகுண்டு
நீறுபட்டுகவெதிர்ந்தனன்முதிர்ந்தவெண்ணிறத்துச்
சேறுபட்டமாமதமலையுகைத்தெழுந்தேவன். (௧௫)

நெருக்கிவார்சிலைகுழைத்துமிழ்கணைகளைநேரே
ஒருக்கியாயிரங்கோடிதானவர்முடியுருட்டிப்
பொருக்கெழுங்களஞ்செம்புனலாறுகள்புதுக்கிப்
பெருக்கமேற்பிணப்பிறங்கலேபெருக்கினன்பிறங்க. (௧௬)

விண்ணிற்றாவியும்வெற்பினில்வீசியும்விரிநீர்
மண்ணிற்சிந்தியுமருமத்திலுறுத்தும்வாய்நுழைத்தும்
கண்ணிற்காணருநிருதர்வெம்படையெலாங்கவிழ்த்தான்
பண்ணிற்றூக்குவெள்ளடலயிராவதப்பாகன். (௧௭)

நெற்றிமேற்சிலநிறத்தின்மேற்சிலமுரணெடுந்தோட்
சுற்றின்மேற்சிலதொடுகரமேற்சிலதுரப்பப்
புற்றின்மேற்செலுமரவெனக்கொடுங்கணைபுகலால்
கற்றிவீழ்ந்தனர்தயித்தியர்கழலிளங்காய்போல். (௧௮)

திவசமன்னதிற்சூரன்வெந்தேரையுஞ்சிதைத்துத்
துவசமுந்துமித்தடுபரிக்குலத்தையுந்துணித்துக்
கவசமுங்கிழித்தவனிருஞ்சிரத்தையுங்கரத்தால்
அவசமுற்றிடவரிந்தனன்குலிசவேலதனால். (௧௯)

கணங்கொளிந்திரன்கடிந்தவெஞ்சூரன்மாயையினால்
இணங்குபன்மனையெய்தியீருருவுமோருருவாய்
மணந்துசூரபன்மாவெனநின்றனன்மகவான்
புணர்ந்தவாகைகண்டுடைந்தனனுறுவலிபோனான். (௨0)

விரிந்தநோன்சினைத்தொறுன்மரமிவர்ந்தவன்விழினும்
திரிந்துமச்சினையிடைப்பிடித்தேறுமச்செயல்போல்
பரிந்துவானவருலப்பினுமுயர்ந்தனர்பாவம்
புரிந்தபுல்லியோரிறந்தவாறிறந்தனர்போனார். (௨௧)

போனகாலையிற்சூரபன்மனைப்புறங்கண்ட
வானவில்லிதன்வாகையுமற்றவன்செருவில்
ஊனமெய்தினன்றோல்வியுநோக்கியேயார்ந்த
மானமில்லிதன்னடியவரொருவாவகுத்தார். (௨௨)

குன்றவார்சிலையானடிபணிந்துவெங்குலிசன்
வென்றியெயதினனிவனஃதின்மையான்மெலிந்தான
என்றுமெம்பிரானருள்கடைப்பிடித்தவர்க்கேற்றம்
ஒன்றுமோபொருண்மும்மையுமவர்திறத்துறலால். (உ௩)

பூளையறுந்தமிழ்த்தென்றலங்குழவிவாழ்பொதிய
வளையில்வாழ்சிவயோகியாசமணநீர்கடக்கக்
கூளைபடாமையேழ்தினம்வரங்கிடந்தனன்கார்போல்
உளைசெய்மேனியனென்னின்மேலுளைக்கவுமுளதோ (உ௪)

வரித்தவேணியானடித்தொழும்பால்வரும்வலியைப்
பரித்திலானிவனுதவ்றபரித்துளார்வாகை
தரித்திலானெனப்பலகொடுவாயொடுந்தவத்தோர்
தெரித்தமூதுரைவீழ்ந்ததுதயித்தியன்செவிக்கே. (உ௫)

அகன்றகேள்வியார்நுவன்றதையகனுறுகடவுள்
புகன்றதாமெனப்புலன்கொடுசூரபன்மனுமா
றிகந்ததன்குலக்குரவனையிருபதமேத்திப்
பகர்ந்தவைம்பதம்பெறறனனுறுவலிபலிக்க. (உ௬)

நீறுதோய்ந்தசெம்மேனியன்கண்டிகைநிலவும்
வீறுமாமணிக்கோவையன்விமலன்மெய்யடியார்
தேறுமாகமமடையினனெம்பிரான்றிருத்தொண்
டேறுநெஞ்சினன்புகலிவாயணைந்தனனுவப்பால். (உ௭)

வேறு.

குமுதவாயவிழ்க்குமமுதவாய்த்திங்கட்கூன்புறங்கொடிநிரைஈடவும்
சமுகநீண்மாடக்காழியம்பதிவாழ்தனிமுதற்கோயில்புக்கலரோன்
இமிழ்தடம்படிந்துபிரமநாயகன்றனிருசரண்பணிந்துசேயொளிவிட்
டுமிழெரிநாப்பணளப்பருங்காலமுதையுண்டுறுதவமிழைத்தான். (உ௮)

இழைக்குறுந்தவங்கண்டழற்பொலிமேனியெம்பிரானன்புயூத்தவன்முன்
தழைப்பசுங்குழையாய்முளைத்துநல்லிலிங்கத்தனியுருக்கொண்டுமற்றதன்கீ
ழுழைப்பெருஞ்சங்கத்தீர்த்தமொன்றுதிப்பவுதவினன்கதழ்சினச்சிறுகட்
புழைக்கைமாவுரியிற்பவளமால்வரைமேற்புயறவழ்ந்தனையபொற்புயத்தான். ()

எழுந்தபாசொளிவள்ளிலைத்தலைவேணுவிலிங்கநோக்குற்றவாணிருதன்
பொழிந்துகண்பனிப்பக்கரமலர்முகிழ்த்துப்புளகமுற்றகநெகிழ்ந்தவசத்
தழுந்தியானந்தவாரியுட்டிளைக்குமளவையிற்களைகணுயெங்கும்
தொழுந்தொறுமடியார்கெளிவருங்கருணைச்சோதிவானவனெழுந்தருள. ()

பாய்விடையூர்ந்துபசுங்கொடிபுணரும்பவளமால்வரையினிற்பொலிந்த
தூயவனிணைத்தாமரையடிபணிந்துசுந்தராபோற்றிமாலயன்பால்
மீயுயர்கடவுட்குன்றெனமுளைத்தவியப்பெனவிதியிலேன்காண
மாயிருந்திறலார்வேணுவாய்முளைத்தவரதனேபோற்றியென்றிசைத்தான். ()

ஏத்தெடுத்திறைஞ்சுமனையன்மாட்டருள்கூர்ந்தென்னையாளுடையவன்கரு
பூத்துணைக்கியன்றகேளெனமறைதேர்புங்கவாபங்கயனாதி [னை
வாய்த்தமன்னுயிர்களெவற்றினுமாயாவலியுமிவ்வண்டகோடிகளைக்
காத்தல்செய்வலியுநிகரிலாவலியுங்கனிந்தருள்செய்யெனக்கரைந்தான். (௫௨)

அரண்பொருமூரற்கரந்தைவார்சடையானவனுவந்தனவளித்தொருநீ
வரம்பெறுவேணுவுழைப்பொலிசங்கமாதடமிதுபடிந்திடுவோர்
நிரந்தரவலிபெற்றோங்குகவருநாணிமிர்கடம்பணிபுயத்தொருவன்
கரத்தொடர்வேலாலெம்முழைவருககடையிலென்றிணையிலான்மறைந்தான்.

தொல்லைநாட்பதுமாசுரன்வரமடைந்துதுயர்விளைத்தானெனவரத்தால்
ஒல்லையேசூரபன்மனுமமரருறுபதமொருதனிமுருகன்
மல்லன்மாஞாலத்துதிக்குநாட்காறும்வவ்விவாழ்ந்தனனெனின்மேல்கீழ்
இல்லையேயெம்மான்றிருவருட்கென்னுவிருந்தவன்மற்றுமொன்றிசைப்பான்.

பீடுறுதோற்றத்தாடகக்குடுமிப்பெருந்தளித்தோணியம்புரிக்கே
ஈடுறுவேணுபுரமெனும்பெயர்தானின்னுமோராற்றினாலியைந்து
நாடுறுகாதைகேண்மினோநமர்காணகுபுகர்முகத்தொருநான்கு
கோடுறுமயிராவதப்பெரும்பாகன்கூத்தியராட்டலின்மேனாள். (௫௫)

மாலுழந்திருக்குமமைதியிலெல்லாம்வல்லதன்குரவனுண்டணைந்த
காலுறவணங்காநிலையறிந்தனையான்கவன்றயலேகலுமகவான்
மேலுறுபெரும்போர்நிருதராலுடைந்தவேதனைவேதனைவழுத்தி
ஓலுறவியம்பத்தேசிகற்பிழைத்தவுறுபழியெனவயனுரைத்தான் (௫௬)

உரைத்துழிக்குரவன்றனைவரக்காணவுறுதவக்காசிபன்போன
வரைக்கிணையாற்றல்விசுவரூடனைத்தன்வழிக்குருவாக்கியோர்வேள்வி
உரைப்படவளர்ப்பமற்றவனிருதர்க்கூட்டலுமவனையொள்வாளால்
அரைக்கணத்தரித்தசதமகன்செயலையறிந்தனனவனுடைத்தந்தை. (௫௭)

அறிந்தவனொருதீவேள்விசெய்தொருவாளரக்கனைவிடுப்பவன்னவன்மா
றெறிந்ததோள்விருத்திராசுரனெனவந்தேற்றலுஞ்சீற்றவெள்ளானை
உறுந்தனிப்பாகனவனையும்வாட்டியுபயதேசிகரையும்பிழைத்துச்
செறிந்தவல்வினைபோலரக்கனைச்செகுத்ததீவினைத்தொடரடமெலிந்தான். ()

மெலிந்தவன்முன்னராழ்கடற்குடித்தமேலவனெய்தியவ்வினையை
இலங்குநீர்விரிமண்ணரிவையர்தருக்களிவையிடத்திறக்கிவானுரிமை
நலம்பெறநளிநீரலம்புதண்பணைசூழ்நகுமணிமாடநீள்காழித்
தலம்பணிகெனத்தண்டமிழ்முனிவிடுப்பச்சதமகனதுகுறித்தெய்தி. (௫௯)

தேவியல்வேணுவழிபிடித்திழிந்துசெம்பொனாரெயில்புடையுடுத்த
மாவியற்றளிபுக்கயன்றடமாடிமழுவலானருச்சனைமுடித்துப்
பூவியல்பொலன்றுளடிக்கடிபணிந்துபுரந்தரனிரப்பமற்றவன்முன்
கோவிடைப்பாகனினிதெழுந்தருளிக்குறைவிலாவாறருள்கொழித்தே. (௬௦)

குன்றிருஞ்சிறகரொருங்குறவரிந்தகுலிசவேலொருவனவிலைகள்
இன்றிதிலெம்மையிறைஞ்சலினொழிந்தாயீண்டுநீவேணுவாலிறங்கி
நின்றதால்வேணுபுரமெனவிவ்வூர்நிலவுகவென்றகன்கோயிற்
பொன்றிருஞ்சடையான்மறைந்தனன்வேணுபுரமெனப்பொலிந்ததவ்வூர். ()

தாதளாயறுகாற்பேடிசைமுரலுந்தருநிழற்காவலன்முன்போல்
ஏதமொன்றில்லாவமருலகாட்சியெய்தினனினிதுவீற்றிருந்தான்
ஆதலாற்காழிபுரத்தியலெல்லாமந்தணீரித்துணைஞான்றும்
ஓதினேனலனேனுன்முகத்தொருவனேதினுமொழிவுறுவன்றே. (சஉ)

உம்பர்வாழ்கடவுணிதிகளோரிரண்டுமூறுதவமாற்றியிந்நகர்க்குத்
தம்பெயரிரண்டும்புனைந்திறைகோயிற்றலைக்கடைக்காவல்பூண்டுலகின்
விம்பவாண்முகத்தின்விழித்தவர்மிடிநோய்விலக்கவேளாண்மையும்பெறலான்
இம்பரேசங்கநிதிபுரம்பதுமநிதிபுரமென்பதுமிதையே. (சங)

விழுப்பநீளெல்லையைங்குரோசத்தும்விண்ணவராதியர்பணிந்து
வழுத்தியவிலிங்கமணற்குழுவாகவயங்கலாலடிபடலாகா [தோன்
செழித்தபொற்சிகரி சேய்நிலத்திறைஞ்சிற் றிருக்கறப்பொருப்புவிற்குழைத்
எழிற்புனைபுகலிக்கெய்தலாமன்றியிதுபெருரெய்துவதிழுக்கே. (சச)

வைகலொன்றேனும்பூந்தராயிருந்தோர்மஞ்சனப்பொருள்சிலவளித்தோர்
செய்கலன்கவிகைபிடிமுரசாடைசெய்துளோர்பெரும்பயனென்னே
துய்கவர்திரியொன்றெரிமணிச்சுடர்க்குத்தூண்டினோரிழைக்கொருபருவம்
மைகவர்மிடற்றோன்கயிலைமால்வரையில்வதிவரென்றருமறைவகுத்தால். (சரு)

தத்துநீர்வேணிப்பிரமநாயகற்குத்தக்கவின்னமுதொருக்கால்
பத்தியாலூட்டிலாயிரம்பருவம்பண்ணியபலனொருங்கடைவ
சித்திரையாடிப்பிறப்பின்மஞ்சனநீர்திருமுடிக்காட்டினோர்தமக்கு
முத்தியேயலதுமற்றையோர்போகமூவுலகத்தினுமிலையால். (சசு)

மண்ணிடங்கொள்ளவைங்குரோசத்துமல்கியவிலிங்கமிக்கலிநாட்
கண்ணிடங்கொள்ளவிளங்குறுதகைநற்காழிமாநகர்வியப்பெல்லாம்
பெண்ணிடங்கொள்ளுமொருவனேயறியும்பெற்றியையன்றியென்னனையார்
எண்ணிடங்கொள்ளவழுத்தரிதென்றனேதமில்சூதமாமுனிவன். (சஎ)

(கரு-ஆவது. வேணுபுரமானவத்தியாயமுற்றிற்று. ஆக திருவிருத்தம்-கூoஎ.)

## கசா-ஆவது. கழுமலமானவத்தியாயம்.

கடவுண்மரகதப்புரவிகுரத்தாலெற்றக் கருவிமுகில்விழுத்தியகுஞ்சோலைவாய்ந்த, தடவுமலர்க்கோட்டினிருளுடைந்துசெந்தேன்சாறுபடச்சேறுபடும்வயல்சூழ்காழி, இடனுடையவேணுபுரமெனும்பேர்பூண்டவியற்கையிதுகழுமலமென்றிவ்வூர்க்குற்ற, அடைவும்விரித்திசைப்பலெனமுனிவர்கோமானறைந்ததையுமொருவழியீண்டறைவென்மாதோ. (க)

துகளகன்றபெருங்கேள்விமறைதேர்வாழ்க்கைத்தொழிலுரோமசனென்னு மோர்பகவன்றென்னுள், அகலிடத்தா ரழலாடிதலங்கடோறு மரும்பெறன் மாதவமுயன்றுளப்பிறெண்ணீர், புகலரியகடவுணதிபடிந்துமாயைப்புணர்ப் பகன்றவெறுவெளியுட்டேங்கித்தூங்கா, நிகழ்நிரலம்பசிவஞானந்தன்னைநேர் படாதுளமுருகிநிற்குநாளில். (௨)

கன்னியிளமடைடையளியுந்துளிக்குந்தெய்வக்கற்பகநாண்மலர்நறைவாய் கவர்ந்துண்டாடும், மனனியபூஞ்சுரும்பு மிமிர்வான்றேய்சோலைவளர்புகலிப் பதிபரவவருவானுள்ளே, தன்னியலும்பசுபோதமகன்றுமேலாந்தலைவனருட் போதம்வருந்தரத்தாலார்வம்,துன்னிமனமொருப்படுவான பன்றடாகந்தோய்ந் துயிரளயவிடங்கற்றெருழுதுபோற்றி (௩)

நஞ்சுபொதிமணிமிடற்றுக்கஞ்சுகேயனளினமலாத்தாள்பரவிநைவென் கோட்டுப், பிஞ்சுமதிகிடந்திமைக்கும் பெருநீர்வேணிப்பிறபேசனடிக் கண்பு பெருக்கிநல்லான், அஞ்சுமமுதோரைஞ்சுவிதியாலாட்டியருத்திவழிபாடாற்றி யடியேற்குன்றன், செஞ்சரணமுளரியைவிட் டெஞ்சல்செய்யச் சித்தநிலை பெறவருளிச்செய்வாயென்று (௪)

காற்றிசையி னினிதிருந்ததிங்கண்மாலைக் கடவுளடிக்கருச்சனையில் உ மையார்த்தி, மாற்றருமைப்புலனொடுக்கித் தோணிமேபா றவிடையந்தணன்றி ருத்தாண்மனத்தின் புகன்னி, ஆற்றலுருகுணங்கரணம்பிறவு மெட்டாவற்புத நீடொளியொடுப்பக்கழுந்திப்பனனுள், சோற்றுடலம்வாட்டிய பேரறிஞன் முன்னநனைவெயிற்றுப்பணிமாலைநுடங்கமாதோ. (௫)

கங்கைநதிவேணியுமுக்கண்ணுமானநகைறமிடறும்பிறைமுளையுங்கரங்க ளான்கும், மங்கையொருபாலு மணிகிளர்முந்நூலுமறிமழுவும்பெறுகருணை வதனப்போதும், கொங்கடருங்கொன்றையும்வெண்ணீறுமார்புங்கொலையுழு வையதளுமணிக்குழையுமாயன, பங்கயாண்ணிய மலரும்பொலியவாதிபகவ னெழுந்தருளமுனிபணிந்துகண்டான் (௬)

அருமறைநாயகபோற்றிஞானவல்லியாருயிரேபோற்றிமுக்கணமலபோற்றி நிருமலமாயுலககாரணமாயம்பொனெடுவரைமேலிருந்தவனேபோற்றிநேமித் திருமகனையனலையடிகணையாக்கொண்டசிவபோறறிநேணிதிண்டோளபோற்றி பெருகுசராசரவுயிர்கட்குயிராய்நின்றபெரியநாயகபோற்றிபெம்மான்போற்றி.

ஓவருமைந்தொழிலுடையாய் போற்றியோகருளத்தி லெழுபரஞ்சுடரே போற்றிமாயன், பூவயன் போற்றியபாதகாலகால புண்ணியமங்களமேனிப்பு னிதபோற்றி, தாவருமான்மழுவணிகைத் தலத்தாய்போற்றிசந்திரசேகரகாம தகனபோற்றி, மேவுபகனெனுங்கதிர் கணிடந்தாய்போற்றி விறல்வேங்கை யதள்புனைந்தவிமலாபோற்றி. (அ)

செக்கரிளஞ்சடைமுடியாய்போற்றி நீண்டசெம்பொன்வரைச்சிலைவளைத்
தநம்பபோற்றி, அக்கரவமணிந்ததிரு வரையாய்போற்றி யாரணநாரணன்றே
டற்கரியாய்போற்றி, பக்கமலிகுறட் பூதப்படையாய்போற்றி பாய்திரைவெவ்
விடநுகர்ந்த பரனேபோற்றி, திக்கெவையுமப்பர மாவுகந்தாய்போற்றி சிவ
ஞானகுருமுதல்வாபோற்றியென்றே. (௯)

என்புருகமயிர்பொடிப்பமொழிதள்ளாடவிணையடிப்பூங்கமலமிசையிரங்
கியேத்தி, அன்புருவாநின்றனையுன்போலன்பராருளர்பெயிழ்ந்தன கேளித்து
மென்னப், புன்பிறவிப்பிணிதணிக்குமருத்துவாநின்பொன்னடியைப்பிரியாத
நன்னர்ஞான, நன்புலனென்றிடவடியேற்களித்தல்வேண்டுநாதவெனப்போத
முதனம்பன்கூறும். (௧௦)

மய்யுறுத்தருள்யாமுப்பயநின்னைமருட்டிய மாயையுமலமும்வினையுமோர்
ந்து, மெய்ம்மையயுணர்வது ஞானமதுதான்மருல்லவினைப் பாடொத்துழித்
தோன்றுந்தோன்றுங்காலே, எம்மருட்சத்திநிபாத மியையத்தோன்று மெம
தருளேயுனக் குரிமையென்றுந்தோன்றும், அம்மலமைந்தும் மோருநாமுநீயு
மாதியெனவறிந்திடுதியறிவானமிக்கோய். (௧௧)

இருமாயைநீங்கியசத்திநி பாதந்தானிறைசரிதையாதிகளையிழைத்தார்க்
கன்றி, மருவாதுநாமியற்றுந் தொழிலோரைந்துமன்னுயிரின்பொருட்டாகுங்
களிம்புமூடி, ஒருவாதசெம்பெனமாமலத் தாற்றமைமையுணராதெம்மையுமுண
ராதுயிர்கள்யாவும், கருமேவிமுன்னைப்ருவினைக்கீட்டக்கக்கறங்கெனநின்றுழலு
முறுகதிகாணுமல் (௧௨)

பருவமதுகன்னியுழைப்பாரா நினைறபதிபோலப் பசுவினதுபருவம்பார்த்
துத், தருதலின்றனபசுபதிநாமுப்பாங் கன்னிசரிதைமுதல்வழிநான்குந் தகை
சால்கேள்வன், பெருமிதநல்பசைகேட்டலவனையெய்தும்பேராராதனைமுடித்
தல்விழியாற்காண்டல், ஒருமையுறந்தனை மறந்துகலந்தல்போலுமுணரினெம
தளவிலின்பமுண்ணுமாறே (௧௩)

இயற்கைநிறந் திரிந்துறுபன்னிறங்கடாறுப்ருந்தபளிங்குச்சிபடு மிரவி
முன்னே, மயக்கமறவிளங்குதல்போற்புலன்கண்மூடிமருண்டவுயிர்நமதருளை
மருவித்தத்தம், செயற்கையுறுபசுகரணச் செய்கைநீங்கிச்சிவகரணத் தெமை
யுணர்ந்துதிளைப்பதல்லால், அயிற்பிலெமதைந்தொழிலையியற்றமாட்டாவலகை
யுடையுறுப்பினர்போலமையுமன்றே, (௧௪)

ஓதறுகேவலசகலசுத்தமூன்றினுணர்வுமலிசுத்தவுயிர்க்கொழியவேனைப்
பேதுயிர்கட்கருளாற்றவிளங்காதுற்றபிணியறியுமருத்துவன்போல்வினைநாமீயு
மீதுநுகரணுக்கண்மலவழுக்கைஞானவிரிபுனலாற்றுடைத்தன்றிவினீர்த்த
ஓதுகட்பூனலேனுங்கழுவலாற்றுமொய்த்தபுலப்பகைகடந்தமுனிவரேறே.[ம்

ஈட்டியனவிழித்தளவேயொழிந்தவேலையெடுத்தவினையுடலோடுமெதிர்நாளெய்தக், கூட்டும்வினையெமையுணருந்திறத்தான்மாயுங்குறைவறவே ருறியாதுகுறித்துச்செவ்வன், நாட்டுறுபல்பொருடொறுநாமியைந்தவண்ண நயப்பதுவேஞானமெனநல்கியாங்கே, ஓட்டுபுனல்விழியருவியொழுகாநின்றவுரோமசன்பாற் பின்னருமொன்றுரைப்பானண்ணல். (கசு)

மாற்றரியவெமதுதிருவாக்கினு லுன்மலங்கழுவவிளங்குதலா லிவ்வூர்க்கென்றும், சாற்றரியகழுமலமென்றுருநீயுந்தாணிழற்கீழெய்துகெனத்தண்டேன்சிந்திக், கீற்றுமதிக்கோடுழக்கமுகைவாய்விண்டகிளரொளியகடுக்கையந்தார்கிடக்கும்வேணிக், கூற்றடுதாண்மழவிடையூர்குழகன்செம்பொற்கோயிலிடைமறைதலொடுங்குணக்குன்றன்னான். (கஎ)

பாசமலவலிகடந்துகலாதிமாறிப்பட்கரணக்குணம்பொறிகள்பலவுஞ்சாய்ந்து, நேசமதினினையாதுநினைந்துஞானநீடொளியிலொன்றியொன்று நிலைமைத்தாகி, மாசகல்பேரானந்தவாரிதோய்ந்தமாமுனிவன்சரிதையிதைவரைந்தோர்கேட்டோர், தேசுபெறவிளம்புவோரெவருஞானச்செல்வரெனவீற்றிருப்பார்சிவன்றுள்பெற்றே (கஅ)

கொள்ளைவரிவண்டுழக்கமுகைவாய்விண்டகோகனகத்தடம் பொகுட்டிற்பொலன்குட்டன்னம், கள்ளவிழிப்பெதும்பையர்காற்சிலம்பினேங்கக் கருங்களமரரங்கிதெனக்கணிக்குமாரீர், வெள்ளமுதுதடத்தெழுந்தவெடிவாய்வாளைமிடற்கமுகமடல்கீறிவிரிதேனூட்டும், அள்ளல்வயற்கழுமலத்தினியலிதென்றுனருங்கலை நூற்றுறைகடந்தவறிஞர்கோமான். (கக)

(கசு - ஆவது. கழுமலமானவத்தியாயமுற்றிற்று. ஆ. திருவிருத்தம்-கூஉசு.)

## கஎ-ஆவது. புறவமானவத்தியாயம்.

சிறையாருமலப்பகைசெற்றுமுனித்திலகன்சிவஞானபதம்பெறலால்
மறைவாணர்துவன்றியகாழிகழுமலமாகியவாறிதுமேலிதுதான்
குறைநாடுகபோதநிறைக்கொருவன்கொழுமேனியரிந்தெழில்பெற்றிடலால்
முறையேபுறவப்பெயருற்றதுவுமுனிபுங்கவனோதியவாமொழிவாம். (க)

விரையார்தருகொன்றைநறுந்தொடையான்வேடங்களினீடுகருத்துடையான்
வரையாதுதருங்கடிவார்முரசமாருமன்முழங்குகடைத்தலையான்
புரைதீரருணற்குலதீபமெனப்புனைமாமுடியான்முனைநாளினெடுந்
திரையாடைமடந்தைமணாளனடற்சிவிசக்கரவர்த்தியெனுந்திறலான். (உ)

மலையொத்ததடம்புயமுஞ்செயமுமலரொத்தவிழிக்கடையுங்கொடையும்
கலையொத்தகுணத்துறையும்பொறையுங்கடலொத்தநிதித்தனமுங்கனமும்
துலையொத்தசமத்துவமுந்தவமுந்துகளற்றமணத்தருளுந்தெருளும்
உலகொத்தசரித்திரமும்பரமுமுடையான்மனுநீதிவரம்புடையான். (௩)

காலந்தொறுமாமழைமாரிகொளக்கலைவாணர்மகிழ்ந்துபொன்மாரிகொளச்
சீலம்புனைநூல்வழிதீவளையச்சேரும்புகழோரெழுதீவளையக்
கோலொன்றினிரும்புவியேவல்செயக்கோவூர்தியடிக்குளமேவல்செயச்
சால்பொன்றியசென்னிகுலம்பொலியத்தன்னோர்குடைகொண்டுபுரந்தருளுள்

அனையான்முதுவேள்விசெயக்குறியாவகிலத்தலகோடியினுத்தமமாய்
முனையோகிகண்ஞானிகள்வாழிடமாய்முத்தாபமுருக்குவதாய்மறுமைத்
துணையார்பவநூறியருட்டருமத்துணையாயதிபாவமொழிததிடர்தீர்
புனைமாதவசித்திவிளைக்குமெழிற்பொலிகாழியுண்மந்திரிமார்களொடும். (௫)

தானைக்கடல்சூழ்வரவெய்தியயன்றடமூழ்கியருட்பிரமேசனைமெய்ஞ்
ஞானக்குருவைத்திருமாதுரிசேர்நகுகஞ்சுகனைத்திரசுந்தரியைச்
சோனைப்புயலன்னவனன்பினொடுந்தொழுதங்கரத்தின்வடக்கயல்சூழ்
மூனைத்துவேவோர்விதிநூல்வழியேமகமொன்றுதொடங்கியவெல்லைதனில். (௬)

ஆதிக்கயிலாயவரைப்பெருமானரசன்புரிநீதியுமாறறமும்
சோதிக்கவனைந்தமரேசனையுஞ்சுடரோனையுமுன்னினன்மற்றவரும்
நாதித்தகறங்கருவித்திரள்சூழ்நகுவெள்ளியடுக்கலினந்திபிரான்
ஓதிப்புகுவிப்பநுழைந்தெனையாளுடையானடிகண்டுபணிந்திடலும். (௭)

முன்னிற்பவர்தம்மொடுமெய்ம்முடையான்முறையாலருள்செய்திருவீருநெடும்
பொன்னித்திருநாடுறுகாவலவன்புகழ்மிக்கபுகார்நகரத்ததிபன்
சென்னிப்பெருமானுலகம்பரவுஞ்சிவிசெய்மனுநீதியைமூதுலகோர்
உன்னித்தெரிவான்மனம்வைத்தனனீருடனிக்கணமேதெரிவித்தணைவீர். (௮)

என்றதிபரம்பரனல்குதலாலிமையோரிறையுந்தழல்வானவனும்
சென்றார்பலதேயமகன்றுகளிச்சினவாளையெழும்புனனாடணுகிக்
குன்றாமுறைநீதிசெய்வேலுழவன்குறியாதவுருக்கொடுகூடினமேல்
இன்றேநமதெண்ணநிரம்புமெனவிருவோருமறைந்துருமாறினரால். (௯)

சேனத்திறைவானவனுகிவரச்செங்கட்புறவங்கியுமாய்வெருவா
மானக்கொடிசூழ்திருமாநகர்வாய்மனுசேகரன்வேள்விசெய்சாலையினில்
கூனற்புறவாவிதளர்ந்தலறுங்குரலோடுமொடுங்கியடைந்துநெடும்
தானக்கடலொத்துளமன்னர்பிரான்சரணேசரணென்றுவிழுந்ததுவே. (௧0)

வீழுஞ்சிறுகட்புறவுக்கருளால்வெருவேலொருபோதுமெனக்கருகே
ஆழுந்துயர்விண்டினிதாயுறைகென்றபயந்தருமவ்வழிவெவ்வியகட்
போழுஞ்சிறுதுண்டமொடும்பொருமிப்புறவெங்ஙனமென்றுருகங்கமுமேல்
ஏழுண்டவயக்களிறன்னவன்முன்னெய்திச்சிலவெய்யவுரைத்திடுமால். (௧௧)

அரைசேயுயர்சோழர்பெருந்தகையேயளியேனெடுவெம்பசியாறிடுமா
றிரைதேரியவந்தகபோதயரோவின்னேதருகென்னலுமன்னர்பிரான்
உரைசாலுயிரேனுமளிப்பதலாலுன்றஞ்சமெனப்புகுமோருயிரைத்
தரையாளபவரீவதுநேர்குவரோதருமத்திறைநிப்படுதன்மையினால் (௧௨)

தண்டாரவனீ துலைசெய்தலொடுந்தணியாவெளிரும்பசிதீர்புறவைக்
கொண்டாயென்வயிற்றெரியண்டியடக்குடர்வேவதுன்க்கழகோகணமுன்
உண்டாகவடுக்கவிரங்கினையோவூனுண்ணவிரும்பினனக்கரிதோ [னே.
கண்டார்பொருண் மன்னவர்கொள்வரெனிற் கங்கத்தினுமுண்டுகொல் காவல

வெருவுற்றபுறுவெனநாடியநின்விழியாலழியும்பசிகொண்டொருபா
றுருகுற்றதெனத்தனிநாடிலழுக்குளதோவுனதாள்புவிமன்னுயிர்போல்
மருவுற்றனன்யானயல்வேறுளனோமற்றொன்றினையொன்றடமாமலரோன்
நிருமித்தவினைக்கிடையூறுசெய்தானீதிக்கிதடாதுநெடுந்தகையே. (கச)

போர்க்கென்றிருமன்னுயிர்பொங்கியெழிற்புறநின்றுமகிழ்ந்திடலன்றியுமே
பார்க்கின்றவர்சீறுவரோவவர்போற்பார்வேந்தர்பொருள்களெனிற்பலவா
வேர்க்கின்றனநின்னுலகத்திலையோவிழிகண்டதொறுப்பரெனிற்பசியால்
கூர்க்கின்றவெனக்குமொராறுதனைக்கூறென்றுயர்பாறுபுகன்றதுவே. (கரு)

வெம்பாறுபுகன்றதுமன்னர்பிரான்மிளிர்செஞ்செவியேறியியப்பமுறீஇ
அம்போருகவாண்முகவன்புகல்வானபயம்புகுமோருயிராருயிர்போல்
நம்பாதரமிக்கதுகாணிடர்கூர்நனிநோயடவந்துளதேலதனுக்
கைம்பூதவுடம்பிலிடந்தருவாராரோபுகல்வீரமுடைப்பறவாய். (கசு)

பாருள்ளவுயிர்க்குடல்யானெனவேபாராவதமென்னடிபற்றியரச்
சூருள்ளுபுரீயுமடுத்தனையாற்சுடுவெம்பசியாலுயிர்போகறியாச்
சாரும்புறவன்னதுநீபருகிற்றன்னுருயிர்போமினிநீவிழையின்
தேருந்தசையேனுமிறந்துபடாச்சேணாரமுதேனும்வழங்குவெனால். (கஎ)

சோராவமுதுந்தருதன்மையனீதொல்லூனைவிரும்புதலன்றியெனக்
காராவமுதென்னெனமன்னர்பிரானயலோருயிரைக்கொலைசெய்திலெனென்
சீராருடலூனிடுவென்கவருந்திறமெங்ஙனமென்னமகிழ்ந்தபருந்
தோராதுலையிற்புறவுக்கிணையொத்திடவுந்தசைதந்தருளென்றதுவே. (கஅ)

பாறங்ஙனமோதலுமீதுமெனப்பல்லோருணவுள்ளதெலாமுதவா
தாமொன்றுகவர்ந்ததன்மேனியின்மேலருளற்றுமுனிந்தனனேவலரும்
ஈறுண்டமுளைப்பிறைவேணியினன்கிளருஞ்செயலோவயலொன்றுளதோ
கூறுண்டதனீதியினிற்சிறிதுங்கோடாமைகுறித்தனனேநிருபன். (ககூ)

மறைவாயிருவானவரும்பலமாமறைவாயிருவானவருங்களையத்
துறையூபதலத்தருகாகநெடுந்துலையொன்றுநிறுத்திமதிக்குடையான்
நிறைவேறியராதியர்போதியல்கண்ணிணையாரிமைமூடியிரங்கவெழுந்
துறைசாயவிடுத்தொருபூமுகவாளருவிக்கொடுநின்றுபிறெண்டிறலோன். ()

மண்ணாள்பவர்மாதிசையாள்பவர்மாமலையாள்பவர்வார்கடலாள்பவர்நீள்
விண்ணாள்பவர்யாவரும்வெய்துறவோர்வினைவெங்குருதிக்கணரும்புறவைப்
பண்ணோரொருதட்டிடையிட்டுமுறைப்படியேயடிதொட்டுமிடற்றுவளைக்
கண்ணார்தசைமற்றொருதட்டிடையேகைவாளினரிந்துசுமத்தினனால். (உக)

கோலேறியவூனிடுதட்டொருபுட்கொண்டேறியதட்டதுகீழுறவே
மேலேறுதல்கண்டடலேறனையான்வேறுந்தசையில்லெனமெய்யினையான்
சால்பேறியதாரணியெங்கணுமோர்சமமேறவிருந்தியல்செய்வதெனப் [ன்.
பாலேறுதன்ஞகமொடேறியதைப்படிவித்தனன் மெய்பொய் யெனத்தெரிவா
மெய்யோடுதிரம்பொழியக்கழிபோல்வெற்றென்புநரம்புதுலங்கிணைப்
பய்யோடுகெழிந்துமுன்ஞமியல்பிற்பயில்கிளறவஞவியைவைத்ததுதான்
மெயயோமனுநீதிகொலோவெனையாள்விமலன்செயலோவரசன்பொறையோ
அய்யோவிவனெப்பவர்முப்புவனத்தாரோவினிமேலுமுன்னுளினுமே. (௨௩)

மண்ணஞ்சினமாதிரமஞ்சினநான்மறையஞ்சினயாதவரோன்மைகெடார்
எண்ணஞ்சினயாகதலத்துறுவோரினமஞ்சினவிண்டைமலர்க்குடிவாழ்
பெண்ணஞ்சவுமஞ்சலஞயெறம்பிழையான்விரதத்தையறிந்தியமன்
கண்ணஞ்சினவர்துகரந்துறையுங்ககஞதிபனுந்தணியஞ்சினஞல். (௨௪)

அப்போதுபருந்திறைவானுலகத்தவருக்கிறையாகிவிளங்கமலர்க்
கைப்போதுமொழிந்திமையோர்மகழக்கடிவார்முரசங்களியங்குளிறச்
செப்போர்முலைமங்கையராடல்செயதரேசாதிபர்நின்றுதொழத்துலையின்
துப்பேறியதட்டினிறங்கியெழிற்குளாபணிபன்னவனின்றளவே. (௨௫)

உலகத்தறியாதவருந்தெரிவானுன்னீதியையாதிதனைவலிஞல்
இலகத்தெரிவித்தனனிந்திரன்யானிவனுந்தழல்வானவன்முனனொருநாள்
தலைபெற்றதங்சிவெற்றென்புதனைத்தருகென்னவருந்தவனிதலுமே
நிலைமைக்குவசப்படைபெற்றனென்யானின்னெப்பவனன்னவஞேபுகலாய்.

புரமட்டபுராதனனின்னருளிற்புக்கேமொருமுப்புவனத்துளும்வாழ்
அரசர்க்கரசானபெருந்தகையெயழிபட்டநின்மேனியையீவ கமுகில்
பரமுற்றபசுங்குலையைச்சிதறப்பைஞ்சேலுதறிச்செஞ்சேறுபடும்
தரமிக்கவயற்புகலிப்பதிவாழதலைவன்றரநீவலிகொண்டிடுவாய். (௨௭)

வேறு.

என்றுபுகன்றீர்வாளினரிந்ததசையாவையுமுன்னியல்பிற்கூடி
நன்றுபொலிவுறப்பொலிந்துவாழ்தியெனமன்னனுமன்னன்மைவாய்ந்து
குன்றினிருசிறகரிந்தோய்நீர்வேட்கைமிகவுடையேன்கொடுத்தியென்ன
அன்றுபுறவினைநோக்கியைங்கரன்காவிரிப்புனல்கொண்டளித்தியென்றுன். ()

ஆங்கதுசென்றகன்கரையையலகுகொடுகீண்டுய்ப்பவலங்குதெண்ணீர்
ஏங்கொலியின்வரலோடுநிருபனந்நீர்பருகிவிடாயிகந்தான்விண்ணில்
ஓங்குதருக்காவலனுமனலோனுந்தம்பதியிலுற்றூர்மண்மேல்
வீங்குசிறைப்புறவுகொணர்ந்தளித்தலினற்புறாநதியாய்விளங்கிற்றன்றே. (௨௯)

இவ்வாறுநிகழ்ந்தபின்னர்வேள்விவினைத்துறையாற்றியிமயவெற்பால்
தெவ்வாறுகடந்தபரன்றிருவருளீதெனவுன்னித்திணிவெண்கோட்டு
மைவ்வாரிமதமலையானைம்பெருஞ்சுற்றமுந்தழுவமதகைத்தானை
கைவ்வீறும்புடைநெருங்கத்தோணிபுரம்பேணியவென்றெழுந்துபுக்கான். (௩௰)

தேராழிகிழித்தநெடுந்திருவீதிகடந்தமலன்செம்பொற்கோயில்
ஓராழிமகன்மகன்செய்தீர்த்தமதுபடிந்துகடனொருங்கேயாற்றி
நீராழியிளம்பரிதிநிகர்நிறத்துக்குருபரனைநிமலையோடும்
பாராழியன்பினொடும்வணங்கிமலைக்கொழுந்தினடிப்பூதுமம்போற்றி. (௩௧)

கைம்மலையீருரிபோர்த்தபிரமேசனிருபாதங்கனிந்துபோற்றிச்
செம்மலர்ப்பொற்றடக்கையினாற்றூநறுமஞ்சனமாட்டித்தெய்வச்சாந்து
மெய்ம்மலியானைந்துமழுதோனைந்தும்விளையுளவெவ்வேறுமாட்டி
அம்மலர்கொண்டருச்சனையின்றுறைமுடித்துப்பரிவொடுமின்னமுதூட்டி ()

வாசநறுந்தூமமெடுத்தலங்குசுடர்நிரைகாட்டிமலர்கடூவி
நேசபரம்பரவிமலநித்தியதத்துவஞானநிமலமூல
பாசவிமோசனவாதிபகவவெனவகநெகிழப்பணிக்கண்வார
ஏசகலுமயிர்பொடிப்பப்பணிந்தான்முன்னுபிர்க்குயிராயிருந்தானன்பால். (௩௩)

மறுவறுவெள்ளியங்குவட்டின்மழைபுணரும்பொற்குவடுவந்தாலென்னக்
குறுநகைவாணுதற்கூந்தற்கொடியுடன்வெள்விடையிவர்ந்துகோமான்றோன்றி
உறுபொருளுள்ளியதுதவும்வள்ளியோய்நின்வழிபாடுவந்தேமெண்ணம்
பெறுதியுனக்களித்துமெனமதிசூடியெதிரரசன்பேசுமன்றே. (௩௪)

தென்றலந்தேர்க்காளையெழில்கவர்ந்தநுதல்விழியழகாதிளைநீராடை
மன்றனிலம்பரிததிறுதிவருநாளுன்னிருதாளிலவாவுஞாலத்
தென்றுமிசைவிளங்கியரும்புறவினுக்கூன்கொடுத்துனைவந்தேத்துமிவ்வூர்
பொன்றலரும்புறவமெனப்பொலயவுமீங்கருளுகெனப்புகன்றுபின்னும். (௩௫)

கோதிலருங்குணக்குன்றேயளியெனுக்காப்புறவுதந்தகுளிர்நீர்த்தெய்வச்
சீதநதியிதிலாடித்திங்கடனிப்ரொன்பான்றினத்தில்வெற்பன்
மாதரசோடெழுந்தருளிமன்பதையுய்ந்திடத்தீர்த்தம்வழங்கிமூழ்கிப்
போதருவோர்க்கிருமையினும்புத்தியுமுத்தியுந்தகைசால்புதல்வர்ப்பேறும். ()

தண்ணளியான்மகிழ்ந்தருளியைம்பெரும்பாதகமுப்பாதகங்களாதி
அண்ணலிருமுதுகுரவர்முதலோரையிகழ்ந்தவினையனைத்துநீக்கி
எண்ணரியசித்திகளுங்கொடுத்தருளுகெனவேண்டவிணர்ப்பூங்கொன்றைப்
பண்ணவனுங்கவைகளளித்தெழுந்தருளினான்விடைமேற்பசும்பொற்கோயில்.

வரங்களலகிலபெற்றுமனமகிழ்ந்துவிரிந்தபழமறைநூற்கேள்வி
நிரந்தரவேதியர்திறத்துநிகரிலடியவர்திறத்துநிறைபொன்மாரி
சுரந்தெழிலியெனவீசிநால்வகையகூற்றுனைசூழ்ந்துபோத
புரந்தைதணிந்தெழில்கனிந்தவரசர்பிரான்றிருநகரமணைந்தான்மன்னோ ()

முடங்குளைவாளரியணைமேலிருந்துபுறந்தருமொருகோன்முறைநடாத்தி
அடங்கலரைவலிகவர்ந்துநால்வகையபேரறமுமளியாலாற்றித்
தொடர்ந்தபுகழ்நிலைநிறுவிநிலவணிவேணியனடிமைத்தொண்டுபேணி
நடங்கிளரும்பிரமேசன்பதம்புகுந்தான்சிவியெனுமோர்நாமவேலரின். (௩௯)

(௧௭ - ஆவது. புறவமானவத்தியாயமுற்றிற்று. ஆ திருவிருத்தம் - ௯௫.)

# கஅ - ஆவது. பூந்தராயானவத்தியாயம்.

இன்னதிரெழின்முன்னியோர்புறவின்பொருட்டரசெய்தலால்
மன்னுமாநகர்புறவமாகியவாய்மைமீதிதிலாதிநாள்
பொன்னுலாவியமார்பனுந்தொழுபூந்தராயெனவாய்ந்தபேர்
தன்னை மாமுனிசொன்னவாறொருதன்மையோதுவெனுண்மையே. (க)

காற்றினுஞ்சுடுகனலினுங்கடைநாளில்வந்தெழுகாலவெங்
கூற்றினுங்கொடியானெடுங்கடல்கொப்புளித்துமிழ்வாயினான்
ஆற்றல்வானவருயிர்பிசைந்துணுமயிலினனடிநாளிலோர்
ஏற்றமண்டியவிரணியாக்கனெனுங்கடுந்திறலவுணர்கோன். (உ)

அண்டவாணரொடொன்றுபோர்செயுமந்தநாள்வலியிந்திரன்
சண்டவார்பிடைமண்டவாவிதளர்ந்துபோயவுணகருங்
கொண்டலூர்தியுமமரரும்பெறுகோளிலாவலிவீறெலாம்
மண்டலந்தொறுமேதழைத்திடுமாதவத்திறலாமென. (௩)

யானவேள்விவிதித்தளிப்பனமாமனுக்கள்கணிப்பன
தானமிக்கவர்பாலளிப்பனசாறயர்ச்சிவிளைப்பன
ஆனவிவ்வறனாலிருந்திறலாருமும்பர்கள்வீறறப்
பூநலந்தனையான்முகந்தயல்போவலென்பதுவவ்வியே. (௪)

ஏதமிக்குளபாதலத்திடையேயமைத்தருகாகவோர்
மாதலத்தடலோனொளித்தலும்வானவர்க்கிறையாதியோ
ஓதரக்கர்புலாலொழுக்ககலாதசக்கரபாணிதன்
பாதமுற்றடியேமனத்திடர்பாறுதற்கருள்கூறென. (௫)

எற்குலாவுதுறக்கமீதிலெமக்கெலாமொரிடுக்கணுய்ப்
பொற்கண்மேயவொருத்தனுடமர்புக்குமேலுமெமைக்கொல்வான்
வற்கரீடமிக்கபாரைவருத்தபாதலம்வைக்கயாம்
ஒற்கமேவினமைக்குமாமுகிலொக்குமேனிமலர்க்கணாய். (௬)

ஏன்றுவேருறநின்றதேவரையிங்குநீவிரிரங்கலீர்
வென்றுமீள்குவலென்றுமண்ணொடுவிண்ணுநீடியவெள்ளியங்
குன்றுபோலொருபன்றியாயுறுகோளமேவியபாதலத்
தொன்றுமாறொடுசென்றுவெஞ்சினமூக்கினின்றெதிர்தாக்கினை (௭)

தாக்கிவந்தடர்கேழன்மேலொருதண்டுகொண்டுநிசாசரன்
தூக்கிமோதமருப்பினாலதுதூளிபட்டுகெநூறியே
மேக்கொடுங்கருநீலவெற்பினைவெள்ளிவெற்புதுபாய்தல்போல்
ஊக்கமிக்கதிறலவுணர்கோன்மிசைவாய்ந்துவல்லுளிபாய்ந்ததே. (௮)

மிக்ககோடுகிழிக்கமார்புவெடித்துவேறுபிளப்பதாய்ச்
செக்கர்வானமெனக்குலாயசிவந்தசோரிபுறந்தரத்
தொக்கதேவர்வலக்கணென்னவரக்கன்மேனிதுடிப்புறப்
புக்கதூதுவர்கைக்குளாருயிர்போயினனெதிர்மேயினான். (௯)

பள்ளவாயனைவெல்லவாகைபடைத்துஞாலவளைப்பெலாம்
வெள்ளையேனமதொண்மருப்பரிமேலெடுத்தலும்வானுளோர்
கள்ளருமலர்மாரிபெய்துகரங்குவிப்பவகந்தையாய்த்
தொள்ளைசேருணர்வெய்திவேறிணைசொல்லுவாரினியில்லென. (௰)

பீடுகொண்டுழியாடன்மாமயிலூர்திவந்திகல்பேசியோர்
கோடுகொண்டருள்போதமுஞ்சிலகூறியங்ககல்வேலைவாய்
வாடுபன்றியும்யோகுணர்ந்துபின்மாயிரும்புவியாவையும்
சேடன்வெந்திறலாயிரங்கொள்சிரத்துமீதிலிருத்தலால். (௧௧)

மன்னியெங்குநிமிர்ந்தபல்லுயிர்வளைவிலாதனவளைபடப்
பின்னிரும்பழிதுன்னிநின்றபெருத்தகேழலுருத்துறந்
தென்னிருங்கடவுட்பராவியிகப்பலிப்பழியென்றெழும்
கன்னிமங்கலவின்னியங்கிளர்காழிவந்தனனாழியான். (௧௨)

பால்கருங்குயில்வீணைபைங்கிளிடாங்குமென்கனிபூவைதேன்
கோல்கரும்பிழிசாறுறுஞ்சுவைகூசநின்றுளைபேசுவார்
மேலரங்கினிலாடல்பொங்கணிவீதிகண்டொருசோதிவாழ்
ஆலயந்தனினாரணன்றடமாடினன்குடமாடினான். (௧௩)

பேறுதுங்கடன்யாவுமன்பொடுபேணியைம்பதமோதிவெண்
ணீறுகண்டிகைமேனிகொண்டுநிலாவிளம்பிறைவேணியான்
வீறிலங்கியபாதபங்கயமேலருஞ்சிவபூசைநூல்
ஆறுகொண்டடைவேவணங்கலுமாழ்தடங்கடலாழியான். (௧௪)

கோமளக்கொடிபாலுறப்படர்கோடுடைத்தனியேறுகைத்
தேமவிற்குழைசேவகப்பெருமானடுத்தலுமீறிலா
மாமறைப்பொருளேயெனக்கருண்மாதவப்பொருளேயெனப்
பூமலர்ச்சரண்மேன்முடித்தலைபோதம்வைத்தலுமாதிதான். (௧௫)

செருமுகம்படுநிருதர்பொங்குயிர்தினமருந்தியதிகிரியாய்
உருகியிங்கெமைவழிபடுஞ்செயலுவகைகொண்டனமொருவனீ
கருதுகின்றனதருதுமென்றருள்கருணையங்கடலடிவிடா
தருகுநின்றிருநிலமடங்கலுமமுதுகொண்டவனறைவனால். (௧௬)

அனகநினதடியவளையிடர்கள்செய்தவனிகவர்தரநிருதனோர்
கனகவிழியனையழியமுரணியகடுவலுளியெனவடையயான்
பனகமுடியிலென்னுலவைறுதிபடுபடியையிநிறுவலுமளவிலா
இனியவுயிர்பலநல்யவருவினையெனையுமருவினதிறைவனே. (௧௭)

ீந்ததீவினைதீந்துபோதரவேண்டுகேள்புவிநோன்றலால்
பூந்தராயென்னான்செய்பூசனைபூண்டவூர்பெறவேண்டுமால்
வாய்ந்தநான்மறையோர்தலையெனவாண்டுகூறியமாண்பெலாம்
ஏய்ந்துதாண்மிசைவீழ்ந்தமாயனையெழுகெனவருண்மொழியினால். (கஅ)

பின்னரும்பலவரமளித்தொருபேதைபங்கினன்மூதெயிற்
பொன்னலங்கிளர்கோயிலூடுபுகுந்தபின்னர்முகுந்தனும்
மன்னரும்பதமெய்தினனுயர்தவமுனீரெனமறையெலாம்
முன்னருந்துறைகண்டுளானடிமுளரிசூடிமொழிந்தனன். (கக)

(கஅ - ஆவது. பூந்தராயானவத்தியாயம்முற்றிற்று. ஆ. திருவிருத்தம்-கஅச.)

## கக-ஆவது. மலைவரவுரைத்தவத்தியாயம்.

வேந்தராமுடிமேற்பாணாவிடுத்தமால்வினைவிண்டேகப்
பூந்தராயானதொல்லைப்புனைபெயரொடுமுந்நான்கு
வாய்ந்தபேர்த்திறனும்வேறுமாண்மியம்பலவுமுன்னித்
தோய்ந்தவாலறிஞராங்கட்குதனையிரந்துசொல்வார். (க)

பருதியொன்றுதயஞ்செய்யப்பாயிருண்மாயுமல்லால்
கருதருமவிச்சையென்னுங்கங்குலுமாயவற்றே
ஒருவனின்னருளால்யாண்டுமொழிவுறுவுளத்துமாயை
இருளையுந்தடிந்தாய்ஞானத்திரவிநீயெங்கட்கென்றார். (உ)

பன்னெடுங்காலநோற்றபடிறுதீர்தவம்பழுத்தாங்
கின்னெடுங்கானத்தெம்முன்னெளிவந்தாயொளிருங்காழி
நன்னெடுநகரினுப்பணகுமணிமுயங்குங்கோட்டுப்
பொன்னெடுங்குன்றமுற்றபெற்றியென்புகல்வாயென்றார் (ங)

வியனுறுகாந்தந்தன்னில்விரிவுறக்கிளத்தலொன்றே
இயலுமூவறுபுராணத்தீற்றுறுபிரமாண்டத்தின்
நயனுடையுபரிபாகசுவிற்றுகேத்திரகாண்டத்தும்
உயர்மலைவரலாறெல்லாமோதுமென்றுரைப்பார்மேலோர். (ச)

அருணமாமணிசெய்மோலியாரியாவர்த்தந்தன்னில்
கருணையங்கடலன்னோர்காலவித்தென்னும்வேந்தன்
இருநிலமுழுதுந்தந்தையெனமுறைபுரக்குநாளில்
பெருகொளிமகப்பேறின்றிப்பேரஞருற்றானன்றே. (ரு)

அறிஞராமகப்பேறெய்துமநெறிபணித்தீரென்ன
உறுவர்சொல்வழியால்வேள்வியுயர்தவந்தானமாதி
பெறுமுறைபுரிந்துமைந்தர்பெறப்பெறாதழுங்கித்தேர்ச்சித்
தீரறவர்பாலரசபாரஞ்சுமத்தினன்வனத்திற்புக்கான். (௬)

அவனுரோமசனென்றோதுமறிஞனைவணங்கவன்றோன்
கவலையிலாதுவந்தகாரியம்வினவலுமைந்தர்
இவணறமெண்ணில்செய்துமெய்திலேனென்னவெம்மான்
துவளருங்கயிலைக்கோடுதொழத்தருமகப்பேறென்ன. (௭)

இழுதையேனென்செய்தாலுமெய்துமோவெந்தைநீயே
தொழும்வகையளித்தியென்னத்தோமிலானரசைஞாலம்
முழுதுடன்காக்கவேவிமொய்யொளிக்கயிலையெய்திப்
பழுதறுதவங்களாற்றான்பரனுமாங்கவன்முன்னுற்றான். (௮)

கருதியதுரைத்தியென்னக்கனைகடலுலகிலுள்ளார்
இருமையுமகவுமெய்தவிருவகைப்பொன்னிநாப்பண்
குருமணிக்கயிலைக்கோட்டோர்கோடுறைதரவுஞானத்
திருவொடுமிவண்போல்வாசஞ்செய்யவும்வேண்டுமெந்தாய். (௯)

என்னலுந்திங்கட்கண்ணியிமையவன்காற்றின்வேந்தும்
பன்னகவரசுமேலோர்பகலிகல்விளைப்பரந்நாள்
அன்னவர்புரிதுங்கற்பத்தவணியாம்வருதுமென்ன
இன்னறீர்ந்தந்நாட்காறுமிருந்தனன்முனிவனிப்பால். (௧௦)

மாயலிமார்பன்வேதன்வானவர்க்கிறைவனேனை
நாமமாதிரத்துச்செல்வர்நகுமிருசுடர்ப்புத்தேளிர்
ஏமுறுமகதிவல்லானிமையவர்பிறருமெம்மான்
தோமிலாவெள்ளிவெற்பிற்றொக்கனர்மிக்கதொன்னாள். (௧௧)

தொக்கவரவரில்வீணைத்துறைவலான்பகுவாய்தோறும்
மைக்கறைவிடங்காலைஞ்ஞூற்றிரட்டிமாமவுலியானைப்
புக்கதொல்வலியால்ரேழ்புவனமும்பரிக்குநின்னை
ஒக்குநர்யாரேயென்றுவுவந்தனன்புகழ்ந்தவாயான். (௧௨)

சேட்டிளங்கதிரைநக்கதிருமணிப்பணிகடோழன்
பூட்டினுமுவகையொல்லாப்புனிதனின்கிளையைவேணிக்
காட்டினும்புயத்தும்வேயுங்கலனெனப்பரித்தவாற்றால்
ஈட்டினுன்பெருமைபூண்டாரேவர்முப்புவனத்துள்ளும். (௧௩)

திவவியாழ்முனிவனிவ்வாறுரைத்தலுஞ்செருக்குமீக்கொள்
பவனனெஞ்சழுக்காறுள்ளிப்பருவிழிசிவந்துவாளா
இவனையேவியந்தாய்மேலோயிவன்முதலெவருமாயா
உவமைதீருயிர்ப்புநல்குமொருவெனுமிருக்கவென்றான். (௧௪)

அதுபொழுதலவைவேந்துமணங்கராவரசும்வெம்போர்க்
கதுமெனப்பொருவானென்றுங்கருத்துடையொருத்தன்வல்லே
முதுமதிவல்லசேடன்முன்னருற்றென்னேநின்னை
இதுபுகன்றிழித்தானுதையிறைவனென்றினையசொன்னான். (௧௫)

இயங்குவநிற்பவென்றேயெடுத்தபல்லுயிர்கட்கெல்லாம்
மயங்குநான்பெரிதுவனேனுமுற்றுநின்னுடலுக்காவி
நயந்துதான்றருதலின்றிருகுமணிச்சூட்டராவென்
றியங்குமாறெங்ஙனென்றானெறூழ்வலியரவவேந்தே. (௧௬)

வினையிடைப்பிணித்தஞான்றுமறிகடலிடத்தங்காந்து
புனைவிடங்கொழித்துமுக்கட்புனைவடுக்காணவைத்தான்
மனைமலர்த்திருவின்கேள்வன்மாணெழின்மழுங்கச்செய்தான்
நிறைகதிர்க்கடவுளோனைநெருக்குவானென்றுஞ்சொன்னான். (௧௭)

கொல்லினுங்கொடியனேழுகோளினுங்கொடியன்கேண்மை
புல்லினுங்கொடியனூற்றுட்போகினுங்கொடியன்மிக்கார்
அல்லினும்பகலினுந்தாமமையகத்திருந்துதன்பேர்
சொல்லினுங்கொடியனென்றுசொல்லினன்செல்வவென்றான். (௧௮)

பாப்பரசதனைக்கேளாப்படரொரிபொறிப்பப்பாரா
நாப்புடைவளையாநன்றுநன்றரோசுழலுங்காற்றின்
மூப்புடைவலிமற்றென்னுமுரணியஞாட்பினுற்றால்
வாய்ப்புறத்தெரிப்பென்போர்க்குவல்லனேல்வருவியென்றான். (௧௯)

வருவியென்றுரைத்தலோடுமெனைமலர்க்கிழவனன்றான்
பொருமொலிக்கிறைமுன்போந்துபொறுப்பனுமென்றுநின்னை
உருவிலியென்றுந்தீயோடுறவென்றுநெறியொன்றின்றி
வருபவனென்றுமொன்பான்வாயிலும்புகுவாயென்று. (௨௰)

முள்ளரிமுளரிச்செம்மன்மூதுலகடைந்தகங்கை
ஒள்ளிழையுத்தரீகமுடைத்துமஞ்சனையென்றேதும்
வள்ளைவார்குழையைவன்பான்மருவியுமாரனூரும்
கள்வனீயென்றுஞ்சொன்னான்கட்செவிக்கிறைவனென்றான். (௨௧)

வேறு.

சுருதிநூன்முனிவ னித்துறையெடுத்தறைதலுஞ் சுடுசினைப்பொறிவிழிக்கடையினிற்றெறிபடக், கருகிமாதங்கமூதண்டவேதண்டமுங்கணமுடைத்தொகுதியுங்கதிர்களுஞ்சுழல்படப், பெருகுவானிடியுகத்துருவன்மாவடுவுறப்பிலம்வெடித்திடவரைக்குலம்வெடித்தலம்வரத், துருவுநாரதனுளத்தளவிலா மகிழ்வரத்தோள்புடைத்தனனெடுங்காலுடைத்தலைவனே. (௨௨)

உலவையந்தலைவனிங்ஙனம்வெகுண்டெழுதல்கண்டோதுமா முனியுனைக்கோதிறுலெரிமணித், தலைகளாயிரமுடைச்சேடனுங்கூடிவெஞ் சமர்விளைத்திடமறுத்தமரரத்தலையினிற், பொலன்மணிப்படமெடுத்துரகருக் கிறைவனிப்புனைமணிப்பஃறலைக்குவடுறக்கவியுருத், தலைவளித்தலைவிக்கனகவெற்பிணிலுனக்கமர்வலித்திறனிலப்புதைதிறந்திடுகென. (௨௩)

தெறுசினத்திருவருஞ்சமரதற்கிசைவுறச்சேடனுயிரபணத்தாடகாசலமதிற்,குறைவறக்கொடுமுடித்திரள்புதைத்திடநெடுங்கோல்டவானவன்விஞ்சத்தாடலாலருகினிற்,பிறவனைக்குலமுதற்சருகெனத்திரிதரப்பெருகலைப்புணரிநெட்டலைவிரித்துலகடத், துறுமலர்த்தருமுதற் றருவினீம்பொடிபடத் தூளியாகியனகீழுலகுமேலுலகுமே. (உச)

பத்தெனும்பெயருடைத்திறல்வளித்தொகையினிற்படருயிர்ப்பொழியமற்றுளவுயிர்ப்புகளெலாம், கொத்துடன்குழுமியத்தடவனைப்புடையினிற்குவடுசூழ்வரவடித்தவனியீடழியவும், நத்துறும்பொறிபுலத்திடைமனத்தினைவிடாநண்ணுகேவலமகன்றெண்ணுபாழ்வெளியினில், சித்தொடொன்றியவுயிர்ப்பத்தியின்றிறனெனச்சேடன்விட்டிலன்மறைத்தாடகக்கிரியையே. (உரு)

அதுகணத்தமரரிந் திரன்வசுத்தலைவரோடகிலவானவன் முனைத்திகிரிவானவன் முதல், பதைபதைத்து றுவளிப்படையினிற் கடையுகப்படியெனப் படியிடிப்பதனைவிட்டொழியவே, விதிர்விதிர்ப்புடைவளிக்குறைசெயிற்பழுதெனவிரிதலைப்புவனமுற்றிலுமெடுக்குறும்வலத், தெதிரறப்பொருபணத்ததிபனைத்துதிதுதித்தெமைமதித்திதுபொறுத்திடுகெனப்பகருவார். (உசு)

உலகனைத்தையுமவற்றுறுமனுக்களையும் வைத்துறபடத் தினிலெடுக்குறுமுனசகிணையெனப், பலருமொத்திலரெனிற்சலசலப்புடையவிப்பவனனெப்படியுனக்கிணைபெறக்கடவனே, நிலமிசைப்பொறைபொறுத் தவர்பொறுப்பவரெனு நிகழுமிச்செயலினு லகல்வனைக்குவடெலாம், அலர்பணிப்படமுறப்புதைபுதைத்தவைபிலோரணிகுவட்டினைவிடுத்திடுவதுத்தமமரோ. (உஎ)

நீவிடுக்கெனமுதற்றேவருற்றறைதலானீடுயிர்க்கணமெலாமீடறத்திரிதலான், ஆய்வினைத்தெளிபொருட்டேயுமுற்றறிவினாலன்றநந்தன்படத்தொன்றையங்ஙனம்விடக், கோவியற்றமணியக்கிரியினிற்பலகிளைக்கோதிலாவெள்ளிவெண்சேகரந்தன்னிலொன், றுவலிற்கடுவளிதத்தேவிடந்திடவணித்தாய்முதற்கிளைவிழுந்ததிலுறுங்கிளையெலாம். (உஅ)

கதிதருந்திரிசிராமலையெறும்பீசுரங்கமலையேரகமிடைமருத நாகேச்சுரம், அதிகதிந்துருணிமாநகரமாணிக்கவெற்பரவமாநிருடக்கானதண்காழிபொன்பொதியுமாமிழலையோடெண்ணுபன்னொன்றெனும்புரியிலத்தொகையுடைக்கிளைவிழப்பெருகுநீர், குதிகொளுஞ்சடையினனருளினிற் குருகினங் கொண்டுசென்றனபெருந்திண்டிறற்கிளையையே. (உகூ)

வேறு.

இறைவனருளாலதுகாலத்திகல்வெங்குணங்கள்குருகினத்தின்
சிறையினிவர்ந்துசெலக்கடவுட்டிருமாமுனிரோமசனும்வர
கறைபொன்மலர்ப்பூம்பொன்னியிருநதியினுப்பண்முத்தமிழின்
துறைமல்கியபூம்புனற்காழித்தொல்லைநகரத்திறுத்தனவால். (கூ0)

இறுத்தகாலைமுனிவர்பிரானிருகண்களிப்பப்பகைஞாவல
பறித்தவடிவேற்காலவிந்தைப்பணிவித்திடமற்றுங்கவனும்
குறித்தவிமயவரையளித்தகோதையொடுவீற்றிருந்தாலம்
கறுத்தமிடற்றுனினிதுறையுங்கயிலைக்குவட்டையெதிர்பணிந்தான். (௩௧)

குழலிற்றுவிநிரைதொகுத்தகொண்டலனையான்மிகப்பரவி
மழலைமொழிமென்கிண்கிணிக்கான்மகப்பேறெய்தியகமகிழ்ந்து
சுழலும்பொறிபோக்கறவெறிந்ததோமின்முனிவனடிபோற்றிப்
பழகுந்துதிசெய்தவனுவப்பப்பலவாற்றனுமுபசரித்தான். (௩௨)

மதிவான்குவடங்கதுகாலமறைந்துநிற்கவண்சுதையால்
கதிர்வான்சுடிலச்சிவகணமுங்கதவெஞ்சிறையங்குருகினமும்
முதிர்வானவரும்பல்லுருப்பின்முகந்தோறமைத்துமணித்தசும்பு
விதிநூன்முறையினினிதமைத்தான்வேலைஞாலத்தவர்போற்ற. (௩௩)

பசும்பொற்கமலத்தயன்றடத்துப்படிந்துபிரமேசனுக்கெழில்கூர்
அசும்புமணிப்பொற்கலனிலங்கவவிர்பூணுடையிருநிதியம்
விசும்புமிடைமண்டபமுதலவெவ்வேறமைவித்திரவியெனத்
தசும்புமிளிர்மாளிகைநகரஞ்சார்ந்தான்முனியாயிடையிருந்தான். (௩௪)

மூற்றுமொருநான்முகக்கடவுள்வாழ்நாளிறுமோர்பிரளயத்தில்
முற்றுங்குடிலைத்தோணிமிசைமுதிருஞானத்திருவினெடும்
சுற்றுஞ்சடிலத்தனிமுதல்வன்சொன்னகடவுட்கொழுங்குவட்டில்
உற்றங்கிருந்துமுதுநீத்தமொடுங்கவுளத்தினினிதுன்னி. (௩௫)

அடலேற்றரசுக்கருளுக்கமளிப்பவதுபேருருக்கொண்டு
கடைவாய்நாவிற்றடவந்துகடைநீர்நோக்கியுரப்புதலும்
உடனேகரைக்கணடங்கியபின்னொருமூவரைத்தோள்வலமிடமுள்
இடனுல்வருவித்தவர்படிகவிலிங்கத்தருச்சித்தனர்போற்ற. (௩௬)

போற்றுமவர்முன்சிவஞானம்புகலுங்குரவன்படைத்தளித்து
மாற்றும்வரங்கள்வரன்முறையேவழங்கவனையாரவைபுரிந்தார்
சேற்றுவயற்காழியினமர்ந்ததெய்வக்குவட்டிற்கயிலையைப்போல்
கீற்றுமதிவேணியனிருந்தான்கெண்டைத்தடங்கட்கிள்ளையொடும். (௩௭)

வேறு.

தலத்தரசிதைத்தொழச்சார்துமென்றுபின்
செலப்பெறுதிருந்தவர்தீயநெஞ்சர்தென்
புலத்தவர்சாபமும்பெறுவர்போற்றுவார்க்
கிலைப்பொழுதொழுக்கெனுநியமமென்பவே. (௩௮)

ஒழுகொளிப்பொலன்குவட்டுச்சிமால்வரைக்
கீழுமலத்திருத்தலாற்கடல்வளாகமேல்
அழல்வினையந்தணீரன்றுதொட்டதற்
கெழிலுலாங்கிரிபுரமென்றுமோர்பெயர். (௩௯)

இணர்ப்பசுங்கொன்றையானிறைவிக்கின்னருள்
புணர்த்தலினுமாபதிபுரமென்றேமதில்
கணத்தனாக்கணத்தளவிருப்பிற்காலனும்
பிணக்குறானகலும்வெம்பிரமகத்தியே. (சo)

தேசொடுவிளங்கியதெய்வக்குன்றிதை
யோசனையகனிலத்துவந்துகண்டுளோர்
காசினித்தலமெலாங்கண்டமெய்ப்பலன்
ஆசறமருவிமேலடைவர்முத்தியே. (சக)

காளிகேசுரன்பிரமேசன்கஞ்சுகன்
நீளிரும்பராசரநிமலன்றேணிவாழ்
ஆளுடையொருவனென்றரனையுள்ளுவார்
மூளுமைம்பாதகமுருக்கியுய்வரே. (சஉ)

புள்ளறாநறும்பொழிற்புகலிவாழுமிவ்
வள்ளல்பேனைந்தையுமனக்கொடெண்ணினோர்
வெள்ளநீரலகைதிவேங்கைவெந்திடர்
கள்வராறலைப்பிவைகடப்பர்திண்ணமே. (சங)

தொடுத்தபேரெயில்கிளர்தொல்லைக்காழியை
அடுத்தடுத்திறைஞ்சினோரநகராகிவெங்
கடுத்திகழ்மிடற்றினேன்கயிலையெய்திமெய்
நடுக்குறுநடுவனூர்நண்ணலாமையால். (சச)

அணங்குறுமறலிகாமாதியாயவெங்
குணங்களைத்தூதராய்க்குறித்தவ்வூருளோர்
இணங்குசேய்நிலத்துளோரெந்தைகாழியை
வணங்குறுதிடர்செயவகுத்தபான்மையால். (சரு)

முன்னருந்தீவினைமுயன்றமூவர்தாம்
இந்நகர்தொழவெளிதெய்தற்பாலரோ
பன்னருந்தவம்பலபண்டுநோற்றுள
நன்னர்நெஞ்சுடையரேநணுகும்பான்மையார். (சசு)

தாவரும்புலப்பகைதணந்தவித்தகர்க்
கோவருமின்பவீடுதவுவானிதில்
மூவடிவெடுத்ததுமுற்றுமிந்நகர்
ஆவலோமற்றவனருளின்பெற்றியோ. (சஎ)

ஆதலான்முனிவிர்காளந்தண்காழியை
ஓதலாந்தகைத்தெனவுணரற்பாலதோ
ஈதெலாமியம்பவுமினிதுகேட்கவும்
மாதவமெய்தினும்வாழ்வுமெய்தினும். (சஅ)

இனையமான்மியுந்தனையெழுதுமேடொரு
மனைவயினிருக்கினம்மனைக்கண்வாழுநர்
வினையமிக்கறிவனூல்விரிவெலாமுணர்
முனைவராகுவரவர்முகங்கண்டாருமே. (௪௯)

மடனுறுமகந்தைவேரரிந்தமாமறைக்
கடவுளர்முகத்தினிக்காதைகேட்டுளோராக்
கிடரறுநினைததவையெய்தும்வல்வினைத்
தொடரறுமருமறைத்துணிவிதாமரோ (௫௦)

கய்தவங்கடந்துளீர்கடவுண்மால்வரை
எய்தியவியப்பமிதென்றுழும்மலத் !
தொய்யலையொழுக்கினைற்றுடைத்தசூதனும்
தெய்வமாமுனிவரன்றெரிந்துகூறினன். (௫௧)

(௧௯-வது மலைவரவுரைத்தவத்தியாயம் முற்றிற்று ஆக திருவிருத்தம்-௧௱௮௫.)

## ௨௦-ஆவது. ஆபதுத்தாரணவத்தியாயம்.

அன்னந்தடமன்னும்பணையணிகாழிபுரத்தில்
பொன்னங்கிரிமுன்னஞ்செறிபொருளீதெனுமுனிவன்
இன்னுந்திறல்வடுகேசனதியல்பேசியநெறியே
என்னெஞ்சினிலியலுந்திறனினிதோதுவெனினியே. (௧)

வண்டாடுநறுங்கொன்றைமணக்குஞ்சடைமுதல்வன்
தண்டாமரையடிநல்கியதாவாவலிதன்னால்
பண்டாடகவுலகத்தவர்பதம்வவ்வியமதுகைத்
திண்டோளிரணியனென்றொருதேவாந்தகன்மேனாள் (௨)

முகிலொன்றுநிறத்தானொடுமுத்தேவர்பெரும்போ
நிகழெங்கணுமேறுதுதன்னெடுநாமம்வளர்ப்போன்
திலம்படுமிவ்வண்டமுமல்லாதுபுறஞ்சூழ்
பகிரண்டமுமிவனாணைபரிக்கும்படியாள்வான். (௩)

பொருப்பெட்டையுமருப்புக்கிளர்பொருப்பெட்டினொடடிப்பான்
நெருப்பைக்கறைவிழிக்கட்சினநெருப்பிட்டுறவிப்பான்
இருப்புப்புனைதடக்கைத்தலத்தெடுத்துப்பிலத்தினில்வாழ்
சருப்பத்தையுமணிக்கச்செனத்தரிப்பானுலகரிப்பான். (௪)

நாற்றும்படுபுனலுஞ்சுடுகனலும்பொருநிலனும்
தேற்றுந்தலைவனாவென்றவர்தொழின்முற்றுமிழைப்பான்
ஏற்றுஞ்சுடரிருவோர்மணியெழிலூர்தியினூர்வான்
கூற்றுங்குலைவுறவாருயிர்கொல்வானிகல்வெல்வான். (௫)

மூலக்கடனீராடியுமுதுபாதலமகளிர்
ஓலக்கமடுத்தும்பகலுவணைத்தலமதுபோய்
ஏலத்தருநிழல்வைகியுமிரவிற்சதுமுகன்வாழ்
கோலப்பசியுற்றுந்துயில்கூர்வானிடர்தீர்வான். (சு)

மொய்யார்கலிகடையப்புகுமுழுமத்தவனேந்தும்
கய்யார்கதையாமென்பதுகதையோகதிருலவும்
பெய்யாடொளியிருமால்வரைபெருமால்வரையனையான்
மய்யாடியநாளிற்புனைமகரக்குழையென்றால். (எ)

ஏமத்துணைவமரர்க்கிடுமெழுதாமறையவர்செய்
ஓமத்தவியெல்லாமவருருவாகிமடுத்தான்
வாமப்பழமறைநூல்வழிவல்லார்பொழுதெல்லாம்
நாமத்திரணியாயநமநமவென்றிடவைத்தான். (அ)

பெண்ணிற்புகலாணிற்பெருகிடியிற்சுடுபடையாம்
எண்ணிற்பலபகலிற்கறையிருளிற்செறிமனையுள்
கண்ணிற்பிறவெளியிற்சுடர்கனலிற்படர்புனலில்
மண்ணிற்பிறபொருளின்னுயிர்மாளானடுதோளான். (கூ)

பாரார்புவிமேலாரிருள்படுபாதலவைப்பார்
ஆராருமிவ்வசுரன்றுணையடியேந்தியமுடியார்
நாராயணவெனுமன்புடைநன்மைந்தனையல்லால்
பாராயணமதுசெய்வதுபதகன்கொடுநாமம். (க0)

இவ்வாறுலகீரேழுமிடுக்கண்செய்வலத்தால்
வெவ்வாளவுணன்பின்னருமிடலெய்தியமடல்சூழ்
செவ்வாரிசமுகைகிண்டியசிறைவண்டிசைமுரலும்
கைவ்வார்திரைநிரைபொன்கொழிகாவேரியின்வடபால். (கக)

வினைவேரறநினைவார்பணிவெண்காடதன்வடமேல்
புனல்சாரினிலொருதோணிபுரக்கீழ்த்திசையாங்கண்
நனைவார்மலர்விரைமென்சினைநகுவில்வவனத்தே
தனைநேர்குருவருளாலொருதனிவேள்விதொடுத்தான். (கஉ)

ஓராயிரவெள்ளம்புடையொடுசூழ்தரநடுவே
சாராவொருகொடுவேள்விசமைக்கின்றதைநிருதன்
சூரால்வடவெற்பூடுதனுக்கம்படுவிண்ணோர்
போராழியினன்முன்புபுகன்றுவிகளைந்தார். (கங)

மஞ்சேயொளிமணிமேனியன்வானீரினிமேனீர்
அஞ்சீரெனமுதுபொன்வரையதன்மேல்வருபுயல்போல்
செஞ்சேவல்வயப்புள்ளிறைதிணிதோண்மிசையிவரா
எஞ்சாதிரணியன்வேள்விசெயெல்லைக்கணடைந்தான். (கச)

அற்றத்தினி லுலகஞ்சுறவலையஞ்சுறவடபால்
நற்றைக்கிரிவெடிப்பட்டுகெவுருமுக்கணமுதிரத்
தெற்றித்தனிவியட்டிற்கிரிதிசைமாறிடவசைதீர்
கொற்றச்சிலைவரிநாணொலிகொண்டானுலகுண்டான். (கரு)

உலகுண்டவன்வலையுஞ்சிலையொளிருங்குணவொலியால்
கலகமபெருகொலியென்றடுகெனகன்படையுடையப்
பலரும்பலதலைசிந்தியபடிகண்டுபின்னெடியோன்
அலருங்கையிலொருசங்கினையார்த்தானுடல்வேர்த்தான். (கசு)

இரிந்தார்சிலர்பொடிந்தார்சிலரிடிந்தார்சிலரிகல்போய்ப்
பரிந்தார்சிலர்முடிந்தார்சிலர்படிந்தார்சிலர் துளப்
பெருந்தாரவன்விளைத்தூதியபிறங்கோர்வளையொலியால்
முரிந்தார்சிலர்கனகன்புறமுனைந்தார்படையெல்லாம். (கஎ)

ஊழித்தலையெழுமார்கலியொக்கும்படையுக்கிப் ௫
பாழித்தலைமதவெங்கரிபரிதேர்முதலிரியக்
கேள்வித்தலையல்லார்நிலைகிழியக்கதமெழரிகால்
வேள்வித்தலையழிகுற்றபின்வெளிவந்தனனிருதன். (க௯)

கடலோடெதிர்கடலும்படுகாரோடெதிர்காரும்
தடமால்வரையொன்றோடொருதடமால்வரைதானும்
உடல்போரதுசெயுமாறெனவோராழிநெடுங்கைச்
சுடரோனெதிரடலானமர்தொடுத்தான்முரணடுத்தான். (கக)

வெடிவாயொலிதோள்கொட்டியவிறலாரொலிசிலையின்
துடிவாயொலியடுவாளிகடொடுபேரொலிவிசயக்
கொடிவாயொலியிருவோரிகல்கொடுமேறொலிகளினால்
அடிமாதிரமதயானைகள்செவிடேறினவவையே. (உ0)

மாயன்சிலைபொழியுங்கணையவுணன்கணைமாற்றத்
தீயன்சிலைபொழியுங்கணைதிருமால்கணைநுகரப்
போயண்டமுநிலனும்படர்திசையும்புகைபுகையக்
காயுங்கடுவலிவெஞ்சமர்கலந்தாரெதிர்மலைந்தார். (உக)

அழன்றார்கணையரிந்தார்புறமகன்றாரெதிர்புகுந்தார்
கழன்றார்விழிசிவந்தாரிருகறங்காமெனவொருங்கே
சுழன்றார்திசைவிசைவாளிகடீர்த்தாருடல்வேர்த்தார்
உழன்றாரிருவரும்வெஞ்சமரோராயிரவருடம். (உஉ)

அவ்வாயிரவருடஞ்செலவமராடியுமழியா
இவ்வாளவுணனைவெல்லுவதினியோர்திறமென்னூ
ஒமவ்வான்வழிமுதல்வன்புகவதுகண்டுவலத்தால்
வெவ்வாயவுணனுமன்றமர்வென்றேனெனவன்றே. (உ௩)

தனியோதியமகனேடொருதனயாவிதுகண்டாய்
இனியேனுமென்னெருபோதனையிசையென்றலும்வசைதீர்
கனிவாய்மகனுலகுக்கொருகத்தாவவனைத்தான்
நனிநாரணனேயென்பவனென்றிடலானன். (௨௪)

வேறு.

என்றலும்வாளவுணன்வெகுண்டெயிறதுகவிழிசிவக்கவிமைகடியத்
துன்றுபுயந்துடிப்பநிலைகுலைகுலையவலமந்துசுரர்களேங்க
அன்றுசினத்திடித்தெழுந்துநின்கடவுளெங்குளனவன்யாரென்ன
என்றுமுளன்றுரும்பிடத்துந்தூணிடத்துமாயனெனவிசைத்தான்மைந்தன்.

அளந்தவனுண்டறைதலொடுமொருகோடியசனியிடியறைந்தாலென்னத்
துளங்கொளியமணிக்கடகத்தடக்கையெடுத்தறைந்தவன்முன்றூணென்றோ
கிளர்ந்ததுபேரண்டமுடிகிழிந்ததுதீயவனுரம்போற்கீறித்தூணம் [தை
பிளந்ததுமானுடமடங்கல்பிறந்ததுவானவர்க்குநலம்பிறக்கலாதோ. (௨௬)

அண்டகோளகையதிரத்திசையதிரப்புகையுமிழகண்ணரிமாவாகிச்
சண்டமாருதக்கரத்தானமடித்தலமிட்டெரங்கீறித்தாழிட்பேழ்வாய்
மண்டவாரிழிகுருதிமடுத்துமடுத்தவுணனுயிரமடுத்தான்வாயால
கொண்டல்போன்மணிநிறத்துக்கோகனகம்போலலர்ந்தகுளிர்பூங்கண்ணன். ()

வாளென்றுமயன்முதலாயெறும்புகடையுமிரிலொன்றுன்மடியான்மேனி
தாளென்றுமுகமொன்றுமெழுந்துகடைத்தலைராப்பண்டகுமாலைக்கண்
ஊனென்றுமுதிரமரியருந்தியுயிராகவாமடிவுற்றபெற்றி
நாளென்றுநினைக்கவுறுந்தெய்வமொன்றுநினைத்தென்றநயமாமாதோ. (௨௮)

சுடர்க்கனகத்துகள்சிதறவடற்கனகனுடற்குருதிச்சுவைகண்டாங்கண்
மிடற்குருதிக்களியெடுத்துவிண்ணையுமண்ணையுநைந்துவெறியாட்டாட
அடற்கருமானுடமடங்கலருந்துயராற்காளிபுரததணைந்துவேதன்
முடைத்தலைகொய்வடுகேசனிடத்தமரர்முடிசாய்த்துமுறையிட்டாரால். (௨௯)

ஆயிடையும்மிறையருளாலடல்வீரபத்திரனேரட்டபாதத்
தேயெனுமாத்திரையின்முரட்சரபவுருவெடுத்திகன்மானுடத்துச்செங்கண்
சீயமறப்புடைத்துதறிமுடிதகர்த்துமுன்னுண்டசெந்நீரெல்லாம்
வாயினிடையடுத்தகலமறிந்துமானுடமடங்கன்மறிந்தகாலை. (௩௦)

அள்ளிதழ்த்தாமரைப்பொகுட்டினரசிருக்குந்திருமடமானதுகண்டோடி
முள்ளெயிற்றுப்பணிமாலைமுயங்கியதோள்வடுகனடிமுளரிசூடி
என்னுலவுமெண்ணெயெனவெவ்வுயிர்க்குமுயிராயவிறைவநண்பார்த்
தொள்ளிழைமங்கலநெடுநாளோங்கவெனக்கீங்கருளெம்முடையாயென்ன. ()

பொன்னெழுகுகற்பகப்பூங்கொம்பரெனத்தென்பிரமபுரத்துமேல்பால்
மின்னெழுகுழுக்கோன்மட்டெல்லையினிற்கடுக்கைமலர்விரிபூங்காவில்
மன்னிரவித்தடத்தயலாநிருபருவமருந்தவஞ்செய்மலர்மான்காணத்
தன்னிகரில்வடிவோடும்வடுகேசன்பேருவகைதழைப்பச்சென்றான். (௩௨)

இருக்கோலஞ்செயுமிருதாளெழிற்கோலமலரின்விழுந்திறைஞ்சச்செய்யாள்
அருட்கோலமுடையபிரானணிக்கோலமாலைமுன்போலளித்தான்மேனாள்
திருக்கோலம்புனைதலினாற்றிருக்கோலக்காவெனவித்தெண்ணீர்ஞாலத்
திருக்கோலந்துடைப்பவர்தாமெக்காலுந்தொழுமூரொன்றுளதுமாதோ. (௩௩)

அவ்வழியெம்பெருமானையடலாழித்தடங்கரத்தானலர்கமேவிக்
கைவ்வனசமுகிழ்த்திருகண்டுளிதூங்கவொளிதூங்குங்கழற்றாள்போற்றி
இவ்வடியேன்மடமகற்றியெடுத்தாண்டபெருங்கருணையிறைவாபோற்றி
தெவ்வடுபோரிலைச்சூலந்திரித்துலகம்பரித்தருளுஞ்செல்வாபோற்றி. (௩௪)

நிரையிதழ்த்தாமரையானும்யானுநெடுமொழிபேசிநிற்பவேதன்
நரைமுடிகொய்திகலறுத்தென்னிரைமணிமாநகர்போந்துநகுங்கைவேலால்
வரையகலந்துறந்தெனதுவடிகுருதிமுடிநிறையமடுத்தவாறே
தரையினுமானுடமடங்கலுருவிடந்துகுருதியுண்டசரபபோற்றி. (௩௫)

முன்னுமெனைமறித்தாண்டமூதருளான்முடங்குளைமான்முரணைவென்றாய்
இன்னுமெனக்கிரங்கினையேலிதனுரிநின்றிருமேனிக்கியையவேண்டும்
மன்னுநினதின்னருளைவழியடியேன்கடைப்பிடித்துவாழவேண்டும்
பொன்னுலவுமதிட்காழிப்புண்ணியனேயெனநெடியோன்போற்றிவீழ்ந்தான்.

அருமுடிச்சூட்டரவணையிலறிதுயில்கூர்பவனிவ்வாறறையவேதன்
ஒருமுடிகொய்மணிநகத்தானரமடங்கலடிமுடிதொட்டுரித்துமீக்கொண் [த்
டிருண்முடியவெழும்பரிதியெனவொளிருமரைக்கணிந்தானிமைக்குங்கோட்டு
திருமுடியில்வீற்றிருந்துகருமுடியவினைகடியுந்தேவதேவன். (௩௭)

கோபத்துநரமடங்கல்விளைத்ததுனிதுடைத்தலினாற்குறையாதென்றும்
ஆபத்துத்தாரணனென்றாயினனிவ்விருங்கதைதானருட்டீசி
மாபத்தியொடுமெருகற்பழித்தகொடுந்தக்கன்மனமம்மர்நீங்கத்
தீபத்தின்விரித்தவனுக்கருமறையின்றெளிவிதனைத்தெரித்தான்மேனாள். (௩௮)

சேணிலத்தில்வடுகேசன்றிருமலையைவணங்குநருஞ்செம்பொன்வாய்ந்த
நீணிலத்தார்பரவமுத்திநெடுநிலத்தில்வீற்றிருப்பார்நிகழுமன்பு
பூணுமருஞ்புகர்வாரத்தழகொழுகப்புழுகவன்மேற்புனைந்துளோர்கள்
ஏணிலகுநிலமனைத்துந்தமதடியிற்படுத்தியரசியற்றுவாரே. (௩௯)

தூரத்தேதொழுகுநர்க்குமுத்திகொலோவெனவுயிர்கள்சோராவண்ணம்
ஆரத்தாழ்திருமார்பனரிவையொடுவில்வவனத்தணைந்துமேல்பால்
நீரத்தாழ்வயற்காழிநெடுவரையைப்பணிந்துருகிநின்றாணிந்தச்
சீரைத்தானுறலாலேதிருநகரியென்றொருபேர்சிறந்ததவ்வூர். (௪௦)

வேறுமளப்பில்பெருமைவினவவுமோதவுமுடியாவியப்பாலந்தண்
சேறுபடுவயற்காழித்திருமலைவாழ்மலைக்கொழுந்தின்றிறனீதென்றான்
ஆறுமிடைந்துமகன்றுதியிடையீறிலிதாளகத்துட்பூண்டு
கூறுமறைத்துறையறிந்தசூரவனடிக்கடிமைபுகுங்குணக்குன்றன்னான். (௪௧)

(௨௦ - ஆவது. ஆபத்துத்தாரணவத்தியாயமுற்றிற்று. ஆக திருவிருத்தம்-௧௰௭௩.)

## ௨௧-ஆவது. கழுமலநதிவரவுரைத்தவத்தியாயம்.

நாற்றிளங்கமுகின்கூற்பழுங்கழுத்துத்தமனியப்பாளைவாய்கிழியச் ,
சேற்றெழுவாளையேற்றெழுங்காழித்திருமலைக்கொழுந்தினதியற்கை
போற்றியமுனிவன்கழுமலமெனும்பேர்ப்புண்ணியத்தீம்புனற்பொன்னி
ஆற்றினதியலுஞ்சாற்றுவெனென்றுங்கறைந்தவாறொருவழியறைவாம். (௧)

கனைத்துவண்டிமிருமலர்த்தடஞ்சினையகற்பகநாடுகாவலவன்
முனைக்கடுந்தானைநுனிப்பரும்வலத்துமூரிவெஞ்சுரனுன்மேனாள்
அனைத்துளபொருளுந்தனித்தனிதுறந்துமாற்றலனுகிவேற்றடங்கண் [ந்தான்.
மனைப்பொலன்கொடியோடருட்பெருங்குரவன்வாய்மையான்மண்ணகத்திழி

கரைக்குறும்பெறிந்ததிரைத்தடந்தோறுங்கதிர்வளைவயிறுளைந்தீன்ற
நிரைக்கொழுந்தரளநெடுநிலாவிரிக்குநீள்வயல்விளிம்புசூழ்வேணு
புரத்திலாளுடையான்றிருத்தகுமலர்த்தாள்போற்றினனிருப்பநெய்த்திருண்ட
விரைக்கருங்கூந்தற்சசிமுலைவியக்கவிருப்பினுற்றருக்குவாளவுணன். (௩)

காற்றினுங்கொடியகடுநடைத்தூதகணங்களைக்கூஉய்மலருலகின்
மாற்றலர்க்கடந்தவயிரவாளுழவன்மனையிளங்கொடிதனைவல்லே
வேற்று *வேதண்டமெவற்றினுந்துருவிவிரைந்தளித்துமெனவிடுப்பக்
கூற்றினுங்கொடியார்விசும்பிடைத்தேடிக்குரைகடல்வைப்பினிற்குதித்தார். ()

தீந்தொடைமகதித்திருமுனியனையார்செய்தியைவெய்துறக்கதங்கால்
ஏந்துகோட்டயிராவதப்பெரும்பாகனிருக்கைபுக்கியம்பலும்வெருவிச்
சாந்தணிந்தோங்குந்தமனியத்தசும்பிற்றதும்பியதடமுலைச்சசியோ
டோய்ந்துருமாறித்திரளுருப்பசுங்கண்ணுறுகழையுருவெடுத்துறைநாள். (௫)

காலையும்பகலுங்கங்குலும்பணிவான்காழிகாவலன்பணிக்காய
சோலையுந்துணர்ப்பூந்துடவையுமபெறுவான்றுளியறமுளியடைந்தமையால்
மாலைவெள்ளருவிவரைச்சிறகரிந்தவானவன்படருறுமேல்வை
மேலைவானின்றுமண்ணகத்திழிந்தவீணையங்கிழவனென்றுரைப்பான். (௬)

மாலிருங்குடுமிவிந்தமொன்றுறுமான்மணிவரையள்ளிருள்விழுங்கும்
மேலிருங்கதிர்சூழாடகக்குடுமிமேருவோடிகலியோராழி
ஆலுமேழ்பரிமானூர்தியானவனையிந்தரமுகட்டடியியங்கா
தோலுறத்தடுப்பெனெனநிவந்தகல்வானுறுவெளியடைந்ததையன்றே. (௭)

பொருகடலுடுத்தவிரிநிலமனைத்தும்புரைதயிருள்விழுங்குபுல்லரா
தருமறைக்கிழவரருங்கடனிறுத்தற்கலரியோனின்மையால்யாரும்
தெருமரலுறுநாள்விரிநிலாவெறிக்குஞ்சேயுயர்வெள்ளியங்கிரிக்கண்
முரிதிரைகுடித்தமுனிவரனுணர்ந்துமுக்கணற்கக்கணமொழிந்தான். (௮)

* வேற்றண்டமெனவும்பாடம்.

கருதலர்புரக்தூளெழக்தணிகைத்தகண்ணுதற்சாமியுமுவந்தாங்
கருவளையடக்குமுரனுமேழ்நதிகளவற்றினிற்பொன்னியுமருளித்
தெரிதமிழ்முனியைவிடுப்பமற்றவனுஞ்சிரகமேறிம்புனலேந்தி
விரிகதிர்க்கடவுள்வழக்கறுத்துயர்ந்தவிந்தமால்வரையுறவருங்கால். (கூ)

அத்தலேமாயாபுரத்தில்வெம்முனேசாலருந்திறற்கிரவுஞ்சனெனுமோர்
மத்தனூர்தருவன்மண்ணுடுவிண்ணுமறைத்துமால்வரையெனநிவப்ப
உத்தமமுனிவன்பற்பலவழிபுக்குழன்றுமந்நெறிபெறுதொருசார்
பித்தரினிருப்பக்கதமுறைபிலிற்றும்பெருமழையுய்த்தனன்கொடியான். (கo)

நிலம்பகவிடித்துவலஞ்சுழன்றெழுந்தநீணிறமுகில்பொழிமாரை
அலங்கெடநினித்தோனேதியிலுணர்ந்தாங்கவுணனையருவரையுருவாய்த்
தலந்தனிற்கிடத்தினின்னையுங்கேண்மைத்தாரகன்றன்னையும்வேலால்
இலங்குபூண்முருகனெறியநீர்முடிதிரெனவெகுண்டுரைத்தயலகன்றான். (கக)

பாசடைப்பதுமப்பள்ளியிற்பவளப்பரட்டடிச்சூட்டனப்பார்ப்பை
ஆசறுதரங்கத்தடங்கையாலாட்டியளிபுனற்றவளேதாலாட்ட
வாசமெல்லிலஞ்சித்துணைப்பெருஞ்செவிலிமகவெனவளர்க்குநீர்வேலிக்
காசிமாநகரையிறைஞ்சிவெய்யவனேக்கண்டவல்வினையவண்டொலேந்தான். ()

ஆண்டுநின்றறவோன்றென்றிசைப்பேராறயர்வுழியள்ளிருள்பரப்பும்
சேண்டொடுகுடுமிவரைத்தடந்துருவித்தெரிவிலனிதுகொலோகதிரோன்
தூண்டுதேர்மறித்தவரையெனக்கருதித்தூங்குவெள்ளருவிதாழ்முகட்டில்
மாண்டகுகரத்தானழுத்தமண்ணுடுபோய்மறைந்ததுமாலிருங்குன்றம். (கங)

மண்ணகத்தழுங்கும்வரைதனக்கிரங்கிமறித்திவண்வந்துனக்களிப்பாம்
எண்ணலேயெனத்தென்றிசைபடர்நெறிக்கணிகலுடையசமுகியீன்ற
பண்ணவர்படிவத்தவுணர்வில்வலன்வாதாவியாம்பதகராலமைத்த
உண்ணறுங்கருணேவாசநெய்யடிசிலுண்டவராவியுமுண்டான். (கச)

உண்டவனிருண்டகொண்டல்கண்படுக்குமோங்கல்சூழ்கொங்குநாட்டொருசா
அண்டநாயகன்றாளருச்சனையாற்றியரும்பெறற்பொன்னிமாநதிப்பொற் [ர்
குண்டிகைதனைவைத்திருந்தனனந்நீர்கொணருமாறைங்கரக்கன்றை
வண்டடங்கரத்தான்வணங்குகவென்னமறைமுனியுரைப்பவானவர்கோன். ()

முருகுவாய்மடுத்துவரியளிமிழற்றுமொய்ம்மலரிலஞ்சிசூழ்காழித்
திருவநீள்குடுமித்தென்றிசைச்சிகரித்திருக்கடைவாயிலினிருத்திப்
பெருகுநீரனையநிறைகடாங்கவிழ்க்கும்பிறைமருப்பொருதனிக்களிற்றைத்
தருவுலாமலர்தூஉய்வரன்முறைபரவித்தாட்டுணைபழிச்சினின்றவன்முன். (கரு)

வீங்குகோட்டிமயப்பனிவரையுயிர்த்தமெல்லியல்சுணங்கணிகருங்கட்
கோங்குமாயமுதமுலேப்பிடியீன்றகுஞ்சரக்கன்றெதிர்தோன்ற
ஈங்கெனையளிப்பானெழுந்தருடோன்றலென்னுயிராதிமன்னுயிர்கள்
தீங்குவான்மலயமுனிகமண்டலநீர்தருகெனச்சதமகன்றாழ்ந்தான். (கள)

தாழ்தலுமஞ்சேலென்றொருவல்வாய்த்தடஞ்சிறைக்கொடியுருவாய்ந்து
வீழ்பனிமுயங்குகொங்குநாட்டொருசார்விரிதமிழ்த்திருமுனிக்காகத் [ல்
தாழ்புனல்விளிம்பினிவந்துமாசெறிந்தோனங்கைகள்புடைப்பவஞ்சினன்போ
கீழ்திசைகாட்டிச்சிரகநீர்கவிழ்த்துக்கிளர்ந்தனன்றொடர்ந்ததுபொன்னி. (௧௮)

வேறு.

மீதுறமலர்கெழுசெயலையுமகருவும்விசையொடுதொடுதிசைதிசைசிதறப்
பூதரவுடல்கிழிகுடரெனவிடமுமிழ்பொறிமணியரவுகணெளிநெளியக்
காதுறுபடுபுலிகரடிகளிடையிடைகடமைகளொடுமிருகனைபுரள
வாதுவர்விடுபரிநிரையொருநிரையொடுவருமொருகழுமலமுதுநதியே. (௧௯)

மீனிரைவிழியொடுநுரையணிதுகிலொடுமிளிரொளிவளையொடுமிளிர்தரளத்
தூநிறநகையொடுகொடிமருங்கிடையொடுசுழிபடுசுழியொடுநிகழும்பறற்
பூநிறைகுழலொடுகுமிழ்கொடுமுலையொடுபுதுமலர்முகமொடுமுதுதிரைநீர்
மாநிலமகள்பெறுமகளெனவெழில்பெறவருமொருகழுமலமுதுநதியே. (௨௦)

ஆறலையெயினர்கள்வரிசிலையெறிகவணடுகணைபடுசிறுகுடில்டறித்
தூறியசிறுதலைமுசுவொடுவசிகலைதுறுமியமுளிசினைமரம்விசிறி
எறுழ்முருமிகல்களிறதுபிளிறிடவெறிதிரைநிரையிருகரைபொருத
மாறடுவளவனதிருநிலைமலர்தரவருமொருகழுமலமுதுநதியே. (௨௧)

பண்டுளபரிகனைவிரிதிடரிடுவதுபடுதிடர்களையவல்லதுநீள்
விண்டலமதிபுனைமுதலுறைபதிதொறுவிரிவளைமணிமலர்பொழிலதுசூழ் [ஞ
எண்டிசைதொறுமுழலிரவலர்கொடைதருமிறைவனையெதிர்கொடுபுகழ்வதெ
வண்டினமலர்விரிகுனைதிரைநிரையொடுவருமொருகழுமலமுதுநதியே. (௨௨)

வீசுறுகவரியுமொளியுமிழ்மணிகளும்விடுமதகரிகளுமடுகொடியும்
மூசியசிலைகளும்வகைபடுகணைகளுமுரிதிரைநிரைமிசைகொடுவரலால்
ஆசறுகுடபுலவரசனையிகல்பொருதளவறுபொருள்கவர்வளவர்பிரான்
மாசறுதெறுபடைவயவனைநிகரெனவருமொருகழுமலமுதுநதியே. (௨௩)

ஏமுறுநடைமலியனமிசைபுனைதலினிசைமறைவிரிதிசைமுகமுறலில்
தாமரைவிரவலினவனியைவிதிமுறைதருதலின்மணிவளைவழிவரலின்
நாமலிகொடியொடுதழுவலின்முழுதுணர்நயனுடையளிவளரயனெனநீள்
மாமலிநிலமகள்வனமுலைவடமெனவருமொருகழுமலமுதுநதியே. (௨௪)

தானமுமருமறைநெறிகளுமுயர்சிவதருமமும்விழுமியகருமமுமெய்ஞ்
ஞானமுநவையறுகலைகளுமொருங்குடைநரபதிமுறைசெயுமனுநெறியும்
ஊனமிலனமுதலினமலிபொருள்களுமொருமுதலடியவர்திருவடிசொல்
மானமுமலர்தலையுலகினினிலைபெறவருமொருகழுமலமுதுநதியே. (௨௫)

வேறு.

ஆழியபொருளாயொழுகலாறுடைத்தாயைந்திணைநெறியளாயகன்று
சூழிருந்துறைத்தாய்நாற்பொருள்பயக்குந்தொன்னெறித்தாகிநல்லுரவோர்
வாழிசால்கவிபோற்கழுமலமெனும்பேர்மணிநதியணிகிளர்மாடக்
காழிமாநகர்க்கணணைந்தமுனியுங்காரியைக்கடிவலென்றணைந்தான். (௨௬)

அலைக்தவன் விரல்களொருங்குறமுறுக்கியருளுடைப்பிள்ளைமேற்றக்கப்
பிணங்கினன்வரலுமொருதனிக்கோட்டுப்பிள்ளையாய்த்துள்ளலர்மழைதூஉய்க்
கணங்களேத்தெடுப்பப்புகர்முகச்சிறுகட்கடம்பொழிநனைகவுட்களிற்றின்
இணங்கியநிலைகண்டலமரலுற்றவேதமின்மாதவனிசைப்பான். (உஎ)

குலமறைப்புகன்றகடவுளரெவர்க்குங்குழகநின்னடித்துணைபோற்றி
அலதொருசெயலுமுற்றுறாவதனாலாண்டகைநின்னையீண்டறியா
துலகுறுகொடியேன்றிருக்கரமுறுக்கியோங்கியகுட்டெனக்காக
கலைவலாயெளியேன்பிழைத்தமைபொறுத்திகளைகணேபோற்றியென்றிடலும்

ஏதமில்குணத்தாய்மகபதிக்காகவிருமுதுகுரவர்தம்பணியால்
மோதலைக்குடிலைகவிழ்த்தனமெம்மான்முன்னருற்றிடினிதுதெரிப்பன்
போதருகெனக்கொண்டமலனையறியும்பொழுதுநேராதயலிருப்ப
மாதவனொருகோட்டிருசெவிமலையைவணங்கினனதிபெறவிரந்தான். (உக)

இரந்துழியனையான்கரம்படுகரகத்தெறுழ்வலித்தடக்கையாற்றுளிநீர்
வரந்தருமொருகோட்டிறைமகனளிப்பவயங்குபொற்கரகமேன்முன்போல்
பரந்தபின்காழிபுரந்தனிலென்பேர்படைத்துலகிடரெலாந்துடைத்துப்
புரந்திடென்றொழியவாதியைங்கரன்பேர்புணர்ந்ததுகழுமலப்பொன்னி (ங0)

புணர்ந்தபூம்பொன்னியணங்குமாதவத்துப்பொருப்புறழ்முனிவரனின்றால்
கணங்குழைபாகன்கயிலைமால்வரைபோற்காழிமாநகரிலுங்கலந்தேன்
உணங்குபல்லுயிர்கட்குன்னருள்வலியாலுலைவறுமேலைவீட்டின்பம்
இணங்குமாறளிப்பல்வரம்பிலாவுவகையித்தலத்தெய்தியவதனால் (ஙக)

தொடக்குறும்பிறவியடற்பிணிதணிக்குந்துகளறுமருந்து˜ல்வினையின்
கடக்கரும்புணரிகடத்துநாவாயுங்கரைபெருவவிச்சைவல்லிருளை
அடக்கிநல்லொளிவிட்டெறிக்குமொண்சுடருமழிபசிநிரப்புறுபரப்பை
உடைத்தினிதளிக்குங்கடவுண்மாமணியுமாவெனிந்நகரில்யானுரவோய்.(ஙஉ)

வார்ந்ததெண்டிரையதெய்வதநதிகள்வகைக்கெலாமொருதனிசிறந்து
சேர்ந்தவிண்ணவரோடெவர்க்குநல்விழுப்பஞ்செய்துவையகத்திலென்மேனி
ஈர்ந்திரையிளங்காரேய்ந்திடிற்காணிலெய்திடிற்கைதொடிற்பருகில் [ம்
கூர்ந்தவல்வினைகள்பரிதிமுன்பனிபோற்குமைப்பெனக்குலத்துமன்பதைக்கு

ஐவகைப்பவத்தோர்வெவ்வழல்வேள்வியலைத்துளோர்குரவரையிகழ்ந்தோர்
செவ்வரித்தடங்கணயன்மனைவிழைந்தோர்செயிரறுதெய்வதம்பழித்தோர்
எவ்வமுற்றுழலும்வறிஞரையலிந்தோரிருமுதுகுரவரையயர்த்தோர்
கைவ்வினைகரந்தோர்பொய்க்கரிபுகன்றோர்கடுஞ்சமரினில்வெரிநிடுவோர். ()

சுளித்துரைதருவோர்தூநறைமடுப்போர்சுற்றம்வெம்படருறக்களிப்போர்
களங்கறுமுலைக்கற்பினல்லாரைக்கனன்றுளோர்கன்னியைக்கலந்தோர்
துளங்கருநன்றிகொன்றுளோர்நட்டோர்தொகுபொருள்கவர்ந்துளோர்மூத்த
விளங்கிழையவர்தோண்மணந்துளோர்நறையூன்விலைஞர்கையிழிபொருள் வே
ட்டோர். (ஙரு)

விருந்தினைத்துறந்தோரபயமென்றளித்துவிடுத்துளோர்கருவினைச்சிதைத்தோர்,தரும்பொருள்கெடத்தென்புலத்தவர்வேள்வித்ணந்துளோர்நான்டுறந்துழல்வோர், அருங்கலனகன்றுமிருங்குழன்முடித்தோரபணராயரும்புனலிழிந்தோர், பெருந்துறை வழிக்கணெடுந் தருக்குளைத்தோர் பேதுறவா றலைத்திடுவோர். (௩௬)

அருமறைக்கிழவர்பெறும்பயனுகுத்தோரரசியறநிறம்பினோரிருள்வாய்
தருமிடமறுத்தோர்கண்ணியின்வலையிற்சார்ந்தபுள்விலங்கினைவளைத்தோர்
பெருகுநீர்க்கூவல்வீழ்பசுவெடாதோர்பெய்கவருடுவோர்குரவன்
திருமொழிமறுத்தோர்காலையிற்கடவுட்சினகரம்பணிந்திடாதகன்றோர். (௩௭)

கடவுளாலயத்துமகளிரைப்புணர்வோர்கணிகைமாட்டரும்பொருளேற்போர்
தடமலர்வாவிதூர்த்துளோர்குறளைச்சாற்றுவோர்மணவினைகெடுத்தோர்
மடமகவினைநீர்வீழ்த்துளோர்விலைநெல்வாணிகர்க்கேற்றினைவிற்போர்
புடைவனமுலையாளொருதனிப்பாகன்புனைவுறுமலரினையணைந்தோர். (௩௮)

மெலியபால்விஞ்சைதடுத்துளோரையம்விலக்குவோர்பொய்விலைபகர்வோர்
நல்விளங்கன்றைப்பால்விடாதலைப்போர்நயனிலகூறுவோராதி
கலிகெழுவினைஞரேவருமுவந்தென்கடவுணீரிடைப்படிந்தனரேல்
வலிவினைகழுவிக்கழுமலாதியாய்வயங்குவென்றயங்குமிந்நகர்க்கண். (௩௯)

கோணிலைதிரிந்தகாலையுமாலைக்கொழுஞ்சுவையமுதுமிழ்புனலாய்
வாணிலாஞ்சுடரோரிரண்டுளகாறுமாறுறதிந்நகர்வாழ்வேன்
சேணுலாங்கங்கையாடின்முத்தினத்துந்தெய்வநீர்யமுனையந்தினத்தும்
ஆணியாம்பலபேறளிக்குமோர்தினம்புக்காடினூற்பலனளிக்குவென்யான். ()

தென்புலக்கிழவர்க்கருத்துநாளுரகஞ்செழுஞ்சுடர்விழுங்குநாள்கதிரோன்
அன்புறுதகர்மேற்றலையின்மேலவருநாளயனநாளுவவுநாண்மாகம்
என்பெருநெடுநாளிவற்றினென்மேனியர்ப்புனல்படிந்துளோரடிநாள்
துன்பிருவினைக்கோர்கனலுமனையார்தொல்லுயிர்க்கமுதுமாகுவெனால். (௪௧)

படிபடுமாந்தர்களைபடிற்பிணியிற்படிபடார்நெடுங்கியதிரைநீர்
அடிபடிலகலாவிருவினைத்துவக்கிலடிபடாரடைகளைவார்ந்த
பொடிபடினிரயத்தருந்தழல்வறுத்தபொடிபடாரெள்ளளவுறுநீர்
குடிபடிலினியோரன்னையர்முலைப்பால்குடித்திடார்முடிப்பருங்குணத்தாய். ()

பற்பலவியப்போடிந்நகரிருப்பெஃபகவநின்னருளுமோர்புழைக்கை
அற்புதனருளும்பயத்தலாலென்னவகமகிழ்தூங்கியமுனிவன்
பொற்பொடுபொலிகவடபுலத்தமைந்தபுனிதநீர்க்கங்கைபோலுன்பேர்
எற்படர்மவுலிச்செம்பியன்புவிக்குமெய்துகதெய்வநீரணங்கே. (௪௩)

கழிதொறுங்குவளைகயந்தொறுங்கமலங்களைதொறும்வெள்வளைமடைநீர்
இழிதொறுந்தரளமேர்தொறும்பசும்பொனிருகரைதொறுமறைமுனிவர்
பொழிறொறும்புயல்கள்புடைதொறுங்கடவுட்புனைமணிச்சினகரமியங்கும்
வழிதொறுங்கன்னல்வயறொறுஞ்செந்நெல்மல்குகநின்னுழைமாதோ. (௪௪

கறங்குவெண்டிரையகங்கையேயாதிகடவுண்மாநதிகளுநின்பால்
அறங்கிளர்தலைக்கணுமாசகற்றியருளுமாறலறியமுந்நீர்
பிறங்குதொல்புவிக்குமருளுகவென்னப்பேரியன்முனிசெலமகவான்
திறங்கிளர்நளிநீர்மலர்த்தியமலராணிருமலன்பூசனைமுடித்தான். (சரு)

ஆண்டுதெண்கயிலைக்கமரர்கோனேகவயிலெழிற்றசமுகியென்பாள்
தூண்டுமான்றடந்தேர்த்துணைவனுக்களிப்பான்சுந்தரிவலக்கைதொட்டீர்ப்பப்
பூண்டுழாயலங்கன்முகிற்குமுக்கணற்கும்புதல்வன்வெஞ்சனையந்தலைவன்
காண்டலுங்கொடியாள்கையரிந்தெறிபூர்கைவிழுஞ்சேரியொன்றுளதால். ()

மற்றவளகலப்புகலிமாநகர்க்குவன்னியந்திசையின்மாகாளன்
வெற்றியங்கழற்காலொருதனிச்சாத்தனவியன்பணிபுரிந்தனன்வைக்கக்
கற்றைவெண்டிரைநீர்பொன்னிமாதளிப்பக்கடிமலர்த்துடவையும்பிறவும்
பொற்றளிர்குழைத்துநறுமலர்விரித்துப்பொலிந்தனபொங்கராங்கதன்பின். ()

பூதலங்கடந்தவொருதனிமுளரிப்புங்கவன்றேடருங்காழி
மாதலத்தொருகூன்பிறையணிவேணிவரதனதாரருள்பூண்டும்
காதலஞ்சசியோடமரர்கோன்போதக்கடமுனிசையமெய்தினனென்
றோதியசூதனருவரைவளனுண்டுறவருக்குணர்த்தியநெறியை. (சஅ)

வேறு.

தெய்வங்கமழும்பளிக்குண்டைத்திரள்காய்நெல்லிதருமூலத்
தய்யமகன்றமுனிக்கரகத்ததினீருய்ப்பநதிநீராய்ப்
பெய்யுங்குளிர்பூம்பொன்னியினாற்பெருமாநிலத்தின்னுயிர்புரக்கும்
வய்யம்புகழுஞ்சையமெனும்வரையின்வளனீங்கறைகுவெனால். (சக)

அடர்செஞ்சடையுமிராவணன்மேலடருஞ்சிறுகானகசகண்ணும்
படரம்புலியுமாசுணமும்பலதாழ்வடமுமானிடமும்
தடகண்கலையுமடங்கலுடைத்தருக்குஞ்செருக்குந்தன்மையினால்
கடலின்விடமுண்டளித்தமலர்க்கையனிகர்க்குஞ்சையவரை. (ருo)

கோடுதாங்கிவெயின்மறைத்துக்கொண்மூவடிக்கொண்டலைவிலதாய்
நீடுதருமாமணிமணந்துநெறிக்கட்டடந்தாமரைகாட்டித்
தேடும்பலனுமூலமுமாய்ச்செல்வந்தேறவதரமெல்லாம்
ஆடும்பகட்டாலறிதுயில்கூரையனிகர்க்குஞ்சையவரை. (ருக)

முன்னூலணியாலெவ்வாறுமுழங்குமதவாரணச்செறிவால்
மின்னூர்வாயால்வனப்புறவேதண்டமருங்கைவிரித்தலினால்
கொன்னூர்குகரங்காட்டலினாற்குடுமிநாலுமருவியதால்
தொன்னூல்விரிக்குமடல்வனசத்துய்யனிகர்க்குஞ்சையவரை. (ருஉ)

ஏவார்தடங்கட்கொடிச்சியர்வாழில்வாய்விளக்கும்பொற்றுகள்போய்ப்
பூவார்தருமென்சினைதோறும்பொதுளியொளிசூழ்கிடந்தமையால்
தாவாவிண்ணோர்வதிதருபூந்தருவைநெடும்பொற்றருவென்றே
ஓவாவொருபேர்கொடுத்ததிர்தவோங்கற்கிடர்ததிணிமுன்றில். (ருங)

சோதிவாய்ந்தபசுங்கமுகந்துணர்ப்பூம்பாளைவாள்விதிர்த்துப்
போதிவாரமென்றலினுற்பலகைதாங்கிப்பொருப்பரசன்
மீதிலாகண்டலனிலையாய்ச்செழுந்துமிளிர்வன்சிறையரிந்த
சாதிமானப்பழிதுடைக்கத்தருக்கின்றதுபோனெருக்குமால். (ருச)

திவளப்பசும்பொற்கொழுந்துயிர்க்குஞ்சேமப்பாறைநிழலுடன்மேல்
இவரத்திரியும்வரைவருடைபசியபிணையென்றெறிசுடரோன்
பவளக்குரத்துக்கொய்யுளைமானேழும்படர்மாலுழந்துருகி
அவணத்திமையாக்கண்கொடுபார்த்தலைக்குந்தடந்தேர்நிலைக்கவே. (ருரு)

பெருகியொளிகால்நறுங்குலிகப்பெருஞ்சேதகந்தோய்ந்தொழுகுதெண்ணீர்
அருவிகுளித்துப்பவளமருப்பாயவேழமியங்கிடுமால்
திருகுசினத்தின்ஞாட்பினுற்றசெறுநர்மார்பிற்செருகிவரும்
குருதிபொழியுங்கூர்ங்கோட்டுசகுறுங்கட்பெருங்கைக்குஞ்சரம்போல். ()

கண்ணார்பீலிப்பஞ்ஞையுயிர்கதிர்கான்மணியைக்கோபமெனா
எண்ணாதயில்வான்கவர்ந்துபசையின்றியெறிவமாலுழந்து
பெண்ணாருருக்கண்டுணர்விழந்தவிழியான்முயங்கிப்பெறுமின்பம்
நண்ணாமடவார்நசையின்மைகுறித்தாங்கொருவுநல்லவர்போல். (ருஎ)

கூன்றேய்மருப்பையறைதிட்டிக்கூர்மைபறிவான்குழியழற்கண்
ஊன்றேயகட்டுத்துறுமயிர்மெய்யொடுக்கியடுக்கத்தெற்றேனம்
தேன்றேய்மலர்ப்பூந்தருவிலக்காய்ச்செருக்கிப்பாயப்பிலிற்றியதேன்
மான்றேற்பள்ளியெயின்மகவாய்மடுக்குந்துயிற்கணடுக்குமே. (ருஅ)

நெறியாரிந்தவரைக்குடுமிநிலவுமுரவோரருளுண்மை
சிறியார்புகலுந்தரத்ததோசெற்றநீங்கிமுற்றமெலாம்
பொறியார்மனவப்பெருமணிப்பூண்பொம்மன்முலைப்பால்பருகியவாய்
வெறியாரெயினக்குழவியொடுவேங்கைப்பறழுமுகளுமே. (ருகூ)

கருங்கால்வேங்கைவீயுகுத்தகடுக்கைநறுந்தண்டுணர்சொரிந்த
இருந்தாதழீக்கொண்டரிதாரமீர்த்துப்பசும்பொன்சேர்த்துவரைப்
பெருந்தாளடிக்கண்முடியினின்றும்பெருகுமருவிதூங்குமுல
கொருங்கேயுண்டவானவன்பொன்னுத்தரீகந்துயல்வரல்போல். (சுo)

கொல்லாடரவமினைதேரக்குறித்துக்கான்றமணிக்குவைகள்
வில்லாரொளிவிண்முகட்டளவும்விரியப்புனைதீரறிஞரிடைப்
புல்லாவெழுத்தின்வறுங்கோட்டிப்புலனில்புலவர்முகம்போல
ஒல்லாக்கதிரும்வெண்கதிருமொளிமாண்மழுங்கியியங்குமே. (சுக)

தானமடுத்தமுகிற்குலங்கடவழுங்குவட்டிற்றோகைவிரித்
தானகளியின்மஞ்ஞைபலவமைந்ததோற்றமவிரொளிசூழ்
வானமடவாரகன்சுனைநீராடிமயிர்க்கால்விரலுளர்ந்து
கானமருப்பூங்குழலாரவிரித்தாங்கிருத்தல்காட்டுமே. (சுஉ)

வளிசால்விசும்பூடுரிஞ்சுபசுங்கழைமேற்குறுகூன்மடமந்தி
களிசால்பவுரியிடநோக்கிக்கங்கைப்பசுங்கட்குழிகவுளின்
அளிசால்கடுவன்முட்பலவின்சுளைநல்குவவேலடர்வேந்தர்
ஒளிசால்பொன்னந்துணிக்கிளைக்கண்ணுளர்பாலீவதொத்துளதே. (சுங)

வெளிறுநீத்தகருமுகிலைப்பிடியேயென்றுவியன்புழைக்கைக்
களிறுநீட்டவிலங்குழுமீக்கண்ணின்றமுதுகான்றுவளைந்
தொளிறும்பிறையைச்சிமையவரைப்பாகற்களிப்பானுருத்தெறிந்து
பிளிறிநிவந்துதோட்டியெனத்தடவும்பெற்றியன்னதே. (சுச)

இமைக்கும்புனல்கோட்டருவரைநின்றிழியுமருவிவிழுந்தரையில்
குமைக்குஞ்சுழிவாய்மாமருப்பாற்குறுங்காறகுரம்பைக்கொடிச்சியர்கள்
சமைக்குங்கிழங்காலகழ்குழிவாய்வல்சியாகத்தனிகொழிக்கும்
அமைத்திண்கதிர்கான்மணிமுத்தந்தூர்க்குமாதோவகன்சாரல். (சுரு)

சகடொன்றுடைத்தேரிரவிதெறுந்தழலங்கரங்கள்காணரிய
முகடுமாய்த்தபனிப்பாறைகிடந்தவண்ணமூதண்டத்
தகடுதேய்க்குங்குவட்டிலுறையறவோரியங்கலாற்றைவெள்ளித்
தகடுபொதிந்துபடுத்திழைத்ததன்மைபோன்றுதயங்குமே. (சுசு)

வருங்காலாற்றின்மருங்கெல்லாமைகோடுறழுந்தழைமேனித்
திருகுகோட்டுப்பாரமடிச்செங்கண்மேதிபொழிதீம்பால்
முருகுமலர்ப்பூங்கோடுழுதுமுழுவெண்மதியினுடல்கிழியப்
பெருகிவழியாரமுதோடுமெயங்குமொருசார்பெருமுன்றில். (சுஎ)

முழைக்குன்றிடைக்கோளரியுகிரின்முளையாலுறுகண்டேதியுரு
திழைக்கமோட்டுவெரிங்காட்டினெரிகண்மூகிழ்த்துநாலவிட்ட
தழைக்குங்குழைகாற்றெறிசெவியதந்தாவளத்தின்பிணருருவப்
புழைக்கையேறிப்பொன்னூசற்கொளுமவ்வரிமாண்பூங்குருளை (சுஅ)

உரையிற்கூடாமேதகுசீர்யோகக்கிழவர்முறைபயிற்றும்
கரையிற்றுளமாமறையோதைசெவிவாய்மடுத்துக்கன்றேடும்போந்
திரையிற்கண்ணுதருகியவானினம்வெஞ்சினவேறெறிர்தவர்தம்
புரையுட்டொறும்பான்மணிச்சிரகவிளிம்புதுளும்பப்பொழியுமே. (சுகூ)

எறிகொள்வடந்தைசுழன்றுடவீர்ங்கொண்மூநின்றயலாடப்
பொறிகொள்கலபப்பிணிமுகங்கூத்தாடல்புகன்றென்புரைவிடங்கால்
செறிமுள்ளெயிற்றுநெட்டுடல்வாளரவமாடுந்தெறுஞ்சுடிகை
மறியுநிழற்கட்டிறெலிபாய்ந்தாடுந்தடஞ்சார்மாடெல்லாம் (எ0)

மெய்தூங்கழலோன்வழிபடல்போலரும்பலாசின்மிடைந்தலர்ந்த
நெய்தூங்கடர்ப்பூஞ்செம்மலுகுநெடுங்கல்விடர்வாய்முரட்கவேன்
கய்தூஞ்சுனைநீர்பெய்தேனின்கணமேற்றாவியிருல்பொதிந்த
பெய்தேன்கெடச்சூளில்லான்போல்வினையேயிழைத்துப்பிழைத்துமால. (எக)

ஒழுங்கிற்சிறந்தோருழைப்பல்லாண்டுறநட்டாலும்புலனிலர்தம்
மழுங்கிக்கிடந்ததிண்ணறிவுறுண்டுகொல்லோவண்பளிங்கின்
எழுங்கிற்பாறைநிழனுறவேதிலேலென்றெதிரளித்துக்
கொழுங்கட்சுடர்கான்றடிநிலத்தைக்குரத்தாற்கிளைக்குங்கொல்லேறு. (௭௨)

துருவியோடுமழைப்படலஞ்சூழவோடும்புல்லொடுமான்
மருவியோடுறுதற்கூட்டுமாலைபோலக்குவட்டினிழிந்
தருவியோடும்பருவரைபோலானேறுடுமேனன்மிசைக்
குருவியோடும்வயவேழங்குழியவோடும்வழியெல்லாம். (௭௩)

விளைப்பைந்துணர்தோய்மரனிடத்தீவிளிசால்விரிபூம்பொழிறேறும்
களைக்குங்கண்ணீரொடுந்துரியங்கடந்தவெளியிற்கருததொடுங்கி
இளைக்குஞ்செயல்போதெழுதும்விளக்கெனலாயசைவற்றிருப்பவர்போல்
உளைக்குமுழுவைதனைத்தெருட்டுமுயாந்தோர்கரம்போல்வியன்காந்தள். (௭௪)

ஓடுமதிமேலுரிஞ்சியகோடுகுத்தவமுதுமுட்பலவின்
கோடுகுனியுங்குடங்கனிவீழ்ந்தழிதீஞ்சாறுங்கோரண்டத்
தாடுமலர்வாயிலகுமிறுலழிதேனொழுகியாறிழுக்காப்
பீடுதருமாமுனிவருக்குமவ்வாறிழுக்கும்பெரிதாக. (௭௫)

விண்வாயெழுந்தமின்னலெனவிருகுன்றேந்திவியன்கீதம்
பண்வாய்மிழற்றச்சுடர்ப்பவளவல்லியார்த்தபசும்பலகைக்
கண்வாயெழிற்சூரரமகளிருசலாடக்கவின்றருவ
தண்வாய்நறவமலர்கொழிக்குந்தடமென்சினைச்சந்தனப்பொதும்பர். (௭௬)

மூன்றுபுவியுமுன்றிலிடையுய்யபார்முதுமாமறைக்கொடிகள்
ஊன்றிவளருந்தருவனையாருறங்காதுறங்கும்யோகுடையார்
சான்றபனுவலாட்டிதனிக்கிழவன்வியக்குந்தவக்கிழவர்
ஆன்றமுதுதாபதப்பள்ளியலகில்லனவாண்டுளதம்மா. (௭௭)

விடங்கூர்தொளைமுள்ளெயிற்றுமணிவெஞ்சூட்டரவமீக்கிடந்து
தடங்கூர்கமலத்தவட்புணர்ந்துதழல்வாய்நேமியுருட்டியகல்
இடங்கூர்ந்தளித்தோனவனளித்தோன்முதலோர்பதமுமிகழ்ந்திவர்பால்
கடன்கூர்ந்தேவற்றுறைபிழையாதொழுகுமாணர்களும்பலரால். (௭௮)

விரிக்குங்கமலாசனத்திருந்துவிழியைக்கொடிமூக்கிறுதிநிறீஇப்
பரிக்குந்தொடர்மார்பெதிரேறப்பண்டியாழாதயராது
தரிக்கும்படிதோளுயரநகைத்தரளம்பிரியாமூலவொளி
தெரிக்கின்றவனைத்தெரியோகத்திறத்தினவரும்வரம்பிலரே. (௭௯)

தென்பால்வடபான்மேல்கீழ்ப்பால்சிகைநாவளைக்குஞ்சுடர்நாப்பண்
இன்பாலகத்தைக்கிழங்கையகழ்ந்தெறிந்துபணிக்கோட்டிமயவரை
மின்பாலதனையுளத்திருத்திவெய்யோனிடைக்கட்புலனைத்துத்
தன்பாலுசிறுதிக்கணின்றுதவமாற்றுநரும்பலராங்கே. (௮௰)

அகனும்புறனும்புனிதமுறவாறைந்தடக்கியனற்கடமை
தகான்கியற்றிாறுந்தூய்ந்தாமந்திருமஞ்சனமீட்டிப்
பகலுந்துணர்வான்மாயன்வலிப்ருகுங்கணிச்சிவானவனைப்
புகலும்பூசைத்தொண்டுபுரிகிரியையோரும்பொலிந்தனரே. (அக)

எடுத்தபொருளுக்கேற்றகடாவடுத்துவிடைகொண்டதைவிடுத்துத்
தடுத்தவழிநின்றருட்குரவன்குறிப்பானுணர்ந்துசைவநெறிக்
கடுத்தமேற்கோளிறைவனடியகத்திலிருத்தியவனருளே
மடுத்துச்சிவநூன்முறைபயிலவல்லார்பல்லார்குழுமினரால். (அஉ)

பாலரனையவைம்பொறியும்படுக்கும்படையர்சுருக்கணிந்த
கோலருயிர்கூட்குயிராகிக்குன்றுதொழுகுங்குணக்குன்றர்
சீலரெவற்றுஞ்செறியாதுசெறிந்தோனடிக்கேபிறிந்தறியா
மாலர்முத்திமுற்றத்தர்வைகும்வரையின்வளனீதால். (அங)

குழைக்குங்கோட்டுநெல்லிமொன்றக்குடுமிநடுவெட்பொலிந்ததத
னுழைக்குஞ்சரவீருரியான்றெண்டுடையார்துவன்றபழமறைநூல்
தழைக்குமுதலாய்மாமனுக்கட்டடமெண்கிளையாயாகமங்கள்
இழைக்குமிலையாயருட்டுணராயிகவாமுத்திக்கனிபழுத்தே. (அச)

அன்னகடவுட்டருமூலத்தளிநீர்ப்பொன்னிதனையிறக்கித்
தென்னன்பெருநாட்டளிதூங்குந்தென்றற்குழவிநடைபயிலும்
பொன்னங்குவட்டுப்பொதியவரைபுக்கானுமூர்தாழ்புனலாக
முன்னங்கடலேழையுமுண்டமுதுமாதவத்துக்குடமுனிவன். (அரு)

இனையகடவுண்முனியளிப்பவீர்ந்தண்பொன்னியிருவகைத், ாய்க் ।
கனைநீருலகிற்சிறந்ததெனக்கலைதேர்சூதனெனுமேலோன்
வனைநீர்க்காந்தபுராணத்துவருசங்கரசங்கிதைசொன்ன ।
வினைதீர்கதையிங்கிதைச்சூதன்வேணிமுனிவர்க்குரைத்தனனால். (அசு)

(உக-ஆவது. கழுமலாதிவரவுரைத்தவத்தியாயம்முற்றிற்று.)

ஆ. திருவிருத்தம் - கககசுஉ.

## உஉ-ஆவது. குமரவேளுபதேசம்பெற்றவத்தியாயம்.

குலைவிரிகுடக்காய்த்தெங்கின்கூரிலையெனவெவ்வேறு
தலைவிரிந்தளிக்குந்தெய்வத்தண்கழுமலையாறுற்ற
நிலையிதுவாகுமிவ்வூர்நிமலனைமுருகன்போற்றி
மலைவிரியுபதேசங்கொள்வண்ணமும்பகரலுற்றும். (க)

பொழுலாந்திங்கட்கண்ணிப்புரிசடைமுனிவன்சோதி
வீழுலாங்கயிலைக்குன்றின்விரிந்ததென்றிசையினூடே
சூழுலாமருவிமாலைதுவன்றியதடமென்கோட்டுக்
கேழுலாங்கடவுட்டேவகிரியுளதொன்றுமாதோ. (உ)

அக்கிரிதன்னிலெம்மானருளினாலொருமுந்நான்கு
கைக்குமரனுக்குமுந்நூற்கடிமணமுடித்துவெங்கோல்
திக்கிரிதரச்செய்சூரன்றெறுபடைக்குடைந்தமேனி
மைக்கிரியனையானாதிவானவர்க்கிரங்கிவள்ளல். (௩)

கவலருமறைகள்பூத்தகனிமலர்ந்தருளிக்கோடி
திவளொளிப்பரிதிமேனிச்சேட்டிளங்குகனைநோக்கித்
தவலருந்திருவேஞானத்தனியிளங்குன்றேவானோர்
அவலவேரரிவான்சூரனுடல்வேரரிவாயென்று. (௪)

நொறில்வயப்புரவிபூண்டநுகம்படுதரங்கத்திண்டேர்
பொறிவழிச்சிங்கனாதிபொருந்துநூற்றெண்மர்தேர்ச்சி
செறிமதிவீரவாகுமுதலிய துணைவர்செந்தீ
எறிமயிர்க்குறுந்தாட்பூதமிரட்டியாயிரத்தவெள்ளம். (௫)

அசனியேறலறத்தாக்கியங்கையிற்பிசைந்துநூறும்
வசையறுமாற்றலொன்பானிலக்கவாளுழவரோடும்
திசைமுகங்கமழுந்தெய்வச்செச்சையந்தெரியலானும்
கிசையுறவளித்துவெவ்வேறெரிமுகப்படையுநல்கி (௬)

ஓதைமாற்றியவண்டாடுருளநறுங்கடப்பந்தாரோய்
ஈதெலாங்கொடுநீவெஞ்சூரிகறடிந்தெறிகவென்னாக்
கீதயாழ்மருட்டுந்தீஞ்சொற்கெண்டையந்தடங்கட்பேதை
மாதர்பாலொருவனீயமற்றவனிச்சைபூண்டே. (௭)

குலிசவேலிறைவனாதிகுண்டலவாணர்தத்தம்
வலனுறுமிருக்கையேறமாமணியிரதமேறித்
தொலைவறுகடலந்தானைசூழ்வரத்தென்பாலன்பர்
பலனுறவினிதுசென்றான்பன்னிருகரத்துப்புத்தேள். (௮)

பொற்பமர்கடுக்கைமாலைப்புண்ணியனண்ணுந்தானம்
பற்பலவொடுங்கேதாரபணிவரையிறைஞ்சிவேதச்
சொற்பதங்கடந்தோன்வேணித்துறையினின்றிறங்குகங்கை
அற்புதங்கிளருங்காசியமலனையலர்கொண்டேத்தி. (௯)

வேறு.

குளிர்தூங்கருவித்திருச்சயிலங்குறைவில்விருப்பாக்கமும்பரவித்
தெளிநீரெறிபொன்முகலிநதித்திருக்காளத்திவரைபோற்றி
விளியாவொருதன்மனக்கியன்றவிரிவேங்கடமால்வரைநோக்கிக்
களியாலூர்த்ததாண்டவஞ்செய்கடவுளாலங்காடெய்தி. (௧௰)

முன்மாமறைகடேடரியமூலச்சுடராமொருமுதல்வி
நன்மாவடிக்கீழுறைகாஞ்சிநகர்வாழொருவனடிபோற்றிச்
சொன்மாசகற்றுங்கார்த்திகைநாட்சுடரோங்கியமால்வரைதாழ்ந்து
பன்மாதவர்க்குமுத்திநெறிபயக்குமுதுகுன்றினைத்தொழுது. (௧௧)

காரானந்தமருஞ்சோதிக்களத்தினிடத்தன்மணிக்குழையன்
பேரானந்தமணிமன்றிற்பெருமானிருதாண்மலர்போற்றி
நீராமண்ணிப்பெருநதிக்குநிறைகாவிரிக்குநடுவெணனக்
காராவமுதனவனுறையுமந்தண்காழிநகரணைந்தான். (கஉ)

வீரந்தருபூணெழின்முருகன்வேணுபுரத்தைக்காணலொடும்
பாரந்தருதிண்புயத்துமிடற்பானுகோபற்பயந்தவெய்யோன்
வாரந்தருமென்பகைவரவைவழுத்திலாயென்றிழித்தென்னைக்
கோரந்தருமென்றெளிப்பான்போற்குடபாலொளித்தானடல்வெய்யோன். ()

உரிமைத்தாயவுயிர்ப்புடைகாணுடையாளன்றேகடலீன்றுள்
மருகற்காணமடற்கதவமறைத்தாங்கெனத்தாமரைமுகிழ்ப்பத்
திருவுக்கினியவுயிர்ப்பாங்கிசெல்வாவருகவருகவென
அருமைக்கனிவாய்திறந்தழைத்தாங்கலர்ந்ததாலோவரக்காம்பல. (கச)

குமுதம்விரியக்கதிர்விரியுங்குளிர்வெண்மதியென்றுலகுதொழும்
அமிழ்தமெழுமுன்விடமெழுந்தாங்கனையவிருளுமாரமுதத்
திமிதமிறைத்தாங்குடுக்கணமுந்தெள்ளாரமுதமெனநிலவும்
இமிழ்தெண்டிரைநீரொலிவேலியீர்ங்கண்ஞாலத்தெழுந்தனவே. (கரு)

தொலையாவமணப்பேரிருளைத்தொலைத்தபூதிசாதனம்போல்
அலையாருலகத்திருணூறியலர்வெண்ணிலவந்தலைகொழிப்பக்
கலைதேர்காழிக்கவுணியர்கோன்கடவுண்முருகனென்னயலைச்
சிலையானன்பர்மாநேசச்செழியனனகடவுளர்கோன். (கசா)

கடல்வாய்முளைத்தசுதைத்திங்கட்கற்றைநிலவஞ்சுற்றியபின்
மிடல்வேன்முருகற்கிடனுகமெய்ம்மைக்கடவுட்கம்மியர்கோன்
சுடர்மாளிகைவிண்முகடளவித்தொடுதோரணத்தினிழல்பரப்பும்
வடமாமறுகிற்படரொளிகான்மணியாலயமொன்றணிசெய்தான். (கஎ)

இருள்சீத்தொளிகான்மணித்தசும்பினிமைக்கும்பசும்பொன்னெயில்வளைத்துக்
குருமாமணித்தூணிரைபரித்தகோட்டநடுவண்மோட்டரிமான்
தருமர்த்தனமேலுருள்கடப்பந்தாரோனிருப்பவார்கழற்காற்
புருகூதனும்விட்புலவோரும்புறஞ்சூழகம்புக்குறைந்தாரால். (கஅ)

உறைந்தார்பலரிற்கிம்புரிக்கோட்டொருவெள்ளயிராவதப்பாகன்
அறந்தாழ்சூரன்கொடுங்கோலாலலையார்பழனக்கழுமலத்துள்
புறந்தாழ்கூந்தற்சசிமடந்தைபுனைமாணிழைகண்முனைநாளில்
சிறந்தோருழையைத்திருந்தவெலாந்தெரிந்தானுருகிப்பரிந்தானே. (ககூ)

பரிந்தானுரிமைப்பெருந்தேவிபணைமென்முலைமேற்றணியாமல்
புரிந்தான்விரகக்கனல்கனற்றப்பொரிந்தான்கன்னற்பொழுதுகமாய்ப்
பிரிந்தானொருபெண்சசிக்காகப்பெருவெண்சசியின்கதிருருப்பக்
கரிந்தான்கங்குற்பெரும்புணரிகழித்தான்கதிரோன்விழித்தானே. (உ௰)

குவளைக்களத்தன்கண்வரலாற்கோதாடசுரப்பகைதெறலால்
அவனிக்காறுதலையுறலாலம்போருகக்கண்ணனைவிடலால்
தவருக்கருண்மூன்றுலகையாற்றுவில்பூதயகிழ்வரலால்
உவணித்தனிவேன்முருகனெனவுதித்தான்கதிரோனுதித்தலுமே. (உக)

மாலைக்கவிகைவாசவனும்வானுளோருமுனிவரரும்
சோலைக்கவிகைநிழல்பரப்பிச்சூழுங்கழனிக்காழிபுரத்
தாலைச்சுவைநேர்கழுமலப்பேரந்தண்பொன்னிகுடைந்தாடிக்
காலைக்கடவகடனிறுத்துக்கடம்பன்றுணைத்தாளிடம்பணிந்தார். (உஉ)

நடக்குங்காலமீதிற்காந்தணறுமென்குஞ்சித்திருமுருகன்
சுடர்ச்செஞ்சுடரோனெயிறுகுத்ததொல்லைக்காழிவல்லவன்மேல்
கிடக்குங்கருத்தால்வழிபடற்குக்கேழிலொருதன்கோயின்முன்னே
முடக்குங்கொடித்தெண்டிரைபுரட்டுமுதுநீர்த்தடமொன்றதுகண்டான். (உங)

கண்டதடத்துக்கங்கைமுதற்கடவுணதிகளெனைப்பலவும்
மண்டவிருத்திமலர்க்கரத்தான்மணிநீரேந்திப்பணிமாலை
அண்டர்பெருமான்பிரமன்முடியணிந்தபெருமான்பழமறைநூல்
விண்டபெருமான்முடிக்காட்டிவெட்சிப்பெருமானர்ச்சித்தான். (உச)

தொண்டால்வழிபாடிழைத்தலர்தூஉய்ச்சுடரேயிடர்தீருமருந்தே
பண்டாரணநூல்விரித்ததனிப்பவளமணியேபணிவிலர்பால்
அண்டாவொளியேயறிவிலெனுலறியாவறிவேயெனைப்புரந்த
தண்டாவமுதேவேணுபுரித்தலைவாவெனமுன்பணிசெய்தான். (உரு)

உண்ணீருருகநெக்குநெக்குள்ளுடைந்துகுழைந்துதருப்புளகம்
கண்ணீராறாயுள்ளமலர்க்கண்ணீராறாய்க்கனிந்தவன்முன்
பண்ணீர்க்குதலைக்கிளியொடுமான்பரிமேல்வர்ந்துசண்பைவளர்
முண்ணீரெயிற்றுப்பணிமாலைமூன்றாவிழியான்றோன்றினான். (உசு)

கனிவாய்மகளையாறுமுகக்கருணைக்கடலைக்கழற்றுணைமேல்
பனிநாண்மலர்தூஉய்ப்பணிவானைப்பணைத்தோளழுந்தவணைத்தேந்தி
நனியாதரங்கொண்டுன்பூசைநயந்தேநயந்தேநின்னுளத்தில்
இனிவேண்டுவதென்னென்றருளிமயச்சிலைவாங்கியமுதல்வன். (உஎ)

பாலம்புனைவெண்பொடிபுனைந்துபவளச்செவியிலுவகையினான்
மூலம்படுமோனம்பதமுமுறையாலோதிமுறைதணந்தோர்
காலம்பருகும்பாசுபதக்கணையுங்கதிர்க்கூரிலைவேலும்
ஆலம்பொருவெம்படைபலவுமளித்தான்கடுக்கையளித்தாரான். (உஅ)

தெவ்வுப்புலத்தைவேரரிந்துசேண்வாயமரர்மாணிழந்த
கவ்வைச்சிறைமீட்டெய்துகெனக்காளிபுரியானுடையபிரான்
கொவ்வைக்கனிவாய்மகற்கருளிக்கோயில்புகலுஞாயிறெனச்
செவ்விக்கதிர்வேலிளங்குமரன்சென்றானயல்போய்வென்றானே. (உகூ)

அண்டமனைத்துந்தனிக்கவிகையளித்தவசுரன்முரணழிய
அண்டவாணர்தத்தநிலையடையக்கடவுண்முருகனுக்கும்
அண்டமளிக்குநிலைமைபெறவருட்செய்ததுவெங்குருப்பதிவாழ்
அண்டர்பெருமானருளென்றலதன்சீர்புகல்வதெவன்கண்டீர். (௩௦)

முரணிக்கவைமாமுதறடிந்தமுருகக்கடவுண்முன்னமைத்த
உரவுத்தடந்தெள்ளாரமுதையுதகமெனுங்காற்பதகமெய்யே
குரவுக்கடப்பந்தாரொருவன்குழித்தலாற்றன்மகனளித்த
வரமிக்குயர்பூந்தடமிதெனமந்தாகினிப்பெண்மருவலினால். (௩௧)

பருக்கைக்கவளக்களிறட்டபகவன்மதலைதெளியமொழி
குருக்கட்பெரியோன்றடமென்றற்கூறுமாறென்குருகினங்கள்
செருக்கிப்படிந்துவிதிர்த்தசிறைத்திவலைபடினும்புள்விலங்கு
விருக்கக்குலங்கண்மானுடங்கள்வினைவெம்பவத்தாலினையாவே. (௩௨)

தேளார்மதியின்முழுமதியைத்தீர்ந்தநாள்களோராறும்
வாளார்துலைக்கட்டெரிசமொழிமற்றைநாள்களவையாறும்
தாளார்மலர்ப்பூந்தடம்படிந்துதக்கவிரதம்புரிபவரே
தோளாமணிப்பொற்கந்தனுறைதொல்லையுலகின்பயன்றுய்ப்பார். (௩௩)

மதியந்தொறுமிவ்வறுநாளும்வந்துபடிந்துமுனைமழுவாள்
அதிபன்மனுவைவிதிமுறையாலறைந்தோர்புறந்தாழ்கருங்கூந்தல்
பிதிருந்திதலைமுலைமுளரிப்பெண்ணாரமுதின்கண்ணருள்கூர்
நிதியம்படைத்துமறுமையினுநிலைசேர்முத்தித்தலைவாழ்வார். (௩௪)

மீனமிறுவாய்மதிதோறும்விரிகார்த்திகைமீனதிகமின்றி
ஊனமறுகார்த்திகைமாதத்தொருகார்த்திகைமீனவற்றதிகம்
தீனமறுகார்த்திகைமதியுஞ்சிங்கமதியுந்திங்களெனும்
மானமலிநாளிக்கமலவாவிபடிவார்சீவன்முத்தர். (௩௫)

என்னமலர்ப்பூந்தடத்தியல்புமிறைவேன்முருகனெந்தைபிரான்
சொன்னமனுவால்வென்றதுவுஞ்சூதனோர்ந்துதுகளொழிந்த
நன்னர்மறைதேர்முனிவரர்க்குநலஞ்சேர்காந்தபுராணத்தில்
பன்னவரியசங்கரசங்கிதையிலெடுத்துப்பகர்ந்தனனால். (௩௬)

(௨௨-வது. குமரவேளுபதேசம்பெற்றவத்தியாயம்முற்றிற்று.)

ஆ திருவிருத்தம் - ௧௧௧௮.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீசம்பந்தகுரவேநம:

உரு - ஆவது. திருஞானசம்பந்தப்பிள்ளையார்

# திருவவதாரவத்தியாயம்.

கான்மலிகடப்பந்தாரினற்குவந்துகாழிகாவலன்றிருவருள்செய்
மான்மியமுணர்ந்தேஞானசம்பந்தவள்ளலாய்முருகன்வந்துதித்த
பான்மையுண்டென்றுயனையதும்விரித்துப்பகர்கெனமுனிவரர்கேட்ப
மேன்மைசால்சூதன்வினவரும்பொருளீதென்றுபின்விரிவுறவிளம்பும். (க)

ஆன்றதொல்கேள்வியறிஞரிற்போதாயனமுனிசூத்திரத்தொழுகி
ஏன்றமாதவத்தாலுயர்சிவபாதவிரதயன்காழிமாநகர்வாழ்
ஊன்றுமாமறையோனருமகவிருப்பாலுலகளித்தவன்றடத்தொருசார்
தோன்றவாயயில்வேன்முருகனைப்பெறுவான்றூய்தவம்புரிந்தனனெடுநாள்.

இத்தகைநெறிசால்கவுணியர்தலைவனியறவம்புரியுநாளநாதி
முத்தனதுணர்ந்துமூவிருகமலமுகவனைநோக்கிமண்ணிடைநம்
பத்தரைமறையைப்பனுவலையிகழும்படிறரைவல்லமணரைவெம்
புத்தரைத்தடிந்துசைவவைதிகவெண்பூதிசாதனமுறைநாட்டி, (ங)

தலந்தொழப்பதினாறாயிரம்பதிகத்தண்டமிழ்மாலிகைசாத்தும்
பெலங்கொள்காரணமுண்டாதலினுலகிற்பிறந்திவண்வருகெனமகிழ்கூர்ந்
திலங்குநீர்வேணியண்ணலாங்கருளியெண்ணிரண்டாயிரங்கணத்தை
நலங்கிளரடியராகவென்றேவநாமவேன்முருகனுநயந்தே. (ச)

இன்னணமிழைத்திங்கெய்துவெனெனலுமிறைதிருவுளமகிழ்பூப்பக்
கன்னலங்கிளவிக்கவுரிபண்மகிழ்ந்துகளிவரவுச்சிமோந்திறைவன்
சொன்னவாறுதித்ததலததியான்போந்துதுணைமுலையமுதளிக்குவெனென்
றுன்னருங்களியால்விடுப்பவேலரசுமுயர்கணத்தலைவரைநோக்கா. (ரு)

ஆதியங்கடவுளருள்வழிபதினாறாயிரவீருநீர்சூழ்ந்த
மேதினித்தலங்கடோறுமவதரித்துமேவுமென்றேவிவெண்கயிலைப்
பூதலமதனிற்காழிமாநகரிற்புண்டரீகன்றடத்தொருசார்
மாதவம்புரிவோன்முன்னிளங்கதிர்போன்மதலையாய்வந்தனன்கந்தன். (சு)

நீங்கருந்தவத்தோன்மகவுகண்டுவந்துநிரப்பினன்கடவுண்மாமணிபெற்
றோங்கினனென்னவியப்பமீதூரவுயர்வடமீனனகற்பின்
மாங்குயிற்கிளவிப்பகவதியெனும்பேர்மனைவிபாலெடுத்தினிதளிப்பப்
பூங்குழல்களிகூர்ந்துச்சிமோந்தினியபுதல்வனைக்கொடுமனைபுகுந்தாள். (எ)

பாணிமூவுலகும்புதையமேன்மிதந்தபல்லுயிர்புரக்குமோர்குடிலைத்
தோணியாளுடையான்மேனியஞ்சுடராய்த்துலங்கவந்துதித்தமாமகற்குப்
பேணியதிருநாளையிரண்டினுஞ்செய்பெருங்கடனாற்றிநீறணிந்து
மாணியல்பருவந்தொறுமழ்கதிர்போல்வளர்ந்துமூவாண்டெனவருநாள். (௮)

குலப்பெருந்தாதைமலர்ப்பெருங்கிழவன்குளிர்தடம்படிகுவான்செலுங்கால்
தலத்துறமழலைக்கிண்கிணிமிழற்றுந்தாள்கொடுநடந்துறுமகவை
மலர்க்கணால்வெகுண்டுமுடன்வரக்கொடுபோய்மணித்தடங்கரையினிறுவிப்
புலப்பகையெறிந்தோன்புனற்படிந்தாடப்புகுதலுங்குமுதவாய்ப்புதல்வன். (௯)

இளம்பசிகூர்ந்தாரெனவுள்முருகியிரங்கலும்வரம்பிலாமறைநூல்
அளந்தறியாததானணங்கொடுவிடைமேலாங்கெழுந்தருளிநின்மகற்கு
விளங்கிழாய்முலைப்பாலருளெனக்கனகவில்லுமிழ்வள்ளமேன்ஞான
வளங்கொள்பாலருத்திமலர்க்கணீர்துடைத்தாண்மலர்தலையுலகெலாமீன்றாள்.

துடைத்தலுஞானபோனகமுண்டதோன்றலாரான்றபல்கலைகள்
இடைப்புணர்ஞானந்தோய்ந்துதோய்வின்றியெவ்வுயிர்க்கண்ணுமோர்நிலையே
படைத்தளித்தழிக்குநிறைபரம்பொருளுட்படருமெய்ஞ்ஞானமுமாங்கே
கிடைத்தனரொருதன்றாதையுமாங்கேகிட்டினார்சிறிதுளம்வெகுண்டு. (௧௧)

யார்கொலோவிதுபாலளித்தனரெனலுமின்றளிர்மணிவிரற்சுட்டிச்
சீர்செய்தோடுடையசெவியனென்றெடுத்துச்செங்கண்வெள்ளேற்றினிலிவர்ந்த
ஓர்பொருட்கடையாளம்பலவுமுத்தியொழிந்தபேரருளுணர்த்திவனே
ஏர்பெறுமிதுவேபொருளெனக்காட்டியீர்ந்தமிழ்ப்பதிகமொன்றிசைத்தார். ()

பதிகமுமிமையோர்பொழிமலர்மழையும்பஞ்சதுந்துபியொலியதிர்ப்பும்
மதிபுனைவரதனுமையொடும்போந்தவண்ணமுந்தந்தைகண்டிரங்க
எதிரில்பொற்றோணியிருமுதுகுரவரிணையடிபோய்ப்பணிந்தெண்ணில்
குதுகுதுப்பொடுந்தன்றிருமனைபுகுந்தார்குலமறைதமிழினில்வடித்தார். ()

துவரொறிகனிவாய்கழைபொருதடந்தோட்சுந்தரியளித்தமெய்ஞ்ஞான
நவையறுதீம்பாலருந்தியவாற்றான்ஞானசம்பந்தரானவர்தாம்
புவிபுகழ்ந்தெடுப்பவணியகோலக்காப்புனிதன்மேன்மடையில்வாளைகளென்
றுவமைதீர்பதிகம்புகன்றுகைம்மலராலொத்தினார்முத்தமிழ்விரகர். (௧௪)

ஒத்தியோதுதலுமைந்தெழுத்தமைந்தவொளிசெய்பொற்றாளமெய்யருளால்
கைத்தலம்பெறலுமுமையொலிகொடுப்பக்கனிந்துபண்பாடுபுகாழி [ய்
முத்தன்மேற்பூவார்கொன்றையென்றலர்சொன்முருகவிர்மாலைசெய்துயிர்த்தா
உத்தமநகராந்திருநனிபள்ளியுடன்வருந்தாதையோடிறைஞ்சி. (௧௫)

காரைகள்கூகையென்றுமெய்யானைக்காட்டியபதிகமங்கிசைத்து
நாரைபாய்பழனத்தலைசயம்பேரூர்நற்றிருவலம்புரம்வளையூர்
தேரைவாய்ப்புனல்சூழ்பல்லவனீச்சமிவைதொறுஞ்சுவைத்தமிழேத்திப்
பாரையாண்டளிப்பான்மண்புகாரென்றபாடல்சாய்க்காட்டினிற்போற்றி. ()

வேதவெண்காடுபெண்ணிந்துகண்காட்டுநுதலெனுந்திருமொழிவிளம்பி,
ஓதநீண்முல்லைவாயில்வண்குருகாவூர்மயேந்திரப்பள்ளியோதி
நாதனுன்மறைசூழ்காழியம்பதிக்கணண்ணுநாட்டிவவுயாழ்ப்பாணர்
காதல்சேர்பன்னியுடன்வரலவரைக்களித்தனர்கவுணியர்திலகர். (கஎ)

புக்கிருவோருங்கீதயாழகத்துப்புகன்றதண்டமிழிசைபோற்ற
மைக்கருமிடற்றுத்தோணிநாயகன்றாண்மன்னருள்பூண்டுபொன்னெயில்சூழ்
திக்குறவனைக்குந்தில்லைமன்றிறைஞ்சத்தெள்ளலைசுருட்டுக்கொள்ளிடநீர்
அக்கரைநெறிக்கொண்டந்நகரடைந்தாரருந்தமிழ்ப்பொழிமுகிலனையார். (கஅ)

மன்றுறைமூவாயிரவருங்களிப்பமாதுமைகாணநாதாந்தத்
தொன்றுமரீரந்தநாடகம்பரவியுவந்துகற்றுங்கெரியோம்பி
என்றுறவாழ்த்திவேட்களம்பாடியியல்கழிப்பாலையும்பழிச்சிச்
சென்றுபாணருக்குத்தில்லையந்தணரைத்தெரித்தனர்முழுதிலுந்தெரிந்தார். ()

பின்னருங்கனகமன்றுடையான்மேற்பெட்புறவாடினைநறுசெய்
என்னியற்பாடிநிவாக்கரையோடுமேழிசைச்சுருதியாழ்ப்பாணர்
முன்னுரையெருக்கத்தம்புலியோரமொழிந்துபற்பலதலம்பணிந்து
கொன்னெடும்புரிசைமுதுகிரியணைந்தார்கொழுந்திலேவயிரமுற்றனையார். ()

தேங்குநீர்வேணிக்குன்றவாணருக்குந்திருவிருக்குக்குறள்சாத்தி
வாங்குதுங்கானைமாடமும்புகழ்ந்துமாறனூர்வந்தபாலகர்தாம்
பூங்கழல்வருந்தாதாரவெண்சிவிகைபுனைமணிக்கவிகைபொற்சின்னம்
ஆங்கவையளித்தாரறத்துறைக்கெந்தையீசனென்றுய்தமிழணிந்தார். (உக)

மிளிர்சிவிகையிற்போந்தரத்துறைபழுவூர்விசயமங்கைப்பதிவைகா
நளிர்புனற்சேய்ஞலூர்திருப்பனந்தாணண்ணுமோமாம்புலியூர்வாள்
கொளிநகர்கடம்பூர்நாரையூர்மிக்கோர்கொள்கருப்பறியலூரேத்தித்
துளிமுகிற்சோலைக்கழுமலமணைந்தார்துரியநீங்கியபொருளணைந்தார். (உஉ)

தேவியிற்றோணியிறைவனைப்பரவித்திருமனைபுகுந்துபாணரைப்பாங்
கேவியன்புடைத்தாய்நீற்றணிபேணியிலங்குமுந்நூன்மணங்கண்டு
மேவுபன்மறையுமந்திரப்பரப்பும்விதிமுறைபுகன்றுவேதியருக்
கோவிலந்தியுண்மந்திரமெனும்பனுவலோதினரோதுமுன்னுணர்ந்தார். (உங)

அன்னநாளடுத்தநாவினுக்கரசோடளவளாயாங்கவரகல
இன்மொழிமாற்றுமாலைமாற்றெழுகூற்றிருக்கையீரடியின்மேல்வைப்பு
மன்மடக்கேகபாதநாலடிமேல்வைப்பிருக்குக்குறளிராகம்
பன்னுசக்கரமாற்றுதிகளோதிப்பாணர்பண்ணிசைப்பவைகியநாள். (உச)

ஆரிலைச்சூலத்தாரழலாடியருந்தலம்பலதொழவருளால்
தேரியற்றூதையுடன்வரத்தரளச்சிவிகைபொற்கவிகைமுன்னிழற்றப்
பேரியற்பீலிபிறங்கொலியார்ப்பப்பெருந்திரைப்பொன்னியின்வடபால்
ஏரியவடியார்குழுவொடுமெழுந்தாரிறையுருக்காட்டுமோறெழுந்தார். (உரு)

பொடிப்புயன்வேளூர்கின்றியூர்நீரோர்போற்றுபுன்கூரொடுமண்ணிப்
படிக்கரைகொறுக்கைபுன்னியூருயர்பந்தணைநல்லூர்திருமணஞ்சேரி
கடிப்பொழிலெதிர்கொள்பாடிதொல்வேள்விக்குடிதிருக்கோடிகாக்கஞ்சை
எடுத்தமாந்துறைமங்கலக்குடிவியலூரிறைஞ்சிவண்டமிழ்தொடுத்திசைத்தார். (௨௭)

மேலதேவன்குடியினின்மருந்துவேண்டிலென்றோதியின்னம்பர்
பாலலோசனன்மேலிடைமடக்கிசைத்துப்பஃறலம்பணிந்துவெண்களிற்றுத்
தோலுடையொருவன்வடகுரங்காடுதுறைபராய்வழுத்திவெவ்வேறு
சிலமார்தலமும்பழனமுமேத்தித்திருவையாறணைந்தனர்செல்வர். ()

தலமதிற்புலனைந்தெனுந்தமிழ்கோடல்கோங்கமென்றெருதமிழ்சாற்றி
அலர்பெரும்புலியூரையனெய்த்தானமணிமழபாடிகண்டவ்வூர்
மலைவிலிக்கங்கையாரழலென்னுவாழ்த்துபுவைகியக்கானூர்த்
தொலைவிலிக்கிறைஞ்சியயல்வடகரைமாந்துறையணைந்தார்மறைத்துறையார்.()

பணிவளர்புயத்தானன்பிலாலந்தண்டுறைபராய்ப்பாச்சிலாச்சிராமத்
திணையுறுகொல்லிமழவன்மாமகடனிடரறிந்தெம்பிரான்றிருமுன்
மணிவளர்கண்டர்மங்கையவாடமயல்செய்வதோவிவர்மாண்பென்
றணிவளைக்கிரங்கிமுயலகற்றீர்த்தாரருளினற்புவியிடர்தீர்த்தார். (௨௯)

அயற்பலதலம்பைஞ்ஞீலியீங்கோயிலங்குறீஇக்கொங்கிலுள்ளனவாம்
உயற்றரும்பொன்னித்தென்கரைச்செங்குன்றூர்நணுப்பதிபணிந்துறைநாள்
வியக்குமவ்வினைக்கிவ்வினையெனப்பனிநோய்வீட்டிநீள்கொடுமுடியேத்தி
வயப்பதிவெஞ்சமாக்கூடல்கருவூர்மாணிக்கமலைபராய்த்துறையே. (௩0)

துரிசறுமாலந்துறையொடுதிருச்செந்துறைகொள்கற்குடிசிராப்பள்ளி
சரியிலானைக்காத்திருமயேந்திரம்பொற்றவத்துறைபாற்றுறையெறும்பீச்
சுரநெடுங்களங்காட்டுப்பள்ளியாலம்பொழிலொடுதுலங்குபூந்துருத்தித்
திருமலிகண்டியூர்சோற்றுத்துறைமெய்த்திருவேதிக்குடிவெண்ணிப்பதியே ()

பிறபலதலங்கள்சக்கரப்பள்ளிபுள்ளமங்கைப்பதியாலந்
துறையொடுதிருச்சேலூர்திருப்பாலைத்துறைநல்லூர்பற்பலவேத்தி
இறைகருகாவூரினிலத்தர்வண்ணமென்றிசைத்தவளிவணல்லூர்
உறுதிருப்பருதிநியமமென்பூவனூரொடாவூர்நல்லூரேத்தி. (௩௨)

திருவலஞ்சுழிமேற்பளியொடுசத்திமுத்தமுமுத்தமிழ்சேர்த்தி
இருமுதுவேனிற்பருவநாளடுத்தவின்னல்கண்டண்ணல்பட்டீசர்
பொருவெயிறணித்துவிரிநிலாவெறிப்பப்பூதராலுய்த்தமுத்திலைத்த
அருமணிப்பந்தர்பெற்றுமேலவ்வூர்க்கருந்தமிழலங்கல்செய்தணிந்தார். (௩௩)

வேறு.

பின்னர்வடதளிபொடிரும்பூளையரதைப் பெரும்பாழிசெறைநாலூர்குட வாசற்சீர், அன்னநறையூர்புத்தூர்சிவபுரத்தோடாதிகுடமூக்குக் கீழ்க்கோட்ட மெய்தி, நன்னரினெம்மிறையே யென்றுறுகாரோணநாகீசம்வாழ்த்திடைம ருதூர்நண்ணிப், பன்னருமோடேகலனென்றிசைத்துத் தானம்பல்பணிந்து குரங்காடுதுறையும்போற்றி. (௩௪)

ஆவடுதண்டுறையினிடரினு மென்பாடலணிந்தமலனருளிய பொற்கிழி
யையேவ்வி, மாவிளைத்தந்தையர்க்குதவித்திருக்கோழம்பம்வைகன்மாடக்கோ
யினல்லஞ்செம்பொற், றூவியழுந்தூர்பலகண்டிறைஞ்சிவாழ்த்தித்துருத்திநக
ர்பரவிவரைத்தலையென்றோதி,மூவனகர்திருமயிலைச்செம்பொற்பள்ளிமுளைத்த
விளநகர்கண்டார்முழுதுங்கண்டார். (௩௫)

குளிர்பறியலூரொடு மற்றுளவும் வேட்டக்குடியுமடுத்திசைமாலைதொடுத்
துச்சோலை, வளர்தருமபுரம்பணிந்தியாழ்முரிமாதர்மடப்பிடியென்றெடுத்தோ
திநள்ளாறெய்தி, மிளிர்போகமார்த்தவெனப்புகழ்ந்துதானம்வேறுமுறை வண
ங்கியுயர்சாத்தமங்கை, யளிநீலநக்கர்மனையமுதுங்கொண்டாரன்னைதிருநிலைய
முகியமுதமுண்டார். (௩௬)

இளக்குமதுதலத்தொடுநாகைக்காரோணங்கீழ்வேளூரொடுபிறவும்பணிந்து
செந்நெல்,வளத்தடஞ்சூழ்மருகலிலோர்வணிகனுவிவாளரவம்பருகவருன்மண
க்கும்பேதை, துளக்கெரியின்மெழுகெனவுள்ளுருகியாவிசோர்ந்தலறுமோதை
செவித்துணையினேறத், தளர்ச்சிதருமோவுடையா யிவளுக்கென்றுசாத்தியளி
த்தாருயிரைத்தாளம்பெற்றார். (௩௭)

வடிநெடுங்கட்புகார்வணிகன்மகட்குமாவிவணிகனுக்குமணமுடித்துத்திரு
ச்செங்காட்டங், குடிபரவியங்கமும்வேதமுமென்றோதிக்குளிர்புகலூர் வர்த்த
மானீசம்போற்றி, அடிமுருகனாமடம்புக்குழித்தென்னுரூரரசுவரவறிந்தவ்வூ
ரணைகுவார்விற், குடிபணிந்துசாநாளென்றோதியாரூரடைவோ மென்றிசைத்
திருக்குக்குறளுஞ்சாத்தி. (௩௮)

பதியதனிலந்தமாயுலகென்றோதிப்பவனமாச்சோடையாயென்றுமேத்தி,
மதிமுடியானயற்றலங்கள் பனையூர்சோலைவல்வலங்கோளிலிவாழ்த்திப்புகலூர்
நண்ணி,முதியகுறிகலந்தவிசையெனுநூற்சாத்திமுருகனார்சிறுத்தொண்டர்நீல
நக்கர், விதியொடவர்தமக்கருள்செய்தாசோடாங்கண்மேவினுரயல்பரவவேத
வாயார். (௩௯)

புடைவயல்சூழம்பரமாகாளம்புல்குபொன்னிறமென்றடைந்து கடவூரிற்
சார்ந்து, சடையுடையாயெனவிளம்பிமயானம்போற்றித் தருகலய னாரமுத
ண்டாக்கூறெய்தி, விடையுடையான்மீயச்சூர்பாம்புரத்திற்சார்ந்துவீழிமிழலை
யிலரசோடிறைஞ்சியாங்கண், உடையனையாரொடுசடையார்புனலென்றோதி
யொருதிலதைபேணுபெருந்துறையுமெய்தி. (௪௰)

வாகீசரொடுமிழலையெய்திப் பன்னாள்வைகியநாட்சிரபுரமாசனங்கணன்
ணப்,பாகூரின்னமுதூட்டிக்கனவிற்கண்டபடிதோணியமுகனையத்தளியிற்கண்
டு, மாகாதன்மைம்மருபூங்குழலென்றோ திவறந்தசிறுவிலைநாளவ்வள்ளலீந்த,
சேனார்பொற்காசுபெற்றுவாசிதீரச்செந்தமிழ்செய்தார்பசிநோய்தீரச்செய்தார்.

அவ்வழிவாஞ்சிய மாலங்காடேவேளூரணிசாத்தங்குடியொடுதென்கரவீரஞ்சேர், செய்விளமர்பணிந்துதிருவாரூராருய்த் திருக்காறாயிற்றேவூர்திருநெல்லிக்கா, எவ்வமிகைச்சினந்திருத்தெங்கூர்கொள்ளிக்காடிசைகோட்டூர்வெண்டுறைதண்டலையுஞ்சோலை, மவ்வல்கமழ்திருக்களருமரசோடெய்திவாழ்த்தினர்திருவீருட்பான்மணத்தவாயால். (சஉ)

மறைவனத்தின்மறையடைத்தமணிக்கபாடம்வாகீசர் திறக்கும்வழிவகுத்துமற்றை, இறையவன்மேற்சதுரமறையென்றுபாடி யிணைக்கதவமடைத்தருளிவாய்மூரீசர், நிறைகனவு தெளிந்தரசுசெல்லச்சென்று நிலவுதளிரிளவெனவோர்பதிகஞ்சாற்றிக், கறைமிடற்றார்மறைக்காட்டிலணைந்தார்யார்க்குங்காணுணைக்கண்டமுத கனிவாய்மைந்தர். (சங)

ஆயமறைக்காட்டினில் வீற்றிருக்குமந்நாளணிபாண்டிநாடனைத்துமமண்பேய்கொண்டு, நோயடையக்கூன்வழுதிமருளக்கண்டுநுடங்கிடைமங்கையர்க்கரசியாருந்தேர்ச்சித், தூயவினைக்குலச்சிறையுமெந்நாடுற்றதுன்பமறுத்தின்பமிகச்சைவமோங்கத், தாயனையாயெழுந்தருள்க வென்றுதீட்டித்தமிழ்விரகரிணையடிக்கீழ்ச்சாரவிட்டார். (சச)

விட்டதுகொண்டெழு மமயத்தரசு பொல்லாவிகட முடைப்பறிதலையரிழைக்குமாயை, மட்டலரன்றுளுமலவெனுங்கானன்மைவளங்கெழுவேயுறுதோளிபங்கனென்றே, இட்டதமிழியம்பிமுத்தின்சிவிகைமேற்கொண்டிலகுமணிக்குடைநிழற்றவடியார்ண்டத், தொட்டமணிச்சின்னவொலிபோர்ப்பமுத்தின்சுடர்மணித்தண்பந்தனிழறுலங்கச்சென்றார். (சரு)

வருகோடிக்குழகர்கடிக்குளமி பாவனமுசாத்தான மொடுகொடுங்குன்றேத்தித், திருவாலவாயுறுங்காலமைச்சர்போந்து சென்னிமிசைமுகிழ்த்தமலர்க்கரத்தராகி, இருபாதம்வணங்கலுநம்மரசியாருக்கின்பமோவெனவடிகளருளாலின்பம், ஒருவாதென்றகமகிழ்வுற்றெழுவார்க்கன்ப ருதுக்காணுமாலவாயென்னத்தாழ்ந்தார். (சசு)

அதுகணத்தவ்விருவர்பெயராலவாயாவதுமிதுவேயெனும்பதிகத்தமையப்போற்றி, மதுரைமறுகடைந்திருக்குக்குறளுஞ்சாற்றிமடத்திலெழுந்தருளிமதியமைச்சர்செய்த, விதமலிசீருவந்திருப்பஞாயிறுதி வெங்கோளுநல்லவெனப்பகர்ந்தார்வெல்ல, எதிரிருள்செய்தமணிருளையழிப்பான்போலவிரவியொளித்தனன்மடவோரினையசெய்வார். (சஎ)

பன்னகமென்குருளையிடியொலிகேட்டென்னப்பரசமயகோளரியார்வந்தாரென்று, சின்னவொலிதிசை போர்ப்பத்தலைகள் கீறிச்செவிதகர்ந்துதென்னவர்கோனோடுமெண்ணி, மன்னருமந்திரத்தழல்விட்டேறாதாகவயங்குசுடுதழற்கொடுபோய்மடத்திலுய்ப்பப், பன்னுமடியவர்க்குறுமோசொக்கேயித்தீயையவேசென்றுபாண்டியர்க்காகென்றார். (சஅ)

என்றலுமினவனுடலிலத்தீமேவவிதுவெதுப்பென்றமணர்கண்மந்திரங்களாலும், தன்றுபிரம்பாலுமயிறபீலியாலுந்தொழுதுதுடைத்திடநெய்வார்சுடர்போற்பொங்கிக், கன்றுபிரம்பெரிந்துகரமெரிந்துபீலிகரிந்துசுடுநோறியயற்கண்ணுந்தாவிச், சென்றதருட்பிள்ளைசொல்லால்வந்ததீயைத்தீர்க்கவந்ததெய்வதமுந்தீந்ததன்றே. (௪௯)

உலகிருளையொழிக்குந்தானுழியப்பாயலுடையிருளையொழிப்பார்கண்டுவப்பான்போலச், சலதிமுகட்டினில் வெய்யோனுதிப்பத்தேமாந்தளிரழலிட்டெனவழுதி துயருங்காலை, அலைபொழிகண்ணரசியராலமைச்சரெய்தியருந்தமிழ்வித்தகர்க்குரைப்பவஞ் சீரவெப்பால், மலைபிணியுமமண்பிணியுந்தொலையக்காட்டுமாவூரியென்றிறைகோயில்வாழ்த்திப்போந்தார். (௫௦)

போந்தளவிலரகரவென்றொலிவிண்போர்ப்பப் புதுநிலவுக்குடைநிழற்றச்சின்னமார்ப்ப, வேந்தனகம்புகுந்தரசன்முடிக்கட்பீடமேலெய்திவல்லமணக்குழுவையஞ்சும், பூந்தொடி முன்மானினேர் விழியென்றோதிப் புரவலர்க்கும்பினைபெயரிராறுபூண்டு, வாய்ந்தகழுமலமெம்மூரெனலுமன்னன்மனமமணர்மயக்கினைவிட்டொரீஇயதன்றே. (௫௧)

மொழிவழுதிப்பிள்ளையார்முகமும்பொல்லாமூகர் முகமும்பார்த்தென்னோய்தீர்ப்பார்க்கே, வழியடியேனெனலுமிடப்புறங்கொண்டனர்மாற்றியிடமந்திரமாவதுநீறென்றே,கழுமலக்கோன் வலப்புறங்கொண்டின்னறீர்ப்பக்காணருமுத்தியுநரகுமமுதுநஞ்சும், தழுவினபோல்வலங்குளிர்ந்தெய்திடந்தீமூளச்சமணினத்தைவெகுண்டொழித்தான்றமிழ்சேர்நாடன். (௫௨)

இடமருங்குந்தமிழ்விரகரருளானோய் தீர்ந்திறைமகனுமடிமைபுகவமணரெங்கட், கடவுள்வலிநுங் கடவுள்வலியுந்திட்டிக் கனலிலிட்டுத்தேர்துமெனக்காழிவேந்தர், மடலவிழ்புத்தகம்பகுத்துபோகமார்த்தவண்பதிகமேந்தி நள்ளாற்றிறைமேலார்வம், உடையதளிரிளவளரென்றொருபா வேத்தியொள்ளெரியினடுவணிட்டாரொளிர்நீறிட்டார். (௫௩)

இட்டவேடொளிபசியதாகப்பொல்லாவேடரிவண்டுகளாகத் தேரார்பின்னும், பட்டதிரையாற்றினிலிட்டறிதும் யாதும்பழுதுபடிற்கழுமுனையிற்படர்வோமென்ன, ஒட்டலுமினவனொடு நீள்வைகைப்பேராற்றுறுகரையினின்றமணரோலைகீழ்பால், விட்டகலப்பிள்ளையார்வாழ்கவென்றுவிடுமொழிப்பாசுரமெதிர்நீர்விரைந்ததன்றே. (௫௪)

அன்றுபுனலெதிரேறுமேடு கொள்வானமைச்சர்பரியேறியவண் பாசுரஞ்செல்லாறே, சென்றுழியாயிடைவன்னியெனும்பேரேற்றிச்சிவஞானப்பிள்ளையருளேறப்பாட, நின்றதனையமைச்சர்கொண்டுகோயிலேறநிருபன்வியப்பேறவமண்கழுவிலேறக், கன்றுதலில்கன்னிநாடெல்லாநீற்றுக்காப்பொடுமைந்தெழுத்தேறிக்கலந்தவன்றே. (௫௫)

கலந்தவழி முறைநிறுத்திப்பொற்கைபூண்ட கவுரியர்பணிக்காளைக்காழிச் செல்வர், நலம்புனைந்த முழுதிலும்பொன்னனென்றுஞாலம்வியந்திடப் பாண்டியரசியாரோ, டிலங்குமதியமைச்சனொடுவழுதிபோற்றவிறைவனமேனியைப்பதேசியமமென்றோர், அலங்கல்புனைந்துழிகாழித்தந்தையார்தாமணைவுறக்கண்டகமுகிழ்ந்தாரமணைவென்றார். (௫௬)

முற்றறிவிற்பருவத்தே யாண்டதோணிமுதல்வனையு முதல்வியையுநினைந்துள்ளூறி,மற்றவர்மேன் மண்ணிநல்லவணமென்றோதிவழிபடுமூவரும்போதச்சிவிகைமேற்கொண், டுற்றபலபதிபரங்குன்றப்பனூர்புத்தூரொடுபூவணஞ்சுழியலுயர்குற்றாலம்,அற்றமில்நெல்வேலிபுடைமருதூரேத்தியணியிராமீச்சுரம்போற்றிசைத்துக்கீழ்பால். (௫௭)

கோணமாமலைகேதீச்சரநின்றேத்தியாடானை புனவாயில் கூறித்தேர்ச்சி, வாணன்மணிமேற் குடிகண்டொருமூவர்க்கும் வழியருளிக்களர்ப்பாதாளீசம் போற்றிப், பேணுமுள்ளிப்பெருநதியிற்கொள்ளம்பூதூர்ப்பெருமான்மேற்கோட்டமேகமீழுமென்றோர், தோணியாரருள்படைத்தோரோடமேறிச்சொல்லலங்கல்புனைந்துதிருநள்ளாறெய்தி. (௫௮)

பாடகமெல்லடிபாடிவாதிற்காத்தபரிசோதித்தெளிச்சேரியிறைஞ்சிப்புத்தூர்க், காடிடிவீழ்ந்தருளி யொழிந்தவனைவாதிலடிப்படுத்திக் கடவூர்புக்கப்பர் வாழ்க்கை, தேடியுயர்பூந்துருத்திபுகுமுனன்னோர்சென்றெதிரேதெரிவிலராய்த் தெரிந்துபோற்றிக், கூடுமணிச்சிவிகைபுறம்பரித்தாரென்னக் குதித்தவனைப்பணிந்தவ்வூர்க்கொடுபோய்ப்போற்றி. (௫௯)

நாவலையர்மடத்தமுதுவிரும்பிக்காஞ்சிநகர்முத லங்கவர்பணிந்தலம்பாராட்டிப், பாவியமண்குறும்பெறிந்தவாகைகூறிப்பதிபலகைதொழவேவிநளிநீர்ப்பொன்னி, மாவடபானெய்த்தானந்திருவையாறுவளர்பழனம்பணிந்துகழுமலம்புக்காதி, தேவன்மிசையுற்றுமையாம்பதிகம்பாடித்தில்லைநகர்பணிந்துதிருத்தினையூர்போற்றி. (௬௦)

மாணிகுழிகன்னிவனம்வடகூராதிவக்கரையோடிரும்பை மாகாளமேத்தி, ஆணமலியதிகைகுண்டை குறளாமாத்தூரதிற்குன்றவார்சிலையாமலங் கல்சாத்தி, நீண்மதிள்சூழ்கோவலறையணிநல்லூர் பின்னிலவண்ணாமலைபணிந்தவ்வையிலெம்மான், தாண்மலர்க்குண்ணாமுலைபூவாரென்றாய்ந்துசாற்றினாரணியதிருவோத்தூர்சார்ந்தார். (௬௧)

மற்றிலாண்மனைகனியக்கனிவாய்பூத்துமாகறலுங்குரங்கணிமுட்டமும்வந்தேத்தி,எற்றுபுனற்காஞ்சியினின்மறையானென்றும்மகமொடுமின்னிருக்குக்குறளும்போற்றி, அற்றமில்காமக்கோட்டநெறிக்காரைக்காடனேகதங்காபதந்திருமேற்றளியுஞ்சூழ்ந்து, சுற்றியபாலாற்றொடுபோய்த்திருமாற்பேறுதிருவல்லமிலம்பயங்கோட்டூர்கண்டேத்தி. (௬௨)

விற்கோலந்தநீகோலமூறலாதிவிரிபழையனூர்பரவியாலங்காடர், சொற்கோலக்கனவுணர்ந்துபதிகமாலைதுஞ்சவருவாரொனுஞ்சொற்றொடுத்துச்சூட்டி, நற்கோலப்பதிய தினிலிருப்பார்வாய்மைநமூவாமைநயந்திசைத்துப்பாசூரெய்தி, எற்கோலஞ்சிந்தையுடையாரென்றேத்தியேதமிழ்வெண்பாக்கநகரினிதுவாழ்த்தி. • (௬௩)

வரத்துயர்காளத்திவரைபணிந்தவ்வூர்க்குவானவர்களெனுமாலைவகுத்துச்சோதி, பரப்பியகேதாரங்கோகரணந் தெய்வப்பருப்பதமிந்திரநீலப்பருப்பதாதி, இருக்குமலையத்திற்பரவியெந்தையாரென்னிசைமாலைபுனைந்துவேற்காடுமேத்தி, உருக்கமொடுவலிதாயம்பரவியொற்றியூர்க்கண்விடையவனெனும்பாவுரைத்துவாழ்நாள். (௬௪)

தேமருவும் பொழின்மயிலாப் பூரினுய்கன்சிவநேச னார்மகளேழ்பருவஞ்செல்ல, மாமுளைவாளெயிற்றரவமுருக்கவாவிமரிந்தவுடலெற்புமணித்தசும்பையெம்மான், பூமணிமுன்றிலிற்கொணர்வித்தோர்மட்டிட்டபுன்னையெனவொருபதிகம்புனைந்துமாதை,எமுறுமாறெழுவித்துவான்மியூர்பக்கிறைஞ்சினரெவ்வுலகு மிறைஞ்சவந்தார் (௬௫)

வேறு.

கண்ணாரும்விடைச்சுரம்போந்திவர்வண்ணத்தமிழ்பாடிக்கழுக்குன்றெய்தி
எண்ணாருநிறைகாதல்செய்கோயிற்கழுக்குன்றேயெனுநூற்சாத்திப்
பண்ணாரச்சிறுபாக்கத்தாட்சிமொழிந்தரசிலியும்பனங்காட்டூரும்
தண்ணாரன்பொடுவணங்கித்தில்லைநகர்கண்டணைந்தார்தமிழ்ப்பாலுண்டார்.

அக்கனகமணிமன்றிலருமருந்தையடிதொழுதாண்டமருமந்நாள்
புக்கடருஞ்சினைகமொடாறும்பைக்கிளிசெந்தமிழ்தெரிப்பப்புவைகேட்கும்
மிக்கபொழில்புடையுடுத்தகாழிபுரத்தந்தையார்விருப்பினேற்பத்
தக்கமணத்தொருதோணித்தாதையாரடிபணிவார்சண்பைவந்தார். (௬௭)

மானகரமணித்தாகவெய்துழிவண்டார்குழலென்மாலைசாத்தித்
தேனகுதார்நளாயிசழிப்பெரியநாயகன்றுணைத்தாள்சென்னிசேர்த்திப்
பானல்வயற்காழிக்கோர்மினனமொருபதிகம்பரவிச்செம்பொன்
வானகுமாளிகையணைந்தார்லோகக்கர்முருகப்புகமருவிவாழ்நாள். (௬௮)

பழமறைதேரந்தணருஞ்சிவபாதவிரதையரும்பலரும்வேள்விக்
கிழமைதனக்குரியமணக்கிழமைவினைமுடித்துமெனக்கிளக்குநல்லூர்
அழல்வினைதேர்நம்பாண்டாரருங்குலத்துமகட்பேசியமலன்காழி
மழவிடையான்றிருமணியைச்சிவிகைமிசைக்கொடுபோந்தார்மறைகளார்ப்ப.

நிறைக்கோலமதிகண்டநெடுங்கடல்போலியங்குளிரங்கருஞ்சைவத்
துறைக்கோலர்தலையெடுப்பவழகினுக்கோரழகுசெயத்தொடங்கினாற்போல்
இறைக்கோலத்தும்பிபடர்நறைக்கோலக்கொன்றையினார்செவிக்கட்டீஞ்சொல்
மறைக்கோலப்புனைபவளமணக்கோலமதுபுனைந்தார்மறையோரெல்லாம். (௭௦)

விதிமுறையான்மறைச்சடங்கின்விண்ணவர்பூமழைபெய்யவிளங்குஞ்சோதி
மதிவதனத்தருள்பொழியச்சின்னவொலிதிசைபோர்ப்பமருங்குபோற்றப்
பொதிமணிபூஞ்சிவிகையிழிந்தங்கமலத்தாள்பெயர்த்துப்புனைமுத்தாரக்
கதிர்மணிப்பந்தரினடந்துகடிமணப்பந்தரினிருந்தார்காழிவேந்தர். (எக)

மங்கலதூரியமுழங்கமாதவர்பல்லாண்டிசைப்பமறைகள்வாழ்த்தப்
பொங்குமெரிவலஞ்சுழலப்புண்ணியதெய்வங்களிக்கப்பூமாதோங்க
அங்குளசல்லடியவர்பேரானந்தக்கடன்மூழ்கவகிலமெல்லாம்
நங்கள்பெருமான்மகனார்நம்பாண்டார்மருகரெனநலம்பாராட்ட. (எஉ)

குறுத்தநகைமுகத்தினராய்ப்பேருவகைதலைக்கேறக்குலவுநல்லூர்
நெறித்தருமப்பெருந்தகையார்நீள்புகலிப்பெருந்தகையார்நீண்டகையில்
கறுத்தகுழல்வெளுத்தநகைசிவத்தவிதழ்பசுத்தகுழைக்கதிர்வேலுண்கண்
பொறித்தநுதற்செறித்தவளைப்பூங்கொடியையாங்களித்தார்புனைநீர்க்கையா.

ஒருமாதைமுயலகனீத்தொருமாதைத்திருப்புணவித்துயருங்கூடல்
வருமாதையடிப்படுத்திவழிமாதையெழுவித்துவாக்கின்ஞானத்
திருமாதைப்புணர்ந்துபெருந்தனமாதையிருடைத்தார்தெண்ணீரோடு
தருமாதைக்கைப்பிடித்தார்வனமாதைபபுணர்ந்தவர்தாடணவார்மாதோ. (எச)

பஞ்சியொளிவிஞ்சுமலர்ப்பாட்டளிசெங்கிண்கிணிக்காற்பதுமம்பூத்த
கிஞ்சுகமென்மடவரலோடங்கிவலம்வருவானைக்கிரியைசான்றோர்
அஞ்சொலிவளடிமலனையம்மியில்வைத்தருளுமெனவணிசேர்திங்கள் [ர்.
பிஞ்சுமுடியனைநல்லூர்ப்பெருமணமென்றதைமறுத்துப்பெயர்த்துஞ்சொல்வா
ஈதமலன்றிருத்தாளுக்கியற்றுவதுமுறைமையெனவெழுந்துபோந்து
நாதனைநல்லூரரசைநமச்சிவாயப்பதிகநவிற்றலோடும்
பூதலமுமீதலமுநீடொளியவாடெரிகால்பொருப்பாயோங்கி
வேதமுதலளப்பரியான்விளங்கவதிலடியவனைவிடுத்தல்செய்தார் (எரு)

இன்னிசையாழ்ப்பாணரொடுநீலநக்கர்சிவபாதவிதயர்முந்நூல்
மன்னியதோட்டிருமுருகர்வழியடியாரெனைப்பலருமடியாக்கற்பில்
பனணியரோடுறுஞானப்பாவொளியிற்புகவேவிப்பனிக்கைதோய்ந்த
கன்னியொடுமெதிற்புகுந்தார்கனலோடும்புனலறியுங்கவிதைவல்லார். (எஎ)

பொறிவாகைமாறனுடலெழிலாகப்பூதியரும்பொருளுண்டாக
நெறிவாய்ந்தவைதிகமுஞ்சைவமும்வீறுண்டாகநிகரில்காழி
மறிவார்ந்தகரதலத்தார்மகவானோர்புகுந்தழுத்திவழியென்றியார்க்கும்
அறிவாகச்சிவலிங்கக்குறியாயிற்றயிடைமுன்னலங்குசெந்தீ. (எஅ)

வேறு.

இன்னவாறுநிகழ்ந்ததன்மேலெழிற்சீகாழிப்பதிநாதன்
அன்னவூர்திபுள்ளூர்தியானையூர்தியாதியரைத்
துன்னலோடுமெவரெய்தியுலகேழீன்றசிற்றுதரக்
கன்னியாகத்திருந்தானைக்கசிந்துபணிந்துமுன்னின்றார். (எகூ)

செம்மைக்கருணைக்கடலனையான்றிருமுன்னின்றோர்தமைநோக்கி
எம்மைத்தலங்கடொறும்பதிகத்தேத்துஞானக்கவுணியனை
அம்மைப்பொலஞ்செய்விம்பத்திலாவாகனஞ்செய்தெந்நாளும்
மும்மைப்பயன்பெற்றுலகுய்யமுதுபூசனைநித்தியமியற்றி. (அ0)

நிகழ்சித்திரைபங்குனிமாதநிறையாதிரையும்வைகாசிப்
பகர்மூலத்துமாவணியைப்பசியாமாதச்சதயத்தும்
மகரமதியிற்கதிர்மதியமருவுநாளுமிதுனமதி
திகழவருரோகணியுமென்றேழ்தினத்துநைமித்தியமியற்றி. (அக)

புரையில்கேள்வியிமையோர்காள்புகல்பங்குனியிற்சதயத்தின்
நிரைசெய்மணிப்பூங்கொடியேற்றிநெடுமான்றலைநாடோர்நடத்தித்
திரைசெய்தீர்த்தமாதிரைநாடிளைத்தாடுதிரென்றருள்செய்ய
வரைவிலமரராண்டுதொறுமகிழ்ந்திவ்வாறுபுரிந்தனரால். (அஉ)

ஓதுமினையநல்விழவுக்குதவுந்திறலோருயர்ந்தகதி
மீதுபுகுவாரதுபுரியார்வெவ்வாய்நிரயத்திடைபுகுவார்
கோதின்ஞானப்பிள்ளைதனைக்குழைத்துப்பணிந்தோர்மறலிநகர்
போதலறியார்தொழவேண்டிப்போந்துவழிக்கண்மாய்ந்தவரும். (அங)

வீடுபெறுவாரிச்சரிதைவினவினவரும்படித்தோரும்
நீடும்பரமமுத்தியெலாநெறியேதுய்த்துப்பொறிமணிச்சூட்
டாடுமரவமசைத்தவன்றாளணைவாரென்னவருட்சூதன்
நாடுமறைதேர்முனிவரர்க்குநவின்றவாறுநவின்றனனால். (அச)

(உங-ஆவது.திருஞானசம்பந்தப்பிள்ளையார்திருவவதாரவத்தியாயம்முற்றிற்று.
ஆ திருவிருத்தம் - கஉஅஉ.)

## உச-ஆவது. தீர்த்தமகிமையுரைத்தவத்தியாயம்.

திங்கண்முடியணிவேணிச்சிவபெருமானடித்தொழும்பின்றிறத்தைநாடிப்
பங்கமில்சீரொளிக்கொளியாய்ப்படர்ந்தகவுணியப்பெருமான்பரிசுகேட்டோம்
புங்கவவின்னமுந்தீர்த்தந்தனித்தனிசொற்றனைதொகுத்துப்புலப்பாடெய்த
இங்கருளுகெனச்சூதனங்கவருக்குரைத்தமுறையியம்பலுற்றும். (க)

ஞாலப்பேராழிவளையுலகனைத்துநிலைகுலையநலிந்துமூழ்கி
மூலப்பேராழிமொய்த்தகடைநாளின்மலைவாய்ந்தமுளரிப்புத்தேள்
கோலப்பேராழியம்புட்பொருப்பரனைப்பணிந்துவரங்கொண்டதீர்த்தம்
ஓலப்பேராழிவைப்பிலதுபிரமதீர்த்தமெனவோங்கிற்றன்றே. (உ)

ஒருமறையோனீராடிச்சேட்டலகுதனைப்பயந்தானுலவாத்தெய்வத்
திருமறையோனெனநின்றுமொருமறையோனகன்கரைக்கட்சேர்ந்தவாறே
இருமறைநூலியல்விரித்துவீட்டலகுதனைப்பயந்தானெனினித்தீர்த்தம்
பெருமறைநூலறிவதல்லாற்பிறிதொருநூலோவறிந்துபேசுநூலே. (ங)

ஒருணர்வாலிருமைவினைமும்மலங்களாற்பிறப்புமொழிப்பானைந்து
பேருறுமிந்திரியங்களடக்கியேழிசையும்பிறங்கவோதி
நீருறுமெண்குணத்தோன்பாணிகமொளியாயாபத்தைநீக்குங்காழிக்
காருறுகண்டனையறிவாரவரேகண்டறிவாரக்கடவுட்டீர்த்தம். (௪)

மின்மணிநூபுரமலம்புமிளிரிளங்காலரமாதர்விமானஞ்சூழ
என்மணிக்காலினைவருதாதிணைக்கவரிகாலசைப்பவேறிச்செல்வார்
நன்மணிவார்சிறையறுகாலிசைமுரலுமொருகணைக்கானளினப்புத்தேள்
பன்மணிக்கான்மலர்த்தடத்திற்றவழ்பசுங்காலஃதுடலிற்படுங்கான்மாதோ. ()

கூர்த்தவருந்தவம்பன்னாளிழைத்துமுயர்மதிட்காழிக்குன்றின்மேய
தீர்த்தனருள்படைத்தெல்லாவலிபடைத்தானேனுமயன்றிறமென்னேயோ
வார்த்ததடந்திரைக்கடவுட்டீர்த்தமதுபடிந்துலகையளித்தானன்ன
பேர்த்தடமூழ்குநரெல்லாமேற்படையாவீட்டுநெறிப்பெறப்பெற்றாரே. (௬)

வண்டறுநறைமலர்தூஉய்வணங்கினர்பான்மோனமுத்திவழங்குமெம்மான்
அண்டகோடிகள்பொதிந்தசிற்றுதரப்பூவையிடத்தருட்கண்காட்டப்
பண்டைநூல்போற்றுதிருநிலையமுகிகண்ணருளேபசுக்கள்யாவும்
உண்டகமாசகற்றியொளிதருபுனல்போற்றிருமுனநின்றொளிருமீதால். (௭)

முத்தலையையேந்தலினுன்முடிவிலாரணங்காட்சிமுடித்தவாற்றான்
மெய்த்தவராடகம்பெறலாற்சுற்றுமலங்களைதலினால்விமலந்தன்னால்
சித்தியருட்கண்பொலியுந்தரத்தாலும்பேரரவந்தரித்தலானும்
இத்தகையவிதிதடர்தான்மத்தமலர்த்தொடைவேணியீசன்போலும் (௮)

திரையாடைநிலமடந்தைதிருமுகமோவரிவிழியோதிலகமேயோ
வரையாமங்கலநாணோதிருமகட்குமருமலரோமணிப்பூண்வைப்போ
புரைதிருமாலுலகின்மேலுலகோவென்னும்பிரமபுரியிலிந்நீர்க்
கரைகாணாரெவருளர்மற்றவரன்றேமுத்தியெனுங்கரைகாணாரே. (௯)

மறைநான்குவல்லபிரான்பதினறுநான்கோடிரண்டுவகையாங்கோடி
முறைநான்குந்தருங்கடவுட்டீர்த்தமெலாந்தொகுமிதனின்முழுகியண்டத்
துறைநான்குகதியும்வகுத்துறுநான்குபவத்தினில்வீழ்ந்துழலாதியார்க்கும்
துறைநான்குமளித்திடுமொன்றொருநான்குகோணமுறத்துலக்கினால் (௰)

வேறு.

கோன்மதிநாளில்வெய்யோன்குலவியதினத்திற்கங்கை
மாநதிமுதலாந்தெய்வமணிநதியெனைத்துமீண்டித்
தானதிலுறலாலந்நாட்டடமதுபடிந்தோர்தீர்வார்
ஊனவல்வினையுமாயையுற்பவவினையுமாங்கே. (௧௧)

ஆயமாமதியுவாவினருந்ததிக்கிறைவனாதி
தூயநீர்க்கங்கையாதிசுரபதியாதியோகத்
தேயவன்சனகனாதியெய்துவரிதுபுக்காடப்
போய்த்துபடிவாரெய்தாப்பொருளவைபுவனமூன்றில். (௧௨)

முன்புறுமேடத்தென்றூழ்மூலைத்தநாளிடையுவாவின்
அன்புறுமிந்நீராடினரும்பவக்கடலினுடார்
பின்புமோரயனஞ்சேயாற்பேதுறுமடவார்தோயின்
இன்புறுமழலைச்செவ்வாயெழினமகப்பெறுவருண்மை. (கங)

ஓரிரண்டயனமாண்டினுதயங்கள்வெதிபாதங்கள்
சேர்தருதினம்புக்காடிற்செங்கதிர்ச்செல்வனுதி
ஏர்தருகோளுநாளுமின்னறீர்பலத்தைநல்க
வார்கடலாடைமாதைமணந்துலகளிப்பான்மன்னே. (கச)

தொளையெயிற்றழல்வாய்ப்பாந்தள்சுடர்களைத்தொலைநோட்பொன்சேர்
அளையெயிற்றரவைமுந்நூலறவர்மாட்டறல்பெய்தீவார்
களைக்குயுலகமூன்றிற்காவலுந்திருவுமெய்தி
முளைமதிக்கண்ணியெம்மான்மூதுலகடைவரம்மா. (கரு)

வீழியங்கனிவாயாளைவேதவாணிபர்க்குநல்கின்
ஆழியினடுவெட்டிஞ்சுமரவணைப்புனிதனுவார்
கோழிளம்புனிறறூல்லானகொடுப்பரேன்மயிர்க்கோராடை
வாழிநாளளவுந்தாவாவளனொடுங்கயிலைவாழ்வார். (கசு)

எரிமணிப்பொலன்கோட்டோர்சாரியல்புளிமனுவொன்றுய்ந்தோர்
விரிகடலுலகத்தான்றவிழுத்தலமெவற்றுங்கோடி
தெரிதருமனுக்களாய்ந்தகண்பலம்பெறுவாரென்றே
கரியுரிவனைந்தவெண்டோட்கண்ணுதல்கழறினுல். (கஎ)

அரிமலர்க்கிழவன்றீர்த்தத்தாழ்ந்தபுள்ளினங்கண்மிக்கண்
விரிசிறைவிதிர்த்ததெண்ணீர்மேனியிற்படினுமன்னோர்
முரிதிரைமுகட்டிற்றோன்றுமொய்யொளிச்செல்வனபோன்று
பிரிவருமாயைபோயப்பெருவெளிக்கருகராவார். (கஅ)

உலப்பிறென்புலத்தார்வேள்விழூட்டுபுதிலகமீந்தோர்
அலக்கண்வல்வினைபோயீசனருள்பெறத்தலகமாவார்
குலப்பெருங்கிழவர்தாமுங்கோமடக்கொடியோன்பாகன்
மலர்ப்பதம்பெறுவரல்லான்மறுபதம்பெறுகலாரே. (ககூ)

படைப்பினுக்காதியாயபணிமலர்த்தடமாமீது
கிடைப்பவுமயல்புக்காடக்கெழுமுதலமிழ்தவாரி
உடைப்பருந்தசும்பைவீசியுறுபலிக்கலனென்றேந்தி
அடைப்படாதுழன்றுவாளாவங்கையைநக்கல்போலும். (உ௦)

பற்பலமனுக்கடம்மிற்பழிப்பிலேந்தெழுத்தும்வேதத்
துற்பனமனுக்கடம்மிலுருத்திரசமகந்தானும்
அற்புதத்தருக்கடம்மில்வில்வமுமமரர்தம்மில்
கற்பனைகடந்தமுக்கட்கறைமிடற்றிறையுமாங்கே. (உக)

புனிதரிலழற்புத்தேளும்பொங்கொளிகளில்வெய்யோனும்
முனிவரிலென்னையாண்டமுதல்வனுமுதன்மைசான்ற
தனிவிரதத்திற்கொல்லாவிரதமுந்தருமந்தம்மில்
கனிபடும்பொறையும்யோகக்காட்சியிற்சனகன்றானும். (௨௨)

ஸீமவரிமணிவண்டூதிமகரந்தமிறைப்பவாளுட்
டைவகைத்தருக்களேய்க்குமணிபொழிற்காழிதன்னில்
பெய்வகைகிடந்ததீர்த்தபேதத்திறபிரமன்கண்ட
தெய்வநீர்ப்பெருக்கறாததீர்த்தமுமதிகமாதோ. (௨௩)

மனவலிகடந்தமிக்கீர்மற்றதன்கரைக்கட்பட்ட
வினைதருகுப்பைவாரியெறிந்தவர்பெறுவர்மெய்யே
கனைதிரைக்கங்கையாதிகடவுண்மாநதிகட்கெல்லாம்
புனைகலனணிந்துதெய்வப்பொற்படாம்புனைந்தபேறே. (௨௪)

வேறு.

காதமணஞ்சினமடங்கல்கவுணியர்கோன்பருகருட்பால்
காதமணந்தருதடத்தைக்கண்டார்நோய்விண்டாரே.
மாதரங்கமலையிளங்கால்வனமார்பிலுறப்பெறுவார்
மாதரங்கமலையரங்கேமன்னுரிமைப்பெறுவாரே. (௨௫)

முத்தமிழும்படித்துறைநீர்முகந்துதுளியருந்தினரேல்
முத்தமிழும்படித்துறைநீர்முகிலெனத்தண்டமிழ்பொழிவார்
சித்தமருங்கலையாதுதிரமதிற்கணமுறினும்
சித்தமருங்கலையாதுந்தெரிவரியநிலைசேர்வார். (௨௬)

பத்திவலைமுடித்தலைமேற்படராதாரித்தடத்தின்
பத்திவலைமுடித்தலைமேற்படின்மாயையடுவாரே
நித்திலமாடகந்தருமிந்நீரேந்தியோர்பலமுன்
னித்திலமாடகந்தருவார்நினைத்தசெயல்பெறுவாரே. (௨௭)

பதகமலம்வலம்வருவார்பண்டுயிரோடுறத்தோய்ந்த
பதகமலம்வலம்வருவார்பாயொளியொன்றாயிடைத்த
மதுகையிடவனையகன்றவல்வினைபோய்த்தொல்லருளழ்
மதுகையிடவனைவென்றோன்மன்னுரிமைப்பெறுவாரோ. (௨௮)

மாகனத்தினங்காட்டுமணிமறைநான்மறையவர்க்கு
மாகனத்தினங்காட்டும்வல்லார்மாறில்லாரோ
கோகனகத்துச்சிவந்தகோதைமணாளன்பணியும்
கோகனகத்துச்சிவந்தகுழகனடிபெறுவாரோ. (௨௯)

திருக்குளத்தினிருள்பாறச்சேமநெறிதரும்பிரமன்
திருக்குளத்தினியற்கையிதுதிரைமுரசுபடைத்தானை
உருக்கவருமரன்சூலத்துஞற்றியருளேபொருளாய்
உருக்கவருமொருசூலத்தீர்த்தவியலுணர்த்துவமே. (௩௦)

கன்னிமணிவண்டுழலுங்கடிகமழ்தாமணைத்தடஞ்சூழ்
பொன்னிவளந்தருபுகலிப்புண்ணியன்போற்றளிக்கயலே
முன்னியகூற்பெருந்திசையின்முக்கோலெல்லையினுணைத்த
தன்னிகரிலொருசூலத்தீர்த்தவியல்சாற்றரிதால். (௩௧)

முத்தலைவேலகழ்ந்ததுதான்முழங்கலையினடுநாகப்
பைத்தலையான்முனிசாபம்பரித்தலையாதவன்படிய
அத்தலையேவினையகற்றியலைத்தலைமாறொடுமுன்போல்
வைத்தலையாதிருத்தியதிம்மலர்தலைமாநிலம்போற்ற. (௩௨)

துலைமதியின்முழுமதியிற்சூழததிமறுகநெடு
மலைமதிமாயவன்பெறலான்மறுமதியிலவர்படிந்து
நிலைமதிசேர்தென்புலவோர்நிறைமதிசால்கடனிறுத்தோர்
கலைமதிவேணியனிருபொற்கழன்மதிபெற்றிருப்பாரோ. (௩௩)

கலிகடியுந்தனிக்கவிகைக்கன்னியாகுச்சபதி
பலிகவருங்கொடியுருவிற்பறந்தவன்முன்னிறம்பொலிய
ஒலிகெழுநீர்ச்சூலதடத்தொருமுனிவனைவிதிர்த்ததுளி
வலிபலவுமளித்ததென்றால்வழுத்துவதுமற்றெவனே. (௩௪)

மல்குமதிப்பக்கத்துமாசியினேகாதசிக்கண்
புல்குபுகழ்விகடாங்கன்புணையறுமாணெழில்பெறலான்
பல்கிளைஞரொடுங்கயிலைப்பணிவரையினினிதிருப்பார்
ஒல்கலிலந்நாளதுபுக்குடனாடக்கடவாரே. (௩௫)

வேறு.

நீர்த்தலைவெடிவாளைநீடமரிடைவாளைப்
பார்த்தெனவெதிர்பாயும்பணைமலிபுகலிக்கண்
பேர்த்தளியதன்மேல்பாறபிறழ்திரையானந்தத்
தீர்த்தமதுளதந்நீர்த்திறமினியறைகிற்பாம். (௩௬)

அம்புயமலர்வாணனந்நகரிடைவைத்த
உம்பருமுனிவோருமுணர்வுடையுரவோரும்
செம்பொருளியல்கண்டுஞ்சேமவுறநெறிநின்றும்
தம்புலமறவென்றுந்தவநிலைதவறாராய். (௩௭)

அறநெறிவழுவாருமரனருள்பிழையாரும்
மறவினைகடிவாருமகவினைமுடிவாரும்
இறைபணிவழுவாராயிவர்புரிசெயல்கண்டே
பிறைமுடியொருகாழிப்பெருமுதலருள்கொண்டே. (௩௮)

மதிநதிமுடியாடவதனமென்மதியாடப்
பொதியவிழ்தொடையாடப்புலிமுனியரவாடக்
கதிர்விரிவடிவாடக்கரதலநிரையாடப்
பதமலர்தனியாடப்பலமுனிவரராட. (௩௯)

ஆடினனொருநாள்புக்கவ்வழியானந்தம்
நாடியவமயத்தோர்நாயகனயனத்தே
பீடியலருள்வெள்ளம்பெருகியதுளிவீழக்
கூடியததுமேல்பாழ்குறுமுனியுறைசாலை. (௬0)

மேலருண்முனிகண்டேவிமலனதானந்தத்
தால்வருமிதுவென்றங்கனைவர்களொடுமோடிச்
சால்புறவரலாலேதரணியிலதுபோராக்
கோலளவினிலாடக்குடதிசைதனிலுண்டே. (௬௧)

மற்றதைநினைவோருமருமலர்புனைவோரும்
முற்றிடநினைவோருமுறையினிலணைவோரும்
கற்றிவருஞானக்கடலெனுமடலேறூர்
கொற்றவனடிநீழற்குலவுவரிஃதுண்மை. (௬௨)

வேறு.

கூளியகற்றியகாளிபுரத்தருள்குளமுழவிக்கும்
ஆளியுகைத்தெழுகாளிதடத்தியலறைகிற்பாம்
மீளிவயப்புலியூரிலிடர்ப்படுவினைமோடி
நாளுமிகக்கருநோயினளப்பருநலிவாலே. (௬௩)

கொச்சைநகர்த்தலைவர்க்கருகுற்றகுடக்கூடே
மெய்ச்சதுரத்தொர்தடத்தையியற்றிவிரித்தாடி
அச்சிவனெப்பநிருத்தமிழைத்தவதிற்பாவ
குச்சிதமுற்றகரும்பிணிவிட்டொளிகொண்டாளால். (௬௪)

வர்க்கவினைப்பிணியகலநினைப்பவர்மதிதோறும்
துர்க்கைமனுக்கொடுதெரிசதினத்திதுதோய்வாரேல்
விற்கழைபெற்றவனெழிலுருவத்தொடுமேலான
வற்கலின்முத்தியினெளிமையினிற்பெறலாவாரே. (௬௫)

இயல்பகலுஞ்சிவநிந்தனையாதியுமிதுதோயின்
பெயருமதற்கிணைவேறுளைசெய்வதுபிழையாமால்
வெயில்விரிமாளிகைவேணுபுரிக்கயல்வடபாலோர்
வயினவதீர்த்தவியப்பமுமொருவழிவருவிப்பாம். (௬௬)

அந்நகருக்கொரிரண்டுகுரோசத்தளவாகப்
பொன்னணிமார்பனகழ்ந்துவிரித்தபொலன்கோட்டின்
தன்னுடைநாதனைவைத்துவிழைந்ததவம்பெற்றான்
பன்னியவாவிபடிந்தவர்தீவினைபடியாரே. (௬௭)

கும்பமதிக்குளபூரணைநாளிதுகுடைவாரேல்
உம்பரருந்தவர்சாபமுதற்பவமொழிவாரே
இம்பரிலிம்மொழிசத்தியமேயெனவெனையாளும்
நம்பெருமானதுமும்முறையாகநவின்றானால். (௬௮)

அம்மதிமுற்றவுமாடினரும்பவமாடார்பொன்
இம்மியளித்தவர்கோடியரும்பலனிசைவாரால்
கொம்மைமுலைச்சியர்மண்ணணியாடைகள்கோதானம்
இம்மையிலீபவர்பேறுதெரிக்குநர்யாரேயால். (௪௯)

முத்துறழ்தண்டலைநல்குநர்தண்டலைமுறைவானோர்
அத்துணையாண்டமரன்கயிலைக்கிரியகலாரால்
முதுதமிழாளிமுயங்கியவெங்குருமூதூரில்
மைத்தவராக்குதடாகமுமேலொருவழிசொல்வாம். (௫௰)

வேறு.

தடத்தியல்காழியந்தளிக்குநீள்வட
குடக்கினின்மேலொருகோலின்மேயது
கடற்றிரைமுகட்டெழுகதிரின்செல்வனைப்
படப்பொருபணிமதன்பண்டுதொட்டது (௫௧)

அனல்வினைகுரவனையயர்த்தசிங்கமே
தனன்மறையலகையைச்சாய்த்தநீரது
முனைவருமமரருமுற்றுமற்றும்வே
றெனைவரும்வினைகெடவென்றுந்தோய்வது. (௫௨)

போதருகோட்டிடைப்புயங்கனுமத்து
நாதனையுள்ளத்துநாளுமாடுநர்க்
காதவனமுதலகோளனைத்துநன்றிசால்
ஏதமில்பலன்றரவிலங்கும்பொற்பது. (௫௩)

மற்றதனயலொருவாளியெல்லையின்
முற்றரவணையினான்முனிவன்வெம்பழி
பற்றறவாடுவான்பண்டுதொட்டது
பெற்றபேராழியின்பெயரினோர்தடம். (௫௪)

ஆசிலத்தடமூழ்வந்தாடிமாமறைத்
தேசிகர்திறத்தொருசெம்பொனீவரேல்
வீசுவில்லுமிழ்மணிமிளிருமார்புடைப்
பாசிலைப்பள்ளியான்பதத்தில்வாழ்வரே. (௫௫)

மங்குறேய்மதிண்மகேந்திரத்துக்காவலன்
பொங்குறுதவஞ்செயப்புகலிவாணன்முன்
சங்குறுகொடுங்குழைத்தானுவேணுவாய்
அங்குவந்துறத்தடமவனென்றுற்றதால். (௫௬)

சங்கொலிவழங்கலிற்சங்கதீர்த்தமென்
றெங்கணுநிலவியவிதுபுக்காடுநர்
வெங்கொலைமருவலர்த்தொலைத்துவேலைசூழ்
அங்கண்மாநிலமுழுதளிப்பருண்மையே. (௫௭)

விண்ணவர்க்குடைந்தவெஞ்சூரன்வெவ்வலி
நண்ணியதடமிதினுளுந்தோய்பவர்
எண்ணரும்பகைப்புலங்கடப்பரென்றருட்
கண்ணுதலந்தணன்கழறினனரோ. (௫௮)

அளிபுரைதிருநிலையழகியாயபூங்
கிளிபுணர்மருங்கினன்கிளர்பொன்னாலயத்
தொளிபுணர்தெற்கிலோர்கணையிலோங்குநீர்த்
தெளிதரைச்சுக்கிரதீர்த்தமொன்றரோ. (௫௯)

வன்கணாலெண்கணான்மறித்துவீழ்த்தநாள்
பொன்கணானூர்திவாழ்புகலிமாநகர்த்
தென்கணான்கொன்றெனக்கோணஞ்செய்தடத்
தின்கணானந்தநீரிழைத்துப்புன்கணான். (௬0)

தோய்ந்தனன்பூந்தராய்த்துணைவனாலுயிர்
தேய்ந்திடாமிருதசஞ்சீவினிப்பெயர்
ஆய்ந்தநூல்விஞ்சையுமமரர்தேசிகன்
ஏய்ந்தநல்விழுப்பமுமெய்தினனரோ. (௬௧)

தணிப்புகர்வாரமத்தடம்புக்காடுநர்க்
கினிப்படர்வறுமைநோயில்லைக்கோமயம்
பணித்தபுல்லறுகொடுபெரித்துக்கோன்மதி
தணிற்படிந்தோர்க்கிணைதனைக்கணில்லையால். (௬௨)

இளிதருவலைஞர்தமேழைதோள்புணர்
மிளிர்சடைமுனிவரன்விமலன்கோயிலுள்
தெளிதரநாட்டியதீர்த்தமொன்றது
குளிர்புனற்பராசரகூபமென்பவே. (௬௩)

அச்சுதனனையமேலவர்க்குமேலவன்
கொச்சையையகற்றுமிக்கூபந்தோய்பவர்
நிச்சயமூணலுணோர்தலேதிலாள்
இச்சையின்முயங்கன்மற்றெவையுந்தீர்வரே. (௬௪)

தேட்பெயர்மதியினிற்செறிந்தபூரணை
நாட்புனல்படிந்துநென்மணியைநான்மறை
ஆட்சியர்திறத்தினிதளிக்குமன்பினோர்
வேட்கைகூர்பிறவிவெவ்வினைப்படார்களே. (௬௫)

வாங்கொலியருவிவீழ்மலயமாதவன்
பூங்குயிற்கிளவிபாற்புரைநற்பூந்தராய்க்
காங்கிருகோலளவாகக்கீழ்புலத்
தோங்குநீர்மலிதடமொன்றுநாட்டியே. (௬௬)

வைகுதொடிப்பாகனைப்பதித்துப்பாங்கரின்
வந்தனைமலர்களேய்வணங்கிவீறுபெற்
றுய்ந்தனனொலிதிரையுலகுளோரதைச்
செந்தமிழகத்தியதீர்த்தமென்பரால். (சுஎ)

கோதமன்குறுமுனிகுழித்தவாவிபால்
போதலரொருதடம்புதக்கிப்பூந்தராய்
நாதனையிறஞ்சிமெய்ந்நலம்பெற்றனது
தீதறுகவுதமதீர்த்தமென்பரால். (சுஅ)

இவ்வகையாறிரண்டிண்டைவானவன்
செவ்வனீர்த்தடமுதற்றீர்த்தமாமிவை
ஒவ்வொருதீர்த்தமேயுய்க்கும்வீடெனின்
எவ்வகைவிரிக்குமதின்னுங்கேட்டிரால். (சுகூ)

முந்தையீரொன்பதாமுதுபுராணங்கள்
செந்தழல்வானவன்றிங்கள்வெய்யவன்
அந்தமிலுலகிறோடலகிலண்டங்கள்
தந்தசீர்புனைதடந்தனிப்புருநதி. (எ0)

இவ்வகைப்பேர்புனைந்திலங்குதீர்த்தங்கள்
கவ்வையிலவர்பணிகாழிசூழ்தரும்
செவ்வியதிசைதொறுந்திகழுமான்மனத்
தெவ்வமின்முனிவிர்காளின்னுங்கேட்டிரால். (எக)

வேறு.

கின்னரர்கிம்புருடர்சித்தரியக்கர்நாலிருவசுக்கள்கேடில்வானோர்
பன்னகர்பாரிடரசுராமுனிவர்முதலோர்புகலிப்பணிந்துபோற்றி
அன்னவரோரொருதடமுந்தடத்துழையோரிலிங்கமும்வைத்தரிச்சித்தாரால்
இந்நகரககாழிவரைவடுகேசன்மகிமையினியிசைக்குமன்றே. (எஉ)

(உச - ஆவது தீர்த்தமகிமையுரைத்தவத்தியாயம் முற்றிற்று.)
ஆ. திருவிருத்தம் - கஙுச.

## உரு-ஆவது. வடுகநாதவத்தியாயம்.

கொண்டல்கண்படைகொளக்கிளந்தளிகுலாவியின்னிசைமிழற்றுபூம்
தண்டலைப்பொழிலுடுத்தகாழிவரைதன்னிலேவடுகனென்னவே
அண்டநாயகனிசைந்தகாதைவரலாறுகூறுகெனவீறிலா
ஒண்டவத்துமுனிவோர்விளவவருளேறுசூதனதுகூறுவான். (க)

முள்ளெயிற்றரவரைக்கசைத்தமுழுமுதல்வனன்கருணைமுதல்வியோ
டெள்ளிலிச்சகமளிக்குமாறுமுனிணங்குகேளிரின்மணங்கொளீஇ
பள்ளிவைகவருமறைவனத்திலொளிபாய்திருச்சுடர்மழுங்கல்கண்
டொள்ளிழைக்கொடியைநோக்கியாக்கமறையோதினுனிதனையோதினுன். (உ)

இன்னவேலையிவ்விளக்கைவில்லுமிழவீண்டியாவரதுதூண்டினூர்
பொன்னனுயவர்புரக்குமாறுவிரிபுவனமும்மையுமளித்துமென்
றென்னையாள்பவனுமைப்பவன்னையுமெவர்க்குறுங்கொலெனவெண்ணினுள்
அன்னபோதொரெலிதீபமேவியறியாதுநாசிகொடுதூண்டியே. (௩)

பொருந்குறும்புபுரிமிருகமாமியல்பொருந்தலாலதுதருஞ்சுடர்
உருகுகின்றநறைமுழைதையன்றுசிந்துண்டதவ்வெலியையண்டர்கோன்
வருகசுடர்துலக்கலாலுரிமைவைத்துமுப்புவிபரிப்பதற்
கொருவனுகியறிவொடுபிறத்தியிழுதுணலின்வாணிருதனுகியால். (௪)

நம்பெருந்தரணியாலயங்கடொறுநகுபெருஞ்சுடரிழைத்துமேல்
எம்பதம்பரவுமன்பரந்தணரிடத்துமீகைநனியீகெனு
வம்பருவிதழியானுமைப்பவதுவலிவிரோசனனெனும்பெயர்
செம்புலமொழுகுவேலுடைத்தகுவர்செம்மலின்மதலையாயினுன். (௫)

மாவலிப்பெயர்புனைந்துநால்வகைவயப்படைக்கடலொடுங்குழீஇ
காவன்முப்புவனமுந்தனுதுகவிகைக்குள்வைகமுறைசெய்யுநாள்
ஓவறப்பெருகுகளியினுலமரருலகுபுக்குவிரிதருநிழல்
தேவரைப்பொருதழிப்பவங்கமொடுதேவர்கோன்முரணிமேவினுன். (௬)

ஆண்டவாசவனுநிருதன்மாவலியுமாழிவேந்தனொடுமுரணுகும்
பாண்டனுந்தனதனேடுசெம்பரனும்பவனனுந்திருதிமானுமெய்
நீண்டதீயினொடுதூமகேதுவுநெருங்குகாலனொடுநாகனும்
காண்டகீசதிசையதிபனேடுபயங்கரனும்டிண்டிமனுநிருதியும். (௭)

இனையவாணிருதருந்திசாதிபருமேற்றபோரினிடையாற்றல்சால்
வனைகருங்கழன்முரட்டயித்தியர்செய்வாகைகண்டதிகவேக ரய்
றுனைமுகக்குலிசவேலெடுத்ததிரநூக்கிமாகபதிதாக்கினுன்
அனையபோதசுரர்கோன்வெகுண்டுவிறலமரரோடவமராடினுன். (௮)

எறுழ்வரிச்சிலைகுழைத்துநாணொலியெறிந்தழன்றுபதினுயிரம்
தெறுகடுங்கணைவலாரிமீதும்விரிதிசையுளோர்மிசையநேகமும்
கறுவுகொண்டலெனவீசினுனிலைகலங்கினுரமரரதுதெரிந்
துறுதடக்கையயிராவதத்தையெதிருந்திவாசவனுமுந்தினுன். (௯)

மிகநெருக்கியெயிறதுகடித்துருமுவிசையினிற்கரமெடுத்தடித்
தகலமத்தியெறிகுலிசமிட்டுறவடித்தலும்பொருதயித்தியன்
பகன்மணித்தலையினடுவணிற்பதைபதைப்பவங்கையுறுதண்டினுல்
உகவடிப்பமகபதிதனக்கவசமுற்றதாலவசமுற்றினுன். (௧௦)

அக்கணத்ததையறிந்தமாவலியகன்றதேரிலவனைக்கவர்ந்
தொக்கவோருழையிலறிவுறுதவகையோடினுரமரர்வாடினுர்
மிக்கவேழ்திசைபரிக்கும்வானவரும்வேறுவேறிரியல்போயினுர்
புக்கமாவலிதுறக்கமேயபலபோகமும்பருகலாயினுன். (௧௧)

ஆடகத்தலமகன்றுஞாலமிசையரசபேணிநிறைமணிவளைச்
சூடகக்கொடிமணாளன்மேயதளிதோறுமொள்ளொளியசுடரிழைத்
தேடவிழ்த்தமலர்மஞ்சனந்தியினிலெக்கைபூசனைசெய்தன்பர்பால்
நாடகத்துவழிபாடியற்றிரனிகன்னரன்புசெயுமன்னநாள். (கஉ)

வருகுலக்குருவைமகவினைக்கிடம்வழுத்துகென்னவவன்வானுளோர்க்
குருவெனப்பொருசிவத்துரோகமுமொழித்தலூரபிரமனெண்ணிலார்
அருவினைத்தொடாபிரித்தலூரிறுதியாழிசூழரியகாழியூர்
இருதலத்தினினுயர்ந்தலூரதிலிழைக்கலாகுமெனவவுணர்கோன். (கங)

சொன்னவாறுபுரிமகவினைக்குரியசோர்விலாதபொருண்மேவரப்
பன்னருஞ்சடைமுடித்தமாமுனிவர்பலர்களோடுமறையவரொடும,
தன்னெடுமெபடைதழீஇவரக்கதிர்தடுப்பநீள்கொடிதொடுத்தபூம்
கன்னிமூதெயிலுடுத்தகாழிநகர்காவில்வல்லவுணன்மேவினன். (கச)

எகினவூர்திதடமாடியீசனையிறைஞ்சியங்கமரர்கம்மியன்
மிகலதென்றிசையினயோசனைப்பரவைவேள்விபந்தருமிழைத்ததிற்,
சகலமுங்கொடுபுகுந்துநாதனிருதாள்குறித்தனனியற்றமேல்
இகலுடைந்தகடவுளரும்வாசவனுமிண்டைவானவனையண்டினா. (கரு)

புண்டரீகமனைகொண்டபூரணபுராணமாவலியிவேனவினால்
சண்டமாருதமுடன்றபோதுபடுசருகதாயினமெனக்கனாந்
தெண்டிசாதிபரிரங்கவேதனவரேவரோடுமுயர்காழிபுக்
கண்டராழ்துயருகிருதன்வாகையுமெனத்தன்முன்றொழுதுரைத்தனன். (கசு)

ஈதியம்பலுமிரங்கலீர்பலருமென்றுகாழிவளாநின்றுளான்
சீதரன்றனைநினைப்பநீர்பருகுசெல்லையன்னவனவ்வெல்லைவாய்ப்
பாதபங்கயமுன்வந்திறைஞ்சியிசைபன்னியங்கைமலர்சென்னிகொண்
டாதரம்பெருகிநிற்கமாயவனொடருள்புரிந்திதனையுரைசெய்தான். (கஎ)

மாயமாவலிசெயன்புமன்பினில்வரம்பெறுந்திறனுமும்மைசால்
ஏயதிண்புவிபரிப்பதுந்தவமிகந்துவிண்ணவரைநலிவதூஉம்
நீயறிந்துணர்தியாவரேனுமறைநேயபாலினுமெமன்புடைத்
தூயர்பாலினுமொரிடர்வினைக்கிலவர்தோய்வரானிரயவாதையே. (கஅ)

மைந்தர்தந்தையர்களேனுமெம்முடையவடிவமானபழவடியர்பால்
நிந்தையாளரையொறுத்தபேரமநேயமுள்ளவர்களதுசெயார்
புந்திநல்லறமிழைத்துமென்னகதிபுகுவர்யாமதுபொறேமெனு
அந்தமாவலியடங்குமாறுபுவியாசிலாதமுனிகாசிபன். (ககூ)

பாலனாகியவுணனையொடுக்கிவிரிபாய்திசைத்தலைவர்கீழுளோர்
மேலுளோரனைவருநிறுவிநீள்கெனவிளைத்துழாய்மணியலங்கலான்
சாலநன்றிதெனவம்புயம்பொருவுதாளிறைஞ்சிவிடைகொண்டுநீள்
மாலைநன்றமுனிகாசிபர்க்கதிதிமணிவயிற்றினிருமதலையாய். (உ0)

தெளிபசுங்குறளதாகிவந்துவிரிசிகையொடும்புரிமுந்நூலொடும்
ஒளிதருங்குசையொடுங்கமண்டலமொடுங்குறுங்கையறுதண்டொடும்
மிளிர்தருமப்ரமசாரியாயடல்விரோசனன்புதல்வனவேள்வியாய்க்
களிதரும்படிபுகுந்தமாலையெதிர்கண்டுநேயமதுகொண்டனன் (உக)

அருக்கியாதிவழிபாடுசெய்துமணியாசனத்திசையத்தொடும்
பொருத்திமுனமுனிவருமபராவினாபுகன்றமன்னனைமுகுந்தனும்
இருத்தியோவினிதினென்றுமூவடிமணியாம்விருப்பமளிக்கெனக்
கருத்தினையதனுவப்பவங்கணுறுகவிமகனுகருதிநீதுசெப்புவன் (உஉ)

ஆழியாயனெழிலுருமறைத்துகுறளாகிவஞ்சனைசெய்யதிறன
வாழியாயிதுகொடுப்பினின்னமைடையமனுவாயதவிர்திமயனனும்
ஊழிபாலெலைமையிரகினீவதினுமுறுதிவேறுமுளதோவெனு
வீழிவாய்மனைவிரானர்கொணரவிரகிறைவனைவுணாசெயதான (உங)

கொணடுவந்தநிறைகெணடிகைப்புனல்கொண்டுதடக்கையனவிநிட்டபா
வண்டுவாரமுதனைபொ ,மையுடைமையல்வெளிதமைடைத்தமும்
தண்டுழாயவனறிநதுகையணிதருப்பைமசாணடதுகறுதலான
மண்டுசுங்கனெருகணணிழந்தயன் வுவிறைதடனிருதாகோன (உச)

மூவடிதததுணைநிலங்கொளொனறுபுனை பளிஙியபங்ை பவிநக்கமால
ஓவ நபுவியளக்குமோர் விசுவவுருவமயதிவிரிதலைபைபோபாா
சேவடிப்படவளர்ந்துவிணணை யொருசேவடிககளவகணடுமேல
மாவலததகுவனமுடிமேலோமடியவபவநடுமனணிலையழுந்திறுன. (உரு)

சேரமன்னதனிலவிணணுமனநெபநிலகலஙியல முழும
சூரணைநதபுருகூதனேடைமராகுலமெனனபபதறி மனணினில்
காரணைநதெழில்களிக்தபோலேநலைறகாழியடகரிலாபதுத
தாரணனறிருமுனவந்துகூறவவபமறைமெயமிறைநடிக்கையால் (உசு)

அஞ்சலெனறருளிவடுகனுகிமுரணவுணரொசழபவனோாம
மஞ்சுலாமவடுகரூபமுமறிகணமடிததுமபனறுமை செய ா டை
எஞ்சலவைனுமவருமகொடவரிம பூந்தரு மை ஏதபாம
நஞ்சுகொண்டவன்வணஙகல ை மெனனறுதனா ாவமறுமேடாதுவான ( )

விழியிருந்துயவிழிபயரினிதுபுரியிடலமதனனை பன ம உருளிய ம
அழிவிலாநெருகராதினமமாாபணிலமிப பார யருபமாயபோய
இழிவொடோந்தரணிமேல்விழுநதனனவமெவலமை முனரியவலம கனை
டொழிவின்மங்கலமெனககளித்தருள்கழுழிமாள ய ா காழியாய (உஅ)

வேறு

என்றுதுளிநறையுமிழுமபொங்கமலததரசிருந்தான
கனறுதுயர்க்கனல்கனற்றக்கடுவேனி ளநதளிாய் மை
நின்றிடர்கூரமயத்துநீதுவளோமெனக்காழி
குன்றுக்கடையான்வேற்றுருவிற்கொடுநனையாநமை கனிதநதான உக)

அவ்வழிமாய்வன்போற்றியகந்தையெனக்ககற்றியதை
எவ்வழியோருந்தெரிவானிடும்பையானகற்றிடுவான்
இவ்வழியேகிடந்தவுடலென்புமதனுரிவையுநீ
வெவ்வழியில்லாய்தரித்தல்வேண்டுமெனென்விருப்பிதுவால். (ரு0)

எனமொழியத்திருவருள்கூர்ந்திமையவர்தங்கம்மியனை
மனவணியான்பணித்தருளமறிந்தவுடற்பசுந்தோலைக்
கனைவிரைவாலுரித்தெலும்பின்கணத்தையொருகதையாக்கி
முனைமழுவாளேந்திதிருமுன்வைத்தான்வணங்குதலும். (ருக)

பாசெர்ளியவீருரியைப்பரித்தருள்கஞ்சுகமெனக்கொண்
டாசிகந்தமணிக்கதையையங்கையினிற்பிடித்தருளி
வாசவனுதியர்போற்றவடுகேசன்வயற்காழி
தேசுபொலிமலைச்சிகரத்தென்றிசையிலினிதிருந்தான். (ருஉ)

வியல்வடுகனெனநிருதன்மிடல்கெடுத்தான்றனையடலால்
பெயர்வடுகநாதனெனும்பிஞ்ஞகனும்பரையருளால்
இயலிடமெய்துதிரெனலுமெம்பெருமானின்பூசை
அயர்வகலப்புரிகுதுநின்னருளுண்டேலெனவாங்கண். (ருங)

அண்ணன்முடிக்கணிபெறுமானைந்துமுதன்முறையாட்டி
பண்ணமரும்புழுகுநறும்பளிதமொடுங்கலந்தணிந்து
தண்ணமருங்கொழுந்துகொழுஞ்சண்பகமாதியவிரைதோய்
ஒண்ணறுந்தார்வகைபுனைந்தவொலியன்முறைமுறைசாத்தி. (ருச)

பதனுழுந்தினப்பமொடுபாளிதமுஞ்சஃகுலியும்
மதுவொழுகுமுக்கனியுமடற்றெங்கின்கொழுங்கனியும்
விதிமுறையினினிதருத்திவெள்ளியிராநள்ளிருட்கண்
இதயமலர்தரவழிபாடியற்றியிசையெடுத்தேத்தி. (ருரு)

ஈற்றுளைந்துவலம்புரிகளீன்றமணிநிலவுமிழச்
சேற்றுமரைமலர்குவியுந்தென்காழிப்பொருப்பரசே
போற்றுமிமைப்போலுமையிப்புகர்வாரத்தெவர்பூசை
ஆற்றுநர்மற்றவர்பெறுமாறருள்கவரம்பலவுமெனா. (ருசு)

பொற்புவியின்மாலன்புபுரிந்துவேண்டினர்நிற்ப
மற்புயனங்காழிவரைவடுகேசனவ்வாறே
சொற்புகர்வாரத்திலெமைத்தொழுதாராதனைசெயினும்
அற்பினொடுதுதிப்பினும்யாமளிக்குதுமால்வரமனைத்தும். (ருஎ)

என்னமுதுமறையொழுகுமீர்ங்கனிவாய்மலர்ந்தருள
அன்னவரும்விடைகொண்டாங்கமருலகினினிதணைந்தார்
தன்னனையான்மாலெலும்பைத்தண்டமெனப்பிடித்ததனால்
பன்னருமோர்பெயர்தண்டபாணியெனமருவியதால். (ருஅ)

பாணிலாம்புகர்தினத்துப்பாறுட்கங்குலிற்பணிவோ
ரூனவாரமுந்தொழுபேறெய்தினுமோர்போதேனும்
ஞானநாயகன்சட்டைநாயகனைத்தொழுவோர்வே
றுனமாநிலத்திறினுமனைவரரும்பெறல்வீடு. (ஙகூ)

ஆதலினிவ்வியற்சரிதமனைத்துநுமக்கறிவித்த
தோதவுலவாதெனினுமுரைத்தனன்யானறிந்ததெனு
வேதமிலாமுதுமறைநூலெலனைத்தும்வடித்தெடுத்ததனி
மாதவனைப்பணிகூதமாதவன்மாதவர்க்குரைத்தான். (ச0)

(உரு-ஆவது. வடுகநாதவத்தியாயம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-கஙகச.)

## உசு-ஆவது. வேதவியாசரத்தியாயம்.

பாதிமதிநின்றொளிர்வேணிப்பரமன்வடுகநாதனியல்
நீதியுணர்ந்தபெருமுனிவர்நினதுகுரவனின்னகர்வாய்
நாதனருளான்மறைவகுத்தநலங்கூறென்னச்சூதனெனும்
கோதில்குணத்தான்விரித்தவழியறிந்தவாறுகூறுதுமால். (க)

தண்டாமறைதேர்கவுதமன்செய்சாபவலியான்மதிபிறழ்ந்து
பண்டாயுலகாயுதனருகன்பவுத்தன்மீமாங்கிசன்வாமன்
உண்டாமினையோர்மதம்பொருளென்றுணர்ந்துதுறவோர்முதலானோர்
வண்டாமரைவாழ்புத்தேளைமருவார்துளபத்திருமாலே. (உ)

இரவிமுதலொன்பதின்மர்தமையெண்மாதிரத்துக்கடவுளரைப்
பரவிநாளுந்தனித்தனியேகருத்தாவென்றும்படிற்றுணர்வால்
விரவுந்தமையேகருத்தாவென்றகததேமாந்துவிபரீதக்
கரவினமூந்திமருண்டார்முன்கற்பகத்தியன்றதுவாபரத்தில். (ங)

பறவாப்பூவைநிறத்தானும்பதுமத்தானுமீதுணர்ந்து
திறலார்கயிலைச்சிவபெருமான்றிருமுன்னமரரொடும்பரவி
உறவார்கருணைக்கனைகண்ணேயொன்றுமுதலேகவுதமன்செய்
விறலார்சாபத்தறிவுடைந்தார்வேலைஞாலத்தவரெல்லாம். (ச)

காலுங்கதிரோனுதவியுன்றூர்காட்சிக்கிருகண்ணமையுமென்பார்
போலும்புறத்தாரெழுமுகியெமைப்பொருளாய்மதித்தப்புன்னெறியால்
சாலும்பிறமேற்கோளினின்றுந்தலைவாநின்னைமறந்தறமோர்
நாலுந்துறந்தாரெனச்சிலம்பார்நளினமலர்ச்கீழுரைத்தனரால். (ரு)

ஆதிபகவனதுகேளாவருள்பூத்தெழுதாக்கிளவியொடும்
தீதிலுலகத்தவர்க்குயர்வான்சேரும்புராணமெனைப்பலவும்
நீதிபுணரும்வியாதனெனநிலமீதுதித்துநெறிதிறம்பா
தோதுமுறைசெய்திடுகவெனவுவணவூர்திக்குரைத்தனனால். (சு)

நலனுருலகிற்கருமநெறிநழுவாவண்ணமூவாறு
பலனார்மனுமுன்மிருதிகளைப்பரிபாலனஞ்செய்தளித்தியெனப்
புலனார்கமலக்கிழவனுக்குப்புகறலோடுமிருவோரும்
வலனார்மேருவரைகுழைத்தான்மலர்த்தாடொழுதுவிடைகொண்டார். (ஏ)

கதிர்செய்மேருவரையில்வந்துகண்ணன்விண்ணோர்தமைத்தத்தம்
பதியேபுகுத்திப்பராசரனும்பகவனெனைத்தன்மகவாதற்
கெதிரிலுறுமன்புறுபுணர்ச்சியெய்தவகுத்தவைகலுமிண்
டுதவலாலாங்கணைவதெனுவுலகின்றவனுக்குரைத்தகன்றான். (அ)

அனையகாலத்ததுவிழைந்தவறிஞர்பெருமான்பராசரமா
முனிவனதீர்த்தமுழுதாடுமுறையாலெறிநீர்த்திரைக்காத்தில்
கனைவன்றிமிர்பூந்தாரேந்துங்கடவுள்யமுனைப்பேராற்றில்
துணைவினொடும்வந்ததுகடப்பானரோணியக்குந்துறைசார்ந்தான். (கூ)

இயங்குதோணியிவாந்துமச்சகந்தியெனுமோரிளங்கொடியை
வயங்குமுனிகண்டாண்டிரணபெருவங்குறித்தமகப்புணர்ச்சிக்
கயந்திரோணையடுத்ததெமைமயணதியெனலுமாயிழையும்
நயந்துள்ளுவப்பதெய்வந்திகழ்த்துவிளிமெல்லியினர்கலந்தார். (க0)

கடவுண்முனியுமடவரலுங்கலந்தபுணர்ப்பாலாயிடையோர்
அடல்செய்திகிரிப்பெருமபடையானருமாமகவாய்வந்துதித்தான்
படர்செய்வலைமான்முலைதிளைத்தபழிபோயகலப்பிரமபுரத்
திடனெமமடிகளடிபோற்றியென்றமுனியுமுயன்றதன்மேல். (கக)

தன்பேர்பெறவோர்சிவலிங்கந்தாபித்தயலோர்கூபமமைத்
தின்பார்பணியவுயர்ந்தானையெழில்செய்விறுதிசகமையால்
அன்பார்தீபாயனனெனும்பேரணைந்தசிறுவனபணிந்தேத்தி
உன்பால்கனியானுய்யுமதியுறுத்துகெனவுமுறுவர்பிரான். (க௨)

பாரின்முதுநூற்பயிர்வளரும்பாததியனையதென்புகலி
ஊரிலெனக்கன்றருள்புரிந்தவுமைகேள்வனைநீபணிகெனவும்
நீரிற்கமலங்கண்முகிழ்ப்பநிறைவெள்வளைமுத்தொளிகாலும்
காரிற்பொலிபூம்பொழிலுடுத்தகாழிநகர்க்கண்ணவனும்வந்தான். (க௩)

வந்துபிரமன்றடத்தாடிமதிக்கோடிரிஞ்சமுகையவிழும்
கொந்துமலிபூங்கொன்றைமுடிக்குழகன்பிரமேசனைப்போற்றி
இந்துவனையநுதற்பேதையிடத்ததெம்பெரியநாயகனை
முந்துவழிபாட்டியலாற்றிமுறையானினைந்துமுன்னின்றான். (க௪)

எம்மான்போற்றியேறூர்ந்தவிறைவாபோற்றியுயிர்க்குயிராம்
அம்மான்போற்றியுலப்பிலாவழகாபோற்றியெனையாளும்
பெம்மான்பொற்றியளப்பரியபெரியோன்போற்றிநின்னடியேன்
மைம்மாசொழியவருள்பொழியும்வரதாபோற்றியெனத்துதித்தான் (க௫)

துதிக்குமேல்வையெழிலொழுகுஞ்சுடர்காலொற்றைக்குழைக்கிழவன்
கதிர்ப்பூண்முலைமெல்கொடியினொடுங்காமர்விடைமீதெழுந்தருளி
உதித்தகுணத்தாய்நின்றுதுதியுவந்தேம்பெறுகவரமெனலும்
விதிர்ப்பினொடுங்கைத்துணைமுகிழ்த்துவினைதீர்தீபாயனன்மொழிவான். (க

நின்றாமறைத்தாளென்னுளத்துநிலையல்வேண்டும்பலமறையும்
பொன்றாமேல்வீட்டியல்விரிக்கும்புராணப்பெருக்குமேழையினேன்
குன்றாவண்ணம்பெறவளித்தாட்கொள்ளவேண்டும்வள்ளலெனா
நன்றாய்ப்பரிசதிக்கைசெய்துநாதனினையவரங்கொடுத்தான். (க

அதுபின்முனிவன்முதுக்குறைவுற்றருமாமறைநூல்பற்பலவும்
முதுமைநெறியாலீரிரண்டுமுறைசெய்தவற்றுளிருக்குவினைப்
பொதுமைதருமுவெழுகூற்றாய்ப்புணர்த்துப்பயிலவருக்குரைத்தான்
இதுபின்மறையைச்சதவிதஞ்செய்தியல்வைசம்பாயனற்கீந்தான், (க

சாமமறையையாயிரங்கூறியற்றிமுனிவன்சயிமினிக்கும்
ஓமநெறிசாலதர்வணத்தையொன்பானுக்கிச்சுமந்துவுக்கும்
தோமில்புராணவிரிவனைத்துமூவாறாகத்தொகுத்தவற்றைப்
பூமியினில்யாவருமுய்யும்பொருட்டாலினிதுபுகன்றளித்தான். (க

அளித்தபுராணமூவாறுமருமையுருவாய்ந்தாரமுதம்
துளிக்கும்பிறைக்கீற்றொளிர்சடையான்றுரிசில்பூசைபுரிதுமென்று
களிக்கின்றனமாலென்னமுனிகருணைபூண்டுபிரமதடத்
தொளித்தண்புனல்புக்கினிதாடியுரவன்பிரமேசனைப்பரவி. (உ

அஞ்சிலோதியுமைக்கருள்செயம்பொற்றேணிமுழுமுதலை
நெஞ்சுளுருகிவரன்முறையானின்றுபணிந்துவென்றிபுனை
கஞ்சுகேசன்பதத்துணைகண்களிப்பத்தொழுதுகொழிதமிழால்
விஞ்சுமறைபாடியஞானவிரகன்றனையும்பரவியப்பால். (உ

கொண்டறவழுமேனிலத்தகொடியினுடக்கம்பரிதிவெயில்
மண்டமெலிந்தபசுநிறத்தவயமான்குலங்கட்கயர்வாற்றி
அண்டமளக்குங்காழிபுரத்தலன்கோயிலுக்குவடகீழ்பால்
கண்டகணையோரிரண்டளவிற்கனற்பேரீசன்றென்கீழ்பால். (உஉ

கேழில்விழுப்பந்தருமிலிங்கமொன்றங்கமைத்துக்கெழுமணியால்
வாழிநறுமஞ்சனவிதிநூல்வகைமையாற்றித்தகைநறும்பால்
ஆழியுயிர்த்தவாடகப்பூந்தருமாமலராலருச்சனைசெய்
தூழினியன்றதெய்வநைவேதனங்களாற்றியுளமகிழ்ந்து. (உந

மடமைப்பிறவித்துயர்விளைக்குமாயைப்பிணிக்கோர்மருந்தாய
கடவுட்கூபதீர்த்தமதன்வடபாலிழைத்துக்கண்பணிப்ப
உடலஞ்சிலிர்ப்பவிறைஞ்சிநின்றவொன்பானிரட்டிக்கடவுளர்முன்
படலைப்பிணியான்விடையிலெழுந்தருளிமகிழ்ந்துபகர்ந்தருள்வான். (உச

என்னையுமதுபணிநயந்தேமியைந்தவரநீர்பெறுகெனலும்
பொன்னையனையான்றிருமுன்புபுராணத்தலைவர்துவண்டேராஅய்
இன்னையமைத்தகடவுளுக்குமின்னதீர்த்தந்தனக்குமெம்பேர்
மன்னைவிளங்கவருளென்றார்மதிவேணியனுமஃதளித்தான். (உரு)

அன்றுமுதலேநம்புகலியமலன்றளிக்கீசானத்தில்
என்றும்பதினெண்புராணேசனெனவாய்ந்திருந்தவெம்மானை
மன்றவொருபோதிறைஞ்சுவரேல்வரம்பில்பலநூற்கடல்கடந்து.
பொன்றலருமெய்ப்பொருட்டுணிவார்புகரில்வீடும்பொருந்துவரால். (உசு)

அன்னபரமனருள்படைத்தவரும்புராணமூவாறும்
பின்னரெனதுதேசிகன்பாற்பேணிவரலுமாங்கவற்றை
என்னதறிவின்றிரிபகலவென்பாலளித்தானிதுநிற்கச்
சொன்னமறையின்பொருளெல்லாந்தொகுத்தோரிரண்டுவகைசெய்தான். ()

நகைசால்கிரியாகாண்டமெனஞானகாண்டமெனவவற்றை
வகையாலிருகூத்திரப்பெயரின்வைத்தான்வியாதனெனப்பெற்றான்
தகைசாலயனுமனுவாகித்தகட்டுமடல்கீண்டளிநறுந்தேன்
முகைவாயுகுக்குங்கமலவயன்முதுநீர்க்காழிப்பதியடைந்தான். (உஅ)

வேரிமலர்த்தாமரைக்கிழவன்வியன்பேர்த்தடம்புக்கினிதாடி
ஒருங்கியதிச்சடங்குமுடித்தோரைந்தெழுத்தினுருவோதி
ஆரங்கண்ணிப்பிரமேசனாராதனைசெய்தருந்தவங்கள்
பாரிசாதத்தருவினிடைபயின்றோர்திங்கண்முயன்றளவே. (உகூ)

வண்ணமிடற்றுப்பசுங்கமுகின்மடல்வாயுதிர்ந்தசெம்பழுக்காய்ப்
பண்ணைவனசக்கைக்கழுங்காம்பரிசுகாட்டும்வயற்காழி
அண்ணல்விடைமேலெழுந்தருளியன்பார்மனுவேதவமகிழ்ந்தேம்
எண்ணமுரைத்தியளித்துமெனவிறைவனுரைப்பமனுவுரைப்பான். (௩0)

துயர்தீர்சுருதிமிருதியெனச்சொன்னபொருளையென்மடமை
வெயில்பாயிருள்போல்விளிந்தோடவிளம்பியருள்வாயெனத்தொழலும்
உயிர்தோறுயிராயிருந்தபிரானுவந்தாங்கருளவப்பொருளை
இயலீரொன்பான்முனிவர்தமக்கிதயங்குளிரமனுவுரைத்தான். (௩க)

வளங்கொளினையகதையையுரைவகுத்தோர்கேட்டோரெஞ்ஞான்றும்
களங்கமகன்றுமங்கலத்தாற்காதற்புதல்வர்ப்பேறடைவார்
துளங்கும்படர்கூர்தொல்லைவினைத்தொடர்ப்பாடொழிவாரெனத்தவத்தால்
விளங்குமுனிவருளங்கனியவினைதீர்சூதமுனிபுகன்றான். (௩உ)

(உசு - ஆவது. வேதவியாசரத்தியாயமுற்றிற்று.)

ஆக திருவிருத்தம் - கசஉசு.

## இருபத்தேழாவது.

# அக்கினீசுரர்மகிமையுரைத்தவத்தியாயம்.

ஆன்றவின்னருட்டேசிகன்காழிவாழமலனதடிபோற்றி
ஏன்றநான்மறைவகுத்தவாறுணர்ந்தனமென்றுமாதவரிப்பால்
சான்றசெந்தழல்வானவன்பணிந்ததுஞ்சாபம்விண்டதுமிவ்வூர்த்
தோன்றவெம்பிரானளித்ததுஞ்சொன்மெனச்சூதமாமுனிசொல்லும்.

உவணைவானவரிரிதரவிருசுடருறுநிலைதடுமாறத்
தவமுயன்றுளோரலமரவெண்டிசைத்தந்திகள்வெருக்கொள்ளக்
குவலயந்தனினெளியவாயிரமுடிக்கோளராவியல்சாய
அவனியுங்குவானசுரரிற்புலோமனென்றசனியன்னவன்மேனாள்.

ஓர்வருந்தவப்பிருகுவையிந்திரனொடுபுணர்ப்பினனென்னாத்
தீர்வருங்கொடுமொழியனமுனிவனாச்சிரமமோர்தினத்தெய்தி
பேர்வருங்குணப்பிருகுவுமொழிந்துளபேருமாயிடைக்கானான்
சார்வருந்தவப்பன்னியைவேள்வியந்தலத்தினிலெதிர்கண்டான்.

கண்டுமற்றவன்யாரைநீயென்றலுங்கருவயிற்றினளாய
வண்டுவார்குழலாள்பௌலாமியாமறைமுனியுயிர்த்தேவி
விண்டுநெஞ்சினிலதிர்ப்பினாலுரைதராதிருப்பவெய்யவன்வேள்வி
உண்டுதேக்கெறிவெஞ்சடர்க்கடவுளையுற்றிதுபகர்கிற்பான்.

புனிதமிக்கநீயறிகலாப்பொருளிலைப்புரியுமெச்செயற்கேனும்
நனிசெய்சான்றுளாயாரிவளுரைக்கெனநானியம்புறின்[illegible]
முனிவன்வெம்புறுமொளித்திடிற்றயித்தியன்முருக்கும்வேற்றுரையாடின்
துனிவிளைக்குமென்றழுங்கியுண்மையைத்துணுக்கினாலவன்சொன்னான்.

மற்றவாய்மொழிகேட்டலுந்தடக்கையான்மடவரல்வளரைம்பால்
பற்றியீர்த்தலும்புரண்டனள்சிவவெனப்பன்முறைப்பெண்மான்போல்
உற்றரற்றினாள்கற்பினுமதிர்ச்சியிலுயிர்த்தசேட்டிளம்பாலன்
சொற்றமேனியிற்பிரமகாந்தியினும்வெந்தூளியாயினன்வெய்யோன்.

ஆயவேலையிற்சேயினையேந்திநல்லகம்புகுந்தடல்வெய்யோன்
தீயசெய்கையோர்ந்தடிக்கடியினைவுழித்தேவர்கோன்மகமுற்றி
மேயநல்வளத்தொடுவரும்பிருகுவாமிக்கவன்மனையாடன்
பாயவெந்துனியோதியிலுணர்ந்தனன்பையுள்கூர்ந்தனன்மென்மேல்.

காலமூன்றையுமொருங்குணர்பெருந்தவக்கருணையங்கடலன்ன
சீலமேன்மைசால்பிருகுமாமுனிவரன்செயிர்த்துவெங்கொலையோவா
ஆலமன்னவாளவுணனுக்குண்மையையறைந்தசெந்தழலோனை
ஞாலமீதினீசருவபக்கணனெனநடக்கெனச்சபித்தானால்.

இட்டசாபமேற்றனல்வன்சினமுறீஇயீர்ங்கண்மாஞாலத்துப்
பட்டதன்கலையாவையுங்கொடுசெலப்பன்மகக்சடங்கெல்லாம்
முட்டல்கண்டவியெய்துருவானவர்முகிலுறழ்மணிமேனி
வட்டநேமியாற்குரைத்தலுமாங்கவன்வன்னியோடிதீசொல்வான். (௯)

பரந்தநின்கலைபண்டுபோற்பரப்புதிபாரினின்முனிசாப
அரந்தவெந்துயர்நீங்குறமுகிறவழம்பொனீடெயிற்றோணி
புரந்தனிற்புகுந்தெந்தையாராதனைபுரிதியென்றலுநேர்ந்து
நிரந்தனன்கலையனைத்தையும்விரித்தனனெருப்பினுக்கிறைமுன்போல். (௧௦)

விரித்தசெந்தழல்விண்ணவன்பண்ணைநீர்விரியிதழ்க்கமலத்தே
வரித்தநீளிலைழீக்கொளவணங்குபுவாய்ந்தநெற்கதிர்தெண்ணீர்
பரித்தவள்ளனீர்பருகுறுமிவுளியின்பான்மைகாட்டியகாழிப்
புரிக்கண்வந்தனனயன்றடமாடினன்புரிந்தனனியமங்கள். (௧௧)

குய்யகாசியென்றிலகிப்புகலிவாழ்குழகனதடிபோற்றித்
துய்யவைந்தெழுத்தோதிமூதெயில்கெழுசுடர்த்தளிவடகீழ்பால்
எய்யுமுக்கணையளவையுட்டன்பெயரிலிங்கமொன்றதுதாபித்
துய்யுமாறுதன்பெயர்புனைதீர்த்தமொன்றுஞற்றினனதன்றென்பால். (௧௨)

பின்னரும்பலபூசனைநெடும்பகல்பேணினன்பயில்வான்முன்
வன்னிவேணியான்போந்துநின்பூசனைமகிழ்ந்தனமுனிசாபத்
தின்னல்கூர்படரகல்கநீபெறுவரமின்னமுங்கொள்கென்ன
மின்னிலங்கொளியொள்ளழற்கிறையவன்விளம்புவானுளங்கூர. (௧௩)

அளியனேன்முயன்றிழைத்தவித்தடத்தினிலாடியீண்டமலேசன்
ஒளிமலர்ப்பதம்பரவினோர்சாபம்விண்டுறுபவமகன்றோங்கி
விளிவில்போகமுமேலைவீட்டின்பமுமேவுமாறருள்கென்னக்
களிநல்யானையீருரியரைக்கசைத்தவன்கனிவொடங்கருள்செய்வான். (௧௪)

அன்னியம்படுநிந்தையிலொளிறுவேலரசர்செயிடையூற்றில்
மன்னிமண்டியவறுமையிற்கிரகங்கண்மாறியவிழுக்காற்றில்
இன்னலெய்துறுஇன்பமேவெய்துறவெழிலுலாம்பொழிற்காழி
வன்னிலிங்கமும்வன்னியந்தீர்த்தமும்வயங்குமால்வடகீழ்பால். (௧௫)

வேறு.

இன்னணம்வழிபடுமெறிசுடரிறையவனிறையவனருளாலே
தன்னமர்பதியினின்மருவியபிறகொருதரமெயில்வளர்காழி
மன்னவனடிதொழுதிகல்பெருகினனெனமதிமதிமுனிசூதன்
சொன்னபின்முனிவர்களதுபுகலெனவகைதொகையொடுநனிகூறும். (௧௬)

ஆதியிலொளியுமிழ்தமனியவரைமிசையமரர்கள்பலர்கூடி
மாதலமிசைபுரிமகமுழுதிலுமொருவழியுணும்வகையாதே
ஓதுதிரெனவனலிறைபிருகுவினிடரொருவல்செய்தருள்காழி
நாதனிலுமதுருமருவியவ்வுணவினைநாமொருவழிகொண்டே. (௧௭)

என்றுநல்குவனென்விமையவரினிதெனவெரிசுடருயர்காழிக்
குன்றுறைமுதல்வனைவரன்முறைபரவுபுகுழைதரவிடைமீதே
அன்றனையுடையவனைவரவருள்புரிதலுமலர்பொருமிருதாளில்
சென்றெதிர்பரவினனிதுதருகெனவிறைதிருமுனமெழுநாவான். (கஅ)
என்னொனிலிமையவர்மன்னுருவெவைகளுமெனதுருவினிலாக
நின்னருள்புரிகெனநிமலனுமருள்செயநிலமிசையதுநாள்கொண்
டின்னனவுருவொடுகடவுளரவியுணவியன்மகவினைதோறும்
வன்னிநல்குவனிதுமறுமுறைபுகலியின்மருவியவரலாறே. (ககூ)
இங்கிவன்வரவிதுவன்கறையிருள்கெடவெழுதருமொளிவெய்யோன்
மங்கலவளமலிவெங்குருவினிலுறைவரதனதடிபேணி
அங்கவனுயர்நிலைதங்கினனென்னமுனியரசர்களதுகாதை
இங்கருளெனலும்விளம்பினன்மகிழ்தரவேதமின்முனிசூதன். (உ௰)

(உஎ - ஆவது. அக்கினீசுரர்மகிமையுரைத்தவத்தியாயம்முற்றிற்று.)

ஆ திருவிருத்தம் - கசசுசு.

## உஅ-ஆவது. சூரியன்பூசித்தவத்தியாயம்.

வெங்குருவினில்வாழெந்தைமெல்லடிபணிந்துமேன்மை
அங்கியங்கடவுள்பெற்றவடைவிதுமகவானுக்கும்
செங்கதிரவற்குமுற்றசெருக்கினாலிவ்வூரெய்தி
பங்கமிலுயர்ச்சிவெய்யோன்படைத்ததும்பகரலுற்றாம். (க)
தமவலிதுரக்குஞ்சோதித்தபனனுங்குலிசவேற்கை
அமரர்காவலனுமேயதிகன்யானதிகனென்னாக்
கமையிலார்முரணிமேனாட்கலங்கினர்தடுப்பொன்றில்லார்
மமதைநோய்கொண்டார்யாரேமருந்துவேறுதவற்பாலார். (உ)
முரணியவிருவோர்தங்கண்மொய்ம்பையாண்டளப்பான்றன்பால்
விரவினருரைப்பவன்றான்விண்ணவர்வேந்தனென்பான்
ஈரமலிகுலிசபாணியொருவனீதையமின்றே
கரமலிகதிரோயென்னக்கதிரவன்கனன்றுபின்னாள். (ங)
கடவுளர்பலர்க்குமேலாங்கருத்தனுங்கடல்சூழ்வையத்
திடனுளார்பலரும்போற்றுமிறைவனும்பல்லாருக
அடர்கருமங்கட்கெல்லாமறிஞனுமாவேனென்னா
உடலும்வெங்கதிரோன்புக்காளலிதிரைப்பொன்னிவைப்பில். (ச)
ஈரிரண்டியற்கைவிண்ணோரிருக்கையாயிருக்கையாய்ந்தோர்
பேரியல்வளர்க்குங்காழிப்பெருநகரெய்திவேதன்
சீரியதடத்துமூழ்கித்திருநிலையழகியென்னும்
காரிணைபாகன்செம்பொற்கழலிணைவழிபாடாற்றி. (ரு)

அண்ணலேபோற்றிவிண்ணோரதிபனேபோற்றிமூன்று
கண்ணனேபோற்றிசூலக்கையனேபோற்றிசோதி
வண்ணனேபோற்றிகாழிவரதனேபோற்றியோர்பால்
பெண்ணனேபோற்றியாதிப்பிரமநாயகனேபோற்றி. (௬)

இனையனபுகழ்ந்துபோற்றியெந்தைவாழ்தளியிலாண்ட
கனைமதக்கன்றேயாதிக்கடவுளரடிபராவி
முனைவனாலயத்துமேல்பான்முக்கணையளவைக்கப்பால்
புனைதிருக்கோலக்காவாம்பூங்கொன்றைவனத்திற்புக்கான். (௭)

பூமலர்க்கிழத்திக்கென்றும்புனையுமங்கிலியமீந்த
மாமுழுமுதலைப்போற்றிமற்றதன்கீழ்பாற்றன்பேர்த்
தாமரைவாவிதொட்டுத்தன்பெயரிலிங்கந்தாபித்
தேமுறநனியாராதித்திருந்தனனுலப்பில்காலம். (௮)

வேறு.

இவ்வழியிருந்துழியென்னையாளுடை
மவ்வலங்கோதையாண்மகிணனேற்றின்மேல்
அவ்வழியினிதெழுந்தருளவேழ்பரி
வெவ்வெயிற்றேரினன்வீழ்ந்துவாழ்த்துமால். (௯)

அய்யனேபோற்றிநல்லழகபோற்றிவான்
மெய்யனேபோற்றிமால்விரிஞ்சன்காணருஞ்
செய்யனேபோற்றியென்றுவந்துசெங்கதிர்க்
கய்யனேத்தெடுத்தலுங்கடவுள்கூறுமால். (௧௦)

வளமலிபூசைநீவகுத்தவண்ணமெம்
முளமகிழ்ந்தனமுனக்குறுவதோதென
இளமதிகண்ணியாயிமைக்கும்வான்முதல்
தளர்வின்முப்புவிக்கும்யான்றலைவனாகவும். (௧௧)

ஏவருமெனைதொழுமெதிரில்செல்வமும்
தேவநீயருள்கெனத்திருவுளத்தினால்
ஆவயின்மகிழ்ந்தவையளித்துப்பின்னரும்
கோவுயரியகொடிக்குழகன்கூறுமால். (௧௨)

இத்தலைநீபணிந்தியலிலிங்கமும்
உத்தமத்தடமுமுன்பெயரினோங்குக
பத்தியாலிப்புனல்பானுவாரத்தில்
சித்திசெய்யாணியாவணியிற்றேடியே. (௧௩)

தேனுறுந்திங்களிற்செயிரில்பங்குனி
நாளுறுமகத்தினினயந்துமூழ்கியே
தாளுறப்பணிந்துநந்தமைப்பராவினோர்க்
காளுறுதருமமூமனைத்துமீதுமால். (௧௪)

நின்றெடுநெடுமொழிநிகழ்த்தும்வாசவன்
பொன்னரியுரேளினன்புலிக்கிராமனாய்
மன்னுநாள்வாலியாய்வருவனீயவன்
பின்னுதித்தவனுயிர்ப்பிரிவுசெய்தியால். (கரு)

என்றுபல்வளங்களுமிரங்கிவெள்விடைக்
குன்றினனளித்தனன்குவலயத்தின்மேல்
மன்றவத்தடத்திடைமருவியாடினார்
பொன்றரும்பெரும்பிணிபோக்குவாரரோ. (கசு)

ஆறரும்விழிப்பிணியங்கவீனம்வெங்
கூறதிகாரமாங்கொடியவன்பிணி
வேறறவிலகிவெய்யவனில்வீறுபெற்
றேறெழின்மதனெனவிருக்கின்றார்தமை. (கஎ)

நனியறிகுவெனெனாவின்றுசூதனும்
முனிவரன்பின்னருமுதல்வன்காழிவாழ்
புனிதனதடியிணைபோற்றியுய்ந்தனன்
பனிமதியென்றதன்பரிசுங்கூறுவான். (கஅ)

(உ௮ - ஆவது. சூரியன்பூசித்தவத்தியாயம்முற்றிற்று.)
ஆ திருவிருத்தம் - கசுகூச.

## உகூ - ஆவது. சந்திரன்பூசித்தவத்தியாயம்.

தண்ணருவுமிழுங்கடுக்கையங்கண்ணித்தாழ்சடைத்தனிமுதற்காழி
அண்ணருள்பரவியாயிரங்கதிரோனமரரிலுயர்நிலைமேய
வண்ணமீதன்னமணிநகர்போற்றிவாலமுதிறைக்கும்வெண்கதிரோன்
விண்ணுளோர்பழிச்சவியனிலையடைந்தவியப்பமும்விளம்புவான்றுணிந்தாம்.

மிக்கமாதவந்தோய்தக்கனென்றுறுபேர்மிடலினனளித்தவழுவொன்பான்
மைக்கருங்கூந்தலுடைலார்தம்மைமதிக்கடவுளுக்குளமகிழ்ந்து
புக்கநாள்வதுவையாற்றினனவைப்பொதுவறப்புணர்ந்தனைவாழ்கென்
றொக்கநல்குதலுமியைந்ததண்கதிரோனுறுமனைக்கொடுமணந்திருந்தான். (உ)

தினந்தொறுமொருவர்வனமுலைதிளைத்துச்செல்லுநாள்வல்லிருங்கூந்தற்
கனங்குழையவரிலுரோகணியிடத்துங்கன்னியங்கார்த்திகையிடத்தும்
மனங்குழைந்தனையானனிவிருப்பூர்ந்துமணத்தல்கண்டதுபொறாதேனை
அனந்தருநடையார்கொழுநனதியல்பையண்ணறந்தந்தைபாலுரைத்தார். (௩)

கேட்டலுமழன்றதக்கனுங்கமுதகிரணனைப்பக்கமொன்றினிலுன்
னீட்டெழிற்கலைகள்யாவையுங்குறைகவெனச்சபித்திடலுமவ்வாறே
நாட்டொறுந்தேய்வைகறுமோர்கலைபோய்நலிந்தனனிப்பெருஞ்சாபம்
வீட்டியாறுய்வதெத்தலமென்னுமிக்குளங்கவன்றனன்விதுவே. (௪)

குறைகடற்புவியோர்குறித்தபல்பொருளுங்கொடுத்துவிண்ணகத்துவாழுநர்க்கு
புரையுறுமிடர்நோயகற்றிவீடளிக்கும்புரமதுதோணியம்புரமென் [ம்
றுரையுளவதன்பாலெய்தியிவ்விடும்பையொழிகுவலெனவுடைபதிதான்
மன்னாமலர்க்கழனிக்காழிமாநகர்க்கண்வந்தயன்றடத்துநீராடி (௫)

இழுக்கறுநியதிச்சடங்குகளாற்றியியற்குருலிங்கசங்கமமாம்
முழுப்பரஞ்சுடரவரன்முறையிறைஞ்சிமுன்புரின்றன்புமீதூர
ஒழுக்குறுகண்ணீர்வாரமெய்சிலிர்ப்பவுலையுறுமெழுகினுள்ளுருகி
விழுப்பமீக்கிளப்பப்பழிச்சினன்பலகால்வெண்ணிலாவுமிழ்கதிர்வேந்தன். ()

எந்தையாலயத்தைவலம்புரிந்தய்ல்போயீர்ந்தருண்பளிங்கெனத்தெளிந்த
அந்தணீர்கொழிக்கும்விக்கினேசுரப்பேரணிநதித்தெய்வநீராடிச்
சிந்துரவேணிச்சிறுவிழிப்புழைக்கைச்செல்வனுக்கருச்சனையாற்றிச்
சந்தமோதகமங்கருத்தியெம்புகலித்தலைவன்வாழ்தளிக்குநேர்கீழ்பால். (எ)

முக்குரோசனைதூரத்ததாய்வசிட்டமுனிபணிதிட்டையின்வடகீழ்ப்
பக்கலாய்வில்லவனமுல்லைவனமேல்பாலதாய்க்குருக்கைக்குநிருதி
திக்கதாய்மாநீர்ப்புறவமாநதிக்குஞ்செம்பாம்பன்குடிக்குமோர்தெற்காய்த்
தக்கசீர்விழுப்பந்தரப்பெருநூலோர்சாற்றியமுகூர்த்தமொன்றாய்ந்து. (அ)

அள்ளிலைப்புன்னையகத்தினிற்றன்பேரலங்குமோரிலிங்கமுமப்போர்த்
தெள்ளுநீர்த்தடமுமமைத்துவந்தனையுஞ்செய்தொரைந்தெழுத்துமந்நிழல்வாய்
உள்ளுறக்கணித்துத்தவம்பலமுயன்றவொளியுலாந்திங்கள்வானவன்முன்
வள்ளைவார்குழைமென்கொடியொடுங்குழகன்மழவிடைமீதுதோன்றினனால்.

உவமனில்குணத்தாய்நினதுமாதவமீங்குவந்தனம்வரம்பெறுகெனலும்
தவளமால்விடையாய்தக்கனெற்களித்தசாபமுந்தவிர்த்தியென்பெயரில்
புவனியிற்பொலியித்தடம்படிந்திவண்வாழ்புனிதனைப்போற்றுநர்யாரும்
கவலுறும்வினைதீர்ந்தரும்பெறல்வீட்டிற்களிக்கவுஞ்செய்கெனக்கரைந்தான்.

தலைவனும்வனுக்கவ்வரமளிப்பான்றக்கனெம்மடியனன்னவன்செப
உலைவறுசாபமொழிப்புறுதேனுமுன்பணிக்குதவவேண்டுதலால்
நிலையுமுன்னுவாவிலொவ்வொருகலையாய்நிரம்புவாய்பின்னுவாவினிலோர்
கலையதாய்க்குறைவாய்வைகலுங்குறையுங்கலையையோர்கடவுளர்க்களிப்பாய்.

வழங்குமவ்வரத்தாலொவ்வொருகலையாய்வளர்கவிக்கலைவளர்பக்கம்
அழுங்கலில்சுபமாமக்கலைநுகர்வோரனல்கதிர்விச்சுவதேவர்
மூழங்குநீரிறைசட்காரனிந்திரனேழ்முனிவரோடசகபாதன்போர்க்
கொழுஞ்சமன்வாயுகவுரிதென்புலத்தார்குபேரனெம்மொடுமென்முறையே. ()

நந்தையேதொடங்கிநுகரநீமறையோர்நாயகனெனும்பெயர்பெறுவாய்
சந்ததம்பயிர்களைவைக்குமோரிறையாய்த்தயங்குவாய்பிணியெலாந்தவிர்ப்பாய்
வந்தமூவொன்பான்மகளிரையியல்பாய்மணந்தனைவாழியப்புணர்ச்சி
அந்தமார்கடிலகநான்கினுங்கருமமானவைசெயத்தகாவன்றே. (௧௱)

இப்பரிசெவையுமளித்தரன்விடைமேலிவர்ந்துவிண்படர்ந்தனனுளநைந்தாய
வெப்புறுமிடர்போய்த்திங்களங்கடவுள்வியனுலகெய்தினனென்னலும்
ஒப்புறுமுனிவர்சேடனேத்தியதுமுயர்கேதுபுரவரலாறும்
துப்புறழ்சடையாயருள்கவென்றிரப்பசநகமாமுனிவரன்சொல்வான். (கச)

(உகூ-ஆவது. சந்திரன்பூசித்தவத்தியாயம் முற்றிற்று.)

ஆ திருவிருத்தம் - கசஎஅ.

## ௩௦-ஆவது. சேடனுங்கேதுவும்பூசித்தவத்தியாயம்.

வெள்ளிவெண்மதிமேலைநாட்டக்கன்வெஞ்சாபம்
தள்ளியுய்ந்தவாறின்னசித்தணிநகர்சார்ந்து
புள்ளிநீண்முடிச்சேடனுங்கேதுவும்போற்றித்
தெள்ளியோரெனப்பெற்றதுமொருவழிதெரிப்பாம். (க)

முக்குறும்பையுமுருக்கியகாசிபமுனிக்குத்
தக்கதேவியாம்வினதைகத்துருவெனுந்தரத்தார்
மக்களெய்துவான்மனமலிந்தனையவன்மலர்த்தாள்
மிக்கவாதரத்தொடும்பணிந்துரைத்தலுமேனாள். (உ)

ஏலவார்குழல்வினதைகேணின்வயிற்றிரண்டு
சீலவண்டம்வந்துயிர்ப்பவாண்டாயிரஞ்செல்லக்
கோலமைந்தராங்கவற்றுதிப்பாரெனக்கூறிக்
காலமூன்றுணர்முனிவன்மாற்றவட்கிதுகரைந்தான். (ங)

உன்னகட்டினிலண்டமாயிரமொருங்குதிக்கும்
அன்னவற்றினியருமகப்பேறடைகென்னச்
சொன்னவாற்றினுயிரஞ்சினைகத்துருத்தோகை
தன்னிடத்துவந்தெய்தியோராண்டதுதணந்தே. (ச)

கணிக்குமண்டங்களவற்றினிற்கணிப்பிலாதனவாய்
மணிப்பணாடவிச்சேடனாதியபணிவரலால்
அணிப்பொலன்றொடிமகிழ்வம்மகிழ்ச்சிகண்டழுங்கித்
தணிப்பிலாதொருமுட்டையைவினதைகைத்தலத்தால். (ரு)

வெருவலின்றியேதகர்த்தலுமுனிவரன்விளம்பும
பருவமுற்றுறுதுதித்ததோரருணனோர்பாதி
உருவெறுடெய்திமாற்றவட்குநீதொழும்பியாயுழல்கென்
றருளில்சாபமொன்றன்னைபாலளிப்பநொந்தனையாள். (சு)

மைந்தரெய்துறும்விருப்பினால்யானுமற்றவள்போல்
முந்துயிர்த்தலொவ்வாமையான்முட்டையைத்தகர்த்தேன்
இந்தவெங்கொடுஞ்சாபமீந்ததனையென்றிகப்பேன்
ந்தனீயிகவிருமாறுரையெனத்தனயன். (எ)

ஏனைமுட்டையிலெம்பிதோன்றுவனுனக்கென்னால்
ஊனமெய்தியசாபமாற்றுவனெனவுரையா
ஞானநாயகன்பூசையாலிரவிதேர்நடத்தற்
கானவெந்திறல்வலவனாயினனரோவருணன். (௮)

ஈதுநிற்கவவ்விருமடந்தையருமின்னளிசூழ்
தாதுலாமலர்ச்சோலையாட்டயருநாட்டணிவிண்
மீதுதோன்றியதேரொலியதுசெவிவிழலால்
ஓதுகென்றகத்துருவினுக்கோதுவாள்வினதை. (௯)

சதமகன்பரியார்ப்பெனவிப்பரிதனக்கு
ஆதலுமேனியெந்நிறமெனமுழுமையுநோக்கின்
எதிரிலாதவெண்ணிறமெனவினதையாண்டியம்ப
அதனில்வாலதிகறுப்பெனக்கத்துருவறைந்தாள். (௧௦)

வாலுமவ்வொளியென்றனள்வினதையிவ்வார்த்தை
ஏலுமேலுனக்கடிமையென்றனளவட்கிளையாள்
சாலும்வாலொளிகறுப்பெனினடிமைநின்றனக்கியான்
வேலுலாங்கணாயாவெனென்றுரைத்தனள்விதியால். (௧௧)

இனையசூள்புகன்றிவரகன்றிடலுமன்னவடன்
தனையர்வானினின்றநந்தனாதியபணித்தலைவர்
துனைவினெய்தினாரிந்திரன்பரிநிறஞ்சொல்வீர்
வினையமிக்குளீரென்றலும்வெண்ணிறமெய்யே. (௧௨)

மேனிதன்னிலும்வெண்மைவாலென்றலுமுணர்ந்த
காணிருங்குழல்கறுப்பெனவுரைத்தவென்கடுஞ்சூள்
ஈனமெய்துறுதிருண்டவாளரவெலாமிமையோர்
கோனுலாம்பரிவாலினைமறைத்திரென்குறிப்பால். (௧௩)

என்றவாய்மொழிகேட்டலுமென்னிதுவன்றாய்
ஒன்றுதீமைசெய்துயர்வதிலொழுக்கினாலுடைந்தால்
வென்றியெய்துமாலறம்பிழைத்திடினுமேலோரைக்
கன்றல்செய்யினுநிரயமெய்துவர்பலகாலம். (௧௪)

தருமமுந்தெறுமென்றொருதாதையைத்தாய்பால்
ஒருமைமைந்தர்களுரைப்பமுன்னளனெனுமுறுபேர்
நிருபனீதிசெய்தளிக்குநாட்கலிவலிநெருக்குண்
டருநிலந்துறந்தெய்த்துமவ்வறங்கெடாமையினால். (௧௫)

நவையுறுங்கலியகன்றொருநாளிமதிக்குடைக்கீழ்ப்
புவியளித்தனனின்னமுமவன்பெயர்புகன்றோர்
எவரும்வெங்கலிநீங்கலானன்றியையிகந்தோர்
தவறியம்பினோர்வஞ்சகருய்வரோதரைமேல். (௧௬)

அன்னதாலடாதென்றலுமன்னைமுன்னாகச்
சொன்னதெய்வம்யானெனமொழிமறுத்தநீர்துகடீர்
மன்னவன்சன்மேசயன்சத்திரமகத்தீத்
தன்னிலாகுதிக்கீாகுதிரென்றனள்சபித்தாள். (௧௭)

ஆயபோதரவரசருண்ணடுங்கியீன்றாளை
ஏயவந்தனைபுரிதலுமென்மொழிகேட்பின்
மேயமாமுனியத்திக்னும்மையிவ்வேள்வித்
தீயுருவகைதெரிப்பனஞ்சலிரெனத்தெரித்தாள். (௧௮)

அவ்வுரைக்குடன்படுகிலாரநந்தனேயாதி
வெவ்வெயிற்பொழிமணிப்பணுடவிப்பணிவேந்தர்
எவ்வமிக்கவிச்சாபமெவ்வாறினியிகப்பேம்
அவ்வைதீர்நெறியாதெனமனத்திடைகவன்றார். (௧௯)

அறிந்திழைத்தவல்வினைதொலைத்தரும்பெறல்வீடு
சிறந்தளிப்பதுங்காழியம்பதியெனத்தேறி
மறந்தழைத்தசேட்டநந்தனாதியரெலாம்வல்லே
உறுந்திறத்தில்வந்தெய்தினர்வெய்துறலொழிவார். (௨0)

வரசரோருகன்றெய்வநீர்படிந்துநன்மலர்தூஉய்ப்
பிரமநாயகற்பணிந்தருளுமையிடம்பிறங்கும்
குரவனீரடிதொழுதுகஞ்சுகத்தனிக்கொழுந்தின்
சரணமேத்திநின்றிருநிலையழகிதாடாழ்ந்தார். (௨௧)

உலவையந்திசைக்கடவுணேகேசனின்புறுதாட்
சலசமேத்திவெள்வளைகள்பங்தெனவெறிதரங்கம்
இலகும்விக்கினேசுரப்பெருநதிபடிந்தெவரும்
மலருலாம்பொழில்சூழ்கேதுபுரத்தினில்வதிந்தார். (௨௨)

வேறு.

வரமலிசூதமுனிவனிவ்வாறுவகுத்தலுமருந்தவரெமக்கோர்
புரவலகேதுபுரிவரலாறென்புகலுகவென்றலுமேனுள்
சிரப்புரப்பெருமைதெரித்துழியந்தச்சிரமதுநீங்கியவுடற்கூ
றுரகனெம்பரனுற்கேதுவென்றொருபேருற்றனன்பெற்றதையன்றே. (௨௩)

ஆங்கவன்கமலத்தந்தணனமைத்தவருட்பெருங்கடவுணீராடி
ஓங்குலகளித்ததிருநிலையழகியொடும்பிரமேசனையிறைஞ்சிப்
பூங்கொடிக்கருள்செய்பெரியநாயகன்றன்பொன்னடிபடிந்துயர்குவட்டின்
பாங்கமர்ந்தெனையாள்கஞ்சுகமுதல்வன்பதந்தொழுதாலயக்கீழ்பால். (௨௪)

உளர்தருமெல்லையொருகுரோசத்திறெண்ணருவூற்றெழுந்தொழுகும்
துளங்குபொற்றுணர்தூங்ககன்சினைசாதித்திருமமூலத்தினிலெவர்க்கும்
வளந்தருங்கடவுளிலிங்கமொன்றமைத்துமணிதெளித்தனையமாதீர்த்தக்
குளர்தனிகண்டுவரன்முறைபூசைகுழைவொடும்புரியுநாளாங்கே. (௨௫)

ஒள்ளியதகட்டொட்டடல்வாளையுகளுபுதாக்கலுமுயர்ந்த
வெள்ளிவெண்பாளைப்பசுங்கமுகுகுத்தவிழுத்தகுதாற்றிளம்பழுக்காய்
தெள்ளொளிப்பவளத்திரளெனவிமைக்குஞ்செழும்பணையுடுத்ததென்காழி
அள்ளிலைச்சூலத்தொருமுதல்விடைமேலணங்கொடுமெழுந்தருளினனால். ()

எழுந்தருளிமையவில்லியைக்காணூஉவிணைவிழிபனிப்பமெய்சிலிர்ப்ப
அழுங்கலிலார்வமீமிசைபெருகவலர்கரேஉயங்கைமேன்முகிழ்த்து
விழுந்துபன்முறையால்வணங்கினின்றானைவிடைக்கொடியுயரியபெம்மான்
ஒழுங்குறுநினதுபூசனைமகிழ்ந்தேமுறுவதுகேளெனவனையான். (உஎ)

பழமறைமலர்ந்தபவளவாய்முதல்வாபணிப்பகைவானவன்றன்னைக்
கிழமையான்மறைக்குமியலும்வெவ்வேறுகேழ்கிளர்கோள்களோடியானும்
நிழல்பெறுவலியுமளித்தியென்றிரப்பநீனிறவண்ணனேடரிய
கழலினானவனுக்கவ்வரமாங்கேகருணையாலளித்தனமென்றான். (உஅ)

என்றபூங்கடுக்கையீர்ந்தொடையாகத்தெம்பிரானணங்கொடுமேற்றுக்
குன்றினையுகைத்தாண்டினிதெழுந்தருளக்கோட்டமின்மனத்தொடுங்கேது
துன்றுபல்வளங்கூர்தனதுலகணைந்துதுளக்கமில்வலிபடைத்திருந்தான்
அன்றுதொட்டதனான்முனிவிர்காள்கேதுபுரியெனலாகியதவ்வூர். (உகூ)

உரைதருமனையான்செவ்வராவுருக்கொண்டுறைதலான்முறைமையாலிதற்கே
குரைகடலுலகத்திலகுசெம்பாம்பன்குடியெனப்பெயர்பெறுமிதன்கண்
நிரைமணிமௌலிச்சேடனேயாதிநீள்சினமாசுணத்தலைவர்
விரைமலிகேதுதீர்த்தநீராடிவிதிமுறைநியதிமுற்றினரால். (௩0)

ஒருகணமேனும்பணிபவரிடையூறொழித்திருமையினுமெய்யுறுதி
தருபரன்கேதுநாதன்மென்கமலத்தாண்மிசைநாண்மலர்தூவி
வருசிரமுழந்தாளுரங்கரஞ்செவிகீழ்வாய்புயமுந்தியென்றிவற்றால்
தெருளுமோரைந்துமெட்டுமென்றியற்றுந்தெய்வவந்தனைபுரிந்தனரால். (௩க)

ஆண்டினிதிருந்தவமலனாரருளாலன்னைவெஞ்சாபமுநீங்கி
ஈண்டியவிழுப்பமெய்தினருயர்ந்தாரிப்புனலாடியிம்முதல்வன்
வேண்டியதளிக்கும்பதந்தொழப்பெறுவார்வினையொடுங்கிரகநோயொருவி
நீண்டமெய்ஞ்ஞானத்தொன்றியொன்றானன்னிலையினிலவுவரன்றே. (௩உ)

(௩0-ஆவது. சேடனுங்கேதுவும்பூசித்தவத்தியாயமுற்றிற்று.)

ஆ. திருவிருத்தம் கருக0.

## முப்பத்தோராவது.

## அண்டநாயகர்மகிமையுரைத்தவத்தியாயம்.

புண்டரிகவயற்காழிபுரத்தநந்தன்முதலானோர்போற்றுமாறும்
பண்டடல்சேர்கேதுபுரவரலாறும்பகர்ந்தனையிப்பதியைமேனாள்
அண்டமெலாந்தொழுதமையும்புகன்றனையாலதனைவிரித்தருள்வாயென்ன
எண்டவத்தோர்தொழச்சூதமுனியுரைத்தவியலொருவாறியம்பலுற்றேன். ()

குணங்குறிகாரணங்கடந்ததனிமுதல்வனுயிர்க்கருள்வான்குறித்தோர்கற்பத்
திணங்கவருமுடிவதனில்விச்சையினின்றண்டமெல்லாமியற்றுங்காலை
மணந்தபிருதிவிக்குநிறம்பொன்னெனவாயிரங்கோடிவகைசேரண்டம்
கணந்தனிலேவிரித்தவற்றையினிதளிக்கவயனுதிகடவுளோனை. (௨)

மானுறுதண்கலையிருத்தியதிகாரமுதல்வரெனவகுப்பவன்றோர்
ஏனுமுறையளிபுரிந்துவருநாளிலவர்பலருமீண்டியென்றும்
பூணுமூதுஞானமுநல்லிசையுமிசைவான்விழையும்போதன்றோரில்
காணுறுநான்முகன்கலையாங்கடவுளரங்கவையடையக்கருதிச்சொல்வார். (௩)

நீட்டரியபழமறைநூலுரைப்பதுமுப்பொருளாகித்தெளிசேர்நீற்றி
நாட்டமுறுதனிமுதல்வன்வதிவதுதேருழிபுக்கநாளுமுந்நீர்க்
கோட்டமிசைபொலிவதுதென்பிரமபுரம்பரவினுளங்குறித்தவெல்லாம்
ஈட்டமுறுமெனமேலோடுமேனையண்டமுதல்வருமங்கியைந்தார்பின்னர். (௪)

வென்றிதரும்புள்ளூர்க்குத்தென்றிசையிற்புள்ளிருக்குவேளூருக்கு
நன்றிசையீசானத்தில்வள்ளலுறைமுல்லைவனநகர்க்குமேற்கில்
பொன்றிகழுங்குரைதிரையபொன்னிநதிவடதிசையிற்புலவர்போற்ற
என்றுமுலப்பருமிறும்பூதெய்தியதென்பிரமபுரத்தெய்தினரால். (௫)

அல்லியந்தாமரைக்கிழவன்றடத்தாடிப்பிரமேசனலர்தாள்போற்றி
வல்லியுமைக்கின்னருள்கூர்தோணிமதிவேணியனைவழிபாடாற்றிச்
செல்லியலுமேனியினுனென்னையொருகதையாகச்செங்கைகொண்ட
எல்லியலும்வடுகேசனிணையடித்தாமரைபரவியேத்தல்செய்தார். (௬)

பூரணபுங்கவபோற்றிபுண்ணியநன்னிதிபோற்றிபுரைமைதீர்ந்த
ஆரணசுந்தரபோற்றியாடகநாடகமன்றத்தாடிபோற்றி
நீரணவுமணிவேணிநித்தியதத்துவபோற்றிநிமலபோற்றி
காரணகாரியங்கடந்தசிவபோற்றிகாழியருட்கடலேபோற்றி. (௭)

என்னவருந்துதிபலவுமேத்தியண்டமூர்த்திகடாமிமயவில்லி
தன்னமர்பொற்கோயிலின்முக்கோலளவைத்தாய்வடமேற்றலையினீகப்
பொன்னணிதாரிலிங்கமொன்றுதாபித்துக்குடக்கிலொருபுதுநீர்த்தோயக்
கன்னிமலர்த்தடமியற்றியருச்சனையின்றுறைநின்றார்கணிப்பில்காலம். (௮)

அருந்தவங்கள்பலமுயலுமண்டமூர்த்திகண்முன்னரடல்வெள்ளேற்றின்
முருந்துறழுமுகிழ்நகையோடெழுந்தருளியனையாளுமுதல்வனீண்ட [ங்கண்.
திருந்தியநும்பணிமகிழ்ந்தேம்விழைந்தபொருள் கேண்மினெனத்திருமால்செ
இருந்தமலர்ப்பதம்பரவியெழுந்துகுழைந்திதுகேட்பாரெவருமாங்கே. (௯)

நின்பதுமச்சேவடிகளெங்களகத்தெனுந்தடத்தினிலவல்வேண்டும்
பின்புலகிலழியாதபேரிசையும்பெறல்வேண்டும்பெருமவென்ன
அன்புரிமையுறிந்தமலனவையளித்துவிண்ணிலெழுந்தருளிநாளும்
மன்பதைகள்பணிந்தேத்துமண்டநாயகனெனும்பேர்வனைந்தான்வள்ளல். (௰)

அளப்பரியகளிப்பொடண்டமூர்த்திகளுமையநததலத்தடைந்தாரன்னோர்
விளக்கியபூங்குளத்துவந்துமாசிமதியாடியந்தவிமலற்போற்றி
வளப்படுமோணிதிமாதர்மக்களொடுநலனுகர்ந்துமறுமைவீடும்
துளக்கறுமாறெய்துவரத்தலத்தியலித்துணைத்தெனயாஞ்சொல்லற்பாற்றோ. ()

இந்நகரிலிழிந்துபதமைந்தோதிநீறுபுனைந்தெந்தைவேடம்
தன்னையணிந்தவர்பேற்றையானுரைக்குந்தரத்ததுவோதவத்தீரென்ன
அன்னவற்றின்பெருமையுமீங்கருளுகென்றுமுனிவர்தொழவளிசால்வேத
நன்னிலையிற்பகுத்தவன்றாள்சென்னியில்வைத்தருண்மூனிவனவிலலுற்றான்.

பரம்பரனதுருவாகிப்பிரணவத்தோடொன்றியவைம்பதத்தைச்செவ்வே
கரந்தழுவுசிவவடத்தான்முப்பொழுதுநூற்றெட்டுக்கணிப்போர்வேதம்
உரந்தருமங்கத்துடனேபகர்ந்தபயனடைகுவரீதுயர்ந்தமூன்று
நிரந்தகுலத்தவர்க்காகுமைந்தெழுத்தேக்குலத்தார்க்குநிகழ்த்தலாமால் (௧௩)

மருவலுறுபதவிகட்குமுதன்மையதாயெழுகோடிமனுக்களுக்கும்
கருதுநாயகமாய்ப்பரனுருவாமைந்தெழுத்தைக்கணித்தோர்யாரும்
நிருமலனதுருவாவார்நிகழும்பாராயணத்தைநீத்தோரேனும்
ஒருபொழுதுநீறணிந்தீதெண்ணுவரேல்வல்வினையையொருவுவாரால். (௧௪)

குரையிருமலொடுதும்மல்கொட்டாவியுறிலாயுக்குறையாவண்ணம்
உரைதருமிவ்வைந்தெழுத்தையுச்சரித்தல்விதமதியாலுளூற்றும்பாவம்
புரைவிடற்குமிதுதுணையாம்பூதிநிகரொழுக்கமும்புண்ணியமும்போற்றும்
விரதமுமொன்றினதறனுலெக்காலுநீறணிவார்மிக்கார்மாதோ. (௧௫)

புண்ணியநீறணிகல்லார்புரிதருமப்பயனின்றாம்புரிதானத்தார்
அண்ணரியகும்பிபாகத்தழிவார்மனுவொடுமெற்றதுவின்றேனும்
கண்ணுதனீறணிவாரைக்கண்ணுறில்வல்வினையகலுங்கடவுணீற்றை
ஒண்ணுதலினணியாரைக்காணினிரவியைக்காணினொழியும்பாவம். (௧௬)

வாளிரவிகாணுரேலிலிங்கத்தைச்செந்தழலைவளஞ்சேராவை
நீளறலைவேதியரைப்பொன்னையுருத்திரமணியைநெறியேகாணின்
மூளுறும்வல்வினையகலுமிந்நீற்றின்வகுப்பையினிமொழியின்யாண்டும்
நாளுறுவேள்வியினீறும்வேள்வியினீறும்மறையோர்நயக்கலாமால். (௧௭)

ஏனைமூதுகுலத்தவருக்கியன்றசிவநிசியினில்வாளிரவிதோற்றத்
தானசுசியொடுகொணர்ந்தகோமயத்தைப்புனிததலத்தலங்குவில்வத் [யால
தூனமின்மெல்லிலையொடுசேர்த்துண்டையமைத்துமி யிடையிட்டொளிறுந்தீ
ஈனமறவிளைந்ததனைச்சிவகாயத்திரிமனுவாலெடுத்துப்பின்னர். (௧௮)

வரியரவம்புரிசடையான்றிருமுனிட்டுப்பதினொன்றுமனுவாலோதித்
திரிதலிலெண்ணிருகூறுசெய்தவற்றுட்சிவபெருமான்றிறத்தாலொன்றும்
உரியசிவவேதியர்பாலொருமூன்றுகூறுமளித்தொழியீராறு
விரிதருகூற்றையுங்கொடுபோய்மதிக்கொருகூறுயணியவேண்டுமாதோ. (௧௯)

வேறு.

சாருமிவ்வியல்வெண்ணீற்றைத்தரித்துளார்க்குலகமூன்றில்
நேருறுப்பொருளொன்றில்லைகிகழிவன்கிளையினுள்ளோர்
ஆருநன்கயிலைசேர்வாரண்ணல்கண்மணிமற்றெம்மான்
சீருறுமுருவமென்பார்தெளிந்தவாலறிஞர்மாதோ. (௨0)

மருவுருத்திரன்கணின்றுவந்ததோருருத்திராக்கப்
பெருமையையேவரேயோபேசுவாரதனைநன்றாய்த்
தொருமுகமாதிமுன்னான்கொளிமுகமளவும்பூண்பார்
குருமணிவேணிமுக்கட்குழகனதுருவைச்சேர்வார். (௨௧)

தீயுமிழ்கணிச்சியண்ணற்றிருவிழிமணியின்சும்மை
மேயவான்கழுதையொன்றுமேற்கொளீஇவிந்தவெற்பில்
போயுயிருலந்துமன்னபுண்ணியப்பொருட்டாலன்றே
மாயிருங்கயிலைமீதுவதிந்ததோரூழிகாலம். (௨௨)

இம்மணியொன்றுசூடியியங்கிலோரடிக்கொன்றாக
மெய்ம்மலிவாசிவேள்விவியன்பலனடைவார்மிக்கீர்
எம்மனோர்விரித்துக்கூறுமிட்டதோர்நியுதமேனும்
அம்மவாயிரமதேனுமைஞ்ஞூறேயெனினுமாங்கே. (௨௩)

பரிந்தனர்வனையிலீசன்பதந்தனிலடைவார்கண்டம்
தெரிந்தவான்சென்னிதிண்டோள்சேர்மணிப்பந்தந்தன்னில்
அரந்தையில்லாதநூற்றெட்டதிற்பாதிபாதியெட்
டிரந்தருமுபவீதத்துமொண்சிகையினுமொவ்வொன்றே. (௨௪)

செவியினிலொவ்வென்றுதலாறுதல்சிவணவேய்ந்தாங்
கவிர்மதிக்கண்ணிவள்ளலைந்தெழுத்தோதுகிற்பான்
புவியின்மானுடவனேனும்பூதேசனவனன்றேனை
எவரெதிர்தொழினும்வல்லேயிகப்பரால்பிரமகத்தி. (௨௫)

இத்தகைவலிமைசான்றயெந்தைகண்மணியைநீற்றை
பத்தியாலணிந்துகாழிப்பதியினில்வதிவோரன்றே
முத்தராகுவரிவ்வூர்க்குமுக்குரோசஞ்சூழெல்லை
மத்தியிலுதித்தோர்யாரும்வருணவேற்றுமையொன்றில்லார். (௨௬)

இங்குலப்புறுவோர்க்கெல்லாமெதிரணைந்திமயவல்லி
பங்கனஞ்செவியிலைந்துபதந்தனைநுவலுமாற்றால்
அங்கவர்சீவன்முத்தராதலாலந்தணீர்காள்
வெங்குருநகர்க்குச்சீவமுத்திபூரென்பார்மேலோர் (௨எ)

சேற்றெழும்பகட்டுவாளைசெம்பழுக்குலைகள்சாயத்
தாற்றிளங்கமுகிற்பாயுஞ்சண்பையின்வியப்பமெல்லாம்
போற்றுமிக்கதையையாரேபுகலினுங்கயிலைவெற்பில்
ஆற்றலோடடிர்வார்முன்னையரும்பவத்தொடர்புமாய்த்தே. (௨அ)

ஆயிரஞ்சிவசிசிக்கணருந் துய்லயாமநான்கும்
ஏயுறுதெந்தைபூசையியற்றுறுபலனைச்சார்வார்
நாயகன்றிருமுன்காழிநற்கதையந்நாளாய்ந்து
நேயமோடுரைப்போர்கேட்போர்படித்துளோர்நிகழ்த்தினம்மா. (௨௯)

கதையிதுபுகல்கிற்பார்க்குக்காஞ்சனங்கூறைநல்லான்
முதலியவளித்துப்பூசைமுற்றினோன் றன்னையாதி
மதவிடைப்பாகனுளுமகிழ்தருமனத்தாலீட்டும்
இதமறுவினையுநீங்குமிம்முறைபுகன்றுளோர்க்கே. (௩௦)

இதிலொருகாதைகேட்குமிடையிலெய்யாமையாலே
மதிபிறழ்ந்தெழுவாராயின்மாணிதிமனைவியில்லம்
பதிமுதற்பலன்கடுய்க்கும்பருவத்தினிடையூறெய்திக்
கொதியழற்கும்பிபாகங்குளிப்பரான்மறுமைக்கண்ணும். (௩௧)

சென்னியிற்பஞ்சியாத்துத்தேறுமிக்காதைகேட்போர்
வெந்நுனையெயிற்றுப்பாந்தள்வேசரியாவரக்கால்
பன்னியவடைக்காய்மென்றோர்பசும்புழுநுகர்வோராவர்
அந்நிலைவணங்காகேட்பினலறுவாய்க்காரியாவார். (௩௨)

ஓதுநரிருக்கைமீக்கொண்டுறைகுநரெருவையாவார்
ஏதுறவடையவொப்பாயிருப்பவர்கோழியாவார்
போதுமிக்கதையைவேட்டோர்புகன்றுளோர்படித்தோர்தம்மைத்
தீதுரைத்திடுவோர்நாயாயோந்தியாய்செனிப்பாரன்றே. (௩௩)

முறையிதுவிரிக்கின்றோரைமுகமனன்கியம்பார்மாநீர்
அறைமுரற்றவளையாகியையிருபிறவியினைப்
பொறையுடைக்கரமுமாவார்புராணமீதுரைசெய்கின்ற
துறையிடையிடர்செய்வாரேற்றுணையெயிற்றுரகமாவார். (௩௪)

புகலியாளுடையான்காதைபொறித்ததோர்முறைக்குஞ்செவ்வே
பகருநர்தமக்குந்தூயபலகைகம்பளங்களீந்தோர்
அகளினேழ்மனுநாட்காறுஞ்சுவர்க்கபோகங்கடுய்த்து
இகரிலாமுத்திவீட்டினில்வுவர்மெய்ம்மையீதால். (௩௫)

துகிரிளஞ்சடையினுனுந்தொல்லுலகெல்லாமீன்ற
நகிலிளங்கொடியுமாங்கேநன்முனிக்கணங்கள்போற்ற
மகிழ்மலர்மகள்சேர்காழிமான்மியமனைத்துந்தேர்ந்து
பகர்தருமிடத்துநீங்கார்பயில்வரீதுண்மையுண்மை. (௩௬)

மாதியல்பாகன்காழிமான்மியம்படிக்கினீரெட்
டாதியம்புராணஞ்சொன்னவடைவொக்குங்கவியொன்றேனும்
பாதியேயெனினுமேகபாதமாயினுஞ்சொன்னோரும்
நீதியால்வினவினோருநேர்படார்மறலியாடல். (௩௭)

பட்டிமைவினைட்போர்பொய்ம்மைபகருவோரயலோர்தம்மை
இட்டிடர்சொல்வரேனுமிக்கதையொருகாற்கேட்பின்
ஒட்டியவினைகளெல்லாமொருவிமாசகல்வார்கண்டீர்
சுட்டியோர்வரியஞானத்துறைக்கடல்படிந்ததொல்லீர். (௯௮)

பொற்புறுமெயில்சூழ்காழிப்பொருப்பினைநீலகண்ட
வெற்பெனவுரைப்பாரிந்தவெற்பினைப்பணிகின்றோரும்
அற்புறத்தொழுதுய்ந்தோரையாற்றெதிர்தொழப்பெற்றோரும்
கற்பனைகடந்தோன்செம்பொற்கழலிணையடைவாரன்றே. (௯௯)

இவ்வகையருண்மீக்கூறியியலுமாமறைகளெல்லாம்
செவ்விதின்வடித்தமேலோன்றிருவருள்படைத்தசூதன்
அவ்வியமகன்றநோன்மையருந்தவச்சவுனகாதி
மெய்வ்வழிமுனிவர்க்கெல்லாம்விருப்புறவிளம்பினனே. (௱)

(௯௯-ஆவது. அண்டநாயகர்மகிமையுரைத்தவத்தியாயம்முற்றிற்று.)

ஆ. திருவிருத்தம் - ௧௫௰.

---

பொங்குபவு டிகபுரா ணத்தி ரொன்பான்
புகல்பிரமாண் டத்தொன் று காந்தந் தன்னில்
சங்கரசங் கிதையிலொன்பான் சனற்கு மார
சங்கிதையி லொன்றுமும்மைப் பரிச்சே தத்தில்
அங்கொருபன் னொன்றத்தி யாய மாக
வறைதருநாற் பதுந்தமிழான் முப்பத் தொன்று
இங்கவையா யிரத்தைஞ்ஞூற் றைம்பான் செய்யு
ளெனக்காழி மான்மியந்தா ணியன்ற வாறே.

வாழி.

ர்வாழ்கவானவரானினம்வாழ்கவருசெங்கோற்காவல்வேந்தன்
பார்வாழ்கமறைவாழ்கவெண்ணீறுமைந்தெழுத்தும்பரவிவாழ்க
ஏர்வாழ்கவேணுபுரிவாழ்கசிவனடியார்களென்றும்வாழ்க
சீர்வாழ்கவிந்நூலைவாழ்த்துநருங்கேட்குநருஞ்சிறந்துமிக்கே.

## சீகாழித்தலபுராணம் முற்றிற்று.

ஸ்ரீசம்பந்தகுரவேநம:

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# சூசிபத்திரம்.


| அத்தியாயங்களின்பெயர். | பக்கம். |
|---|---|
| அக்கினீசுரர்மகிமையுரைத்தவத்தியாயம் ... ... | ௧௬௭ |
| அண்டநாயகர்மகிமையுரைத்தவத்தியாயம் ... ... ... | ௧௭௬ |
| ஆபதுத்தாரணவத்தியாயம் ... ... ... ... | ௧௨௧ |
| கடவுள்வாழ்த்து ... ... ... ... ... | ௩-வது. |
| கழுமலமானவத்தியாயம் ... ... ... ... | ௧0௫ |
| கழுமலநதிவரவுரைத்தவத்தியாயம் ... ... ... | ௧௨௬ |
| காகவிமோசனமானவத்தியாயம் ... ... ... | ௬௯ |
| கிளியுபதேசித்தவத்தியாயம் ... ... ... ... | ௯௬ |
| குமரவேளுபதேசம்பெற்றவத்தியாயம் ... ... ... | ௧௩௫ |
| குருத்துரோகவிமோசனமானவத்தியாயம் ... ... | ௮௨ |
| கொச்சையானவத்தியாயம் ... ... ... ... | ௯௧ |
| சண்பையானவத்தியாயம் ... ... ... ... ... | ௮௭ |
| சந்திரன்பூசித்தவத்தியாயம் ... ... ... ... | ௧௭௧ |
| சிரபுரமானவத்தியாயம் ... ... ... ... ... | ௭௯ |
| சூரியன்பூசித்தவத்தியாயம் ... ... ... | ௧௬௯ |
| சேடனுங்கேதுவும்பூசித்தவத்தியாயம் ... ... ... | ௧௭௩ |
| தலவிசிட்டவத்தியாயம் ... ... ... ... | ௨௮ |
| திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருவதாரவத்தியாயம் ... | ௪0 |
| திருநகரச்சிறப்பு ... ... ... ... ... | ௧௩ |
| திருநாட்டுச்சிறப்பு... ... ... ... ... ... | ௬ |
| திருவிழாவத்தியாயம் ... ... ... ... ... | ௪௪ |
| தீர்த்தமகிமையுரைத்தவத்தியாயம் ... ... ... | ௧௫0 |
| தோணிபுரமானவத்தியாயம் ... ... ... ... | ௩௩ |
| பிரமபுரமானவத்தியாயம் ... ... ... ... | ௩௮ |
| புகலியானவத்தியாயம் ... ... ... ... ... | ௭௪ |
| புராணவரலாறு... ... ... ... ... ... | ௨௩ |
| புறவமானவத்தியாயம் ... ... ... ... ... | ௧0௮ |
| பூதவிமோசனமானவத்தியாயம் ... ... ... ... | ௫௩ |
| பூந்தராயானவத்தியாயம் ... ... ... ... ... | ௧௧௩ |
| மலைவரவுரைத்தவத்தியாயம் ... ... ... ... | ௧௧௫ |
| வடுகநாதவத்தியாயம் ... ... ... ... ... | ௧௫௮ |
| வெங்குருவானவத்தியாயம் ... ... ... ... | ௬௫ |
| வேணுபுரமானவத்தியாயம் ... ... ... ... | ௧00 |
| வேதவியாசரத்தியாயம் ... ... ... ... ... | ௧௬௩ |
| ஸ்ரீகாழிப்புரமானவத்தியாயம் ... ... ... ... | ௫௮ |

சிவமயம்.

# பிழை திருத்தல்.

| பக்கம். | பாடல். | வரி. | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|---|
| ச | கசு | உ | மலர் | மல |
| ,, | கஎ | உ | அசிதரங்கன் | அசிதாங்கன் |
| க0 | சரு | ரு | வங்நக | வநங்க |
| கரு | க | உ | நட | நாட |
| கஎ | கஎ | க | அறைழ | அறைகழ |
| எரு | ருரு | க | ஆட்டி | ஆடி |
| ,, | ருசு | க | ஆட்டி | ஆடி |
| கூஉ | கஉ | ரு | இருகுற | இறுகுற |
| கூரு | கசு | உ | மளிந்து | மளித்து |
| ,, | உக | ச | பல்கு | பல்கு |
| க0அ | கரு | ச | ஓது | மோது |
| ககக | உரு | உ | மகழ | மகிழ |
| கஉஅ | கஅ | உ | கா | கர |

சிவமயம்

# விளம்பரம்.

இந்த சீகாழித்தலபுராணம்; சென்னை அண்ணாபிள்ளைவீதி ௬௭-வது, நம்பர் வீட்டில் தாபித்திருக்கும் ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திலும், சென்னை அண்ணாபிள்ளைவீதி ௬௮-வது, நம்பர்வீட்டில் ம-ா-ா-ஸ்ரீ, பு கந்தசாமிமுதலியார். (௧) சென்னை பெத்துநாயக்கன்பேட்டை தங்கைசாலைவீதி ௩00-வது, நம்பர்வீட்டில் யாழ்ப்பாணத்து நல்லூர் ம-ா-ா-ஸ்ரீ, சதாசிவப்பிள்ளை. (௨) சென்னை,கோமளபுரம் நாகப்பமுதலியார் வீதி ௨௮-வது வீட்டில் பெரியபுராணம உரையுடன் அச்சிடும் ம-ா-ா-ஸ்ரீ, பெரு. கிருஷ்ணசாமிமுதலியார் (௩) சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ, பொன்னுசாமிப்பிள்ளை, (௪) கோயமுத்தூரில், வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, வி-கந்தசாமிமுதலியார் (௫) சீகாழி நேட்டிவ் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, சிதம்பரபிள்ளை. (௬) சிதம்பரத்தில் ஷை யூர் சபாபதிதேசிகர் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ, சோமசுந்தரதேசிகர், (௭) மதுரைபுதுமண்டபத்தில்,புத்தகக்கடை ம-ா-ா-ஸ்ரீ, முதலையபிள்ளை, (௮) தஞ்சாவூரில் புத்தகஷாப்பு ம-ா-ா-ஸ்ரீ, நா. திருவேங்கடம் பிள்ளை, (௯) திருச்சிராப்பள்ளியில் புத்தகஷாப்பு ம-ா-ா-ஸ்ரீ, தி. சபாபதிபிள்ளை, (௰) நாகப்பட்டினத்தில் புத்தகக்கடை ம-ா-ா-ஸ்ரீ, சி. சுப்பிரமணியபிள்ளை, (௧௧) கும்பகோணத்தில் புத்தகக்கடை ம-ா-ா-ஸ்ரீ, அருணகிரிமுதலியாா, (௧௨) இவர்களிடத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| புத்தகம ஒன்றுக்கு கிரயம் ரூபாய் ஒன்று | ரூ | ௧ | ,, | ,, |
| தபாற்கூலி அணு இரண்டு ... | ரூ | ,, | ௨ | ,, |

---

ஒரேவிசை புத்தகம், ஐந்து வாங்குபவர்கட்கு ஒரு புத்தகம் அதிகம கொடுக்கப்படும்.

JEEVARUSHAMRITHAM PRESS. MADRAS